331

T.N.L.C Debates

Official Report.

1983

Vol: 201 No: 1-3

D
1211,32 'N83
N83.201.1-3
113190

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 26th OCTOBER 1983

**Volume 201 (No. 1)**

GOVERNMENT OF TAMIL NADU
1984

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009

Price : *Rs* 2.75 *Paise*

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
143190
சென்னை-600 008.
D
V21,32'N83
N83.201.1-3

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நடவடிக்கைக் குறிப்புகள்

புதன் கிழமை, அக்டோபர் 26, 1983.

தொகுப்பு—201 எண் 1

பொருளடக்கம்


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—v |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. | ix—xi |
| 1. இரங்கற் குறிப்புகள்— | |
| கீழ்க்கண்டவர்களின் மறைவு குறித்து— | |
| 1. திரு. எஸ். ஸ்ரீநிவாச ராவ், மேலவை முன்னாள் உறுப்பினர் | 1—2 |
| 2. திரு. பி. திருஞானசம்பந்தம், மேலவை முன்னாள் உறுப்பினர் | 1—2 |
| 3. திரு. ஹுக்கும்சிங், மக்களவை முன்னாள் தலைவர் .. .. | 1—2 |
| 2. இரங்கல் தீர்மானங்கள்— | |
| (1) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் மறைவு குறித்து .. .. .. | 2—3 |
| (2) இலங்கையில் இனப்படுகொலைகளின் காரணமாகத் தமிழர்கள் உயிரிழந்தமை குறித்து .. | 4 |

10. THE HON. THIRU P. KULANDAIVELU, Minister, in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HON. THIRU S. RAGHAVANANDAM, Minister, in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HON. DR. H. V. HANDE, Minister, in-charge of Health.

13. THE HON. THIRU S. MUTHUSAMY, Minister, in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister, in-charge of Large Scale Industries, Mines and Minerals Textiles and Handlooms.

15. THE HON. THIRU S. N. RAJENDRAN, Minister, incharge of Prohibition excluding grant of Liquor Permits, Passports, P.W.D. and Establishment matters relating to P.W.D.

16. THE HON. THIRU M. V. VIJAYASARATHI, Minister, in charge of Adi-Dravidar Welfare, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment Training.

17. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister, in-charge of Nutritious Meals.

18. THE HON. THIRU S. R. ERADHA, Minister, in-charge of Environmental Pollution Control.

19. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister, incharge of Backward Classes.

20. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister, in-charge of Social Welfare including Woman and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister, in-charge of Khadi.

22. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. THE HON. THIRU R. ARUNACHALAM, Minister, in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

24. THE HON. THIRU K. KALAIMANI, Ministe[illegible] harge of Fisheries.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்மற்றும் இதர அனைத்திந்தியப்பணிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகுக் கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சி மொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப்பொறியியல் பிரிவு மற்றும் வேளாண் பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பெருந்தொழில்கள், சுரங்கமும் - கனிவளமும், நெசவாலைகள், மற்றும் கைத்தறி.



15. மாண்புமிகு திரு. சோ. நீ. இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) கடவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், செய்திக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு கட்டுப்பாடு தடுப்பு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சுற்றுப்புற சூழல் தடுப்புத் துறை.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்.

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. எஸ். முத்து
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
4. திரு. ஏ. ஜே. தாஸ்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி. ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன். எம். ஏ.

* 27-10-1983 அன்று மேலவையில் அறிவிக்கப்பட்டது.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராதா, திரு. எஸ். ஆர். (சுற்றுப்புற சூழல் தூய்மைக்கேடு கட்டுப்பாடு அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 கண்ணப்பன், திரு. காடுவெட்டி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 கலைமணி, திரு. க. (மீனளத் துறை அமைச்சர்) .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 சங்கரலிங்கம், திரு. ம. .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 11 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 12 சனார்த்தனம், டாக்டர் இரா. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). .. | நியமனம். |

டி 2 சி 56—(iii)

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 15 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுப்பிரமணியம், திரு. எம். பி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். .. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. ஏ. ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 புலமைப்பித்தன், புலவர் (மாண்புமிகு துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 26 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர், — திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 29 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்—தர்மபுரி,-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 32 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 33 யூசுப். திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 34 லீலாவதி, செல்வி ஆ. .. | சென்னை—செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. .. | வடஆற்காடு - தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 37 வலம்புரி ஜான். திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை | ஷை |
| 47 ஷை | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை | ஷை |
| 49 ஷை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 51 | வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 53 | ஷ்ஷ | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 55 | ஷ்ஷ | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 57 | ஷ்ஷ | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 59 | ஷ்ஷ | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 61 | ஷ்ஷ | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 63 | ஷ்ஷ | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தி நான்காவது கூட்டத் தொடர்.**

**புதன்கிழமை, 1983 அக்டோபர் 26**

**(ஐப்பசி 9, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2014.)**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 11-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கற் குறிப்புகள்.

சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்கள் திரு. எஸ். ஸ்ரீநிவாச ராவ், திரு. பி. திருஞானசம்பந்தம் மற்றும் மக்களவை முன்னாள் தலைவர் திரு. ஹுகும் சிங் ஆகியோரின் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மேலவை உறுப்பினர்களே,

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். ஸ்ரீநிவாச ராவ் அவர்கள் சென்னையில் 15—6—1983 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை, ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் இந்த அவையில் 1953 முதல் 1956 வரை உறுப்பினராக இருந்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. பி. திருஞானசம்பந்தம் அவர்கள் 5—10—1983 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் இந்த அவையில் 1968 முதல் 1974 வரை உறுப்பினராக இருந்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டு 1963 முதல் 1965 வரை சிறையில் இருந்தார். விலைவாசி உயர்வு போராட்டத்தில் பங்கேற்றும் சிறையில் இருந்தார்.

2 சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்கள் திரு. எஸ். ஸ்ரீநிவாச ராவ், திரு. பி. திருஞானசம்பந்தம் மற்றும் மக்களவை முன்னாள் தலைவர் திரு. ஹுகும் சிங் ஆகியோரின் மறைவு குறித்து.



மக்களவை முன்னாள் தலைவராக இருந்த சர்தார் ஹுகும் சிங் அவர்கள் 27—5—1983 அன்று புது டில்லியில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்தார் ஹுகும் சிங் அவர்கள் அரசியல் நிர்ணய சபை மற்றும் இடைக் கால பாராளுமன்றத்தில் உறுப்பினராக விளங்கினார். அவர் 1952 முதல் 1956 வரை மக்களவை உறுப்பினராகவும், 1956 முதல் 1962 வரை அதன் துணைத் தலைவராகவும் விளங்கினார். மேலும் 1962 முதல் 1967 வரை மக்களவைத் தலைவராக விளங்கி அனைத்துத் தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்று, மக்களவை நடவடிக்கைகளைத் திறம்பட நடத்தி, நற்பெயர் பெற்றவர். பின்னர், இராஜஸ்தான் ஆளுநராகப் பணியாற்றினார்.

வெளிநாடுகளில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்ததோடு "ஸ்போக்ஸ்மேன்" என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தியதோடு, பஞ்சாபியர்கள் பற்றியும், ருஷ்யாவைப்பற்றியும் பல புத்தகங்கள் எழுதியுள்ளார்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பங்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்.

(1) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, கீழ்க் கண்ட இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1967 முதல் 1971 வரை தமிழ்நாடு அமைச்சராகவும், 1971 முதல் 1972 வரை சட்டப் பேரவைத் தலைவராகவும், மாநில திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவராகவும் விளங்கிய திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் 17—8—1983 அன்று இயற்கை எய்தியதைக் குறித்து இந்த



அவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், சென்னை, சட்டக் கல்லூரியிலும் பயின்றவர். அவர் கல்லூரியில் படிக்கும் நாள் முதற்கொண்டு திராவிட இயக்கங்களில் பங்குகொண்டு, அறப்போராட்டங்களில் ஈடுபட்டு, பலமுறை சிறை சென்றுள்ளார். அவர் 1962–67, 1967–71 மற்றும் 1971–76 வரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக விளங்கினார். 1967-68-ல் உணவு அமைச்சராகவும், 1969-71-ல் நிதி, வருவாய்த்துறை அமைச்சராகவும் விளங்கினார். 1971-72-ல் சட்டப் பேரவைத் தலைவராக விளங்கினார்.

1963 முதல் 1965 வரை மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட வரையறைக் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றினார். மாநிலத் திட்டக் கமிஷன் முன்னாள் துணைத் தலைவராகவும் விளங்கினார். 1967 ஆம் ஆண்டில் ரோம் நகரில் நடைபெற்ற உலக உணவு மாநாட்டிற்குச் சென்ற இந்தியக் குழுவின் தலைவராகவும், 1970 ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு இந்தியக் குழுவின் தலைவராகவும் சென்று வந்தவர். மேலும் பல வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் சென்று வந்தவர்.

அவர் சிறந்த மேடைப் பேச்சாளராவார். வளமான தமிழ் நடை எழுத்தாளராகவும் விளங்கினார். தென்னகம் என்னும் தினப் பத்திரிக்கையை நிறுவி அதன் ஆசிரியராகப் பணியாற்றி நற்புகழ் பெற்றவர். அவர் அண்ணா அவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய நட்பு ஏற்படவும் நாங்கள் அடிக்கடி சந்திக்கவும் வழிவகை செய்து, எங்களுடைய நட்பைப் பலப்படுத்திய பெருமைக்குரியவர். அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

**(2) இலங்கையில் இனப்படுகொலைகளின் காரணமாகத் தமிழர்கள் உயிரிழந்தமை குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, இலங்கையில் இனப் படுகொலைகளின் காரணமாகத் தமிழர்கள் உயிரிழந்தமை குறித்த இரங்கல் தீர்மானத்தை மேலவை முன் வைக்கிறேன்—

"இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள், இந்தியப் பரம்பரை வழிவந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோர், முப்பந்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து அவ்வப்போது பலவித இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு, வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்டு, உயிர்களும் உடைமைகளும் அழிக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப்பட்டு, சிறைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண்களின் கற்பு அழிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏதுமின்றி அல்லற்பட்டு வருவதோடு, கடந்த ஜூலைத் திங்கள் தொடங்கி, தொடர்ந்து சிங்கள இனவெறியர்களாலும், இலங்கை இராணுவத்தினர்—காவல் துறையினர் ஆகியோராலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடுதல், தீ வைத்தல், தீங்கிழைத்தல் போன்ற கொடுஞ்செயல்களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை அறிந்து, இம்மேலவை தனது ஆற்றொணாத் துக்கத்தையும், துயரத்தையும் தெரிவிப்பதுடன், கலவரங்களில் உயிரிழந்தவர்களுக்கு வீர அஞ்சலி செலுத்துவதுடன், அவர்களின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அக்கலவரங்களில் உறுப்பினர்களையும், உடைமைகளையும், உரிமைகளையும் இழந்து தவித்திடும் அனைவருக்கும் இம்மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் : இலங்கையில் இனப் படுகொலைகளின்** மூலம் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மேலவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்தி வைக்கப்பட்டு, மேலவை மீண்டும் நாளை 27—10—1983 அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

**பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.**

(முற்பகல் **11-08**)

---

[ISSUED 8—3—198

TRUTH ALONE TRIUMPHS

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 27th OCTOBER 1983

19 ஜூன் 1984

Volume 201 (No. 2)

© GOVERNMENT OF TAMIL NADU
1984

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price: Rs 2.75 Paise

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. தகவல் கோரல்—

சில உறுப்பினர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து அவைக்கு வந்துள்ளது குறித்து. 5—8

2. முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன், உறுப்பினர் டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் ஆகியோருக்கு சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது குறித்து பாராட்டும், புதிய அவை முன்னவருக்கும், புதிய அமைச்சர்களுக்கும் புதிய உறுப்பினர் களுக்கும் வரவேற்பும் 8—9

. வினாக்கள்—விடைகள்— 9—49

. அறிவிப்புகள்—

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து. 49

(2) 1983-84 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக்குழு மற்றும் விதிக்குழுவிற்கு உறுப்பினர் நியமனம். 49

(3) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு ஓர் உறுப்பினரை நியமிப்பது குறித்த நிகழ்ச்சி நிரல். 49—50

(4) மாற்றுத் தலைவர் பட்டியல். 50

அரசின் தீர்மானம்—

ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களின் பிரச்சினை பற்றிய தீர்மானம். 50—90, 94—108

1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை அளித்தல். 90—92

1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்த அறிக்கையை அளித்தல். 92—94

அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 109—135


D 2 C 57—1

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1983 அக்டோபர் 27.
ஐப்பசி 10, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. தகவல் கோரல்.

**சில உறுப்பினர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து அவைக்கு வந்துள்ளது குறித்து.**

**திரு. ஜேப்பியார்:** மேலவைத் தலைவர் அவர்களே, தங்களை எதிர்த்து இன்றைக்கு கறுப்புச் சின்னம் அணிந்து சில உறுப்பினர்கள் சபைக்குள் வந்திருக்கிறார்கள். இது சபையின் கௌரவத்தைக் குறைப்பதாக இருப்பதால் அதை அனுமதிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் நடவடிக்கையைப் பற்றிய ஒழுங்குப் பிரச்சினைக்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது பொருந்தும். இதிலே ஒழுங்குப் பிரச்சினை, கறுப்புச் சின்னம் அணிந்து வருகிறவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாமா என்பதுதான். அவையினுடைய விதிகள், மரபு ஆகியவைகள்பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். ஆகவேதான் இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதி. வேறு வழியில்லை. மாண்புமிகு உறுப்பினர் தான் விரும்புவதைச் சொல்லலாம்.

[1983 அக்டோபர் 27

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பியிருக்கிறார்கள். தங்களை எதிர்த்து கறுப்புச் சின்னத்தை அணிந்திருப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அப்படியல்ல. தங்களை எதிர்த்து அல்ல. தங்களுடைய தலைமையிலும், தாங்கள் வழிநடத்தும் அவையில் நடந்துகொள்ளுகிற முறையிலும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் வெளி நிகழ்ச்சிகளில், இந்த அவையின் தலைவராக எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு மேற்பட்டு விளங்குகிற தாங்கள் கலந்துகொள்ளும் விழா, அரசு விழாவாக இருக்கிறபோது, அந்த அரசு விழாவில் கலந்துகொள்கிற மாண்புமிகு அமைச்சர்கள் அந்த விழாவைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அவையில் அங்கம் வகிக்கிற அரசியல் கட்சிகளைப்பற்றி விமர்சனம் செய்யலாமா? அத்தகைய விழாக்களில் தாங்கள் கலந்துகொள்ளுவது ஜனநாயக மரபுக்கு இழுக்காக அமைந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த பேட்ஜை அணிந்துகொண்டிருக்கிறோம். அப்படி அணிவதன் மூலம் அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்றும், அதன் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அமைச்சரவைக்கும் இதை உணர்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும், ஜனநாயக மரபு காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் தான் இதை அணிந்திருக்கிறோமே தவிர, தங்களை இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கமோ, தங்கள் மீது நோக்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த விளக்கத்திற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சின்னத்தை நீக்கிவிடுவார்கள் என்று நினைக்கிறேன். நான் எதையாவது சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்தால், நான் சொல்லுகிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, தாங்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டதாகப் பத்திரிகைகளிலிருந்து தெரிகிறது. தங்களைப் போன்ற தலைவர்கள் சபையின் கண்ணியத்தையும், மரபையும் காக்கவிருக்கிறீர்கள். தாங்கள் கலந்துகொண்ட விழாவில் அப்படி நடந்ததே என்ற வருத்தத்தோடுதான் இந்த பேட்ஜை நாங்கள் அணிந்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னதால் . . . .

(திரு. க. மீனாட்சிசுந்தரம் இருக்கையிலிருந்து எழுந்தார்.)



331

1983 அக்டோபர் 27]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது விவாதத்திற்குரியதல்ல. சின்னம் அணிந்திருப்பதைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். இதன் மீது பேச மாண்புமிகு உறுப்பினரை அனுமதித்தால், மற்ற எல்லோருக்கும் அனுமதி தர வேண்டும்.

மதுரையில் நடந்த கூட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி பத்திரிகையிலிருந்து நான் தெரிந்துகொண்டு சொல்லுகிறேன். அன்றைக்கு அந்தக் கூட்டத்தில் நடந்ததாகக் குறிப்பிடுகிற நேரத்தில், நான் அங்கே இருக்கவே இல்லை. எனக்குத் தெரியாது. ஆனாலும் ஒன்றைச் சொல்லுகிறேன். நான் கலந்துகொள்ளுகிற நிகழ்ச்சியில் யார் யார் என்ன பேசுகிறார்கள் என்பதற்கு நான் பொறுப்பேற்க முடியாது. அதை நான் கண்டிக்கிற நிலையிலும் இல்லை. தலைவர் என்ற நிலையில் உள்ள அதிகாரங்கள், உரிமைகள் எல்லாம் இந்த அவைக்குள்தான் என்பது ரொம்ப நாள் உறுப்பினராக, அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். அவர் தனிப்பட்ட முறையில் வாய்ப்பு ஏற்படுகிறபோது, "நீங்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இப்படி நடந்திருக்கிறதே, நீங்களாவது சொல்லியிருக்கக் கூடாதா?" என்று கேட்டிருந்தால், அது வேறு விஷயம். அதற்காகக் கண்டித்து சின்னம் அணிவது என்பது, எவ்வளவுதான் தலைவர் கண்ணியமாக இருந்தாலும், அது தலைவரைத்தான் குறிக்கிறது. முன்னாள் அமைச்சராக இருந்த திரு. சாதிக் பாட்சா இந்த அவைக்கு உறுப்பினராக வந்திருப்பதை வரவேற்பவன் நான். அவருக்குத் தெரியாததல்ல. ஆகவே இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிட்டு அவையின் மரபையும், விதியையும் காக்க உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, தங்கள் உணர்வுக்கு மதிப்பு அளித்து, இதுபோன்ற நடவடிக்கைகள் இனிமேல் நடைபெறாது என்ற நம்பிக்கையோடு தங்களுடைய வேண்டுகோளை ஏற்று இந்த பேட்ஜை அகற்றி விடுகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதுபோன்று நடைபெறாது என்று நான் உறுதி கொடுக்க இயலாது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இனிமேல் நடைபெறாது என்ற நம்பிக்கையோடு அகற்றுகிறோம்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் இருக்கையிலிருந்து எழுந்தார்)

## சில உறுப்பினர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து அவைக்கு வந்துள்ளது குறித்து

[1983 அக்டோபர் 27

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முடிந்துவிட்டது என்றால் நான் அணிந்து கொள்ளலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லை, நீக்கிவிட வேண்டும் என்றுதான் பொருள். மாண்புமிகு உறுப்பினரும் நீக்கிவிட வேண்டும்.

## 2. முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன், உறுப்பினர் டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் ஆகியோருக்கு சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது குறித்து பாராட்டும், புதிய அவை முன்னவருக்கும் புதிய அமைச்சர்களுக்கும் புதிய உறுப்பினர்களுக்கும் வரவேற்பும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்திருப்பது குறித்து அவர் இந்த அரசின் முதல்வராக இருக்கின்ற காரணத்தால், எனக்குள்ள மகிழ்ச்சியை இந்த அவையும் பகிர்ந்து கொள்ளும் என்று நம்பி நான் அவரைப் பாராட்டுகிறேன்.

நீண்ட நெடுங்காலமாக பல்கலைக் கழகத்திற்கும் சமுதாயத்தினுடைய அடித்தளத்தில் உள்ள மக்களுக்கும் இடைவெளி மிக அதிகமாக இருந்தது. அன்னிய ஆட்சிக்கு ஆட்பட்டதாலே இந்த நிலைமை ஏற்பட்டது. அப்படியில்லாமல் மெள்ள மெள்ள மக்களாட்சிக் காலத்திலே பல்கலைக் கழகத்திற்கும் அடித்தளத்திலே உள்ள மக்களுக்கும் நெருங்கியதொரு தொடர்பு ஏற்பட்டு இடைவெளி குறைக்கப்பட்டு வருகிறது. முறையாகப் படித்து பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறாத முதல்வரவர்களுக்கு, டாக்டர் என்ற கௌரவப் பட்டம் அளித்திருப்பதால், நாம் மகிழ்ச்சி அடைகிறோம். மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம், ஜனநாயகத்திற்கு மதிப்பு ஏற்பட்டு, நிலைமை மாறி வருகிறது என்பதுதான். சென்னைப் பல்கலைக் கழகம் நம்முடைய முதல்வருக்கு டாக்டர் பட்டம் அளித்திருப்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.



983 அக்டோபர் 27] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

இன்னுமொன்று. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்கள் அவை ...ன்னவராக புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்களை நான் வரவேற்கிறேன். ...ந்த அவையை நடத்துவதற்கு அவர்கள் உதவி புரிவார்கள் என்பதிலே ...னக்கு ஐயமில்லை. அவர் நிறைய அனுபவம் உள்ளவர்.

மேலும் ஏழு பேர் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ...வர்களையும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். மூன்று பேர் மேலவைக்கு ...திய உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். இந்த முறை அமைச்சரவையிலே ...மலவைக்கு அதிக இடம் கிடைத்திருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ...ந்த அவையும் எனது மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும் என்று நினைக்கிறேன். ...த்துடன் இங்கேயுள்ள ஆறு உறுப்பினர்கள் அமைச்சர்களாக உள்ளனர். ...வைக்குப் புதிதாக வந்திருப்பவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ...ந்த அவை தொடங்கும்போது இத்தனை புதிய மாறுதல்கள் ஏற்பட் ...ருப்பதை நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டேன். ஒவ்வொருவரையும் ...னித்தனியே குறிப்பிட்டுச் சொல்ல ஆசை இருப்பினும், நேரம் கருதி, ...சால்லாமல் விடுகிறேன். ஒவ்வொருவரும் தங்களை தனிப்பட்ட முறையில் ...றிப்பிட்டு வரவேற்பு கூறியதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த அவையின் உறுப்பினரான இராஜா சர் முத்தையா செட்டியார் ...வர்களும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் பெற்றிருக் ...றார்கள். இந்தியாவிலே இதைவிட பெரிய வயதுடைய பல்கலைக் கழகம் ...ல்லை. இந்தியாவிலே குடியரசுத் தலைவரைவிட பெரிய பதவியில் இருப்பவர் ...ல்லை. இத்தகைய பெரிய பதவியில் இருப்பவருடைய தலைமையின்கீழ் ...த்த பல்கலைக் கழகம் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், இராஜா சர் ...வர்களுக்கும் பட்டங்கள் வழங்கியதற்காக மீண்டும் ஒரு முறை அவர் ...ளுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இதழ்கள் வாயிலாக விளம்பரம்

*1 **வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய ...மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டு ...திதாகத் தொடங்கப்பட்ட நாளிதழ்கள், வார இதழ்கள் மற்றும் திங்கள் ...தழ்கள் எத்தனை ?

(இ) புதிதாகத் தொடங்கும் இதழ்களுக்கு செய்தி, சுற்றுலாத் துறையினரால் விளம்பரம் கொடுக்கப்படுவதற்கு விதி முறைகள் ஏதேனும் உள்ளதா?

(உ) ஆம் எனில், எந்தெந்த இதழ்களுக்கு இவ்விதி முறைகளைத் தளர்த்தி விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது? எந்தெந்த இதழ்களுக்கு விளம்பரம் மறுக்கப்பட்டுள்ளது?

(எ) கடந்த ஆண்டில் மட்டும் புதிதாகத் தொடங்கப்பட்ட இதழ்களுக்குக் கொடுத்த விளம்பரத்தின் மொத்தத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) 1981 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட இதழ்களின் விவரம்:—

1. நாளிதழ்கள்—41.
2. வார இதழ்கள்—81.
3. திங்கள் இதழ்கள்—221

ஆனால், இவைகளில் எத்தனை தொடங்கப்பெற்றன, எத்தனை நடுவில் நிறுத்தப்பட்டன என்ற விவரம் அரசிடம் இல்லை.

(இ) விதிமுறைகள் உண்டு.

(உ) விசேடத் தன்மைகளைக் கருத்தில் கொண்டு விளம்பரம் கொடுப்பதுண்டு. எனவே, விதிகளுக்காக மட்டும் மறுப்பதில்லை.

(எ) ரூ. 11,870.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த நாட்டிலுள்ள பத்திரிகைகளிலே சில பத்திரிகைகள் மிக அதிக காலம் நடத்தப்பட்டும் கூட, அவற்றுக்கு விளம்பரம் மறுக்கப்பட்டும், சில பத்திரிகைகள் தொடங்கிய உடனே கூட அவற்றுக்கு விளம்பரங்கள் தரப்பட்டும் வருகிற நிலைமை இருக்கிறதே, அந்த வேறுபாட்டிற்குரிய காரணங்கள் யாவை? அதை அமைச்சர் அவர்கள் விளக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலே விடையில் தெரிவித்திருக்கிறபடி, ஓர் இதழ் துவங்கப்பெற்று ஆறு மாதங்கள் அது முறையாக நடைபெற்று அது நிலைத்திருக்கிறது என்பதற்குப் பிறகு,



அது அரசினுடைய பட்டியலில் சேர்க்கப்படுகிறது. விளம்பரம் கொடுக்கிற போது, அரசின் பட்டியலிலே இருந்தால்தான் விளம்பரம் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு விதி, நிபந்தனை ஏதுமில்லை. அந்தப் பத்திரிகையினுடைய வளர்ச்சி, அது மக்களிடத்திலே பெற்றிருக்கிற செல்வாக்கு, அதிலே வருகிற விளம்பரத்தின் மூலம் அரசுக்கு ஏற்படுகிற பலன், அல்லது மக்களுக்கு ஏற்படுகிற பலன் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு விளம்பரங்கள் தரப்படுகின்றன.

(காலை 9-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் திட்டவட்டமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன். ஒரு பத்திரிகை தொடங்கி ஆறு மாதம் ஆனால்தான், அந்தப் பட்டியலிலே இடம்பெற முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பட்டியலிலே இடம் பெறுவதற்கு, விளம்பரம் தருவதற்கு என்று விதிமுறைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகள் பொதுமக்களிடத்திலே பெற்றிருக்கின்ற செல்வாக்கைப் பொறுத்தும் தரப்படுகின்றது என்று சொல்கின்றார்கள். அப்படியானால் ஒரு பத்திரிகை இன்று தொடங்கிய உடனே செல்வாக்குடையது என்று அறிந்துவிட முடியுமா? சில பத்திரிகைகளுக்கு தொடங்கிய பிறகு பத்து நாளிலேகூட விளம்பரம் தரப்படும் நிலைமை இருக்கிறது. ஆனால் இரண்டேமுக்கால், மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட சில பத்திரிகைகளுக்கு விளம்பரம் மறுக்கப்படுகிறது. அவர்கள் குறித்தாவது இனிமேல் இந்தக் கொள்கையை மாற்றும் திட்டம் உண்டா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** நான் முன்னாலேயே தெரிவித்ததைப் போல, எந்த அடிப்படையிலே விளம்பரங்கள் தரப்படுகின்றன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். நீண்டகாலமாக நடைபெறுகின்ற பத்திரிகைகள் சிலவற்றிற்கு, ஒரு குறிப்பிட்ட பத்திரிகைக்கு, விளம்பரம் தரவில்லை என்ற ஒரு குறிப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த சம்பந்தப்பட்ட செய்திப் பத்திரிகை அல்லது சஞ்சிகை அல்லது மாத இதழ் எது என்று அரசுக்குத் தெரிவிக்கப்படுமானால், அதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றியும் அரசு ஆராயும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே விளம்பரம் கொடுப்பதற்கு விதிமுறைகள் உண்டு என்றும், சில விசேடத் தன்மைகளையொட்டியும் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன என்றும் சொல்கின்றார்கள். இந்த விதிமுறைகளைத் தளர்த்துவது என்ற அதிகாரம் யாருக்கு இருக்கிறது? விதிமுறைகளை வகுத்த பிறகு

விதிமுறைகளைத் தளர்த்துவதால்தான் பாரபட்சம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கின்ற காரணத்தாலே, திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்து, அந்த விதிமுறைகளின்படிதான் விளம்பரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னால் அமைச்சராகவே இருந்தவர்கள். அவர்கள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பது ஆச்சரியமாக இருக்கின்றது. சட்டங்களை உருவாக்குகிறபோதே, சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கின்ற உரிமையை அரசாங்கம் பெற்றுக் கொள்கிறது, விதிகளை உருவாக்குகிற அரசாங்கம் பெற்றுக்கொள்கிறது. ஆகவே விதிகள் ஏற்படுத்துகிறபோது விதிவிலக்கும் அத்துடன் இணைந்து வருகிறது. விதிவிலக்கு இல்லாமல் எப்போதும் எந்தக் காரியமும் நடை பெறுவது இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட சட்டத்திற்குள்ளே மாத்திரம் வைத்துக்கொண்டு, இப்படித்தான் நடைபெறும் அல்லது நடைபெற முடியும் என்று மட்டும் விதி வகுத்துவிட்டு, விதிவிலக்கு அளிக்கும் உரிமையை அரசுக்கு வழங்காமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில நேரங்களிலே விரும்பி சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று, ஒரு நல்ல பத்திரிகைக்கு, ஒரு நல்ல இதழுக்கு, சாதாரணமாகக் கஷ்டப்படுகின்ற சிறிய பத்திரிகைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று விரும்பினால்கூட அதைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே விதிவிலக்கு என்பது இந்தச் சமுதாயம் தோன்றிய காலத்திலேயிருந்து, சட்டங்கள் தோன்றிய காலத்திலேயிருந்து இருந்து வருகின்ற ஒன்றாகும்.

**திரு. த. சந்தோஷம்:** சில பத்திரிகைகள் கட்சிக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்தோடு இயங்கி வருகின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு அரசாங்கத்தின் பொதுப் பணம் செலவிடப்படுவது சரியாகாது. அதற்கு விதிமுறைகள் வகுக்கும்போது, கட்சிக் கொள்கைகளை மட்டும் பரப்பும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்காமல், மக்களுக்குப் பொதுவான செய்திகளையும், நல்ல கருத்துக்களையும் வழங்கும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் வழங்கும் வகையில் அமைக்க அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த ஜனநாயக யுகத்தில் கட்சிகளையெல்லாம் விலக்கிவிட்டால், ஜனநாயகம் நிலைக்காது. அரசியலும் இல்லை. ஆகவே கட்சிகளுக்காக நடத்தப்படுகின்ற பத்திரிகைகள் அல்லது கட்சிக்





கருத்துக்களை பரப்புகின்ற பத்திரிகைகள் என்ற காரணத்தை மட்டுமே வைத்து. அரசாங்கம் விளம்பரங்களை ஒதுக்க இயலாது. அது எந்த அளவிற்கு மக்களுக்குப் பயன்படுகிறது, எந்த வகையிலே பணியாற்றுகிறது என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் நடத்துகின்ற ஏடுகளுக்கெல்லாம் ஏற்கெனவே விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இடையிலே அவை நிறுத்தப்பட்டு விட்டன. அப்படிப்பட்ட ஏடுகளுக்கு விளம்பரங்கள் தருவதற்கு அரசு முன்வருமா?

மற்றொன்று நான் இங்கே சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் எந்தப் பத்திரிகைகளுக்குத் தரவில்லை, எந்தப் பத்திரிகைகளுக்குத் தரப்பட்டிருக்கிறது என்று கேட்ட காரணத்தினாலே, அதைச் சொல்லிவிடுகிறேன். 'தாய்' பத்திரிகை ஆரம்பித்து மூன்றாவது மாதம் விளம்பரம் தரப்பட்டது. 'மாலை மலர்' பத்திரிகை சென்னையிலே ஆரம்பித்து, 15 நாட்களுக்குள்ளே விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. 'எதிரொலி ஏடு ஆரம்பிக்கப்பட்டு 2 வருடம் 8 மாதங்கள் ஆகியிருக்கின்றது. இதுவரையில் விளம்பரம் தரவில்லை. 3 மாதத்திற்குப் பின்னாலே எழுதுங்கள் என்றார்கள். 3 மாதத்திற்குப் பிறகு எழுதியபோது, 6 மாதத்திற்குப் பிறகு எழுதுங்கள் என்றார்கள். 6 மாதத்திற்குப் பிறகு எழுதியபோது, ஒரு வருடம் கழித்து எழுதுங்கள் என்றார்கள். ஒரு வருடத்திற்குப் பின்னாலே எழுதியபோது, "அதை விட்டுவிடுங்கள். அதைப்பற்றி என்னிடத்திலே பேசாதீர்கள்" என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே அதற்கெல்லாம் காரணம் என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? இந்தச் சங்கடங்களை நீக்குகின்ற அளவிலே நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதியில், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போன்ற அமைப்புகள் நடத்துகின்ற பத்திரிகைகளுக்கு அரசாங்கம் விளம்பரங்கள் தரவேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அமைப்புகளால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகளுக்கு, அவற்றை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துகின்ற வகையில் அரசாங்கம் விளம்பரம் தருகின்ற திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. அப்படி ஊக்கப்படுத்துகிறபோது, உற்சாகப்படுத்துகின்றபோது, அது மரத்தினுடைய ஆணி வேரையே பறிக்

இன்ற காரியத்திலே ஈடுபடுவதானால், மரத்தைக் காப்பாற்றவேண்டுமா அல்லது மரத்தின் ஆணிவேரையே பறிப்பவர்களைக் காப்பாற்ற வேண்டுமா என்ற பிரச்சினை அரசாங்கத்திற்கு வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட சூழ் நிலையிலே சில நேரங்களிலே சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. என்றாலும் இப்படிப்பட்ட அமைப்புகள் முறையாக பொது நோக்கத்தோடு நடத்தப்படுமானால், அதை ஆதரிக்கின்ற கடமை அரசுக்கு இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

இரண்டாவது சில பத்திரிகைகளின் பெயரைச் சொல்லி, அவை எப்போது துவக்கப்பட்டன என்ற விவரங்களைச் சொல்லி, விளம்பரங்கள் மறுக்கப்பட்ட தாக இங்கே தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட குறிப்புகளை வைத்துத் தனி யாகக் கேள்வி கேட்கப்பட்டால், அதற்கான விவரங்களைத் தயாரித்து, முறை யாக பதில் சொல்ல இயலும். இருந்தாலும் ஒரு கருத்தை முன்னாலேயே சொல்லியதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பத்திரிகை அதிகமாக விற்பனையாகிறது என்பது மட்டுமே கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படுவ தில்லை. அதிகமாக விற்பனையாகிறது என்று சொல்லி சில நேரங்களிலே சில பத்திரிகைகள் மக்களுக்கு அதிகமான அளவுக்கு தொல்லைகளை, துயரங் களை உருவாக்குகின்ற பத்திரிகைகளாக இருக்க முடியும். ஆகவே அதிக மான விற்பனை என்பதும் அடிப்படை விதிமுறையல்ல. விற்பனை 'குறை வாக இருப்பது என்பதும் அடிப்படை விதிமுறையல்ல. எப்போது தொடங்கப் பட்டது என்பது முறைக்காக வைக்கப்பட்டிருக்கின்ற விதிதான், அதனாலே ஏற்படுகின்ற விளைவுகள், பாதிப்புகள் இவைகளையெல்லாம் மனதிலே கொண்டு, முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனியாக இதைப்பற்றி ஒரு கேள்வி எழுப்பினால், விரிவாக அதைப்பற்றி விவாங்கள் தயாரித்து பதில் சொல்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** விதிவிலக்கு அளிக்கின்ற அதிகாரம் அரசுக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் விதிவிலக்கு அளிக்கின்றதற்கு என்று ஒரு முறை இருக்க வேண்டுமென்பதை அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். எனவே விதிவிலக்கு அளிக்கின்ற முறையை வரையறை செய்துகொண்டு, அந்த விதிகளை அமுல் படுத்துகின்றபோது, அரசின் பணத்தில், சமுதாயத்தில் எல்லோருக்கும் ஒரே விதமான பயன் ஏற்படுத்துகின்ற அளவுக்கு இருக்கின்றவாறு, ஒரு நியதியின் அடிப்படையிலே இயங்குகின்ற ஒரு அரசாங்க அமைப்பைப்பெற்றிருப்பதன் காரணமாக, அந்த விதிவிலக்கை நிர்ணயம் செய்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி



கள் மூவர் அடங்கிய குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவிற்கு விதிவிலக்குக்
கோருகிறவர்களின் விண்ணப்பத்தையும் அரசு அனுப்பி விதிவிலக்கை முறைப்
படுத்துகிற வழியை அரசு பரிசிலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த விதிவிலக்கு அளிப்பதற்கு ஒரு
விதி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்
றார்கள். அந்த விதிகளையும் மீறுவது என்று நிலை படைத்த பத்திரிகை
கள் வருகிறபோதுதான் பிரச்சினையே எழுகின்றது. ஆகவே அப்போது அந்த
விதிகள் எங்கே போய் நிற்கும் என்பது யாராலும் சொல்லப்பட முடியாத
ஒன்று. எந்த விதிகளைப் போட்டாலும், மீறுவது என்று முடிவு எடுத்துக்
கொண்டு காரியங்கள் நடைபெறுகிறபோது, அங்கே அந்த விதிகளைச் செயல்
படுத்த முடியாமல் நியாயப்படுத்தவேண்டிய ஒரு நிலைமை, ஒரு நெருக்கடி
அரசுக்கு ஏற்பட்டு விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தெரிவிப்பதுபோல, நீதிபதிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்துத்தான் இந்த
விதிகளை நிர்ணயிக்க வேண்டுமென்பதில்லை. அது நடைமுறைக்குச்
சாத்தியமானதல்ல.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** சில சமூக சேவை நிறுவனங்கள், ஆசிரியர்கள் அமைப்புகள், அரசு ஊழியர்கள் அமைப்புகள், பொது நிறுவனங் கள் இலவசமாக வெளியீடு செய்கின்றன. முறையாகப் பதிவு செய்துகொண்டு வார இதழ், மாத இதழ் என்று தங்களுடைய உறுப்பினர்களுக்கு மட்டும் வெளியிடுகின்றன. அத்தகைய இலவச வெளியீடுகளுக்கு விற்பனைக் கணக்கு அடிப்படையிலே விளம்பரம் கொடுக்க முடியாது. ஆகவே இலவச அடிப்படையிலே வெளியிடப்படும் அத்தகைய பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுப்பது குறித்து அரசிடம் விதிமுறைகள் இருக்கின்றனவா? அப்படி இல்லை என்றால், அதற்கு விதிமுறைகள் வகுத்து விளம்பரம் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதற்கு முன்னாலேயே பதில் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட அமைப்புகள், நிறுவனங்கள் விலை வைக்காமல் இலவசமாக விநியோகிக்கின்ற அப்படிப்பட்ட வெளியீடுகளுக்கு விளம்பரம் பெறுவதற்கு என்று அவர்கள் தனியாக அரசினிடத்திலே அணு கினால், அதைப்பற்றிப் பரிசிலித்து, அதனாலே ஏற்படுகின்ற பலனையும் கருத்திலே கொண்டு, விளம்பரம் கொடுப்பதைப்பற்றி அரசு முடிவு எடுக்கும். ஆனால் இதிலே ஒரு ஆபத்து இருக்கிறது. எவ்வளவு பேர்கள் படிக்கிறார்கள்,

எவ்வளவு பேர்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியாமலேயே போய்விடுகிறது. சில நேரங்களிலே 100 பத்திரிகைகளை அடித்து முக்கியமானவர்களுக்கு அனுப்பிவிட்டு 10 ஆயிரம் அடித்து இலவசமாக விநியோகித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிற ஒரு தவறான சூழ்நிலை கூட உருவாகக்கூடும். ஆகவே இந்த இலவச வெளியீடுகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கருதுகிறார்களோ அதை அரசுக்குத் தெரிவித்தால், அரசு அதைப் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

(முற்பகல் 9-50)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அரசு கொண்டு வருகிற நல்ல திட்டங்களையும், கொள்கைகளையும் எதிர்த்து சில ஏடுகள் விமர்சனம் செய்கின்றன. அப்படி அரசின் கொள்கைக்கு மாறாக விமர்சனம் செய்கிற ஏடுகளுக்கு அரசு விளம்பரங்கள் தருவதை நிறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசினுடைய கொள்கையை மறுத்து விமர்சனம் செய்கிற ஏடுகளுக்கு விளம்பரம் தரக்கூடாது, அல்லது தர முடியாது என்று மறுப்பது நியாயமும் அல்ல, சட்டமும் அல்ல, ஜனநாயகமும் அல்ல. ஆனால் அரசையே எதிர்த்து, அரசையே ஒழிக்க எந்த முறைகளைக் கையாண்டும், எப்படியோ எழுதியும், மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியும், அந்த ஒரு நோக்கத்தையே தன்னுடைய கருத்தாகக் கொண்டிருக்கிற சில ஏடுகளைப் பற்றிய கருத்துக்களைத்தான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட ஏடுகளைப் பற்றிய பரிசீலனை அரசிடம் அவ்வப்போது இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் நடத்துகிற ஏட்டிற்குக்கூட அரசு விளம்பரம் வருவதில்லை. அதைப்பற்றி யாரும் கேட்க மாட்டார்கள் போல இருக்கிறது. (சிரிப்பு)

**டெல்லியில் குடியரசு தினவிழா.**

* 2. **வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1983 ஆம் ஆண்டு, மத்திய அரசால் டெல்லியில் நடத்தப்பட்ட குடியரசு தின விழாவில் தமிழக அரசின் சார்பில் கலைக்குழுக்கள் ஏதும் பங்கேற்றனவா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

(உ) இல்லையெனில், அதற்குரிய காரணம் யாது ?





**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) & (இ) இல்லை.

(உ) டெல்லியில் நடத்தப்பட்ட குடியரசு தின விழாவில் தமிழகத்தின் ராமியக் கலைக் குழு ஒன்றையும், சத்துணவுத் திட்டத்தைச் சித்தரிக்கும் கையிலான ஒரு அலங்கார ஊர்தியையும் பங்கு பெற அனுமதிக்க வேண்டும் ன்று தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டிருந்தது. ஆனால் த்துணவுத் திட்ட அலங்கார ஊர்திக்கு இடம் அளிக்கவியலாது என்று த்திய அரசு கூறியது. முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இவ்வேண்டு காளை வலியுறுத்தி எழுதியும் மத்திய அரசு அதற்கு பதில் அனுப்பவில்லை. ந்நிலையில் தமிழ்நாடு அரசு டெல்லியில் நடத்தப்பட்ட குடியரசு தின ழாவில் பங்கேற்பதற்குத் தமிழகத்தின் சார்பில் கலைக் குழு அனுப்புவதை விர்த்தது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவரவர்களே, சத்துணவுத் திட்டத்தைச் த்தரிக்கும் அலங்கார வண்டிக்கு அனுமதி கொடுக்காததால் அனுப்பவில்லை ன்று சொல்லப்படுகிறது. வருகிற ஆண்டிலாவது அதை ஊர்ஜிதப்படுத்தி ிச்சயமாக அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ம்முடைய தமிழக அரசின் சார்பிலே அலங்கார ஊர்தியும், கலைக் குழுக் ளும் அனுப்பப்பட்டு வருகின்றன. அதற்காக நிறைய செலவு செய்கிறோம். த்திய அரசின் பாராட்டுக்களையெல்லாம் பெற்று வருகிறோம். ஆனால் வ்வொரு சமயத்திலேயும் அலங்கார ஊர்தியைத் தேர்வு செய்ய இந்திய ரசால் ஒரு குழு நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு எதைத் தீர்மானிக் றதோ, அவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதைத்தான் மாநில அரசு அனுப்ப வண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். சில நேரங்களிலே நமக்கு நல்லது, றந்தது என்று தோன்றுவது அவர்களுக்கும் அவ்வாறே தோன்றுகிறது. சில நரங்களில் அவர்களுக்குச் சிறந்தது என்று தோன்றாத அலங்கார வண்டி மக்குச் சிறந்ததாகத் தோன்றுகிறது. அப்போதுதான் இந்தப் பிரச் னையே எழுகிறது. கடந்த ஆண்டுதான், 1983 ஆம் ஆண்டு துவக்கத்திலே ான். இந்தப் பிரச்சினை ஏற்பட்டதே தவிர, அதற்கு முன்னாலே நாம் அனுப்பியிருக்கிறோம். இப்போது நடைபெற இருக்கிற குடியரசு தின விழாவை ஒட்டிய அணிவகுப்பிற்கு அலங்கார ஊர்திகள் அனுப்ப வரை டங்களை அனுப்பியிருக்கிறோம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** கலைக் குழுவை அனுப்ப ஆண்டுதோறும் தமிழக அரசுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 அக்டோபர் 27

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** ஆண்டுதோறும் எவ்வளவு செலவாகிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. இந்தக் கேள்வியை ஒட்டி, 1982 ஆம் ஆண்டு குடியரசு தின விழா நடைபெற்ற போது, மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசு சார்பில் திரு. வேலு அவர்கள் தலைமையில் 32 பேர் அடங்கிய மாரியம்மன் நடனக் குழு அனுப்பப்பட்டது. அதற்குச் செலவு ரூ. 22,997-20 காசு.

**திரு. ஆ. நல்லசிவன்:** குடியரசு தின விழா போன்ற விழாக்களில் மாநிலங்களின் சார்பிலே கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யும்போது, மத்திய அரசு தேர்ந்தெடுப்பதைத்தான் அங்கீகரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படி ஏற்பாடு செய்கிற அமைச்சரவைக்கு அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரின் அலுவலகத்திற்கு நம்முடைய மாநில அரசின் விளம்பர இலாகா அதுபற்றி ஏதாவது ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். குடியரசு தின விழாவில் எப்படி பங்கேற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பும் மாநில அரசின் உரிமையைக்கூட மத்திய அரசு எடுத்துக்கொள்வது சரியல்ல என்று ஆட்சேபித்து மாநில அரசு தெரிவித்திருக்கிறதா? அது குறித்து மத்திய அரசிடமிருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த நிகழ்ச்சியை நடத்துவது மத்திய அரசு: அது ஒரு குறிப்பிட்ட தொலைவிற்குள்ளே, குறிப்பிட்ட நேரத்திற்குள்ளே அவைகள் முறையாகவும், அழகாகவும் நடைபெற வேண்டுமென்று விரும்புவதால், அதற்காக ஒரு குழு அமைத்து, பொறுப்பு வாய்ந்தவர்களிடத்தில் அந்தப் பணியை மத்திய அரசு விட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் அப்படி சில நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இப்படித்தான் அமைய வேண்டுமென்ற அவர்களுடைய கருத்துக்கு ஏற்றவிதத்தில் அவர்கள் அமைப்பதை மாநில அரசு தடுக்க முடியாது, தடுப்பதும் நியாயமல்ல. ஆனால் மாநில அரசு சில கருத்துக்களை ஒட்டி அலங்கார ஊர்திகளை அனுப்பும்போது, அவர்கள் எந்தக் காரணங்களால் மறுக்கிறார்கள் என்பது தெரியாது. ஏதேதோ குறைகள் என்று சொல்லுகிறார்கள். அப்படி கருத்து மாறுபாடுகள் வரும்போது வேண்டுமானால், நம்முடைய கருத்தை வலியுறுத்தலாமே தவிர, அப்படி ஒரு குழுவே அமைக்கக்கூடாது, சில விதிகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்று மத்திய அரசை, அந்த விழாவை நடத்தும் பொறுப்புள்ள குழுவை நாம் வலியுறுத்துவது சரியாக இருக்காது.



1983 அக்டோபர் 27]

**திரு. ஆ. நல்லசிவன்:** ஒரு மாநில அரசுக்குள்ள உரிமையை மறுக்க மத்திய அரசுக்கு உரிமை இருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்களா என்பது தெரியவில்லை. அப்படி ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. 150 கோடி ரூபாய் செலவழித்து சாப்பாடு போடும் திட்டம் முக்கியமான திட்டம் என்று மாநில அரசு சொல்லும்போது, அது சரியா தப்பா என்பது குறித்து மத்திய அரசுக்கு வேறு கருத்து இருக்கலாம் . . . . . .

**திரு. க. இராமமூர்த்தி:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். வினா நேரத்திலே மற்றவைகளை எல்லாம் உள்ளே நுழைப்பதோ அல்லது கொள்கை பற்றி பேசுவதோ இதுவரை அனுமதிக்கப்படாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குச் சொல்கிறேன். கேள்வி நேரத்தில் ஒரு உறுப்பினர் சொல்வது பிடிக்கவில்லை என்றால், அது குறித்து துணைக் கேள்வியாகப் போட்டு விளக்கம் பெறலாம். இடையிலே ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப இதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாநில அரசு, முக்கியமான கொள்கை என்று அறிவித்துள்ள கொள்கையை வலியுறுத்துவதற்கு ஒரு தேசிய விழாவில் விளம்பர ஏற்பாடு செய்யும்போது, மத்திய அரசுக்கு அதை மறுக்க உரிமை இருக்கிறது, அந்த உரிமையை நாம் அங்கீகரிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதிலே மத்திய, மாநில அரசுகளுடைய உரிமைகள் எங்கேயும் எழவில்லை. மத்திய அரசு ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறது. அதிலே மாநில அரசுகள் எல்லாம் பங்கு பெற வேண்டுமென்று விரும்புகிறது. ஆகவே அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். நம்முடைய கருத்துக்களின் அடிப்படையிலே அதிலே கலந்துகொள்ளும் உரிமை அல்லது கலந்துகொள்ள மறுக்கும் உரிமை நமக்கு இருக்

து. அந்த உரிமையை அவர்கள் பறித்துக் கொள்ளவில்லை. பறித்துக்
ாள்ள முடியாது. பறித்துக் கொள்ளவும் விடமாட்டோம். அதனாலேதான்
ன்ற ஆண்டு நாம் அனுப்பிய அலங்கார ஊர்திகளின் கருத்துக்கள் அவர்
நக்குப் பிடிக்கவில்லையோ அல்லது அந்த அமைப்பு பிடிக்கவில்லையோ
ின்ன காரணமோ, பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். நாங்களும்
னுப்பவில்லை என்று சொல்லிவிட்டோம். மீண்டும், அனுப்புங்கள் என்று
வர்கள் உத்தரவு போடவில்லை. அனுப்புகின்ற சூழ்நிலையில் நம்முடைய
ரிமைகளையும் நாம் விட்டுக்கொடுக்கவில்லை. ஆகவே இங்கே
நிலங்களினுடைய உரிமையை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது என்ற
ரச்சினையே எழவில்லை.

**திரு. த. சந்தோஷம்:** தற்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய
திலில், மத்திய அரசினர் என்ன காரணங்களால் மறுத்தார்கள் என்பது தெரிய
ல்லை என்று சொன்னார்கள். என்ன காரணம் என்று கேட்டு, தெரிந்து
காள்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இவ்வளவு
ல்ல திட்டம் என்று சொல்லி, செயற்படுத்தும் திட்டத்தை பலரும் தெரிந்து
காள்ள வேண்டியது மிக முக்கியம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைச் சித்த
க்கும் அலங்கார வண்டியை அனுமதிக்க மறுத்தார்கள் என்றால் அது குறித்து
ாரணம் கேட்டிருக்க வேண்டாமா? அப்படி செய்யப்பட்டதா என்று அறிய
ரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** பல மாநிலங்கள் அனுப்புகிற
ப்படிப்பட்ட அலங்கார ஊர்திகளை அவர்கள் நிராகரிக்கிறார்கள் அல்லது
றுக்கிறார்கள். அப்படி இதையும் அவர்கள் நிராகரித்தார்கள் அல்லது மறுத்
ார்கள். அதற்கான காரணங்களை அங்கே கேட்கிறபொழுது, அவர்கள்
சால்கிற காரணத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்களா, நம்புகிறார்களா
ன்பது நமக்குத் தெரியாது. அவர்கள் என்ன காரணங்கள் கூறுகிறார்கள்
ன்றால், அந்த அலங்கார ஊர்தி அணி வகுத்துச் செல்கிறபோது, முக்கியமான
ார்வையாளர்கள், விசேஷ விருந்தினர்கள் அமர்த்தப்பட்டு உட்கார்ந்திருக்கிற
டத்தில் அது தாண்டுகிற அந்தச் சில நிமிடங்களுக்குள் அந்த ஊர்தியிலே
மைக்கப்பட்டிருக்கிற கருத்து விளக்கங்களை அவர்கள் முழுமையாகத்
தரிந்து கொண்டாக வேண்டும். அதற்காக அதை நிறுத்தி வைக்கின்ற
ழக்கமும் இல்லை. அது அணி வகுத்து நகர்ந்து கொண்டே இருக்கும்.
கர்ந்து கொண்டே அதைத் தாண்டுகிறபோது அந்த இடைவெளிக்குள் அந்த





வண்டியில் இருக்கின்ற கருத்துக்கள் இந்த முக்கியஸ்தர்களுக்கு, மக்களுக்குப் புரிந்தாக வேண்டும் என்ற அடிப்படையிலே சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஆகவே கருத்துக்களை, காரணங்களை நாம் கேட்டால், அவர்கள் எந்தக் காரணத்தையும் சொல்ல முடியும். "நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கு" என்ற பழமொழியே இருக்கிறது. ஆகவே காரணங்களை அவர்களும் சொல்கிறார்கள். நாமும் கேட்டுக்கொள்கிறோம். நமக்கு விருப்பம் இருந்தால் அனுப்புகிறோம். இல்லையானால் இல்லையென்று சொல்லி விடுகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** டெல்லியில் நடைபெறுகிற அந்த அலங்கார ஊர்வலத்தில் கலந்து கொள்வது நம்முடைய உரிமை. அவர்கள் அதை மறுத்து விடுவது மாத்திரம் அவர்களுக்குள்ள உரிமை என்று நாம் சொல்லிக் கொள்ள முடியாது. இந்தியா 'அகில இந்திய நாடு', 'ஒரு தேசியம்' என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும்போது இதிலே சில மாற்றங்களை உருவாக்குவதற்கு, வேண்டுமானால் ஆலோசனைகளைச் சொல்லி, அவர்களே அதில் திருத்தங்களைச் செய்து, இந்த அரசினுடைய ஒப்புதலோடு செய்திருக்க வேண்டும். பல மாநிலங்கள் இப்படி கலந்து கொள்ளாமல் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்தே தெரிகிறது. அப்படியானால் ஒரு உரிமைப் பிரச்சினையே உருவாகிக் கொண்டிருக்கிறது அல்லது மறைமுகமாக திணிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி நமது அரசு முக்கிய கவனம் செலுத்தி காரணத்தைக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த வினாவிற்கு விடை அளிக்கிறபோது, இப்படிப்பட்ட ஒரு நீண்ட விவாதம் வந்தால், அது மத்திய அரசுக்கும் பலன் அளிக்கும், அந்த அதிகாரிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால்தான் கொஞ்சம் விளக்கமாக அந்த விடையையே தயாரித்தோம். அதனுடைய பலனை இன்றைக்கு இந்த அவையும் பெற்றுக்கொண்டிருக்கிறது, இந்த நாடு பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைத்தான் ஏற்கெனவே இந்த மாநில அரசும் தொடர்ந்து வலியுறுத்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 அக்டோபர் 27

பொது அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம்.

* 3. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது அடிப்படையில் நியமனம் செய்யும் முறையைக் கண்டித்து ஆசிரியர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதம் இருந்ததன் விளைவாக, மாவட்ட ஆட்சித் தலைவரும், மக்கள் பிரதிநிதிகளும் தலையிட்டு, அந்த முறை மாற்றி அமைக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அம்மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி, இடைநிலை ஆசிரியர்கள் நியமன விஷயத்தில், கூடுதல் வயதுடையவர்கள் இருக்க, குறைந்த வயதுடையவர்களை நியமனம் செய்தது பற்றி அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆசிரியர் சங்கத்தினர் உண்ணாவிரதம் இருந்ததன் விளைவாகத்தான் பொது அடிப்படையில் நியமனம் செய்யும் முறை மாற்றி அமைக்கப்பட்டது என்று கூறுவதற்கில்லை.

(இ) வயது குறைந்தவர்கள் நியமிக்கப்பட்டதாக நாகர்கோவிலைச் சேர்ந்த திருமதி கே. சகுந்தலா என்பவரிடமிருந்து புகார் ஒன்று வந்தது.

(உ) இப்புகார் குறித்து, முதன்மைக் கல்வி அலுவலரின் அறிக்கையைப் பெற்று, அதனை பள்ளிக் கல்வி இயக்குநர் பரிசீலனை செய்தபோது, நடைபெற்ற நியமனங்கள் யாவும் முறையாகச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிலே ஏதோ ஒரு சொல் விடுபட்டு பொருளும் மாறிவிட்டதாக நினைக்கிறேன். அதாவது பொது அடிப்படையிலேதான் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், சங்கங்களும் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக, வயது முதிர்ந்தவர்களுக்கு, அதன் காரணமாக வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நிலையில் அவர்களை நியமனம் செய்வது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. ஏனென்றால் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னால், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு முன்னால், ஒரு 'இன்டர்வியூ' நடத்தப்படுகிறது. அதன் பிறகு



1983 அக்டோபர் 27]

தான் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான், வயதை அடிப்படையாகக் கொண்டு, வயது முதிர்ந்தவர்களை முதலில் நியமிக்க வேண்டுமென்ற கருத்து ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், வயது முதிர்ந்தவர்கள் நிரம்ப பேர் இருக்க, வயது குறைந்த ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற புகார் வந்திருக்கிறது. ஆகவே அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வயது குறைந்தவர்களிலும் சிறந்த ஆசிரியர்கள், திறமையான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் வாய்ப்புத் தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான், நேர்முகப் பேட்டி என்று வைத்திருக்கிறோம். இது இங்கே மட்டுமல்லாமல் எல்லா இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் இருக்கிற ஒன்றுதான். அப்படி திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க நாம் நேர்முகப் பேட்டி முறையான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். அதை நீக்குகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : ஆசிரியர் பயிற்சி அளிக்கிறபோது [illegible], எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற்றவர்கள்தான் பயிற்சிக்கு வருகிறார்கள். பயிற்சி அளிப்பதற்கு முன்னால், ஒரு முறை அவர்களுக்கு 'இன்டர்வியூ' நடத்தப்பட்டு, அதற்குப் பிறகுதான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கானவர்களுக்கு 'இன்டர்வியூ' நடத்தப்பட்டு 100 அல்லது 150 பேர்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சியை அவர்கள் முடித்ததற்குப் பிறகு, நியமனம் என்று சொல்கிறபோது, சிபாரிசுக்கு இடமில்லாமல், வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்கிற அடிப்படையில் வாய்ப்பினை அளித்தால்தான், அவர்களிடையே விரக்தி ஏற்படாது. இன்னார் இன்னாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்கிற நிலைமை அவர்களிடையே உருவாகும். இப்போதே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பயிற்சிக்கு ஆள் எடுக்கிறார்கள். ஆகவே நான் சொன்ன முறை கையாளப்பட்டால், ஒரு நேர்மையான வழி உருவாக வாய்ப்பு உண்டாகும். இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அந்த வயதை மட்டும் அடிப்படையாக வைத்துத் தேர்ந்தெடுத்தால், அது அனுதாபத்தின் அடிப்படையில், உதவி செய்கின்ற ஒரு முறையாகத்தான் இருக்கும். திறமையானவர்களுக்கு நாம் வாய்ப்பு தந்ததாக இருக்காது. ஆகவே, அந்த முறையில் நாம் தேர்ந்தெடுப்

படுவதற்கில்லை. அது மட்டுமல்லாமல், 30 வயதிற்கு மேற்பட்டவர்களை எடுக்க முடியாது என்ற நிலையில், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வயதைத் தளர்த்தி உதவி செய்ய வேண்டுமென்ற நிலைமையில், இப்பொழுது உத்தரவு போட்டோம். பொதுவாக அந்த உத்தரவை நாம் போடவில்லை. பயிற்சி பெற்ற பிறகு, 5 அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களைப் போடுவதை விட, போடாமல் இருப்பது நல்லது என்கிற கருத்து தான் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், இருந்து வருகிறது.

திரு. செ. முத்துசாமி : தற்போது அமுலில் இருக்கக்கூடிய ஆசிரியர்—மாணவர் விகிதாச்சார ஆணையைப் பொறுத்தமட்டில், ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், 250 என்று வரையறுக்கப்பட்ட 1954-ல் வெளியிடப்பட்ட ஆணை அமுலில் இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினையில் வருகின்ற சிக்கலே அதிலேதான் இருக்கிறது. அந்த ஆணையில் இருக்கிற விகிதாச்சாரப்படி ஆசிரியர்களை இந்த அரசு நியமிக்காத காரணத்தால்தான், இன்றைக்கு 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல் நிலைப் பள்ளிகளிலே தமிழ் நாடு கல்வி ச ப்
சொல்லப்பட்டிருக்கிற ஆசிரியர்-மாணவர் விகிதாச்சார அடிப்படையில் ர்
கள் நியமனங்கள் 'சாங்ஷன்' செய்யப்படுவதில்லை. ஆகவேதான் ல
யில்லாத் திண்டாட்டம் வருகிறது. பயிற்சியை முடித்த பிறகு 10 க்
காலம் அவர்களுக்கு வேலை கொடுக்காமல் வைத்து விட்டு, பிறகு ஓ
விட்டது, ஆகவே வேலையில்லை' என்று சொல்லக்கூடிய நிலைமை த
நாட்டிற்கு அடிப்படையிலேயே ஒரு ஆபத்தான சமாச்சாரம். ல்
ஆசிரியர்-மாணவர் விகிதாச்சார ஆணையின் அடிப்படையில், ஆசிர் ளா
நியமனம் செய்து அவர்கள் அத்தனை பேர்களையும் வேலைக்கு க்
கொள்கிற கொள்கையை இந்த அரசு நடைமுறைப்படுத்த முன்வ

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாட்டிலே பல பிரச்சினை. க்
இன்றைக்கு அதிலே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இ ம்
ஒன்று. நாம் பணத்தை ஒதுக்கும்போது, எல்லாப் பிரச்சினைகளையும் மனதிலே கொண்டுதான் ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே இந்த ஒரு பிரச்சினை மட்டும்தான் அரசுக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு, நாம் பணத்தை ஒதுக்குகின்ற நிலைமை இல்லை. நிதி ஆதாரங்களைப் பொறுத்து தான் நாம் செய்துகொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையிலேயே, நான் ஒரு பதிலைச் சொல்ல விரும்புகிறேன். நான் அண்மையில் கடலூருக்குச் சென்றிருந்தபோது அங்கே தேவையான ஆசிரியர்கள் இல்லை என்கிற ஒரு குறை இருப்பதாக அங்குள்ள



அதிகாரிகள் சொன்னார்கள். இருக்கின்ற நிலைமைகளைப் பரிசீலிக்கச் சொல்லி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வேறு மாவட்டங்களிலிருந்தாவது ஆசிரியர்கள் வேண்டுமென்று மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களைக் கேட்டபோது, அந்த அலுவலகங்களிலிருந்தும் பதில் வரவில்லை என்று சொன்னதாலே, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்களே, அப்படி உண்மையிலேயே வேலையில்லாத் திண்டாட்டத்தில் ஆட்பட்டிருக்கிறார்களா அல்லது வேறு எங்கேயாவது வேலையில் இருந்துகொண்டே நம்மைத் திண்டாட வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும். (சிரிப்பு).

திரு. பா. ரா. தாமஸ் : வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு பல்லாண்டுக் காலம் காத்துக் கொண்டு அவர்கள் 34 வயதைக் கடக்கக்கூடிய நிலையில் தற்காலிகமாக 6 மாதம், 8 மாதம் தான் இருக்கும் என்ற நிலை ஏற்பட்டு பணி வாய்ப்பு இழக்கும் நிலை ஏற்படுகிறது. அத்தகையோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மேலும் அரசாங்கக் கொள்கைப்படி, படித்தவர்கள் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்திருக்கும் நிலையில், வேலைவாய்ப்பு இல்லாவிட்டால், அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் நிலை இருக்கிறது. அந்த சாராரையும் இவர்களோடு இணைத்து இத்தகைய ஆசிரியப் பெருமக்களுக்கு முன்னுரிமை கொடுக்கிற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாங்கள் ஒரு ஆணையாகப் போடாவிட்டாலும், வயது அதிகமானவர்களுக்கு முதல் உரிமை கொடுத்து அவர்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரையாக அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். வயது கடந்து விட்ட காரணத்தால், நிரந்தரமாக வேலை கிடைக்காத நிலைக்கு அவர்கள் ஆளாகக் கூடாது. ஆளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நாம் அறிவுரை தந்திருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கேட்ட கேள்விக்குச் சொன்ன பதில் எற்கெனவே இங்கே சொன்ன ஒரு பதிலுக்கு முரண்பட்டிருக்கிறது. இன்னொரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 5 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் வேலையில்லாமல் இருக்கிறவர்களை நியமிக்காமல் இருப்பதே நலம், அதுதான் கல்வித் துறையின் கருத்து என்று சொன்னார்கள். 34 வயது முடிகின்ற நிலையில்கூட வேலை கிடைக்காமல் இருக்கின்ற அவர்கள் ஆசி

னுடைய பணத்தைச் செலவு செய்து பயிற்சியை முடித்தவர்கள். பயிற்சியை முடித்து அவர்கள் வெளியே வந்ததற்குப் பிறகு வேலை இல்லையென்றால், அதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. வயதானதற்குப் பின்னாலே அவர்களும் வேலைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இரண்டாவது பதிலின் அடிப்படையில் வயது மூத்தவர்களைத்தான் முதலில் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் பயிற்சிக்குரிய தகுதி பெற்று, பயிற்சி பெற்று, சர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறார்கள். அதன்படி அவர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்தால், அரசுக்கும் பண நஷ்டம் ஆகாது. பயிற்சி முடித்தவர்கள் ஆயுள் காலம் முழுவதும் கஷ்டப்பட வேண்டிய நிலைமையும் இருக்காது. ஆகவே இதைத் திட்டவட்டமாகச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களின் கேள்விக்கு நான் பதில் சொன்னது மனிதாபிமான உணர்வோடு நாங்கள் செயல்படுகிறோம் என்பதைக் காட்டுவதற்காக. ஆனால் இதற்கு உடன்பாட்டு அல்லது இருக்கின்ற கல்வித் துறையின் கருத்துக்களுக்கு ஏற்ப நடந்துகொள்வதாக நான் சொல்லவில்லை. அப்படிப் பார்த்தால், ஒரு ஆசிரியர் பயிற்சி முடித்ததற்குப் பிறகு, தொடர்ந்து வருடக்கணக்கில் வேலையில்லாமல் இருப்பாரானால், 10 ஆண்டுகளில் அவர் பயிற்சி பெற்ற தன்மையை இழந்து விடுகிறார் என்பதுதான் இப்பொழுது இருக்கிற கருத்தாகும். ஆகவே தான் வேலைக்கு வருகிற ஆசிரியர்களுக்கு நாம் இப்போது பணியிடைப் பயிற்சியைத் தந்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-10)

அந்த அடிப்படையில்தான் சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. அது ஒரு மிக முக்கியமான கருத்து என்று சொல்லிக் கொள்கிறேன். பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படித்தவர்களானாலும், புதிதாகப் படித்து வந்தவர்களானாலும், அவர்களிடையே பத்தாண்டு, இருபதாண்டுக்கு முன்பிருக்கிற இடைவெளி வித்தியாசத்தை அது ஏற்படுத்தி வருகிறது. அதை மனதில் வைத்துத்தான் புதியவர்களை நியமிக்கிறோம்.

பிரிட்டனில், 'நியூ பிளட் டீச்சர்ஸ்' (New blood teachers) என்று சொல்லி, புதிதாக ஆசிரியர் பயிற்சி பெற்ற இளைஞர்களையெல்லாம் திட்டமிட்டு சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். அதை மனதில் வைத்துப் பார்க்கும்போது, புதிய ஆசிரியர்களுக்கு இங்கே மிக மிகத் தேவை இருக்கிறது.



படித்து நீண்ட இடைவெளி ஆகிவிட்டால், அவர்கள் ஆசிரியத் தன்மையை இழந்து விட்டிருப்பார்களோ என்ற அடிப்படையில்தான் சொல்லியிருக்கிறேன். அப்படி இருந்தாலும், மனிதாபிமான உணர்வோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நியாயமான அடிப்படையில், அவர்களின் வயது 30 ஆக இருந்தாலும் வயது குறைந்தவர்களை எடுக்கிற நிலைமையும் இருக்கும். அந்த எண்ணம் அரசுக்கு இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்பதைப் போல தகவல் தரப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படியானால், நான் கேட்க விரும்புவது, கர்நாடகத்தில் சென்று பயிற்சி பெற்றவர்களுக்கு இங்கே வேலை கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு தடை ஆணை கல்வித் துறையால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையா? அப்படியென்றால் அவர்களுக்கும் வேலை கிடைக்கின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அரசே அந்தத் தடையை நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தப் பிரச்சினை பற்றி மேலும் மனிதாபிமானத்தோடு பரிசீலிக்கப்பட வேண்டும். அதற்காக, நம்முடைய ஆசிரியர்களுக்கு அவர்கள் சமமாக வைக்கப்பட வேண்டியதில்லை. அங்கே குறைந்தபட்சம் மார்க்குகள் 35 என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே சென்றோ, செல்லாமலோ அந்த மதிப்பெண்களைப் பெற்று சர்டிபிகேட் வாங்கி வந்து விடுகிறார்கள். நாம் குறைந்தபட்ச மார்க் 50 என்று வைத்திருக்கிறோம். அப்படி அவர்களையும் நாம் இவர்களுக்குச் சமமாகச் சேர்த்தால், இங்குள்ள கல்வியின் தரத்தைக் குறைப்பதற்கு நாமே ஆதரவு கொடுப்பதைப் போல ஆகிவிடும். அவர்களுக்கு வேலை கொடுக்கிறபோது, அவர்களின் அவல நிலைமையை எண்ணிப் பார்த்து உதவலாம். ஆனால் இவர்களுக்கு இணையாக அவர்களை வைக்க முடியாது.

[1983 அக்டோபர் 27

## தொழிற் கல்வி ஆசிரியர்கட்கு பதவி உயர்வு.

*4 வினா—திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 14—3—1979 அன்று சட்டமன்ற மேலவையில் வினா எண் 185-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. சம்பள வீதம் பெற்று தொழில் பாடமுறையில் பணிபுரியும் ஆசிரியர்களை, உயர்நிலை அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக அல்லது உதவித் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களாகச் செய்யும் விஷயத்தில் அரசு முடிவு ஏதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இருமுனைப் பாடத் திட்டப் பிரிவில் பொறியியல் ஆசிரியர்கள் (Engineering Instructors) செயலாண்மை உதவியாளர்கள் (Secretarial Assistants) மற்றும் விவசாய ஆசிரியர்கள் (Agricultural Instructors) ஆகியோரில் பயிற்சிப் பட்டப் படிப்பும், அப்பட்டம் பெற்றபின் 5 ஆண்டு கற்பித்தல் அனுபவமும் கொண்டவர்கள் உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்குத் தகுதி பெற்றவர்களென அரசாணை நிலை எண் 1529, கல்வி, நாள் 22—7—1981 ஆணையிட்டுள்ளது. மேலும் ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்று, பி.டி. ஆசிரியர் ஊதியம் வாங்குகிற முழு நேர முன்னாள் இருமுனைப் பாட தொழிற் கல்வி ஆசிரியர்கள், உயர் நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளி உதவித் தலைமை ஆசிரியர்கள் நியமனம் பெறத் தகுதி உடையவர்கள் என்று அரசாணை நிலை எண் 731, கல்வி, நாள் 28—4—1981 ஆணையிட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் நல்ல ஆணைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், இருமுனைப் பாடத் திட்டத்தில் முன்பு பணியாற்றிய ஆசிரியர்களை, மேல் நிலைப் பள்ளிகளில் ஈர்த்திருக்கிறோம். ஆனால் அதற்குரிய பணி விதி முறைகளை இன்னும் வெளியிடவில்லை. அதற்கான பணி விதி முறைகளைத் திட்டவட்டமாக, இருமுனை ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், வெளியிட வேண்டும். அப்போதுதான் அவர்களும் மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்ற வாய்ப்பு இருக்கும். அதை மிக



1983 அக்டோபர் 27]

விரைவில் வெளியிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : பி.டி. சம்பள விகிதம் பெற்று வரக்கூடிய தொழில் ஆசிரியர்கள் பற்றியும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே சம்பள விகிதம் பெற்று தமிழ்ப் புலவர்களாக இருப்பவர்கள் இந்தப் பட்டதாரி கல்வித் தகுதிக்குச் சமமானவர்கள் என்று சமீபத்தில் 2 வழக்குகளில் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டன. அதைப்பற்றிக் கல்வித் துறை என்ன யோசிக்கிறது ? அவர்களுக்கும் தலைமையாசிரியர் பதவிகள் கொடுக்க அரசு முன் வந்திருக்கிறதா ? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த ஆசிரியர்களுக்கு என்ன சலுகைகள் தந்திருக்கிறோமோ அதே சலுகைகளைத் தமிழாசிரியர்களுக்கும் தந்திருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பி.டி. ஊதிய விகிதத்தில் தமிழாசிரியர்கள், தொழிலாசிரியர்கள் எல்லாம் சமமாகக் கருதப் பெற்றவர்கள். அவர்கள் முறையான பட்டியலில் இன்னும் இணைக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய கல்வித் துறை உருவாக்கியுள்ள முறையான பணி மூப்புப் பட்டியலில், தலைமையாசிரியராக, உதவித் தலைமையாசிரியராக தகுதி பெறக்கூடிய அத்தனை பேர்களையும் சேர்த்து சரியான முறையில் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கும்படி, சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : தமிழாசிரியப் பெருமக்கள் ரூ. 65 என்று அடிப்படை ஊதியம் பெற்று பணியாற்றிய காலத்தைக் கணக்கிட்டு உதவித் தலைமையாசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம் என்று ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு உயர்த்தப்படும்போது, ஏற்கெனவே உள்ள பி.டி. ஆசிரியர்கள், உதவித் தலைமையாசிரியர்களாக இருந்தால், அவர்கள் அடிஷனல்

[1983 அக்டோபர் 27

ஹெட்மாஸ்டர்களாகத் தொடர்ந்து இருக்கலாம் என்று ஆணை இருக்கிறது. இந்த ஆணை தனியார் பள்ளிகளில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அரசுப் பள்ளிகளில் அமல்படுத்தப்படவில்லை. மாற்றம் செய்யும்போது, பட்டதாரி உதவித் தலைமையாசிரியர்களும், கூடுதல் உதவித் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிப் பரிசீலிக்கலாம். அதைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இப்போது இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பி.டி. சம்பள விகிதம் பெறும் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெறக்கூடிய தகுதியுள்ளவர்களாக இருப்பதாக ஏற்றுக் கொள்கிற அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றில் எத்தனை பேர் உள்ளனர்? அப்படியில்லாதவர்கள் யாராவது வழக்கு மன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார்களா? இப்படி ஒரு அரசு ஆணை வெளிவந்திருக்கும் இந்த நிலையில், அந்த வழக்குகளைத் திரும்பப் பெறக்கூடிய நிலையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** என்னிடத்தில் தரப்பட்டிருக்கிற விவரங்களின்படி, வழக்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

**பல்கலைக் கழக ஆசிரியர்கள் அலுவலர்கள் இடையே ஊதிய முரண்பாடுகள்.**

*5. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் இடையே உள்ள ஊதிய முரண்பாடுகள் முதலியன குறித்து ஆராய, ஒரு நபர் குழு (One Man Commission) அரசினால் அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்து விட்டதா ?

(உ) அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான பரிந்துரைகள் யாவை?

(எ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?



1983 அக்டோபர் 27]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆம்.

(உ) சென்னை, மதுரை-காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு ஒரு நபர் குழு பரிந்துரைத்துள்ள முக்கியமான பரிந்துரைகள் பின்வருவன :—

(1) 1—1—1974-க்கு முன்னர் ஏற்கெனவே ஊதிய உயர்மட்டத்தை அடைந்த ஆசிரியர்களின் ஊதிய உயர்வை தக்கவாறு நிர்ணயம் செய்யலாம்.

(2) அண்ணாமலை நகர் மற்றும் பரங்கிபேட்டையில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் பகுதியில் பணியாற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்கலாம்.

(3) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு பல்கலைக்கழகப்படி (University Allowance) வழங்கலாம்.

(4) 1—1—1974-ல் பணியிலிருந்த விரிவுரையாளர்களுக்கு ரூ. 700—1,600 சம்பள விகிதத்தில் அத்தேதியிலிருந்து அதே விகிதத்தில் ரூ. 1,100 சம்பளத்தை நிர்ணயம் செய்து நிதிப்பயனை 1—1—1977 முதல் தரத் தேவையில்லை என பரிந்துரை செய்திருந்ததை இம்மாதிரியான சலுகை வேறு சில விரிவுரையாளர்கள் 1—1—1974 முதல் பயனடைவதால் அண்ணாமலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கும் இவ்வாறே வழங்கலாமா என்ற கருத்தரு அரசு பரிசீலனையில் உள்ளது.

(எ) மேற்குறிப்பிட்ட பரிந்துரையின் பேரில், 4-வது தவிர, ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கு, குழுவின் பரிந்துரையின் பேரில் ரூ. 1,100 ஊதிய விகிதத்தில் இருக்க வேண்டுமென்று அந்தக் கொள்கை சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்திலும் ஏற்கெனவே அமுல் படுத்தப்பட்டு, அந்த ஆசிரியர்கள் அந்தச் சலுகையைப் பெற்றுவிட்டனர். இந்த ஒரு நபர்க் குழு அமைக்கப்பட்டதன் நோக்கமே பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களிடையே ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்ய வேண்டியது என்பதுதான். அந்த அடிப்படையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கும் ரூ. 1,100 வழங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரை நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்படும் என்று இதே மேலவையில் அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஆகவே இதை விரைவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1983 அக்டோபர் 27

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, பரிசீலனை என்று சொன்னாலேயே உடனே ஒத்துக்கொள்வதாக நினைக்கக் கூடாது. பரிசீலித்து நிராகரிக்கவும் செய்யலாம். பரிசீலனையில் இருக்கிறதென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒரு முக்கியமான கருத்து, பல்கலைக்கழகத்திற்கு நாம் தந்திருக்கிற தன்னாட்சி உரிமைப்படி, இப்படிப்பட்ட பண சம்பந்தப்பட்ட உரிமைகளை அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் தர முற்படுவார்களேயானால், பல்கலைக்கழகத்திற்கும் அரசுக்கும் இருந்து வருகிற தொடர்பில், பல்கலைக்கழகத்தில் இருக்கிற நிதியை, அவர்கள் கொடுக்கக் கட்டாயப்படுத்தி வாங்குவதை விரும்பாது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிவரும். ஆகவே இந்தப் பிரச்சினை அதில் அடங்கியிருக்கிறது என்பதால்தான், நாம் விட்டுக் கொடுத்து இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன்.

(முற்பகல் 10-20)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தங்களுக்கு நிதி தேவைப்படும்போது மட்டும் பல்கலைக்கழக நிர்வாகங்கள் அரசாங்கத்தை நாடுகின்றன. ஆனால் அரசு ஒரு கருத்தைச் சொன்னால், அத்தகைய பல்கலைக் கழகங்கள் அரசு தங்களின் தன்னாட்சியில், தன்னாட்சி உரிமையில் தலையிடுவதாகக் கூக்குரலிடுகின்றன. இத்தகைய முரண்பாடான நிலைமையைத்தான் நாம் இன்று தமிழகத்தில் காண்கிறோம். எனவே இத்தகைய நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? தற்போது பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதங்களைப் பொறுத்தவரையில், அவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டு பல்கலைக் கழகங்களுக்கு "பிளாக் கிராண்ட்" என்று அரசு கொடுத்து வருகிற நிலைமைக்குப் பதிலாக, தனியார் பள்ளிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப்போல் "ஸ்டாஃப் கிராண்ட்" என்ற முறையை அமுல் செய்வது பற்றி ஏன் அரசு பரிசீலிக்கக்கூடாது? அப்படிச் செய்வதன் மூலமாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஒரே சீரான நிதி நிலைமையை உருவாக்க இயலும். எனவே இந்தக் கருத்தை அரசு பரிசீலித்து அமுல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தற்போது இந்தப் பிரச்சினையே அரசாங்கத்தை அந்த நிலைமைக்குத்தான் கொண்டு சென்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 அக்டோபர் 27]

**தஞ்சாவூர் மக்கள் ஊழியச் சங்கம் நடத்தும் நடு நிலைப் பள்ளிகள்.**

* 6. **வினா—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மக்கள் ஊழியச் சங்கம் நடத்தும் தனியார் நடு நிலைப் பள்ளிகளில், சில ஆசிரியர்கள் நீக்கப்பட்டது தவறு என்று அதிகாரிகள் உத்தரவிட்டும், பள்ளி நிர்வாகம் அந்த ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், பள்ளி நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) கடந்த மூன்றாண்டுகளாக பள்ளிக்கு நிர்வாக மானியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியின் நிர்வாகத்தின் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று கல்வித் துறையின் மேல்முறையீட்டு அதிகாரிகளால் உத்தரவிடப்பட்டிருந்தும், அந்தப் பள்ளி நிர்வாகத்தினர் அவர்களுக்குத் திரும்பவும் வேலை தரவில்லை என்பதால், அந்த நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அதோடு வேலையிழந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க அரசால் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? பள்ளியின் நிர்வாக மானியம் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும், அந்தப் பள்ளி நிர்வாகம் இந்தத் தவற்றைத் தொடர்ந்து செய்துகொண்டு ஆசிரியர்களை வேலையில் அமர்த்த மறுக்கிறது. எனவே தமிழ் நாடு ஆசிரியர் பணி வரன் முறைச் சட்டத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் எந்த உத்தரவு மீறப்பட்டாலும், அதற்குக் காரணமான பள்ளி நிர்வாகத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்படலாம் என்று விதி இருக்கிறது. அதன் அடிப்படையில் அரசு அந்தப் பள்ளி நிர்வாகத்தின் மீது ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை? அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேலவைத் தலைவர் அவர்களே, பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த ஆசிரியர்களுக்கு அரசு எத்தகைய உதவியும் செய்யவில்லை என்பது சரியல்ல. அங்கே இரண்டு ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் திருமதி சாவித்திரி என்ற ஆசிரியை 1—3—1978 முதல் தஞ்சை லட்சுமி நாராயணன் துவக்கப் பள்ளியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார். மற்றொரு ஆசிரியரான திரு. வாசுதேவன் அவர்களுக்கும் அதே மாதிரியான உதவியைச் செய்ய அரசு முன்வந்தபோது, அவர் அதை ஏற்க மறுத்து அந்தப் பள்ளி எடுத்த நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். அந்த வழக்கின் முடிவு என்ன என்பதுபற்றி நமக்குத் தெரியவில்லை.

அடுத்து, நாம் சொன்ன கருத்தை ஏற்க மறுத்த அந்தப் பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏன் அவர்களின் அங்கீகாரத்தைத் திரும்பப் பெறக்கூடாது, உதவித் தொகையை நிறுத்தி வைக்கக்கூடாது என்று கேட்டார்கள். உதவித் தொகை ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பள்ளிக்கான அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டால், அதன் காரணமாகக் குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் ஒரு தொடக்கப் பள்ளியாக அது இருப்பதால், அதன் அங்கீகாரத்தை ரத்து செய்தால், இன்னொரு இடத்தில் நடத்துவது சாத்தியமா என்பதும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. பள்ளியின் மீது நடவடிக்கை எடுப்பது என்பது ஒன்று. ஆனால் அதன் காரணமாகப் பாதிக்கப்படுகிற குழந்தைகளையும் பாதிக்கப்படுகிற பொதுமக்களையும் கருத்தில் கொண்டுதான், நாம் இதிலே நிதானத்தைக் கடைப் பிடிக்கிறோமே தவிர, வேறொன்றுமல்ல. நடவடிக்கை என்பது மிகவும் எளிது. இன்றைக்கே கூட ஒரு உத்தரவைப் போட்டு, அந்தப் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்து விடலாம். நிதியுதவி தருவதை நிறுத்தி விடலாம். அப்படிச் செய்வதால், நூற்றுக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள் என்பதால்தான், இதிலே கொஞ்சம் நிதானமாகப் பரிசீலனை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** பாதிக்கப்பட்ட பள்ளியாசிரியர் திரு. வாசுதேவன் அவர்களுக்கு அந்தப் பள்ளி நிர்வாகம் இடைப்பட்ட காலத்திற்கான சம்பளத்தைத் தர வேண்டும் என்று கல்வித் துறை உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பள்ளி நிர்வாகம் அவருக்கு அந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை. இதைத்தவிர கல்வித்துறை அவருக்கு வேறுவிதமான எந்த உதவியையும் செய்யவில்லை. அவருக்குச் சேரவேண்டிய பணத்தை வாங்கித் தரவும்



உதவிடவில்லை. தொடர்ந்து அந்தப் பள்ளி நிர்வாகம், கல்வித் துறையின் உத்தரவுகளை மீறியே நடந்துகொண்டு வருகிறது. மீண்டும் உத்தரவு போடப்பட்ட போதும்கூட, அந்தப் பள்ளி நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் செல்வாக்கின் காரணமாக—அவர்கள் பெரிய மனிதர்களாக இருப்பதன் காரணமாக—கல்வித்துறை அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதையே தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதோடு, இந்தப் பள்ளி நிர்வாகத்தை மாற்றியமைக்க, தற்காலிகமாக அரசே அந்தப் பள்ளியை "டேக் ஓவர்" செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. வாசுதேவன் அவர்களுக்கும் மீண்டும் பணி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எனக்குத் தரப்பட்ட விவரப்படி, வேறு எந்தப் பள்ளியிலும் அந்த ஆசிரியர் பணியாற்ற மறுத்து விட்டதாகவும், கல்வித் துறையினால் அளிக்கப்பட்ட அந்தச் சலுகையை ஏற்கவில்லை என்றும் தெரிகிறது. எனவே அந்த அடிப்படையில்தான் நான் பதிலளித்தேன். அந்த ஆசிரியர் வேறு பள்ளிக்குச் சென்று பணியாற்ற விரும்பினால், அதற்கான உதவியைச் செயலாம். அந்த அளவுக்கு அந்த ஆசிரியருக்குப் பணிப் பாதுகாப்பைக்கூட தர முடியும். பள்ளி மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைப் பற்றிப் பரிசீலனை செய்து வருகிறோம். தக்க நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Burial and Burning Ghats in Madras City.*

* 7. *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) the number of burial and burning ghats under the control of the Corporation of Madras;

(*b*) the fee fixed for burying or burning dead bodies in those places; and

(*c*) whether there is any proposal to put up one more electric crematorium in Madras City ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின்கீழ் 32 இடுகாடுகள் உள்ளன.

(ஆ) 12 வயதிற்கு உட்பட்டவர்களுடைய பிரேதத்தைப் புதைப்பதற்குக் கட்டணம்—ரூபாய் 10.

12 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய பிரேதத்தைப் புதைப்பதற்குக் கட்டணம்—ரூபாய் 15.

12 வயதிற்கு உட்பட்டவர்களுடைய பிரேதத்தை தகனம் செய்ய கட்டணம்—ரூபாய் 60.

12 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய பிரேதத்தை தகனம் செய்ய கட்டணம்—ரூபாய் 100.

மின்சாரத்தால் இயங்கும் சுடுகாட்டில் ஒரு பிணத்தை எரிப்பதற்கு வசூலிக்கப்படும் கட்டணம்—ரூபாய் 50.

(உ) இல்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, இவ்வாறு மாநகராட்சியினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைக் கட்டிய பிறகு கூட, இடுகாடுகளிலும், சுடுகாடுகளிலும் பணிபுரியும் பணியாளர்கள், அதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கேட்டு, ஏற்கெனவே துயரத்தில் உள்ளவர்களுக்கு இன்னும் அதிகமான துயரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசுக்குப் புகார்கள் வந்துள்ளனவா? அவை பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் வந்து அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது யார் யார் பணியில் இருந்தார்களோ அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஒரு மாதத்தில் எத்தனை பிரேதங்கள் புதைக்கப்படுகின்றன? எத்தனை பிரேதங்கள் எரிக்கப்படுகின்றன? அதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு வருகிற வருவாய் எவ்வளவு என்ற விபரத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சுடுகாடுகளும், இடுகாடுகளும் வருமானத்தின் அடிப்படையில் ஏற்படவில்லை. அவைகளின் மூலம் உண்மையிலேயே வருவாய் ஏதுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அவைகளுக்கு நாம் செய்யக்கூடிய சீர்திருத்தப் பணிகள்தான் அதிகரித்து வருகின்றன. அதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2 முதல் 2½ லட்சம் வரை நாம் செலவு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இவற்றின் மூலமான வருவாய் என்கிற முறையில் பார்த்தால், ஆண்டுக்கு ரூபாய் 6,500



ரூபாய் 13,250 என்ற அளவுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறது. எனவே வருமானத்தின் அடிப்படையில் சுடுகாடுகளும் இடுகாடுகளும் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** மின்சாரத்தால் இயங்கும் சுடுகாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் குறிப்பு ஏதும் இப்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மின்சாரத்தால் இயங்கும் சுடுகாடுகளால் நமக்குப் பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று இறந்தவர்களுக்கு ஏதேனும் வியாதிகள் இருந்தால், அது மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்க உதவுகிறது. இரண்டாவது, அவர்களின் சாம்பலைப் புதைப்பதற்கு மிகச் சிறிய இடம் மட்டுமே தேவைப்படுகிறது. ஜனப் பெருக்கம் அதிகரித்து வருகிற இந்த நேரத்தில் நமக்கு இடம் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு வெகு சீக்கிரத்தில் மின்சாரத்தால் இயங்கும் சுடுகாடுகளை, சென்னையிலும் மற்ற பல நகரங்களிலும் விஸ்தரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஏற்கெனவே மைலாப்பூரில் மின்சாரத்தால் இயங்கக்கூடிய சுடுகாடு ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போன்று இன்னொரு சுடுகாட்டை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பல்வேறு முக்கியமான நகராட்சிகளிலும் இந்தப் பணியை மேற்கொள்ளலாமா என்பதைக் கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து குறைந்தபட்சமாக விதிக்கப்பட்ட கட்டணம்—அதாவது 12 வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணம்—ரூபாய் 10 என்று இருக்கிறது. ஆனால் ஆண்டொன்றுக்கு ரூபாய் 2 லட்சம் செலவாகிறது என்றும், அதன் மூலம் நகராட்சிக்கு வருகிற வருவாய் சுமார் ரூபாய் 6,000தான் என்றும் குறிப்பிட்டார்கள். அதன் அடிப்படையில் பார்த்தால், ஆண்டுக்கு 600 பேர்தான் இறக்கிறார்களா? ஒன்று புள்ளிவிவரத்தில் தவறு இருக்க வேண்டும் அல்லது வேறு எங்கேயோ தவறு நடக்கிறது என்று தெரிகிறது. எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய முன்வருவார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தக் கட்டணத்தைச் செலுத்துகிறவர்களும் உண்டு. செலுத்தாமல் போகிறவர்களும் உண்டு. அதற்கான கணக்கே இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகளுக்கான நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 1980 ஆம் ஆண்டில் 650 பிணங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 265 பிணங்களுக்காக மட்டுமே கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. 385 பிணங்களுக்கான கட்டணம் செலுத்தப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதன் அடிப்படையில்தான் எரிக்கப்படுகிற அளவுக்கும் புதைக்கப்படுகிற அளவுக்கும் உரிய வருவாய் வரவில்லை என்று நான் குறிப்பிட்டேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** சுடுகாடுகளை சமூக விரோதிகள் சூதாடும் இடமாகவும், கழிப்பிடமாகவும் பயன்படுத்துவதால் சுகாதாரக் குறைவுகள் ஏற்படுகின்றன. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அப்படிப்பட்ட நிலைகள் சில சுடுகாடுகளில் இருக்கின்றன. அவற்றைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### தலைஞாயிறு-ஆலங்குடி சாலை.

*8 **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறு-ஆலங்குடி சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (இ) இச்சாலையின் சரியான பெயர் ஆலங்குடி-தலைஞாயிறு தலந்திருவாசல் சாலை. இச்சாலையின் கி.மீ. 32/4 முதல் 39/2 வரை மேம்பாடு செய்ய 1982-83 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தக்காரருடன் உடன்பாடு ஒப்பந்தம் (Agreement) செய்து கொள்ளப்பட்டு, பணி ஆணையும் (Work order) வழங்கப்பட்டுள்ளது.





இச்சாலையில் ஒரு பகுதியில் மண்வேலை செய்து சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மற்ற பகுதிகளில் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அந்தச் சாலையின் பெயர் தலைஞாயிறு-தலத்திருவாசல் என்பதாகும். அந்தச் சாலையிலே வேலைகள் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சாலை ஒரு ஆற்றங்கரைச் சாலை. மிகவும் குறுகிய சாலையாக இருக்கிறது. நாளுக்கு நாள் அது ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகிறது. ஒரு வண்டி போகிற அளவிற்குத்தான் வசதி இருக்கிறது.. அச்சாலை மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. அதை அகலப்படுத்தும் வேலை நடைபெற்று வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே அதைப் பற்றி மீண்டும் இலாக்காவிற்குத் தெரிவித்து அச்சாலையை அகலப்படுத்தி செப்பனிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இந்தப் பணிக்காக ஒதுக்கிய தொகை ரூபாய் 14 இலட்சம். கடந்த ஆண்டில் ரூபாய் மூன்று இலட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் பாக்கி செலவழிக்கப்பட வேண்டிய தொகைக்கான பணி ஆணை (ஒர்க் ஆர்டர்) வெளியிடப்பட்டுவிட்டது. இந்தப் பணிகள் விரைவாக நடைபெறும். இந்தப் பணிகளை எடுத்துக்கொள்ளும்போது, இப்போது சிங்கிள் லேன் டிராக்காக எடுத்துக் கொள்ளுகிறோம். மாநில நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில்தான், டபுள் லேன் டிராக்காகப் போட்டுக் கொண்டிருக்கிறோம், அகலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தப் பணியைக்கூட எடுத்துக்கொண்டு, இரு புறங்களிலும் மண் போட்டு அகலப்படுத்தும் பணி கண்டிப்பாகச் செய்து தரப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா எண்கள் 9, 10 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## கொத்தடிமை முறை.

* 9 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கொத்தடிமை முறை இன்னமும் இருப்பதாக, 1981-82 ஆம் ஆண்டில், அரசுக்குப் புகார்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(இ) இது குறித்து இந்த அரசு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் தொடர்பு கொண்டதில், சம்பந்தப்பட்ட புகார்களில் குறிப்பிடப்பட்ட நபர்கள், விசாரணை செய்ததில் அவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படவில்லை என்றும் தற்பொழுது அவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்த கூலி பெறுகிறார்கள் என்றும் தெரிய வந்துள்ளதால், மேற்படி புகார்களின் மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

* 10. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 31—12—1982 அன்றுள்ளபடி, வெளி மாநிலங்களிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மாநில வாரியாக எத்தனை?

(இ) அவர்களின் மறுவாழ்வுக்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மத்தியப் பிரதேசத்திலிருந்து 235 கொத்தடிமைகளும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து 797 கொத்தடிமைகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

(இ) மேற்படி கொத்தடிமைகளுக்கு உடனடி நிவாரணமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 வீதம் 235 குடும்பங்களுக்கு ரூபாய் 2,35,000 வழங்கப்பட்டுள்ளது.



விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறுவாழ்விற்காக தேசிய ஊராக வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் மூலமும், ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினா எண் ஒன்பதுக்கு அளித்த விடையில் "சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம்" என்று குறிப்பிட்டார்கள். சம்பந்தப்பட்ட மாவட்டங்கள் எவையெவை? சில மாவட்டங்களில் உள்ள கொத்தடிமைகள் தாங்கள் கொத்தடிமைகள் என்பதை உணராமல் முதலாளிகளிடம் விசுவாசம் என்ற முறையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரிவினராக இருந்தாலும், அது குறித்துப் பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, "சம்பந்தப்பட்ட மாவட்டங்கள்" என்று சொல்லுகிறபோது, எந்தெந்த மாவட்டங்களிலிருந்து அரசுக்குப் புகார்கள் வந்தனவோ அந்த மாவட்டங்களை நான் கூறுகிறேன் எந்தெந்த மாவட்டங்கள் என்ற விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துசொன்னதைப்போல, நீண்ட நெடுங்காலமாகக் கொத்தடிமைகள் என்ற எண்ணம் எழாமலே சில இடங்களில் இருந்திருக்கிறார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. அத்தகைய நிலைமைகள் இருப்பதை உணர்ந்து கொண்டு அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு மாவட்ட அளவிலும் வருவாய்க் கோட்ட அளவிலும் இதற்கென்று தனியாகக் கண்காணிப்புக் குழுக்களை அமைத்திருக்கிறது. அந்த மாவட்டக் குழுக்களில், சமூகப் பணிகளை ஆற்றுகிற பொதுநல ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆதி திராவிட, பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், அது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி, அதிகாரிகளை அனுப்பி, அங்கேயிருக்கக்கூடியவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினா பத்துக்கு அளித்த விடையில், இரண்டு மாநிலங்களைக் குறிப்பிட்டார்கள். இந்த இரண்டு மாநிலங்களில் இவ்வாறு கொத்தடிமைகள் இருந்தார்கள் என்ற செய்தி கிடைத்த பிறகு, நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதைப்போல

நிலைமைகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து பல பிரச்சினைகள் காரணமாக வேலை தேடி வெளியே செல்பவர்கள் இவ்வாறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. ஆகவே நம்முடைய மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, மத்திய புலனாய்வுத் துறையின் மூலமாக எந்தெந்த மாநிலங்களில் இந்த மாதிரியாக தமிழகத்தைச் சேர்ந்த கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்று அறிந்து, அந்தந்த மாநில அரசுகளுடனும், அவர்களுடைய காவல் துறையுடனும் தொடர்பு கொண்டு. மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடவடிக்கை எடுத்து அவர்களை விடுவித்ததைப் போல, பிற மாநிலங்களிலும் அத்தகைய முயற்சிகளை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா, அதற்கான பரிகாரத்தைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** வறுமையின் காரணமாக நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு மக்கள் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அனைத்து மாநிலங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். இந்த இரண்டு மாநிலங்களைப் பொறுத்தவரையில், அங்குள்ள மக்கள் படுகின்ற அவல நிலையை பொதுநலத்தில் அக்கறை கொண்ட நல்ல உள்ளம் படைத்தவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் காரணமாக, நம்முடைய அரசின் சார்பில் அந்தந்த மாநிலங்களுக்கு குற்றவியல் புலனாய்வுப் படைப் பிரிவை அனுப்பி மீட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில், மைய அரசோடு தொடர்பு கொண்டு, அனைத்திந்திய ரீதியில் மற்ற மாநிலங்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்பதைக் குறித்து அறிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த புள்ளி விவரத்திலிருந்து சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், மத்தியப் பிரதேசத்திலிருந்தும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் கொத்தடிமைகளாக இருந்தவர்கள் மீட்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. இவர்கள் தமிழகத்திலே எந்த மாவட்டத்திலே மிகுதியாக இருக்கிறார்கள்? மாவட்ட வாரியாக எந்தெந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் அப்படிச் சென்ற சூழ்நிலை என்ன என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்ததா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** எந்த சூழ்நிலையில் இவர்கள் சென்றார்கள் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். வறுமையின் காரணமாக, அதிகமான வருமானம் கிடைக்கும் என்ற ஆசையில் செல்கிறார்கள். மீட்டு





வந்திருக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, சேலத்திலேயிருந்தும், வட ஆற்காட்டிலேயிருந்தும் இன்னும் சில மாவட்டங்களிலேயிருந்தும் சென்றவர்கள் இருக்கிறார்கள். இதுவரையிலும் இந்த இரண்டு மாநிலங்களிலிருந்தும் ஏறத்தாழ 2,495 பேர் மீட்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு தற்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** ஆந்திராவிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைகள், சேலம் மாவட்டத்திற்குக் கொண்டு வந்துவிட்ட பிறகு பிழைக்க வழியில்லையென்று, மீண்டும் கொத்தடிமைகளாகச் சென்ற விவரங்கள் அரசாங்கத்திடம் இருக்கிறதா? அப்படியானால், அதைத் தடுத்து நிரந்தரமாக அவர்களுக்கு வாழ்வளிக்கும் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இத்தகைய நிலைமையிலே இருக்கக்கூடியவர்களுக்கு நிரந்தர வருமானத்தைத் தரவேண்டுமென்ற வகையிலே அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள் மட்டுமின்றி, நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய கொத்தடிமைகளையும் அரசு மீட்டு இருக்கிறது. அவர்களுக்கும் மறுவாழ்வு அளித்திருக்கிறது. அந்த வகையிலே வருகிறபோது, தமிழ்நாட்டிலே மீட்கப்பட்டிருக்கின்ற கொத்தடிமைகள் எண்ணிக்கை 27,874 ஆக இருக்கிறது. இவர்களுக்காக நாம் செலவிட்டிருக்கின்ற மொத்தத் தொகை ரூபாய் 29,10,000 ஆக இருக்கிறது. இந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்குக் காரணம், மீண்டும் இவர்களுக்கு அத்தகைய அவல நிலைமை ஏற்படக்கூடாது என்பது தான். மீட்கப்பட்டிருப்பவர்கள் மீண்டும் அந்தப் பணிகளுக்கே செல்வதாகவும் அந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி விவரங்கள் இல்லை. அப்படி இருக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1983 அக்டோபர் 27

உடுக்குறியிடாத வினாக்கள்.

## இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி மற்றும் தமிழ் ஆசிரியர்கள்.

1. வினா—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 15—8—1981 அன்றுள்ளவாறு தமிழ் நாட்டிலுள்ள ஆரம்ப, நடுத்தர உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர்?

(இ) அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் 15—8—1981 அன்று முடிய, நிர்வாக வாரியாக எத்தனை பேர் உள்ளனர்?

விடை.—(அ) 15—8—1981 அன்றுள்ளவாறு தமிழ் நாட்டிலுள்ள ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை—4,107. தமிழ் ஆசிரியர்களின் எண்ணிக்கை—1,292 ஆகும். அவர்களின் விவரம் பள்ளி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| பள்ளிகளின் வகைகள் | இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர் எண்ணிக்கை | தமிழாசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. ஆரம்பப் பள்ளிகள் | 1,010 | 562 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | 850 | 429 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | 1,504 | 170 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் | 743 | 131 |
| மொத்தம் | 4,107 | 1,292 |



1983 அக்டோபர் 27]

(இ) அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சித் துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் 15—8—1981 அன்று முடிய, நிர்வாக வாரியாக 4,107 இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களும், 1,292 தமிழ் ஆசிரியர்களும் இருந்தார்கள். அவர்களின் விவரம் நிர்வாக வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| நிர்வாகம் | இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர் எண்ணிக்கை | தமிழாசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அரசு | 2,453 | 447 |
| தனியார் | 807 | 296 |
| நகராட்சி/ஊராட்சி | 847 | 549 |
| மொத்தம் | 4,107 | 1,292 |

## Sanction of Post-Graduate Teachers' post for 1982-83.

2. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the number of Post-Graduate teacher posts sanctioned district-war, for the academic year 1982-83; and

(b) the number of teachers appointed, as on 30th November 1982?

விடை—

(அ) 1982-83 ஆம் கல்வியாண்டில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## நடமாடும் மருத்துவ ஊர்திகள்

3. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1983 ஆம் நாளன்றுள்ளவாறு, கல்வித் துறையில் உள்ள நடமாடும் மருத்துவ ஊர்திகளின் (Mobile Medical Vans) எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவற்றில் பழுதடைந்த நிலையில் உள்ளவை எத்தனை ?

(உ) இவற்றைப் பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) 1—1—1983 ஆம் நாளன்று நிலவரப்படி நடமாடும் மருத்துவ ஊர்திகளின் எண்ணிக்கை 28.

(இ) வட ஆற்காடு மாவட்டத்தில் 3-ம் சேலம் மாவட்டத்தில் 1-ம், ஆக நான்கு ஊர்திகள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

(உ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மூன்று மருத்துவ ஊர்திகள் பழுதடைந்துள்ளதால், மேற்படி வண்டிகளை விற்று புதிய வண்டிகள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் பழுதடைந்துள்ள ஒரு மருத்துவ ஊர்தியைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### இயங்கும் அறிவியல் ஆய்வக ஊர்திகள்.

4. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையில் உள்ள இயங்கும் அறிவியல் ஆய்வக ஊர்திகளில் பழுதாகி செயல்படாமல் இருப்பவை 1—1—1983 அன்றுள்ளவாறு எத்தனை ?

(இ) அவற்றைப் பழுது பார்த்து பயன்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) 10.

(இ) பழுதடைந்துள்ள ஊர்திகளை அவ்வப்போது அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் பணிமனைகளில் பழுதுபார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





### ஆசிரியர் தேசியநல நிதி.

5. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1—1—1979 முதல் 31—12—1982 முடிய ஆசிரியர் தேசியநல நிதியிலிருந்து உதவி கேட்டு விண்ணப்பித்த ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை ?

(உ) அவ்விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) 3,307.

(இ) 1,116 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விண்ணப்ப படிவங்கள் பரிசீலனையில் உள்ளன. உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பெறும் காலகெடு 30—4—1983 வரை நீட்டிக்கப்பட்டது.

(உ) ரூ. 2,27,453.45.

### 19—1—1982 அன்று சிறைகளில் உள்ள விசாரணை மற்றும் விசாரணையில்லா சிறைவாசிகள்.

6. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில், 19—1—1982 அன்றுள்ளவாறு, தொடர்ந்து பல மாதங்களாக உள்ள விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இவர்கள் எத்தனை மாதங்களாக விசாரணையின்றி சிறையில் உள்ளனர் ?

(உ) குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் சிறையில் உள்ள விசாரணைக் கைதிகளை விடுவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 19—1—1982 அன்று தமிழ்நாட்டிலுள்ள சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த விசாரணை சிறைவாசிகளின் (Undertrial Prisoners) எண்ணிக்கை 1,432. விசாரணை இல்லாமல் அடைக்கப்பட்டிருந்த ரிமாண்டு சிறைவாசிகளின் (Remand Prisoners) எண்ணிக்கை 9,164. இவர்களில் 4,077 பேர்கள் 19—1—1982 அன்று நடைபெற்ற பாரத பந்த்தில் (Bharat Bandh) ரிமாண்டு செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(இ) விசாரணையில்லாமல் அடைக்கப்பட்டிருந்த சிறைவாசிகள் யாவரும் மூன்று மாதங்களுக்குட்பட்டவர்கள்.

(உ) காவல்துறை இயக்குநர் அவர்களால் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் அனைவரும் புலன் விசாரணையை விரைவில் முடித்து உடனே குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு ஆவன செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். விசாரணை நிறைவு அடைந்த சில வழக்குகளில் அரசு வழக்குரைஞரிடமிருந்து அறிக்கையினை விரைவில் பெற்று வழக்கு தாக்கல் செய்யுமாறும் காவல்துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் நன்னிறைவுத் திட்டப் பணிகள்.

7. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் நன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளில், 15—3—1983 அன்று வரை நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவை?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் நன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 15—3—1983 வரை நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



15—3—1983 வரை முடிக்கப்பட்ட பணிகளும், அவற்றிற்கான செலவினமும்.

| வ. எண் | விவரம் | முடிக்கப்பட்ட வேலைகளின் விவரம் | செலவு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கருங்கல் சரளை பரத்தல் | 31 கி.மீ. | 18.80 |
| 2. | கல்வர்ட் கட்டுதல் | 73 | 4.12 |
| 3. | தாய்சேய் நலவிடுதிக்கட்டிடம் | 4 | 2.25 |
| 4. | பள்ளிக் கட்டிடங்கள் | 10 | 6.50 |
| | | மொத்தம் | 31.67 |

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-40)

## 4. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நிகழ்ச்சிகள் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டவாறு நடைபெறும்.

### (2) 1983-84 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழு மற்றும் விதிக் குழுவிற்கு உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1983-84 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழு மற்றும் விதிக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. ப. மாணிக்கம், எம். எல். சி. அவர்களை உறுப்பினராக நியமித்துள்ளேன்.

### (3) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு ஓர் உறுப்பினரை நியமிப்பது குறித்த நிகழ்ச்சி நிரல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாரதியார் பல்கலைக் கழக பேரவைக்கு ஓர் உறுப்பினர் மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது :

நியமனத் தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும்—29—10—1983 காலை 11 மணி.

நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும்—29—10—1983 நண்பகல் 12 மணி.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1983 அக்டோபர் 27

நியமனத்தாள்களை திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும்—31—10—1983 காலை 11 மணி.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## (4) மாற்றுத் தலைவர் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 6-வது விதியின் கீழ் மேலவையின் 64-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் :

1. திரு. எஸ். முத்து
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. சு. எஸ். வெங்கடேசன்
4. திரு. ப. ஜே. தாஸ்.

## 5. அரசின் தீர்மானம்.

### ஸ்ரீலங்காவாழ் தமிழர்களின் பிரச்சினை பற்றிய தீர்மானம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவார்

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பெயரிலேயுள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் —

(அ) கடந்த ஜூலைத் திங்கள் முதல் தொடர்ந்து இலங்கை வாழ் தமிழர்களான ஈழத்தமிழர்கள், இந்தியப் பாரம்பரை வழிவந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோருக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல், துயரிழைத்தல் போன்ற கொடுஞ்செயல்களை அறிந்து இம்மேலவை மிக்க அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறது.



1983 அக்டோபர் 27] [திரு. இராம. வீரப்பன்]

(ஆ) மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்து வரும் சிங்கள இன வெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்திவரும் இலங்கை இராணுவத்தினர்-காவல்துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் இம்மேலவை வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இலங்கையில் நடைபெற்றுவரும் நாகரிகமற்ற, காட்டுமிராண்டித்தனமான, சனநாயகப் பண்பற்ற மனிதாபிமானமற்ற முறையில் நடைபெற்று வரும் கொடுமைகளை எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில், சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுக் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொது வேலைநிறுத்தம்—கடையடைப்பு செய்தும், அமைதி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டும், கோரிக்கைகள் எழுப்பியும் தங்கள் உள்ள உணர்வை ஒருமித்த முறையில் எழுப்பிய பொதுமக்களுக்கும் பல்வேறு துறையினருக்கும், அனைத்து அரசியல் கட்சியினருக்கும், எல்லா அமைப்பினருக்கும் இம்மேலவை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஈ) பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கைவாழ் தமிழர்களின் துயர்களை எல்லா வகைகளிலும், துடைக்கவும் தமிழக மக்களின் ஒருமித்த உணர்வுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் ஆதரவோடு வகுத்த நடவடிக்கைகளை இம்மேலவை பாராட்டி வரவேற்பதோடு, தமிழக மக்களின் உணர்வை ஏற்று, இலங்கைவாழ் தமிழரின் ஆதரவையும், மதிப்பையும் பெற்று, ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன் வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(உ) இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் இப்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான கட்டத்தில், தங்களுக்கு நிலையான வாழ்வுரிமையையும், பாதுகாப்பையும் இந்திய அரசின் முயற்சியாலும், செல்வாக்காலும், நியாய உணர்வாலும், நடவடிக்கையாலும் மட்டுமே பெறமுடியும் என்று தெளிவாகவும் திண்மையாகவும் கருதுவதால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காலத்தாழ்வுக்கு இடமேற்படாமல், உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இம்மேலவை கேட்டுக் கொள்வதோடு இலங்கைவாழ் தமிழர்களுக்குத் தொடர்ந்து இன்னல் ஏற்படாதவாறு பேச்சு வார்த்தையை விரைவுபடுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இம்மேலவை வற்புறுத்துகிறது.

(ஊ) இந்தியாவுக்இரும் இலங்கைக்கும் இனம்—மொழி—வரலாறு—நாகரிகம்—பண்பாடு—உறவு—தொடர்பு போன்றவற்றில் நீண்ட நெடுங்காலமாகவே பிணைப்பு இருந்து வருவதாலும், அண்டை நாட்டினரும், அகில உலக நாட்டினரும் கவலைப்படுவதற்குரிய தன்மையில் இலங்கையில் சிறுபான்மையோரின் அடிப்படை மனிதவுரிமைகளுக்கு அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாலும் இந்திய மக்கள்—இந்தியத் தூதுவரகம்—இந்திய வங்கிகள்—இந்தியச் சுற்றுலாப் பயணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதாலும், இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியது நியாயமான செயலாகும் என்பதை இம்மேலவை இந்திய அரசுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

(எ) உலக நாடுகளில் வாழும் சிறுபான்மையோரின் நலன் காக்கும் பொறுப்பையும், அவர்களுக்கு நிலையான வாழ்வளிக்கும் பொறுப்பையும், அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் அவை, இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினையை நிலையாகத் தீர்க்கும் பொருட்டு, உடனடியாகத் தன் முழுச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, நியாயத்தை நிலைநாட்ட முன் வரவேண்டும் என்று இம்மேலவை வற்புறுத்துகிறது. ஐக்கிய நாடுகள் அவையில் முக்கியமான வகையில் அங்கம் பெற்றுள்ள இந்திய அரசு இதனை வலியுறுத்துமாறு இம்மேலவை கேட்டுக் கொள்கிறது.

(ஏ) இலங்கையில் ஆயுதவலிவாலும், அடக்கு முறைகளாலும், வன்முறை செயல்களாலும், தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அரசு ஆயத்தம் செய்து வருவதையும், திரிகோணமலைப் பகுதியை நிலையான கப்பற் படைத்தளமாக ஆக்கிக்கொள்ள முயலுவதையும், அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு. வென்பெர்ஜெர் இலங்கை அரசுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதையும் கண்டு, இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கைவாழ் தமிழருக்கு வாழ்வளிக்க முன்வராமல் தமிழினத்தின் அழிவுக்கும் காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன் வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆயுதம் வழங்குவது—கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.





(ஐ) இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலன் கருதி தமிழக அரசாலும், இந்திய அரசாலும் அனுப்பி வைக்கப்பெறும் உணவுப் பொருள், உடைகள், உடைமைகள், மருந்துகள் போன்றவை உரியவர்க்குப் போய்ச் சேர வைப்பதற்கு இந்திய அரசு ஐக்கிய நாடுகள் அவைகள் மூலமோ அல்லது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ, அல்லது இந்திய தூதுவராலயத்தின் மூலமோ தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இம்மேலவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

(ஒ) உரிமை வேட்கையோடு அறப்போர் நடத்தும் இலங்கைவாழ் தமிழர்களின் குடியுரிமை—வாக்குரிமை—தொழிலுரிமை—வாழ்வுரிமை போன்றவற்றை அடியோடு பறிக்கும் வகையில் இலங்கை அரசால் கொண்டுவந்து சட்டமாக்கப்பட்டுள்ள காட்டுமிராண்டி சட்டத்தை இம்மேலவை வன்மையாக கண்டிப்பதோடு, அதனை பின்பெறச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

(ஓ) இலங்கையிலுள்ள தமிழர் தலைவர்கள் நிபந்தனையற்ற முறையில் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு, தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் ஒளிவு மறைவில்லாமல் வெளியிட வாய்ப்பளித்து, நல்லுறவு அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையில் தீர்வுகாண, இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயலவேண்டும் என்று இம்மேலவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது.

(ஔ) இலங்கை வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்று அவதிப்படுவோர்க்கும், சொத்துக்களை இழந்து தவிப்போர்க்கும் இலங்கை அரசு உரிய முறையில் நட்டஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும் என்று இம்மேலவை வற்புறுத்துவதோடு, அதற்கான உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

(க) தமிழ் மக்களின் உள்ளக் குமுறலையும் எண்ணங்களையும் கோரிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்து வைக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில் தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தமிழக ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சரவையின் உறுப்பினரான மாண்புமிகு மின்துறை அமைச்சரை இந்தியக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, அனுப்பி வைத்த இந்தியப் பேரரசையும், அனைத்து நாடுகளும் அறியும்வண்ணம் ஐந்து கோடித் தமிழ் மக்களின் உணர்வை, ஐக்கிய நாடுகள் அவையில் வெளிப்படுத்திய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும் இம்மேலவை பாராட்டுகிறது.

(ஞ) நிலையான வாழ்வுரிமைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அற வழியில் அறப்போர் நடத்திடும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இம்மேலவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(ச) இந்தத் தீர்மானத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகளை இந்தியப் பேரரசின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான எல்லாவித முயற்சிகளையும் முறைப்படி மேற்கொள்ளுமாறு இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு தலைவரவர்களே, மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை தமிழக அரசின் சார்பிலே, தமிழக மக்களின் நம்பிக்கை நாயகராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரால், இந்த அவையிலே முன்மொழிகின்ற வாய்ப்பு கிடைத்ததை நான் ஒரு சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகக் கருதி, இந்தத் தீர்மானத்தை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் சொல்வதற்கு முன்னால், அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே ஒன்றிரண்டு கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்ரீலங்காவிலே வாழ்கிற தமிழ் மக்களுக்காக தமிழ் நாட்டு மக்கள் குரல் கொடுத்து அவர்களுடைய உரிமைக்காக வாதாடவும், தேவையானால் போராடவும் ஒரு முயற்சியை நீண்டகாலமாக நாம் மேற்கொண்டு வருகிறோம். உலகத்திலே அடிமைப்பட்டுக்கிடக்கிற நாடுகள் எல்லாம் விடுதலை பெற்று விட்டால், அந்த விடுதலை பெற்ற நாட்டிலே வாழும் மக்கள் அனைவரும் சுதந்திர உணர்வோடு, உரிமையோடு வாழ்கின்ற வாய்ப்பைப் பெறுவார்கள் என்ற அந்த உணர்விலேதான் விடுதலைக்காகப் போராடுகிறார்கள், போராடினார்கள். உயிரை, உடலை தத்தமாகப் பணயம் வைத்து விடுதலை பெறுகிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக ஸ்ரீலங்கா 1948 ஆம் ஆண்டிலே விடுதலை பெற்றதற்குப் பிறகு அப்படி ஒரு உரிமை, அந்த ஸ்ரீலங்கா தீவிலே வாழ்கிற உரிமை பெற்ற தமிழ் மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது. இது ஒரு துரதிருஷ்டவசமான சம்பவமாகும். ஒரு நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு அந்த நாட்டிலே வாழும் மக்களை தங்களைச் சுதந்திரம் பெற்ற நாட்டின் குடிமக்களாக எண்ணி, உரிமைகளை அனுபவிக்க முயலுவார்கள். ஆனால் ஸ்ரீலங்காவிலே வாழும் தமிழ் மக்கள், ஸ்ரீலங்கா விடுதலை பெற்ற





பிறகும், அடிமைப்படுத்தப்பட்ட மக்களாக வாழும் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் வரலாற்றைக் கடந்த 35 ஆண்டுகளாகச் சந்தித்துக் கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட துரதிருஷ்டவசமான சூழ்நிலையில் வாழும் தமிழ் மக்கள் தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும், உயிர் கொலைகளுக்கும், தண்டனைகளுக்கும் பலியாகி, வாழ்விழந்து, உரிமையிழந்து, வாக்குரிமைகூட இழந்து இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை அந்த நாட்டிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிற சம்பவங்களாக இருந்து வருகின்றன. ஆனால் அந்த உணர்வுகளை எதிரொலித்து, அந்த மக்களுக்காக வாதாடுகின்ற, போராடுகின்ற உரிமை பெற்ற தமிழ் மக்கள் தமிழ் நாட்டிலே கடந்த 35 ஆண்டுகளாகவே அதற்காக குரல் கொடுத்து வருகிறார்கள். எப்படி அங்கே தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகள் படிப்படியாக வளர்ந்து கொண்டு வருகின்றனவோ அதைப் போலவே தமிழ் மக்களின் உணர்வுகள் அளிக்கின்ற ஆதரவும் படிப்படியாக வளர்ந்து கொண்டு ஒரு புதிய உருவை அடைந்து வரும் சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவிப்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

முதன்முதலில் இந்த மாநிலத்தின் சட்டமன்ற வரலாற்றிலே ஸ்ரீலங்காவிலே வாழும் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்படுகிற அல்லது இழைக்கப்படுகிற அநீதிகள், கொடுமைகள் ஆகியவைகளுக்காகக் குரல் கொடுக்கும் வாய்ப்பை தமிழ் நாட்டு சட்ட மன்றம் மூன்று முறைகள்தான் பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதன்முதலாக ஸ்ரீலங்கா நாடு சுதந்திரம் பெற்ற உடனே யார் தலையிலே கை வைத்தார்கள் என்றால், வரம் கொடுத்த பரமசிவன் தலையிலேயே கை வைத்ததாகப் புராணம் இருக்கிறதே அதைப் போல, ஸ்ரீலங்காவுக்காக உழைத்து செல்வம் கொழிக்கும் நாடாக ஆக்கக் கஷ்டப்பட்டு, மலைகளுக்குள்ளே, காடுகளுக்குள்ளே பணியாற்றிய இந்திய வம்சாவழியினர் என்று அழைக்கப்படும் ஸ்ரீலங்கா தோட்டத் தொழிலாளியின் தலையிலேதான் முதலிலே ஸ்ரீலங்கா அரசு கை வைத்தது. முதன்முதலில் அவர்களுக்கு இருந்த வாக்குரிமையைப் பறித்தார்கள். ஓட்டுரிமை பறிக்கப்பட்டது. அதனாலே அவர்களுடைய பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலே இடம் பெற முடியவில்லை. சட்டபூர்வமாக அந்த உரிமை பறிக்கப்பட்டது. அப்போது முதன் முறையாக தமிழ்நாடு சட்டமன்றத்திலே, அன்றைக்கு ஒருங்கிணைந்த சென்னை ராஜ்யமாக இருந்த சட்டமன்றத்திலே நம்முடைய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதல்வராக இருந்தபோது,

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். 1952 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

அதற்குப் பிறகு நான் இங்கே சிறப்பாகக் குறிப்பிட விரும்புவது, 1977-ல் ஆகஸ்ட் 24 ஆம் நாள் இன்றைய தமிழகத்தின் தள நாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட மூன்று மாதத்திற்குள்ளாக தமிழ் நாடு சட்டமன்ற வரலாற்றில் இரண்டாவது முறையாக, 25 ஆண்டுகள் கழித்து, ஸ்ரீலங்காவிலே தமிழர்கள் படுகிற அவதியைக் கண்டித்து, அவர்களுக்கு ஆதரவாக சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து, நிறைவேற்றப் பட்டது. இந்த 25 ஆண்டுக் காலத்திலே ஸ்ரீலங்கா தமிழர்கள் நியாயமாக நடத்தப்பட்டார்களா, உரிமைகள் வழங்கப்பட்டதா என்றால், தொடர்ந்து ஸ்ரீலங்கா தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வந்ததுதான் நடைபெற்று வந்தது. என்ன காரணத்தாலோ அன்றைக்கு அந்தப் பிரச்சினை சட்டமன்றத்திலே கொண்டுவரப்படாமலேயே, நாட்டு மக்களிடத்திலே ஒன்றிரண்டு கட்சிகளின் பிரச்சினையாக மாத்திரமே அது நோக்கப்பட்டு வந்தது, கருதப்பட்டு வந்தது.

அன்றைக்கு நம்முடைய இதய தெய்வம், தமிழகத்தின் விடிவெள்ளி, தமிழ்த் தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்று உருவாக்கிய அந்த இயக்கமும், மாண்புமிகு தலைவரவர்களே, பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன், உங்களுடைய இயக்கமும்தான் அன்றைக்கு ஸ்ரீலங்கா தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்களாக வெளியிலே இருந்தன. சட்டமன்றத்திற்குள்ளே இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே மற்றவர்கள் அதை ஒரு கட்சிப் பிரச்சினையாகக் கருதினார்களே தவிர, ஒரு கட்சிக்குரிய பிரச்சினையாகக் கருதினார்களே தவிர, மக்களுடைய பிரச்சினையாக, ஒரு இன மக்களுடைய பிரச்சினையாக, உலகத்திலே ஒரு மொழி பேசுகிற தமிழ் மொழி பேசுகிற மக்களின் பிரச்சினையாகக் கருதாமல் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு அரசுகள் அமைந்தன. ஆனால் ஸ்ரீலங்காவில் கொடுமைகள் தொடர்ந்து நடந்தன. 1972-லே ஸ்ரீலங்காவிலே, யாழ்ப்பாணத்திலே தமிழ் மாநாடு நடந்தபோதுகூட, ஒரு பாவமும் அறியாத தமிழ் மக்கள் கூட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவமும், காவல் துறையும் புகுந்து பலருடைய உயிரையும் பறித்தது. அன்றைக்குப் பிரதமர் வேறாக இருக்கலாம். நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வந்தது. பல்வேறு சிங்களப் பிரதமர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழர்களுக்குப் பாதுகாப்பு



வழங்கப்படவில்லை. பேச்சுகள் பேசப்பட்டன. ஒப்பந்தங்கள் போடப்பட்டன. ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை. இவ்வளவு கொடுமைகள் தொடர்ந்து நடைபெற்றும், தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் சட்டமன்றத்தில் அதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றும் கடமையை 25 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு கடுமையான சூழ்நிலையில் இன்றைய அரசு, தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே அமைந்துள்ள அரசு 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் நாள் சட்டமன்றப பேரவையில் நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து நம்முடைய அவையிலே 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதி இங்கேயும் 82 ஆம் விதிக்குள் அறிக்கையாக வைக்கப்பட்டதே தவிர, விவாதிக்கப்படுகிற அந்த வாய்ப்பை இந்த அவை பெறவில்லை.

(முற்பகல் 11-00)

அதற்குப் பிறகு இரண்டாவது முறையாக, தமிழகத்தின் வரலாற்றில் மூன்றாவது முறையாக 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 ஆம் நாள் மீண்டும் கொடுமைகள் மேலோங்கி தமிழர்கள் ரத்த சகதியில் மிதக்க விடப்பட்ட நேரத்தில், நம்முடைய சட்டமன்றத்தின் பேரவையிலே ஆகஸ்ட் 21, 1981 ஆம் ஆண்டு மீண்டும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அந்த நேரத்தில்கூட நம்முடைய மேலவையிலே 1981 ஆம் ஆண்டு, செப்டம்பர் 1 ஆம் தேதி 82 விதியின்கீழ் அறிக்கையாக வைக்கப்பட்டதே தவிர, விவாதிக்கிற அந்த வாய்ப்பை இந்த மன்றம் பெறவில்லை. இப்போதுதான் முதன்முறையாக நம்முடைய மேலவையிலே ஸ்ரீலங்கா தமிழர்களுடைய பிரச்சினைகளை விவாதிக்கின்ற வாய்ப்பை, அதுவும் இரண்டு நாட்கள் விவாதிக்கின்ற வாய்ப்பை உருவாக்கி, கருத்துக்களைத் தெரிவிக்க இருக்கிறார்கள். நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஒரு காலத்தில் 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து பழி வாங்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிற ஒரு இனம், இந்த நாட்டு மக்களாலே கவனிக்கப்படாமல் இருந்ததா அல்லது கவனிக்கப்பட்ட நேரத்தில் ஒரு கட்சிப் பிரச்சினையாக இருந்ததா என்பதைப்பற்றி எல்லாம்கூட நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் அப்படி ஒருவேளை தவறான அடிப்படையிலே இப்போதும் இது ஒரு கட்சிப் பிரச்சினை என்று கருதி அலட்சியப்படுத்தப் பட்டுவிடக்கூடாது என்கிற உணர்விலேதான், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று—அண்ணா அவர்களின் ஆசை அமைத்ததற்குப் பிறகு மூன்றே மாதத்திலே—ஜூன் 30-ல் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்கள்—1977 ஆகஸ்ட் மாதத்திலே ஸ்ரீலங்காவிலே தமிழர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற உடனேயே, அவர்கள் சட்ட

மன்றத்தில் முறையாகத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதற்குப் பிறகு மீண்டும் தொடர்ந்தது; 1981 ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்ச்சியை நாட்டுப் பிரச்சினையாக மாற்றி, 1977 ஆம் ஆண்டு தமிழ் மாநிலப் பிரச்சினையாக மாத்திரம் இருந்த நிலைமையை 1981 ஆம் ஆண்டு இந்தியாவினுடைய தேசியப் பிரச்சினையாக நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மாற்றினார்கள் என்பதை நான் இந்த அவைக்கு நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அப்படி தேசியப் பிரச்சினையாக ஆக்குவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியாக 1981 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதோடு நின்றுவிடாமல், முதன் முறையாக இந்தியத் துணைக் கண்டத்திலே நடைபெற்றிராத ஒரு அற்புதத்தை ஸ்ரீலங்கா தமிழ் மக்களுக்காக இந்த அரசாங்கமே முன் நின்று தமிழகத்திலே ஒரு முழு கடையடைப்பை, முழு அர்த்தாலை நடத்தியது. அன்றைக்கு இந்திய அரசு அதிலே கொஞ்சம் மாறுபட்ட கருத்தைக்கூட கொண்டிருந்தது. இப்பொழுது 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்து அனைத்துக் கட்சிகளின் சம்மதத்தோடு தமிழக அரசு முழு அர்த்தாலை நடத்தியபோது, அந்த வேலை நிறுத்தத்தில், முழு கடையடைப்பில் இந்திய அரசும் கலந்து கொண்டது என்கிற அந்தச் சிறப்பையும் நாம் பார்க்கிறோம். அதைத்தான் சொன்னேன். 1977 ஆம் ஆண்டு மாநிலப் பிரச்சினையாக இருந்தது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் 1983 ஆம் ஆண்டு இந்தியாவின் தேசியப் பிரச்சினையாக மாற்றப்படுவதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இந்தியப் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் முழு மனதோடு ஒத்துழைத்தாரென்பதும் ஒரு புதிய வரலாற்றை உலகத்திற்கே நாம் படைத்துக் காட்டியிருக்கிறோம். இன்றைக்கு தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம் என்பதோடு மாத்திரமல்லாமல், 1983 ஆம் ஆண்டு கேரளாவில், கர்நாடகாவில், ஆந்திராவில் சட்டமன்றங்களிலே விவாதம் நடைபெற்றிருக்கிறது. மற்றும் மராட்டிய மாநிலத்திலே ஊர்வலம் நடைபெற்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் ஸ்ரீலங்கா தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்கிற உணர்விலே ஒன்றுபடுகிற ஒரு சூழ்நிலையை தமிழக அரசும், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் உருவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுக்கு ஒப்புதலளித்து, அந்த உணர்வுக்கு மதிப்பளித்தார்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் என்பதையும் நான் இந்த





நேரத்திலே நினைவுபடுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை என்பது மிகுந்த உணர்ச்சிபூர்வமான ஒரு பிரச்சினை. உரிமை தழுவிய ஒரு பிரச்சினை. அதேநேரத்தில் அது மிகுந்த எச்சரிக்கையோடு அணுக வேண்டிய ஒரு பிரச்சினை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா என்பது ஏறத்தாழ 1,48,50,000 மக்கள் வாழ்கிற ஒரு நாடு என்று அவர்கள் கணக்குச் சொல்கிறார்கள். அதிலே சிங்களம் பேசுகிற மக்கள் 1,09,85,626 பேர். ஸ்ரீலங்கா தமிழ்ஸ் என்று அந்த அரசு அழைக்கும் தமிழர்கள் 18,71,535 பேர். இந்தியன் தமிழ்ஸ் என்றும் இந்திய வம்சாவழி என்றும் அழைக்கப்படுகிற தமிழர்கள் 8,25,233 பேர். மற்றவர்கள் மலேயா பேசுகிறவர்கள், மற்றவர்கள் எல்லாம் ஏறத்தாழ ஒரு அரை சதவிகிதம் அங்கே வாழ்கிறார்கள் என்று ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு தருகிறார்கள். இதிலே நாம் ஸ்ரீலங்கா தமிழர்கள், ஸ்ரீலங்கா தமிழர்கள் என்று பேசுகிற 18,71,000 பேர் யாழ்ப்பாணம் அல்லது ஸ்ரீலங்கா தமிழர்கள், இந்திய வம்சாவழியினர் என்று சொல்லப்படுகிறவர்கள், ஸ்ரீலங்கா மூர்ஸ் என்று சொல்லப்படுகிற இஸ்லாமியர்கள் 10,56,972 பேர். இப்படி சுமார் 30 லட்சம் தமிழ் பேசுகிற தமிழ் மக்களும், ஸ்ரீலங்கா மூர்ஸ் என்று அழைக்கப்படுகிற 10½ லட்சம் மக்களிலும் தமிழ் பேசுகிறவர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்பதையும் நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே அங்கே நடத்தப்படுகின்ற கொடுமைகள், அநியாயங்கள், இழைக்கப்படுகின்ற அக்கிரமங்கள் யாருக்கு இழைக்கப்படுகின்றன; எந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சியும் நம்முடைய அனுதாபமும், செயல்களும் பாதிக்கப்படுகிற அந்த மக்களை எப்படி பாதுகாக்கப் போகிறது, காப்பாற்றப் போகிறது, அதுவும் இன்னொரு நாட்டிலே குடிமக்களாக இருக்கின்றவர்களை நாம் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்ற அடிப்படையிலே, அந்த உணர்வுகளை வைத்துக் கொண்டுதான் இன்றைக்கு மாநில அரசாலும் சரி, மத்திய அரசாலும் சரி நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து, அதைக் கூர்மையாக்கி, பிறகு இன்றைக்கு உலகத்தின் முன்னாலே கொண்டுபோய் வைத்திருக்கிறோம். முதன்முதலாக ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இந்தப் பிரச்சினையை எவ்வளவு ராஜ தந்திர அணுகுமுறையோடு எழுப்ப வேண்டுமோ அப்படி எழுப்பியிருக்கிறோம். அதிலேதான் இந்தியப் பிரதமர் அவர்களுடைய ராஜ தந்திரமும் இருக்கிறது. அந்த ராஜ தந்திரத்திற்குத் துணையாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ராஜ தந்திரமும் இணைந்திருக்கிறது. இந்த உலக நாடுகள் ஐக்கிய மன்றத்திலே நேரடியாக

கொண்டு போனால், என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பது குறித்தும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலக மக்கள் முன்னாலே இது கொண்டு செல்லப்பட வேண்டும். ஸ்ரீலங்காவிலே நடைபெற்ற அநியாயங்கள், அக்கிரமங்கள், ஒரு இன மக்களுக்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை வெறிகள், அழிப்பதற்காகவே இழைக்கப்பட்ட திட்டமிட்ட வன்முறைகள், அதுவும் ஒரு அரசாங்கமும், ராணுவமும், காவல் துறையும் சேர்ந்து செய்த திட்டமிட்ட வன்முறைகள் உலகத்தின் முன்னாலே கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசினுடைய லட்சியமும், தமிழக அரசினுடைய லட்சியமும், ஸ்ரீலங்காவில் வாழ்கிற தமிழ் மக்களுடைய லட்சியமும் ஆகும். ஸ்ரீலங்கா ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவரானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, உலகத்தின் முன்னாலே இந்தப் பிரச்சினை கொண்டு செல்லப்படுவதிலேதான் அவர்கள் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே இதைத்தான் 26, 27 தேதிகளில் டெல்லிக்கு, இந்தியப் பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்தியிலே தகவலாகத் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளையும் அழைத்து கூட்டம் போட்டு முடிவுகள் மேற்கொண்டதை அனைவரும் அறிவோம். உலகமே வியக்கத் தக்க வகையிலே ஒரு மாநில அரசும் ஒரு துணைக் கண்டத்தினுடைய மத்திய அரசும் இணைந்து நடத்திய அற்புதமான வரலாற்றை நாம் நடத்திக் காட்டியிருக்கிறோம். அதற்குப் பிறகு ஒரு நிகழ்ச்சி வந்தபோது. ஒரு அரசியல் கட்சி தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்த ஒரு முறையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டபோதுகூட மத்திய அரசிடத்தில் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போதே மனம் கோணாது, மறுப்பு தெரிவிக்காது ரெயில்களை எல்லாம் மீண்டும் ஒரு நாள் நிறுத்துகிறோம் என்று மத்திய அரசு தெரிவித்தது என்றால், மத்திய அரசு இந்தத் தமிழ் இனம் படுகிற அவதியை, ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இன்னல்களைக் களைவதில் எந்த அளவுக்கு உணர்வுபூர்வமாக ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. 'நன்றி மறப்பது நன்றன்று' என்று நாம் தமிழிலேதான் வைத்துக் கொண்டிருக்கிறோம். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற இலக்கணத்தை, இலக்கியத்தை உலகத்திற்கு வழங்கிய நாம் இன்றைக்கு மனித உரிமைக்காகப் போராடுகிற சூழ்நிலைக்கு மாற்றப்பட்டிருக்கிறோம். ஸ்ரீலங்காவில் நடைபெறுகிற கொடுமைகள், தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்றன என்பதற்காக நாம் குமுறவில்லை. மனிதர்களுக்கு





இழைக்கப்படுகிற கொடுமையை, மனிதத் தன்மையற்ற அரக்கத்தனமாக இழைக்கப்படுகிற கொடுமையைப் பார்த்துத்தான் நாம் குமுறுகிறோம், துடிக்கிறோம். அதையும் தாண்டி நம்முடைய ரத்தம் துடிக்கிறது. நம்முடைய ரத்த சம்பந்தப்பட்டவர்கள், நம்முடைய மொழியைப் பேசுகிற தமிழ் மக்கள், அதுவும் தொன்மையான வரலாற்றைக் கொண்ட தமிழ் மக்கள், தமிழ் இன மக்கள்—அந்த இனத்தையே அழித்து விடுகிற முயற்சியில், அதுவும் எந்த மக்களாலே அந்த நாடு உருவாக்கப்பட்டதோ அந்த ஸ்ரீலங்காவே இன்றைக்கு அத்தகைய ஒரு செயலை மேற்கொள்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, நாம் கோபாவேசப்படுகிறோம், கொந்தளிக்கிறோம், ஆத்திரப்படுகிறோம், ஆவேசப்படுகிறோம். ஆனால் ஆத்திரமும், ஆவேசமும், கோபமும், கொந்தளிப்பும் பிரச்சினைகளுக்கு முடிவு கண்டு விடாது. ஆவேசம் வந்தாலும், கோபப்பட்டாலும் அதிலேயும் தெளிவு இருக்க வேண்டும்.

(முற்பகல் 11-10)

நிதானம் இருக்க வேண்டும். என்ன காரியத்தைச் செய்கிறோம், அதைச் செய்தால் பலன் அளிக்குமா என்று பார்க்க வேண்டும்.

ஒரு விபத்தில் சிக்கி காரில் மாட்டிக்கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒருவனைக் காப்பாற்ற வேண்டியதுதான். அது அவசியம் தான்; அவசரந்தான். ஆனால் அந்த அவசர அவசியத்தைக் கருதி, ஆளுக்கு ஒரு பக்கம் இழுத்து, கை வேறு, கால் வேறு என்று மாற்றிவிட்டால், அவனைப் பிழைக்க வைப்பதற்குப் பதிலாக, நாமே கொன்று விடுகிற சூழ்நிலைக்கு ஆளாக நேரிடலாம்., ஆகவே அவனைப் பக்குவமாகக் கொண்டு வந்து, முதலுதவி செய்து, அதற்குப் பிறகு ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று சொன்னாலும், ஆபரேஷன் செய்யவேண்டிய அளவுக்கு அவன் தகுதியுள்ளவன் தானா என்று பார்த்து, அதற்குப் பிறகு ஆபரேஷன் செய்தால்தான், அந்த உயிரையே நிலைக்க வைக்க முடியும்.

அவசர உதவி என்பதும் தேவை. அது திட்டமிட்டு, முறையான உதவியாக இருக்க வேண்டும். அதைத்தான், தமிழக அரசு, வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மிகத் துணிவாக, மிக்க உணர்வோடு, உணர்ச்சியோடு, இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறது. அதை மத்திய அரசு முழு உணர்வோடு, முழுமையோடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இல்லையானால், இந்தியாவிலிருந்து அனுப்பப்படுகிற ஐக்கிய நாடுகள் சபை தூதுக் குழுவில் தமிழகத்திலேயிருந்து, ஒரு காங்கிரஸ் அல்லாத அமைச்சரவையுடைய ஒரு அமைச்சரை அவர்கள் கோரிப் பெற்றிருக்க மாட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்

விருப்பம் தெரிவித்த நேரத்தில், அதை இந்தியப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, நம்முடைய அமைச்சரைத்தான் இன்றைக்கு அந்த தூதுக் குழுவிற்கே தலைமை ஏற்க வைத்திருக்கிறார்கள்.

பிரதமர் இல்லாத நேரத்தில், வெளிநாட்டுறவு அமைச்சர் இல்லாத நேரத்தில், ஒரு அமைச்சர் அந்தஸ்தில் இருக்கிற காரணத்தாலே இந்திய நாட்டுக் குழுவிற்கே தலைமையேற்று, அங்கே கருத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

என் பதில் சொல்லவில்லை, என் பதில் சொல்லவில்லை என்று கேட்கிறவர்களுக்கு, எப்போது பதில் சொல்ல வேண்டுமென்று, சட்டமன்றத்தில் இருக்கும் நமக்குத் தெரியும். வெளியிலே, பொதுக்கூட்டத்திலே, எதையும் பேசுகிறோம், எப்படியும் பேசுகிறோம், அதில்கூட நமது கருத்தைத் தெரிவிக்கிறோம். ஆனால் சட்டமன்றத்தில் வருகிறபோது கருத்துக்களை எப்படி, எந்த வகையில் பேசுவது, எந்த விதியின்கீழ் பேசுவது, எந்த ஒழுங்கில் பேசுவது என்று நாமே வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது, அவர்கள் இங்கே தெரிவிக்கிற கருத்திலிருந்து கொஞ்சம் மாறுபட்டு, நான் 'முரண்பட்டு' என்று சொல்ல மாட்டேன்—சிலவற்றை விட்டுவிட்டு, அதைச் சொல்ல வேண்டுமென்ற உணர்வோடு, அதை ஐக்கிய நாடுகள் சபையில் சொல்கிறார்கள். அதுதான் உலக அரசியல், ராஜ தந்திர அரசியல்.

ஆகவே ஒரு அரசியல் கட்சியோ தன்னை அவ்வளவு கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கிக் கொள்கிறபோது, உலகத்தில் உள்ள நாடுகள் எல்லாம் உட்கார்ந்திருக்கிற ஐ.நா. அவையில், எங்காவது ஒரு சந்து கிடைத்தால் வந்து விட்டேன் என்ற கழுகுப் பார்வையுடன் வல்லரசு நாடுகள் உட்கார்ந்திருக்கின்ற அந்த ஐ.நா. சபையில், ஒரு ராஜ தந்திர அணுகுமுறையோடு, ஒரு நுணுக்கத்தோடு இந்தப் பிரச்சினையை ஒரு அரசாங்கத்தின் சார்பில் கொண்டு வந்து, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதைப்போல, அகதிகள் பிரச்சினை என்று விவாதம் வருகிறபோது, அதற்குள்ளே நுழைந்து, 'நீ அகதிகளை உருவாக்குகிறாய், இந்த நாட்டு குடிமக்களாக இருப்பவர்களை, நீ அகதிகளாக அனுப்புகிறாய்' என்று சொல்கிற நிலை ஏற்படலாம். "அங்கே ஏற்படுத்தியிருக்கிற அரசியல் சட்டத்திற்கும் விரோதமாகச் செய்கிறாயே" என்று சொல்வார்கள். இன்றைக்கு இந்த ஜூலை மாதம் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஜூலை மாதம் தான் தொடர்ந்து இந்த விவகாரங்கள் நடை-



பெற்றுக்கொண்டு வருகின்றன. இந்த ஜூலை மாதத்திற்கும், ஸ்ரீலங்காவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று பார்த்தால், புதிய அரசியல் சட்டம் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம்தான் அமுலுக்கு வந்தது. ஆகவே அது அமுலுக்கு வருகிற ஜூலை மாதம், நம்முடைய தமிழர்களை அடித்து ஒழிக்க நல்ல மாதம் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இந்தப் புதிய அரசியல் சட்டத்தில் ஸ்ரீலங்கா அரசு மிகத் தெளிவாக Fundamental Rights பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறது.

"No person shall be subjected to torture or to cruel, inhuman or degrading treatment or punishment." இவ்வளவு விளக்கமாக ஒரு அரசியல் சட்டத்தில் Fundamental Rights என்று வைத்துக் கொண்டிருக்கிற ஸ்ரீலங்கா அரசாங்கம் இதைத் திட்டமிட்டு

"Torture" கூடாது, இழிவுபடுத்துவது கூடாது, அநீதி கூடாது, அவமதிப்பு கூடாது என்று, அரசியல் சட்டத்தில் அடிப்படையாக வைத்துக் கொண்டு, இதைத் தொடர்ந்து, தெளிவாக ஸ்ரீலங்காவில் வாழ்கிற தமிழ் மக்களுக்கு அந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலே அப்படி வைத்திருக்கிறார்கள். நேரமில்லாததால் விளக்கமாகச் சொல்லவில்லை. "இன்டிவிஜுவல்" (individual) என்றும் கூட சொல்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர்களுக்குள் யாரும் அப்படிப் பண்ணக் கூடாது என்று இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆனால் அரசியல் சட்டத்தில் 'தனிப்பட்டவர்கள்' (இன்டிவிஜுவல்) என்கிறார்கள். 'சமயம்' என்று சொல்கிறார்கள். 'மொழி.' என்கிறார்கள். எந்த பேதமும் பார்க்கக் கூடாது என்கிறார்கள். படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்று தமிழகத்தில் எப்படியோ ஒரு பழமொழி இருக்கிறது. அது இந்த ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்காகவே அந்தக் காலத்தில் ஏற்பட்டதோ என்னவோ தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது பொதுப்படையாக வந்தது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆகவே இன்று ஒரு அரசாங்கம், முழு ஆதிபத்திய உரிமையுள்ள ஒரு நாடு, தன்னுடைய அரசியல் சட்டத்தின்கீழ் ஒரு பார்லிமெண்ட்டை உருவாக்கி ஆட்சி நடத்துகிறபோது, அந்த அரசு நடத்துகிற அக்கிரமங்களைக் கேட்பதற்கு உலகத்தில் இருக்கிற மனித ஜாதி அனைத்திற்கும் உரிமை உண்டு. நமக்கு இன்னும் அதிக உரிமை உண்டு, பல காரணங்களால். முதலில் மனித உரிமை. இரண்டாவது தமிழர்களின் உரிமை.

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 27

இந்த இரண்டையும் எடுத்துக் காட்டத்தான் தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தீவிரமான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் இதுவரை சட்டமன்ற மேலவை விவாதிக்காமல் இருந்த ஒரு விஷயம், இன்றைக்கு விவாதத்திற்காக வந்திருக்கிறது. அதுவும் இரண்டு நாள் விவாதத்திற்கு வருகிறது.

சட்டமன்றப் பேரவையில் 1977-ல், 1981-ல் வந்தபோது, ஒரு நாளிலேயே விவாதம் முடிந்தது. இந்த முறைதான் மூன்று நாட்கள் அங்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். இங்கேயும் இரண்டு நாட்கள் ஒதுக்கியிருக்கிறோம். காரணம், பிரச்சினைகளும் வளர்ந்து, நம்முடைய உணர்வுகளும் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, எடுத்திருக்கிற நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து வரலாற்றைப் பார்க்க வேண்டும். நாம் நம்முடைய தமிழ் மக்கள் காப்பாற்றப்படுவதற்காக, நிதானமாக இதில் நுழைந்து பார்த்தால், ஸ்ரீலங்காவிலேயே பூர்வீகம் பூர்வீகமாக இருக்கிற தமிழ் மக்கள், 50, 60, 100, 200 ஆண்டுகளுக்கு முன்பே குடியேறிய தமிழ் மக்கள் அல்லது மற்ற சமுதாயத்தினர் என்று பார்க்கிறபோது, இன்றைக்கு ஒரு பகுதியில் இருக்கிறவர்கள் பிரிந்து போய் அவர்கள் தங்களால் வாழ்ந்து கொள்ள முடியும் என்ற உரிமையை நிலைநாட்டி, பிறகு, இந்த 10 லட்சம், 15 லட்சம், 20 லட்சம் தமிழ் பேசுகிற மக்கள், சிங்களம் பேசுகிற, புத்த மதத்தைத் தங்கள் மதமாகக் கொண்டிருக்கிற இந்த வெறியர்கள் மத்தியில் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

புலிகளுக்கு மத்தியில் இருக்கவேண்டிய புள்ளிமான் போன்ற நிலையில் இருக்கும் அவர்களை விட்டுவிட்டு நாம் எப்படி ஒரு முடிவை எடுப்பது என்ற பிரச்சினையில்தான் ஸ்ரீலங்கா தமிழ்த் தலைவர்களே, இன்றைக்கு ஒரு முடிவுக்கு வருவதற்கு, பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், "நீங்கள் ஒரு தெளிவான முடிவை, ஒருமித்த முடிவை, உலகத்திற்கு அறிவியுங்கள், அதற்குத் தமிழகம் துணை நிற்கும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில்தான் இந்தத் தீர்மானத்தை இந்தச் சட்டமன்ற மேலவையின் வரலாற்றிலேயே இல்லாதவாறு, முதல் முறையாக, நமது மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் பிரேரேபிக்கிறார்கள். அவர்களுடைய பெயரால் இருக்கிற இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் முன்பு வைப்பதற்குக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை, எனக்குக் கிடைத்த மிக முக்கிய நிகழ்ச்சியாகக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தாலும் கூட, அதிலே கருத்து மாறுபட்டாலுங்கூட,



1983 அக்டோபர் 27] [திரு. இராம. வீரப்பன்]

ஸ்வர பேதம் இருந்தாலும், சுருதி பேதம் வந்து விடக்கூடாது. ஸ்வரம் கீழ் ஸ்தாயியிலும் இருக்கலாம், மேல் ஸ்தாயியிலும் இருக்கலாம், ஆனால் சுருதி தான் இரட்டைக் கட்டையிலிருந்து மூன்று கட்டைக்கோ, நான்கு கட்டைக்கோ போய்விடக் கூடாது. அப்படிப் போய்விடாமல், ஸ்வர பேதம் இருக்கலாம். சில நேரத்திலே உச்ச ஸ்தாயியிலும் "ஸ"-வைச் சொல்லலாம், கீழ் ஸ்தாயியிலும் "ஸ"-வைச் சொல்லலாம். ஆகவே, இப்படிப்பட்ட கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், எப்படிப் போராடுவது, எப்படி அவர்களுக்கு ஆதரவு அளிப்பது என்பதில் வேறுபாடுகள் இருந்தாலும், தமிழகம், தமிழ் மக்கள், தமிழக அரசு, தமிழ்நாட்டில் இருக்கிற அரசியல் கட்சிகள், எல்லா மொழி பேசுகிற தமிழ் மக்களும், தயவுசெய்து அன்பு நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தமிழகம், தமிழகம் என்று சொல்கிறபோது, தமிழ் நாட்டில் ஐந்து கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் அனைவருமே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அல்ல. ஆகவே, தமிழ் பேசுகிற மக்களுக்காக தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் ஒருமித்த குரலிலே ஒரே உணர்வோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்காக மீண்டும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி, இந்த அவையின் மூலமும் அந்த அவையின் மூலமுமாக, குறிப்பாக முதன்முதலாக மேலவை மூலமாக நிறைவேற்றித் தருவதற்காக உங்கள் முன்பு இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருந்தாலும், இந்த அவைத் தலைவன் என்ற முறையில் உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். இந்தப் பிரச்சினையில் நாம் ஆத்திரப்படுவதற்கோ, கோபப்படுவதற்கோ நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதில் கருத்து வேற்றுமை கிடையாது. அப்படிப்பட்ட வார்த்தைகளில் நியாயம் இருக்கிறது. இருந்தாலும், மேடையில், பொது மன்றங்களில் பேசுவது வேறு. இந்த மன்றத்தில் பேசுகிற நாம் பயன்படுத்துகிற வார்த்தைகள் அதிகாரபூர்வ தஸ்தாவேஜில் வருகின்றன. எதிரிகள்கூட அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடும். அதனாலும் நமக்குச் சங்கடங்கள் வரக் கூடும். ஆகவே அங்கேயிருந்து வந்தவர்களிடம் உரையாடி அதன்பின்தான் நான் சொல்கிறேன். ஆகவே,

(முற்பகல் 11-20)

கொஞ்சம் எச்சரிக்கையாகவே பேச வேண்டும். விதி 82-ன்கீழ் இந்தத் தீர்மானம் வைக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவைத் தலைவர் என்கிற முறையில் அதற்கு

நான்கூட காரணம். எல்லோரையும் பேச விட்டால் என்ன ஆகும் என்று எண்ணிப் பார்த்துத்தான், விதி 82-ன்கீழ் இது வைக்கப்படுகிறது. அங்கேயே வெள்ளம் தலைக்கு மேல் போயிருப்பதால், இங்கே யாரையும் அடக்கி வைக்க முடியாது, அடக்கி வைக்கத் தேவையுமில்லை என்றுதான் இந்த அரசே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறது. எனவே பேசுகிற அன்பர்கள் இந்த அவைக்கு ஏற்ற வகையில், தங்களின் கோபதாபத்தைக் குறைத்து, விஷயத்தை எவ்வளவு வன்மையாகவும் கண்டிப்பாகவும் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லலாம் என்பதை நான் இங்கே ஆலோசனையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் முதன் முறையாக இங்கே பேச இருக்கிறார்கள். அவரை நான் வரவேற்றபோது, அவர் அவையில் இல்லை. எனவே இன்னொரு முறை அவருக்கு வரவேற்பு கூறிக் கொள்கிறேன். அவர் பேச இருக்கிறார். அவருடைய முதற் பேச்சே சர்வதேசப் பிரச்சினையின் மீதான பேச்சாக அமைந்திருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தைக் குறித்து, கடந்த சில மாதங்களாகப் பல்வேறு அரசியல் கட்சிகள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்திருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், பெருமைக்குரிய இந்த அவையில் எங்கள் கருத்துக்களைச் சொல்லுவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்ரீலங்காவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தமிழகத்தினுடைய மக்களுடைய, அதிலும் குறிப்பாக அரசியல் கட்சிகளுடைய, கவனத்தை வெகுவாக ஈர்த்தது. இவ்வாறு பல அரசியல் கட்சிகளுடைய கவனத்தையும், பொது மக்களின் கவனத்தையும் இப்பிரச்சினை இங்கே ஈர்த்ததைப்போல், அனைவரின் உள்ளத்தைத் தொட்டதுபோல், அனைவரின் மனதுக்கும் துன்பத்தையும் துயரத்தையும் உருவாக்கியதுபோல், வேறு எந்த ஒரு பிரச்சினையும் வேறு எந்தச் சம்பவமும் தமிழகத்தில் நடந்தவையாகட்டும், வேறு எங்காவது நடந்தவையாகட்டும் அண்மைக் காலத்தில் ஈர்க்கவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்திலாகட்டும்,





மாநிலத்திலாகட்டும், பல்வேறு சம்பவங்கள் நம் கண் முன்னாலேயே நடந்திருக்கின்றன. தமிழகத்தை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் மற்றும் விழுப்புரத்தில், செங்கற்பட்டில் நடைபெற்ற சம்பவங்களில், அதைப்போலவே அசாமில், பஞ்சாபில், அலிகாரில், ஹைதராபாத்தில் மற்றும் மொரதாபாத்தில் நடைபெற்ற சம்பவங்களில் பல்வேறு சாதாரண மக்களிடையே ஜாதி, மத, மொழிக் கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் காரணமாகப் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். ஏராளமான சொத்துக்கள் நட்டமாகியிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் தார்மீக ரீதியில் நியாயமிருந்தாலும், மத்திய அரசும் மாநில அரசுகளும் அவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டியிருந்தாலும், அப்பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணக்கூடிய அதிகாரமும் பொறுப்பும் நமக்கிருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் விட அதிகமாகவே அனைவருடைய கவனத்தை ஸ்ரீலங்கா பிரச்சினை ஈர்த்தது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப் போல், இதற்குச் சரியான முகாந்திரங்கள் பல இருக்கலாம். காரணம், மொழியாலும், இனத்தாலும், வரலாற்றாலும், பண்பாட்டாலும் நீண்ட காலமாகத் தொடர்புடைய நம்முடைய மக்கள் அங்கே பாதிக்கப்படுகிறபோது, இவ்வாறு நாமெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு ஆத்திரப்படுவதற்கு நியாயமில்லை என்றாலும், காரணங்கள் கண்டிப்பாக இருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஸ்ரீலங்காவிலே நடைபெற்ற சம்பவங்கள் என்பவை ஒரு நாகரீகமான அரசாங்கமோ அல்லது ஒரு நாகரீகமான மக்கள் சமுதாயமோ ஏற்றுக் கொள்ளக்கூடியதாக, நியாயப்படுத்தக் கூடியதாக இல்லை என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இனம் கண்டு கொண்டு அடையாளம் கண்டுகொண்டு, அந்த அப்பாவி மக்களைப் பல கால கட்டங்களிலே ஸ்ரீலங்காவிலே உள்ளவர்கள் துன்புறுத்தி வந்தார்கள். இறுதியில் கடந்த ஜூலை மாதத்திலிருந்து நடைபெற்ற சம்பவங்கள் இன்றைய தினம் தமிழகத்தில் மட்டுமல்ல, அகில உலகத்திலும் இருக்கக்கூடிய மக்களின் கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. கலவரங்கள் என்பவை நாட்டில் பல இடங்களிலே நடைபெறுகின்றன. ஆனால் அப்படிப்பட்ட கலவரங்கள் அதிலும் இனக் கலவரங்கள் நடைபெறுகின்றபோது, அவைகளைக் கட்டுப்படுத்தித் தடுக்க வேண்டியவர்கள், மக்களை அமைதிப்படுத்த வேண்டியவர்கள் அதிலும் குறிப்பாக இராணுவத்தினரும் போலீசாருமே அத்தகைய இனக் கலவரங்களுக்குத் துணையாக ஸ்ரீலங்காவில் இருந்தார்கள் என்பதுதான்

வேதனைக்குரிய நிகழ்ச்சிகளாகும். அத்தகைய கலவரங்களின் காரணமாக
அங்கே இருப்பதற்குப் பயந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்
தில் ரயிலிலும் பஸ்களிலும் ஏறிச் செல்லும்போது, அவர்களையெல்லாம் வழி
மறித்து, கதவுகளையெல்லாம் அடைத்து, எண்ணெய்யை ஊற்றி, தீ வைத்துக்
கொடுமைப்படுத்திய சம்பவங்கள் எல்லோருடைய மனத்தையும் பாதிக்கக்கூடிய
செயல்களாகும்.

அதைப் போலவே சிறையில் அடைக்கப்பட்டவர்கள் வெளியே செல்ல
வழியில்லாதபோது, சிங்கள வெறியர்கள் மட்டும் அவிழ்த்துவிடப்பட்டு, தமிழ்
மக்களைச் சித்ரவதைக்கு உள்ளாக்கியிருப்பது வரலாற்றில் ஈடு இணை
இல்லாத சம்பவமாகும். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக இத்தகைய
சம்பவங்கள் நடந்த பிறகும், அந்த ஸ்ரீலங்கா அரசும் ஸ்ரீலங்காவின் அதிபரு
மான திரு ஜெயவர்த்தனே அவர்களும் அவைகளைப் பற்றி ஒரு வார்த்தைகூட
கண்டிக்காதது, வருத்தம் தெரிவிக்காதது படு மோசமான செயல் என்பதை
மிகுந்த வருத்தத்தோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியா
விலாகட்டும், வேறு பல நாடுகளிலாகட்டும், கலவரங்கள் என்பவை நடைபெறு
கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் நியாயப்படுத்துகிற ஒரு அரசை நாம்
எங்கேயும் பார்க்க முடியாது, பார்க்கவில்லை. ஆனால் இதுவரை ஸ்ரீலங்கா
அரசும் அந்த நாட்டு ஜனாதிபதியும் மட்டுமே இத்தகைய சம்பவங்களை
நியாயப்படுத்துவதற்குரிய காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே
தவிர, இவற்றைக் கண்டிக்கிற வகையில், இவற்றிற்காக ஒரு அனுதாபம் தெரி
விக்கிற வகையில், இன்றுவரை நடக்கவில்லை என்பது மிகவும் வருந்தக்கூடிய
சம்பவம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற பிறகு, தமிழ் நாட்டில் உள்ளவர்கள்,
கட்சிப் பாகுபாடின்றி, மொழி பாகுபாடின்றி, அனைவரும் இதனைக் கண்டித்
திருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தில் மொ
ழிந்ததைப்போல, தமிழகத்தில் தமிழ் மொழி பேசுகிறவர்கள் மட்டுமல்ல,
தெலுங்கு, மலையாளம் போன்ற மற்ற மொழி பேசுகிறவர்கள், இன்னும் பல
மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்கள் எல்லாம் இச்சம்பவங்களையெல்லாம்
தீர்மான வடிவில் கண்டித்திருக்கிறார்கள். இந்தியாவில் வேறு எந்தக் காலத்
திலும் இல்லாத அளவுக்கு அரசியல் கட்சிகளும் ஏகமனதாக இந்தச் சம்பவங்
களைக் குறித்து கண்டனம் தெரிவித்திருக்கின்றன. எந்தக் காலத்திலும்
ஒன்றுபட்ட கருத்தைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிற ஜனதா
கட்சியைப் போன்றவைகள், பாரதீய ஜனதா கட்சியைப் போன்றவைகள்





இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் போல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல் உள்ள கட்சிகள் எல்லாம் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைப் பொறுத்த வரையில், ஒரே குரலில் கண்டித்திருக்கின்றன. இதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க நாங்களெல்லாம் உறுதுணையாக இருக்கிறோம் என்று ஒரே குரலில் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதனை ஏதோ 5 கோடி தமிழ் மக்களின் பிரச்சினையாகக் கருதி வாதாடுவதைவிட, 70 கோடி இந்திய மக்களின் பிரச்சினையாக உலகத்தின் முன் வைப்பது நம்முடைய கருத்துக்கு வலு சேர்க்கும் என்றுதான் அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதில் ஏதோ அரசியல் லாபம் கருதாமல், இதை ஏதோ தமிழ் மக்களுக்கு மட்டுமே உரிய பிரச்சினையாகக் கருதாமல், மொழியாலும், இனத்தாலும் ஒன்றுபட்ட மக்களின் ஒரு பிரச்சினையாகக் கருதாமல், மனிதாபிமான அடிப்படையில் இந்திய நாட்டு மக்களின், உலக மக்களின் பிரச்சினையாக இதை எடுக்க வேண்டும் என்ற வகையில்தான் பாரதப் பிரதமர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவருடைய கரத்தை நாம் வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சம்பவங்கள் நடைபெற்ற பிறகு, உடனடியாக என்ன செய்ய வேண்டுமோ, என்ன நடவடிக்கையை பாரத அரசாங்கம் எடுக்க வேண்டுமோ அதை எடுத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஜூலை 23 ஆம் தேதி பாரதப் பிரதமர் தமிழகத்திற்கு வந்திருந்தார்கள். 24 ஆம் தேதி ஸ்ரீலங்காவில் வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில் வெடிப்பதற்கு முன்னால் அங்கே நிலவிய சூழ்நிலையை உணர்ந்து, பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது ஸ்ரீலங்காவில் உள்ள நிலைமைகள் மிகவும் கவலை தருவனவாக உள்ளது என்று குறிப்பிட்டார்கள். இதைச் சொன்ன உடனே ஸ்ரீலங்காவில் உள்ள பல பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் ஸ்ரீலங்காவின் உள் விவகாரத்தில் இந்திய அரசு தலையிடுகிறது, பாரதப் பிரதமர் தலையிடுகிறார் என்று குற்றஞ் சாட்டினார்கள். இதை எல்லாப் பத்திரிகைகளுமே பெரிய கொட்டை எழுத்துக்களில் போட்டன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பிறகு கலவரங்கள் அங்கே வெடித்துவிட்ட பிறகு, அதற்கு மேலும் துணை சேர்க்கிற விதத்தில் அங்கே உள்ள ஆட்சியாளர்கள், குறிப்பாக ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி அவர்கள் பல்வேறு நாடுகளிடம் உதவி கோரியதாகப் பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்தோம்.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 27

இங்கிலாந்து, அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களா தேஷ் ஆகியோரின் உதவி
யைக் கேட்டதாக அந்தப் பத்திரிகைச் செய்தி குறிப்பிட்டது. இந்தச்
செய்தியின் அடிப்படையில், நாடாளுமன்றத்தில் நம் வெளிவிவகார அமைச்சர்
திரு. நரசிம்ம ராவ் அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள். ஸ்ரீலங்கா அரசு
இத்தகைய செய்தியை மறுத்திருந்தாலும், அதில் உண்மை இல்லாமல் இல்லை
என்று அவர் குறிப்பிட்டார். அதில் உண்மை என்னவென்றால், அமெரிக்கா,
இங்கிலாந்து, பாகிஸ்தான், பங்களா தேஷ் ஆகிய நாட்டு அரசாங்கங்களோடு
இந்திய அரசு தொடர்பு கொண்டு விசாரித்தபோது, அத்தகைய உதவியை
ஸ்ரீலங்கா கேட்டிருந்தாலும், இந்த நாடுகள் இந்தப் பிரச்சினையில் தலையிடு
வானால், இது ஒரு சர்வ தேசப் பிரச்சினையாக மாறிவிடும் என்று எச்சரித்து,
எந்தவிதமான உதவியையும் ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுக்கக்கூடாதென்று
அச்சித்த இந்தியாவின் ராஜதந்திரத்தை நான் பெருமையோடு இங்கே நினைவு
கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்குப் பிறகுதான் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனே
அவர்கள் தனது தூதுவரை டெல்லிக்கு அனுப்பி பேச்சுவார்த்தைக்குத் தயா
ராக உள்ளோம் என்று தெரிவித்தார். சம்பவங்கள் நடைபெற்ற சில நாட்களி
லேயே பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஸ்ரீலங்கா அதிபர்
திரு. ஜெயவர்த்தனே அவர்களோடு தொடர்பு கொண்டு பேசியதோடு மட்டுமல்
லாமல், மிகுந்த ராஜதந்திரத்தோடு மற்ற நாடுகளெல்லாம் எந்தவிதமான
இராணுவ உதவியையும் கொடுக்க முன்வராதபடி செய்து, அதிபர் திரு. ஜெய
வர்த்தனே இந்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அளவுக்கு
நிர்ப்பந்தத்தை உருவாக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இதற்குப் பிறகு வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள்
கொழும்புவுக்குச் சென்றார்கள். அங்கே அரசாங்கத் தரப்பில் உள்ளவர்
களையும் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு
இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது பலர் திரு. நரசிம்ம ராவ் அவர்
களுடைய ஸ்ரீலங்கா விஜயத்தால் பலன் எதும் ஏற்படவில்லை என்று எண்ணி
னார்கள். அப்படித்தான் குற்றஞ் சாட்டினார்கள். ஆனால் பின்னாலே
அந்த விஜயம் பயனுள்ளதாக இருந்தது என்பதை உணர்ந்துகொள்ள வாய்ப்பு
ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீலங்கா சென்றபொழுது அகதிகள்
முகாம் சென்று பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இதை வைத்துக்கொண்டு
தமிழகத்தில் உள்ள சிலர் திரு. நரசிம்மராவ் ...



டோபர் 27] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

(முற்பகல் 11-30)

சில நாட்களுக்குப் பின்னால், திரு. நரசிம்மராவ் அகதிகள்
முகாமுக்கு செல்லக்கூடாது என்று சொல்லிய அரசாங்கம், நாடாளுமன்ற
உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் அவர்
நாட்டிற்கு வருகை தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள
இங்கே குறிப்பிட்டாக வேண்டும். "மழைக்குப் பின்பு தூவானம்"
என்பதுபோல, சில சம்பவங்கள் அங்குமிங்கும் இப்பொழுது நடந்தாலும்,
கலவரங்கள் இப்போது அங்கே நின்றுவிட்டன என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன். இந்திய அரசாங்கம் அந்தக் கலவரங்களை நிறுத்தக் காரண
மாக இருந்தது. உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த
நடவடிக்கையை இந்திய அரசு எடுத்தது. அங்கே பாதிக்கப்பட்ட, காயப்
பட்டு அல்லலுக்குள்ளாகி துன்பப்பட்ட மக்களுக்கு மருந்து கொடுக்க வேண்டும், உணவு
கொடுக்க வேண்டும் என்பதற்காக தனி விமானம் மூலமாக சென்னை மீனம்
பாக்கம் விமான நிலையத்திலிருந்து நிவாரணம் கொடுக்கப்பட்டது என்பதை
நாம் நன்றாக அறிவோம். பல கோடி ரூபாய் சொத்துக்களை இழந்த மக்க
ளுக்கு புனர் வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக அந்த அரசாங்கம்
செய்ய வேண்டிய கடமை எதுவாக இருந்தாலும், அதைப் பாராமல், பாரத
நாட்டு மக்களுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்
தமிழக முதல்வர் அவர்களும், பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி
அம்மையார் அவர்களும் இதற்காக தனி நிதியை ஏற்படுத்தி, அதற்குத்
தலைமையேற்றிருக்கிறார்கள். பாரதப் பிரதமர் அந்த நிதிக்கு
ஒரு கோடி ரூபாய் அளித்து, இந்தியாவில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், வெளி
நாட்டவர்களும் நிதி தரவேண்டும் என்று சொல்லியது இந்தப் பிரச்சினையில்
இந்திய அரசாங்கமும், பாரதப் பிரதமரும் எந்த அளவிற்கு அக்கறை கொண்டி
ருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்தக் கலவரங்களுக்கெல்லாம் காரணமாக உள்ள சம்பவங்களைச்
சற்றுப் பார்க்க வேண்டியதவசியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.
நம்முடைய முன்னவர் அவர்கள் எல்லாவற்றையும் தொகுத்துச் சொன்னார்கள்.
சுதந்திரம் அடைந்த பிறகு நடந்த சம்பவங்களைச் சொன்னார்கள்.
அதற்கு முன்பு ஸ்ரீலங்காவில் ஆட்சிமொழியாக ஆங்கிலம், தமிழ், சிங்களம்
ஆகிய மூன்று மொழிகள் இருந்தது உண்மை. 1948-ல் சுதந்திரம் அடைந்தவுடனே
அங்கே வாக்குரிமை பெற்றிருந்த இந்திய வம்சா வழியினரின் வாக்குரிமை
யைப் பறித்துவிட்டார்கள். துரதிருஷ்டவசமாக அந்தச் சம்பவம் நம்முடைய
... இருந்த மற்ற தமிழர்களின்

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 27

கவனத்தை ஈர்க்கவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்
அன்றையதினம் தமிழர்களை இரண்டாகப் பிரித்துவிட்டார்கள். இந்தியாவில்
ருந்து சென்ற இந்த சாராருக்கு வாக்குரிமையைத் தடை செய்ததோடு
மட்டுமல்லாமல், தேயிலை, இரப்பர் தோட்டங்களில் கூலிகளாக இருந்தவர்கள்
பத்தாவது வகுப்பிற்கு மேல் படிக்க உரிமையில்லை, வேறு வேலையில் சேர
உரிமையில்லை என்ற நிலைமையை உருவாக்கி, அவர்களை ஒதுக்கி வைத்து
விட்டு, தமிழர்களை இரண்டாகப் பிரித்த முதல் சதித் திட்டத்தை அந்த
அரசாங்கம் செய்தது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

பொதுவாக அரசியலில் இலட்சியங்களைச் சொல்லி, கொள்கைகளைச்
சொல்லி, திட்டங்களைச் சொல்லி மக்களுடைய ஆதரவைப் பெறுவது மிகக்
கடினம் என்பதை அறிவோம். ஆகவே ஸ்ரீலங்காவில் ஆட்சிப் பொறுப்புக்கு
வந்தவர்கள் அங்குள்ள மக்கள் ஆதரவைப் பெறுவதற்காக குறுக்கு வழியைக்
கையாண்டார்கள். பெரும்பான்மையான மக்கள் பின்பற்றுகிற புத்த மதத்தை
அரசாங்க மதமாக ஆக்கினார்கள். சிங்கள மொழியை மட்டுமே ஆட்சி மொழி
ஆக்கினார்கள். அங்குள்ள மக்களுடைய மொழி வெறி, இன வெறி ஆகிய
வற்றை தூண்டிவிட்டு அதிலே ஆட்சி நடத்த முடியும் என்று கருதியிருக்
கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்றையதினம்
தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருந்தது. இப்போது இல்லை. சிங்கள
மக்களிடையே மொழி வெறி, இன வெறியைத் தூண்டிவிட்டு அதையே
திரு. பண்டாரநாயகா காலத்திலேயிருந்து, சிரிமாவோ பண்டாரநாயகா
காலத்திலேயிலிருந்து திரு. ஜெயவர்த்தனே காலம் வரையில் அரசியல் ஆயுத
மாகக் கையாண்டு வருகிறார்கள். ஏழ்மை, வறுமை மிகுதியாக உள்ள சிங்கள
நாட்டில் வேறு எந்தவிதமான முன்னேற்றத் திட்டங்களையும் கட்ட முடியாத
நிலையில் இதைத்தான் நம்பி ஆட்சியில் இருந்து கொண்டிருப்பவர்கள்
மக்களை ஆயுதமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்பு
கிறேன்.

அவை முன்னவர் அவர்கள் கூறியதுபோல, இரண்டு தரப்பட்ட தமிழ்
மக்கள் அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எப்படி பாரம்பரிய
மாக வாழ்கிறோமோ அதைப்போல பாரம்பரியமாக வாழ்ந்துவருகிற ஸ்ரீலங்கா
தமிழர்களுக்கு ஓட்டுரிமை உண்டு. அவர்கள் அமைச்சர் ஆகலாம், எந்த
வேலையிலும் சேரலாம் என்ற உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன
என்பதிலே சந்தேகம் இல்லை. ஆனால் பிறிதொரு சாரார், இந்தியாவிலே
சமீப காலம் வரையில் வாழ்ந்துவிட்டு நம்முடைய நாட்டிலே வாழ வழி
யில்லாமல் வெளிநாட்டிற்குச் சென்றாவது பிழைக்க முடியும் என்று கருதி



1983 அக்டோபர் 27] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

வெள்ளைக்காரன் சம்மதத்தோடு இந்திய அரசாங்கம் அனுப்பி வைத்த தமிழர்கள். அவர்கள் இந்தியாவிற்கு இன்றும் கட்டுப்பட்டவர்கள். இந்தியா அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம், கடமை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட தமிழர்கள் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற மத்தியப் பகுதி, தெற்குப் பகுதி, மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் வாழ்கிறார்கள். அவர்கள் அங்கே மனிதர்களைவிட கேவலமாக, மிருகங்களைவிட சற்று மேலாகக் கருதப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே இந்த இரண்டுவிதமான பிரச்சினைகளை நாம் சிந்திக்க வேண்டும். பல உரிமைகளையும் பெற்று சிங்களவர்களைப்போல வாழ்கிற தமிழ் மக்களும் இருக்கிறார்கள். மனித உரிமைகளே இல்லாமல், இந்த நாட்டிலே பிழைக்க முடியாமல் நூற்றாண்டுகளுக்கு முன்னாலே சென்று தேயிலை, இரப்பர் தோட்டங்களிலே வாழ்கிற தமிழ் மக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் படிக்கக்கூட உரிமையில்லை. வேலை வாங்குகிற உரிமையில்லை. அதற்கு மாறாக தொழிலாளியாகவே மட்டும் இருக்கிற நிலைமை இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால், இரண்டு சாராருக்கும் வழிவகை செய்வதுதான் நியாயம். முதல்வர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, அங்குள்ள தமிழர்கள் எல்லாம் மனிதர்களாக வாழ்வதற்குரிய திட்டங்களை அனைவரும் சொல்வார்களேயானால், தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகளும், பாரத அரசாங்கமும் அதற்குத் துணையாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் இன்றையதினம் மிகப் பெருமளவிலே பேசப்பட்டு வருகிற கருத்துக்களைப் பார்த்தால், அதனுடைய நிலைமைகளை உணர்ந்துகொண்டு, விளைவுகளைப் புரிந்துகொண்டு பேசுகிறார்கள் என்று எண்ண முடியவில்லை.

ஈழம் கொடுக்கப்பட்டாலும்கூட, இந்தியத் தமிழர்கள் ஈழத்திற்கு வெளியிலேயே வாழ வேண்டியிருக்கிறது. ஈழத்திற்கு அப்பாலும் இருக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஈழம் கிடைத்தாலும்கூட, அதிக உரிமைகள் அற்ற தமிழ் மக்கள் சிங்களவர்கள் மத்தியிலே தொடர்ந்து இருக்க வேண்டியது இருக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்று 150 இலட்சம் மக்களில் 30 இலட்சம் மக்கள் நமக்குப் பெரிதாக இருக்கலாம். பத்து இலட்சம் தமிழ் மக்கள் 130 இலட்சம் சிங்கள எதிரிகள் இடையிலே இருந்தால், தொல்லைகள் எவ்வளவு இருக்கும் என்பதை மனதிலே எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டிலே இருந்து தமிழ் மக்கள் பல காலம் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இந்தியாவில் பல மாநிலங்களில் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் கூலிகளாகத்

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 27

தான் சென்றிருக்கிறார்கள். பெரிய உத்தியோகத்திற்குச் செல்லவில்லை. 7½ கோடி தமிழர்கள் சார்பிலே பேசுகிறோம் என்கிறார்கள். ஆனால் இரண்டரை கோடி தமிழ் மக்கள் தமிழகத்திற்கு அப்பால் வாழ்கிறார்கள். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் எடுக்கிற செயல், சொல்லுகிற சொல் எல்லாம் இரண்டரை கோடி மக்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பத்திரிகையிலே சில வாரங்களுக்கு முன்பு ஒரு செய்தியைப் பார்த்தேன். தொண்டமான் அவர்கள் 10 இலட்சம் தமிழர்களை இந்தியாவிற்கு எடுத்துச் செல்வேன் என்று கூறியதாகப் பார்த்தேன். அதை அவர் மறுத்திருக்கிறார்கள் என்றாலும், தமிழகத்திற்குப் பத்து இலட்சம் தமிழர்கள் திரும்புவார்கள் என்றால், இங்கே தொழில் அளிக்கக்கூடிய நிலைமை என்னென்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்திலே உள்ள வறுமை, ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளலாமே தவிர, அந்த மக்களுக்குக் கொடுக்க என்னஇருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வளவு கஷ்டங்களுக்கிடையிலே இரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய ஸ்ரீலங்கா தமிழர்கள் இந்தியாவிற்குத் திரும்ப வருவார்களேயானால், அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாவார்கள்.

(முற்பகல் 11-40)

எனக்கு நன்றாகத் தெரியும். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவில், தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலி பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஸ்ரீலங்கா அகதிகள் மிகவும் அல்லல்பட்டு, தொல்லைகள் பட்டுக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்காவிலே வேலை செய்துகொண்டிருந்த தாய்மார்கள், தேயிலைத் தொழிலாளர்கள் நம்முடைய நாட்டிலே சாதாரண களைபறித்து, அரிவாளை எடுத்து வேலை செய்யக்கூடிய நிலைமையிலே இல்லை. ஆகவே நம்முடைய செயல்களினாலே, நம்முடைய பேச்சுகளினாலே அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள் இந்தியாவிற்குத் திரும்ப வருகின்ற ஒரு போக்கை இங்கே உண்டாக்குவது என்பது தீமையாக முடியும் என்று அந்தத் தமிழ் மக்களுக்குத் தெரியும், இங்கே இருக்கின்ற தமிழ் மக்களுக்கும் தெரியும். ஆகவே தமிழ் மக்களுக்குச் செய்கின்ற தீங்காக அமையும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அத்தோடு மட்டுமல்லாமல், மலேசியா, நேட்டால் போன்ற பல்வேறு பகுதிகளிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் அந்த மண்ணுக்கு விசுவாசம் இல்லாமல், அந்த அரசாங்கத்தை ஆதரிக்காமல், அங்கே இருக்கின்ற மக்களோடு சேர்ந்து வாழ முடியாத நிலைமையை உருவாக்குவோ

மானால், அது தமிழ் இனத்திற்கே செய்கின்ற ஒரு மாபெரும் தீங்காக அமையும் என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைக்குச் சரியாகப் பரிகாரம் காண வேண்டுமென்று சொன்னால், பல பேர்கள் பலவிதமாகப் பேசுகிறார்கள். இது குறித்து ஐக்கிய நாடு சபையிலே உலகம் அறிய கருத்துக்களை எடுத்துக் கூறுவது என்பது நமக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. உலகம் அறியச் செய்ய வேண்டியது அவசியம்தான். ஆனால் அதனால் ஏற்படக்கூடிய பலாபலன் என்னவென்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஸ்ரீலங்காப் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக ஆக்குவது என்பது கடினமானதல்ல. இன்றையதினம் இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடு சபையிலே, இந்திய அரசு விரும்பினால், கொண்டுவர முடியும். ஆனால் நம்முடைய கடந்த அனுபவம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். 1948-லே காஷ்மீர் பிரச்சினையை நாம் ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றோம். அன்று மனிதருள் மாணிக்கமாக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்தார்கள். அந்தப் பிரச்சினையை உலக நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றால், நீதி கிடைக்கும் என்று சொல்லி; அந்தக் காரியத்தைச் செய்தார்கள். ஆனால் காஷ்மீர் பிரச்சினைக்கு இன்றையதினம் வரையிலே தீர்வு காண முடியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியா ஒரு பெரிய நாடு. எழுபது கோடி மக்கள் அடங்கிய நாடு என்பது உண்மை. சோவியத் நாடு 13 முறைகள் வீட்டோ பவரைப் பயன்படுத்தியது, அதனுடைய ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியது என்று சொன்னால், 12 சந்தர்ப்பங்களில் காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவிற்கு எதிர்ப்பாக கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு பயன்படுத்தப்பட்டது என்று கூறிக்கொள்கிறேன். இந்தியாவிற்கு எதிர்ப்பாக ஒரு தீர்மானம் வந்துவிடக்கூடாது என்பதற்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறிக்கொள்கிறேன். ஏகாதிபத்திய வல்லரசுகள் நிறைந்த ஐக்கிய நாடுகள் சபையில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவுவதாக அவர்களும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே குறிப்பிட்ட அந்தக் காஷ்மீர் பிரச்சினைக்கு 35 ஆண்டுகளாகத் தீர்வு காண முடியவில்லை. அதுபோலவே பல்வேறு பிரச்சினைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை மூலமாகத் தீர்வு காண முடியவில்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். அதுபோலவே பாலஸ்தினப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள முடியும். அங்கே இருக்கின்ற யூதர்களுக்கு

ஒரு தனி நாடு அங்கே ஏற்படுத்திக்கொண்டிருப்பது உண்மை. அந்த மண்ணுக்குரிய முஸ்லீம் மக்களை வெளியிலே பலாத்காரமாக அனுப்பிவிட்டு, இன்றையதினம் அகதிகளாக நாடற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற பாலஸ்தின மக்கள் பிரச்சினை என்பது 1948-லே இருந்து இன்றுவரையில் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. பொருளாதார 'சாங்க்ஷன்' செய்யலாம் என்று பல பேர்கள் பேசுகிறார்கள். ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா இனவெறி. பெரும்பான்மையாக உள்ள கறுப்பர்கள், அடிமைகளாக நடத்தப்பட்டு, இரண்டாம் தர மக்களாக நடத்தப்பட்டு, வெள்ளைக்காரர்கள் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலே எல்லா அரசுகளும் அதற்குக் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. பல நாடுகள் பொருளாதார சாங்க்ஷன் (எகனாமிக் சாங்க்ஷன்) தென் ஆப்பிரிக்காவுக்குச் செய்தார்கள். ஆனால் இன்றும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை என்றால், இந்தப் பிரச்சினையை நாம் அங்கே கொண்டு சென்றால், அது விளம்பரப் பிரச்சாரமாகத்தான் அமையுமே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்று சொல்கிறேன். உண்மையாகவே பிரச்சினை தீர வேண்டுமென்று சொன்னால், உண்மையாகவே அந்தப் பிரச்சினை தீரவேண்டுமென்ற அக்கறை இருக்குமானால், இரண்டு நாட்டுச் சொந்தக்காரர்களும் தாங்களே தீர்த்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். வழக்கு மன்றத்திற்குப் போனால், முனிசிபல் கோர்ட், ஹைக்கோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று நாட்கள் போகும், சொத்தும் போய்விடும், ஆனால் விரோதம்தான் மிஞ்சி நிற்கும் என்பதைத் தவிர வேறல்ல. இதை ஐ.நா.-விற்கு எடுத்துச் செல்கின்ற பிரச்சினையாக இருந்தால், பிரச்சினைதான் மிஞ்சுமே தவிர, தீர்வு காண முடியாது. அதைத் தான் நாம் அனுபவபூர்வமாகப் பார்க்கிறோம். எனக்குத் தெரிந்தவரையில், சொல்கிறேன். ஆகவேதான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக ஆக்கக்கூடாது என்று இருப்பது மட்டுமல்ல, 101 கூட்டு சேராத நாடுகளிலே ஒன்றாக இருக்கின்ற நாம், அந்த நாடுகளிலே ஒன்றாக இருக்கக்கூடிய ஸ்ரீலங்காவோடு இருக்கின்ற நல்ல உறவைப் பயன்படுத்திக்கொண்டு இந்த மக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டவராக இருப்பார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதை சில பேர்கள் தவறாக நினைக்கிறார்கள். ஏதோ கோபாவேசத்தோடு ஆத்திரத்தோடு பேசாமல் மிதவாதி தலைவர்போல பேசு





கிறார்கள். கண்டிக்கவில்லை என்று சொல்கின்றார்கள். அப்படி திருமதி இந்திரா காந்தி அம்மையார் கண்டிக்கவில்லை என்று சொன்னால், தமிழக அரசியல் கட்சிகள் எல்லாம் நடத்திய வேலை நிறுத்தத்திலே கலந்துகொண்டிருக்க மாட்டார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருமுறைக்கு பல முறைகள் கண்டித்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, எப்போதும் இல்லாத அளவுக்கு நாடாளுமன்றத்திலே பல நேரங்களிலே அதுபற்றிப் பேசப் பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இது உள்நாட்டு விவகாரம், உள்நாட்டு விவகாரம் என்று சாமர்த்தியமாகச் சொல்லப்பட்டதே தவிர, ஒரு காலகட்டத்திலே பிரதமர் அவர்கள் உள்நாட்டு விவகாரம் என்று இருந்தாலும், நாம் இதை கைகட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். பஞ்சசீலக் கொள்கையை நாம் உலகத்திற்கு 1947-லே அறிவித்து ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இரண்டு நாடுகளுக்கிடையிலே உள்ள பிரச்சினைகளை நாம் ஒருவருக்கொருவர் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர பலாத்கார முறையிலே தீர்த்துக்கொள்ளக் கூடாது என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக்கொண்டுதான் அதை உலகத்திற்கும் போதித்திருக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவேதான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பலாத்காரத்தின் மூலமாக அல்லாமல் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தமிழர்கள் பிரச்சினையில் தீர்வு காண முடியும். காரியங்களைச் சாதிக்கக்கூடும் என்று நம்புகிறார்கள். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொள்ளாமல் இல்லை. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கேயுள்ள விழுப்புரத்திலே நடைபெற்ற கலவரங்களைப் பொறுத்து தீர்வு காண்பதற்கு எடுக்கின்ற முயற்சிகளைப்போல, ஹைதராபாத் கலவரங்களில் தீர்வுகாண எடுக்கின்ற முயற்சிகளைப்போல, ஸ்ரீலங்காவில் நடைபெறுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதை நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் நம்மைப் போலவே சர்வ சுதந்திரம் பெற்ற தனி நாடு அது. நம்முடைய நாட்டிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கலாம். இப்போது பஞ்சாப் படுகொலை, அசாம் கலவரம், ஹைதராபாத் கலவரம் என்று இருக்கின்ற நிலைமைகளில், பிற நாட்டவர்கள் நுழைந்து இந்த நாட்டின் பிரச்சினையிலே தலையிடுவதற்கு வாய்ப்பாக நம்முடைய நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள் அமைந்துவிடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றையதினம்கூட 'இராணுவத்தை அனுப்புங்கள்' என்று கூறப்படுகிறது. ஏன் அப்படிச் சொல்கின்றார்கள்? ஸ்ரீலங்கா என்பது ஒரு சிறிய நாடு. பாரதம் என்பது ஒரு பெரிய நாடு. 1½ கோடி மக்கள் கொண்ட ஸ்ரீலங்காவின் மீது ஏன் 70 கோடி மக்கள் கொண்ட பாரத நாடு படை எடுக்கக்கூடாது என்று பேசுவது ஒரு

,[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 27

பிற்போக்கான வாதமாகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதுதான் நீதி என்றால் வல்லவனாக இருப்பவன், வலியோன் எளியோனை வாட்டுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியும் என்று சொன்னால், 40 லட்சம் மக்களைக் கொண்ட ஒரு தீவு சுதந்திரமாக தனி நாடாக எப்படி இருக்க முடியும்? வலிய நாடுகள் நியாயம் பெற முடியும் என்று சொன்னால், அமெரிக்காவிற்கும் சோவியத் நாட்டிற்கும் அடிமையாக இருக்க வேண்டுமே தவிர, வேறல்ல. ஆகவே இராணுவத்தை அனுப்பவேண்டுமென்று கூறுவதே அடிப்படை மனித தர்மத்திற்கு எதிரானது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இந்த உலகத்திற்கு ஒரு நல்ல கொள்கையை, ஒரு கூட்டு சேராக் கொள்கையை போதித்திருக்கிறோம். உலகம் அதைப் பாராட்டி வரவேற்றிருக்கிறது. அது இந்தியாவினுடைய பெருமையை உயர்த்தியிருக்கிறது. அந்தப் பெருமைக்கு ஊறு விளைவிக்கத்தான் இதுபோன்ற நிலைமைகள் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராணுவம் அனுப்புவது என்பதும், இந்தக் காலகட்டத்தில் சரியல்ல. அப்படி இராணுவத்தை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டிய காலகட்டத்தில், ராஜதந்திரமாக அதைச் செய்ய அவர்களால் முடியும் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, நான் சொல்ல விரும்புவது, பங்களாதேஷ்பற்றி இங்கே அடிக்கடி உதாரணம் கொடுக்கிறார்கள். அது பொருத்தம் இல்லாதது என்பதை நான் சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஏனென்றால், அன்றையதினம் அந்தக் கிழக்கு பாகிஸ்தானிலே இன்றையதினம் பங்களா தேஷ் என்று சொல்கின்ற அந்த நாட்டில் 100-க்கு 99 பேர்கள் அந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்பாகக் கிளர்ந்து எழுந்தார்கள். அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவனை, அந்த நாட்டினுடைய பிரதமராக வர வேண்டிய நிலைமையில் இருந்தவரை, கைது செய்ததால், ஒரு பெரிய புரட்சி அங்கே ஏற்பட்டது. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் நமக்கில்லை. ஆனால் அன்றையதினம் அந்த நாட்டிலே உள்ள மக்கள் இந்தியாவிற்கு வந்து 8 மாதங்கள் அகதிகளாக நமக்குத் துன்பத்தையும் தொல்லையும் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். நாம் அவர்களை சமுத்திரத்திலே தூக்கி எறிந்திருக்கலாம். ஆனால் மனிதாபிமானம் இன்றி அவர்களை விரட்டி பங்களா தேசத்திற்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் மனிதாபிமானம் காரணமாக ரூ. 500 கோடி வரிப் பணத்திலேயிருந்து நாம் செலவிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உலகத்திலேயுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்று



1983 அக்டோபர் 27] ,[திரு. எம். பி. சுப்பிரமணியம்]

அபிப்பிராயத்தை உருவாக்கினோம். அந்தக் கால கட்டத்திலே பங்களா தேச அகதிகள் விடுதலைக்குத் துணை புரிகிறோம் என்று அவர்கள் தவறாக எண்ணிக்கொண்டு மேற்குப் பாகிஸ்தான் படையெடுத்து வந்த பிறகு, அதையே நாம் சாக்காக வைத்துக்கொண்டு இந்தியா பங்களா தேசத்தில் நுழைந்ததே தவிர, நாம் இங்கிருந்து படை அனுப்ப முன்வரவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் காலத்திலேயே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்திருக்கிறோம். நாம் ஆதரிக்கக்கூடாது என்பது அல்ல.

இறுதியாக ஒன்றைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்திலே 2, 3 பகுதிகளிலே மத்திய மாநில அரசுகள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குப் பாராட்டுக்கள் தெரிவித்துவிட்டு, அதற்குப் பின்னாலே உ, ஊ, ஏ என்ற இந்த 3 பகுதிகளைப் பார்த்தால், அதிலே மத்திய அரசு தன்னுடைய கடமைகளைச் சரியாக செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மூற்பகல் 11-50)

பத்தி (ஈ) யிலே, "ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன் வந்த" என்று கூறிவிட்ட பிறகு, குறை இருக்க எந்தவித இடமும் இல்லை. ஆகவே அதற்கேற்ற முறையில் வாசகத்தைத் திருத்திவிட்டால், நன்றாக இருக்குமென்று கூற விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டிலே உள்ள அனைவருக்கும் பற்று இல்லாமல் இல்லை. பலர், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களுக்கு மொழிப் பற்று, இனப் பற்று இல்லாமல் இருக்கிறது என்பதுபோல தவறான பிரச்சாரம் செய்வதைத் தவறு என்று இந்த அவை மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய தேசியக் காங்கிரசின் மொழிப் பற்றும், இனப் பற்றும், தேசப் பற்றும் உண்மையானது, நியாயமானது என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிறோம். தமிழ் இனத்தைக் காப்பாற்ற வந்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் தோன்றுவதற்குப் பல வருடங்களுக்கு முன்பாக இதுபற்றிய கருத்துக்களை, காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர், தமிழகத்தைச் சேர்ந்த மாபெரும் கவிஞர், தேசிய கவிஞர் சொல்லியுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் இனப் பற்று காங்கிரஸ்காரர்களுக்கு இருக்க வேண்டுமென்பது அவசியம். அப்படி இல்லை என்று நினைத்தால் அது தவறு. பாரத தேசம் என்பது பல மொழிகளையும், பல இனங்களையும் கொண்ட நாடு. இந்த நாடு ஒன்றாக வாழ முடியும் என்றால்;

,[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 27

ுத் நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட இனங்கள் ஒன்றாக வாழ முடியும்
ல், ஸ்ரீலங்காவில் தமிழ் இனமும், சிங்கள இனமும் ஒன்றாக வாழ முடியும்.
வழி சொல்ல வேண்டும். அதற்கு ஆக்கபூர்வமான வழி சொல்ல
ம். இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வு காண முயல
மென்று தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

**ன்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு.
பாட்சா அவர்கள் பேசுவார்கள். அவர்களுடைய குரல் இந்த அவை
கட்டு நீண்ட நாளாகிறது.

**எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த
லே மேலவை உறுப்பினர் என்ற உரிமையோடு பேசுகின்ற வாய்ப்பு
தற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த
ண்ணியம் மிக்க அவை என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்
விரும்புகிறேன். இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில்
க் கருத்து வேறுபாடுமில்லை. இந்த அவையிலேதான் எங்களை
ப தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் உறுப்பினராக இருந்திருக்
. அவர் உறுப்பினராக இருந்து மிகுந்த கண்ணியத்தோடு இந்த
நடத்தியதைப் பார்த்திருக்கிறேன். அதைப் போலவே சென்னைப்
கழகத் துணை வேந்தராக 25 ஆண்டுகள் இருந்து, அதனை
புகழ் வாய்ந்த பல்கலைக் கழகமாக்கிய டாக்டர் ஏ. எல். முதலியார்
உறுப்பினராக இருந்து இங்கே பணியாற்றி இருக்கிறார்கள். இந்தக்
் மிக்க அவையிலே கருத்துக்கள் சொல்ல எனக்கு வாய்ப்பு கொடுத்த
ன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

டைய அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை
தாடு என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை வருத்தத்
ரிவித்துக்கொள்கிறேன். அவர்கள், பேச்சின் இறுதிக் கட்டத்தில்
சொன்னார்கள். சுருதி பேதம் கூடாது, சுர பேதம் கூடாது என்று
கள். எனக்கு இசை ஞானம் கிடையாது.

**மிகு மேலவைத் தலைவர் :** நான்கூடத் தவித்தேன். சுருதி பேதம்,
என்பதை அறிய.

**. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இரண்டும்
ன்று சொல்லவில்லை. 'சுருதி பேதம்' கூடாது என்று சொன்னார்



1983 அக்டோபர் 27]

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் தீர்மானத்தை பேதமில்லாமல் கொண்டு வந்திருந்தால், அதை ஏற்றுக் கொண்டிருப்பேன். அவர்கள் சொல்வதுபோல, இந்தத் தீர்மானத்தைக் கருத்து வேறுபாடு இல்லாத தீர்மானமாகக் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த அவையிலே உள்ள அரசியல் கட்சிகளைக் கலந்து ஆலோசித்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதற்கு வாய்ப்பு இருந்தது, நேரம் இருந்தது. எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய முறையிலே, 'கன்சென்சஸ்' என்று சொல்லுவார்களே, அந்த முறையிலே ஒரு ஒட்டுமொத்தமான தீர்மானத்தை உருவாக்கிக் கொண்டு வந்திருந்தால், அதை எல்லோரும் வரவேற்றிருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் பேசும்போது நமக்குள்ளே கருத்து வேறுபாடு இருப்பதாக ஒரு நிலைமையை உருவாக்கியதாகக் கருதுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டு மக்களுக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை என்றால், அது உணர்ச்சிபூர்வமான பிரச்சினையாக, உணர்வு பூர்வமான பிரச்சினையாகக் கருதப்படுவதை நாம் மறுத்துவிட முடியாது. இந்தத் தீர்மானம்பற்றி நான் சொல்ல விரும்பும் கருத்து, இதைக் காலம் கடந்து கொண்டு வருகிறோம் என்பதுதான். "காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்று வள்ளுவப் பெருந்தகை போதித்திருக்கிறார். அங்கே பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டபோதே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால், அங்கே கொல்லப்பட்டவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். எனவே இது காலங்கடந்து கொண்டு வரப்பட்ட தீர்மானம். அது மாத்திரமல்ல. இந்தத் தீர்மானத்திலே பாராட்டுக்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. நான், பாராட்டப்பட வேண்டாம் என்று சொல்லவில்லை. This should not be converted into a mutual admiration society என்றுதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்ள வேண்டும். இந்தக் கடமையைச் செய்திருக்கிறோம். அங்கே தமிழன் சாகிறான். தமிழச்சி கற்பு இழக்கிறாள். குழந்தைகள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இரயிலில் போகும் பயணிகளைச் சுட்டுக் கொல்லுகிறார்கள். பஸ்களை தீ வைத்துக் கொளுத்தி, அவர்களை நெருப்பிலிட்டு சாகடிக்கிறார்கள். இந்த நேரத்தில் இவர்கள் செய்யும் காரியத்திற்குப் பாராட்டு தேவையா என்ற எண்ணத்தைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தலைவரவர்களே, அங்கே நடைபெற்ற சம்பவங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே பத்திரிகைகளில் விளக்கமாக வந்திருக்கின்றன. அங்கே நடைபெற்ற கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. அந்தக் கொடுமைகள் உலக சரித்திரத்தில் இல்லாத கொடுமைகளாக நடந்திருக்கின்றன. நாம் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். செங்கிஸ்கான் கொடுங்கோலன், செங்கிஸ்கான் கொடுமையாளன் என்று படித்திருக்கிறோம். அதைவிடக் கொடுமையான நிலைமைகளை இன்றைக்கு ஸ்ரீலங்காவில் பார்த்திருக்கிறோம். ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது :

"For hundreds of years, the name of Chenghis Khan has echoed through history as the by-word for cruelty and butchery. There is overwhelming evidence of murder, of senseless slaughter of children, of rape, of prostitution organised by senior officers, of wholesale maddened crusade and blood-thirsty determined massacre.".

திட்டமிடப்பட்ட மிகக் கொடுமையான கொலை நடைபெற்றிருக்கிறது.

"Jayawardene and his gang of uniformed cut-throats will be remembered for trying to destroy millions of Tamils of Sri Lanka".

சரித்திரத்திலே இன்றைக்கு நடைபெறாத கொடுமைகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இதைப் பார்த்துக்கொண்டு, கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய நேரத்தில் தெரிவிக்காமல்; எங்கே பேச வேண்டுமோ அங்கே பேசாமல், சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாமல் பின் தங்கிவிட்டோம் என்றுதான் கருதுகிறேன். ஸ்ரீலங்காவில் நடைபெற்றிருப்பது சாதாரண சம்பவம் அல்ல. இனப் படுகொலை. இனப் படுகொலை இன்றைக்கு சட்டபூர்வமாக்கப்படும் சூழ்நிலையை அங்கே பார்க்கிறோம். ஆங்கிலத்தில் genocide என்று சொல்லுவார்கள்.

The character of genocide was first defined by Raphael in his book 'Massacre of Europe in 1914'. Genocide, according to him, is a methodical extermination of people and populations. At the Madrid International Conference of 1933, it was moved that extermination of racial, religious or social groups be declared a crime against International Law. The U.N. General Assembly also unanimously declared in Resolution No. 96, sub-clause (1), that genocide is a crime against the Law of Nations.





அகில உலகச் சட்டத்திற்குப் புறம்பான இனப் படுகொலையை அங்கே நாம் சந்தித்தோம். இந்தப் படுகொலை நடைபெறுவது ஒரு தொடர்கதையாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ் நாட்டு மக்களிடத்தில், 1½ கோடி மக்களின் கையெழுத்து வாங்கி ஐ. நா. சபைக்கு அனுப்பியிருக்கிறோம். ஐ. நா. சபைக்கு அனுப்பிய அந்த மெமோராண்டத்தில் சில முக்கியமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.. அவைகளையெல்லாம் படிக்க நேரமில்லாததால், சுருக்கமாக இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

ஆங்கிலத்தில் அந்த மெமோராண்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் தமிழாக்கத்தின் சில பகுதிகளை மட்டும், மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அனுப்புநர் : " மு. கருணாநிதி, தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கை தமிழர் பாதுகாப்புக் குழுத் தலைவர்.

பெறுநர் செக்ரட்டரி ஜெனரல், ஐ.நா. சபை, நியூயார்க், அமெரிக்கா. தங்கள் வாயிலாக உலக சமுதாயத்தின் முன் கொண்டு வருவது. இலங்கைத் தீவிலிருந்து இந்தியா குறுகிய கடலால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டிலுள்ள தமிழகத்திலிருந்து 23 கிலோ மீட்டர் தொலைவில் இலங்கைத் தீவு இருக்கிறது. தமிழகத்தில் வாழ்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், இலங்கைத் தமிழர் பாதுகாப்புக் குழுவின் தலைவருமான நானும், கோடிக்கணக்கான குடிமக்களும் 105 வால்யூம் மகஜரில் கையொப்பமிட்டு தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். இந்தக் கால கட்டத்திலும் இதற்கு முன்பும் ஈழத் தமிழர்களை நாடற்றவர்களாகவும், குடியுரிமை அற்றவர்களாகவும் ஆக்கி, இந்திய வம்சாவழி தமிழர்களை பூண்டோடோ அல்லது பகுதியாகவோ அழிக்க இராணுவம் மூலமாகவும், போலீஸ் மூலமாகவும், சிங்கள இன வெறி கும்பலை ஆட்சிப் பீடத்திலிருக்கிற இலங்கை அரசே திரட்டி செய்திருக்கும் செயல் இனப் படுகொலைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவை மீறிய செயலாகும் என்று எங்களுக்குக் கிடைத்த நம்பிக்கையான தகவல்களின் அடிப்படையில் நாங்கள் குற்றஞ் சாட்டுகிறோம். இலங்கை அரசு இனப் படுகொலை நடத்தியிருக்கிறது. இனப் படுகொலைகளை நடத்த இலங்கை அரசு சதித் திட்டம் தீட்டியிருக்கிறது. இனப் படுகொலைகளை நேரடியாக நடத்த தூண்டி விட்டிருக்கிறது. இனப் படுகொலைக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. இனப் படுகொலைக்கு ஒத்துழைத்திருக்

கிறது”. இப்படி பல்வேறு விஷயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தத் தகவல்களை சரித்திரபூர்வமாக பார்த்தோமேயானால், 1956, 1958, 1961, 1966, 1974 மற்றும் 1977 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் பயங்கர மான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. 1979-ல், 1981-ல்கூட பயங்கரமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் 1983 ஆம் ஆண்டு மட்டும் தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல், மிகக் கொடுமையான, மிகப் பயங்கரமான செயல்கள் நடைபெற்றதை நாம் பார்த்தோம். இவைகளையெல்லாம் கண்டிக்க வேண்டுமென்று நாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். ஈழம் தனி நாடாக வாழ முடியுமா என்றும் சொன்னார்கள். எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியமும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, நாங்கள் அன்றைக்குப் பிரிவினை கேட்டவர்கள். சில காரணங்களால் அதை கைவிட்டு விட்டோம். ஆனால் இன்றைக்கு நாம் பத்திரிகையில் படிக்கிறோம். மிகக் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட கிரானடா (Grenada) போன்ற சிறு நாடுகூட சுதந்திர நாடாக வாழ முடிகிறது. அதற்கு ஒரு சிறு பிரச்சினை என்றால், உலக நாடுகள் கொந்தளிக்கின்றன. ஆனால் ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரையில், தமிழன் என்ற காரணத்தாலோ என்னவோ அதைக் கேட்க மறுக்கிறார்கள், கவனிக்க மறுக்கிறார்கள். அந்தப் பிரச்சினையில் இன்றைக்குக் கவனம் செலுத்த முன்வரவில்லை. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையினுடைய பொலிடிக்கல் அபெயர்ஸ் கமிட்டியில் பேசிய பேச்சை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். அந்தப் பேச்சுக்களை நான் படித்துப் பார்த்தேன். அந்தப் பேச்சினுடைய கருத்து ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திகையில் வந்திருக்கிறது.

‘As has been stated categorically by our Prime Minister, India does not intervene in the internal affairs of Sri Lanka or, indeed, any other country. India does not support any separatist movement; nor does it support or condone resort to violence. We confine ourselves only to the extent of flow of refugees from Sri Lanka. We neither criticize the policies of Sri Lanka nor criticize disputes against the Government of Sri Lanka. In fact, even in my introduction, I have made it clear that we do not propose and we do not intend to interfere in the internal affairs of Sri Lanka.’

என்று கருத்துரை வழங்கியிருக்கிறார்கள். “ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று இருக்கிறோம் என்று திருமதி இந்திரா காந்தி அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்திக்





கூறுகிறேன்” என்று சொல்லியிருக்கிறார்கள். “தனி நாடு பிரச்சினையை ஆதரிக்க மாட்டோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அகதிகளாக வருபவர்களைப் பற்றிய பிரச்சினையைப் பற்றித்தான் நாங்கள் கேட்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் அகதிகளாக அதிகம் பேர் இந்தியாவிற்கு வர முடியவில்லை? தமிழ் நாட்டுக்கும் ஸ்ரீலங்காவிற்கும் மத்தியில் கடல் இருக்கிற காரணத்தாலே, அங்கிருந்து ஆபத்துக்கு உட்பட்டு வர முடியவில்லை என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. வங்காள தேசத்திலிருந்து வந்தார்கள் என்று சொன்னால் வங்காள தேசத்திற்கும் இந்தியாவுக்கும் நடுவிலே நிலம் இருந்தது. நிலம் இருந்த காரணத்தாலே அவர்கள் நடந்து வர முடிந்தது. இன்றைக்கு பல இலட்சம் பேர் ஆபத்தான சூழ்நிலையிலே வர முடியாத நிலைமையைப் பார்க்கிறோம். எனவே இந்த அகதிகளுடைய பிரச்சினையை மட்டும் தான் கேட்கிறோம் என்று சொல்லியிருப்பது சரியல்ல என்ற குற்றச் சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதே திரு. இராமச்சந்திரன் அவர்கள் உரிமை வேட்கை என்ற பத்திரிகையை நடத்தி வந்தது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். 2—12—1974ல் ‘உரிமை வேட்கை’ என்ற அந்தப் பத்திரிகையிலே ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. “இஸ்ரேல் பாலஸ்தீனிய பகுதிகளை கையகப்படுத்தி கொண்டு விட்டது என்று கதறும் பாலஸ்தீனியர்கள் கொரில்லாப் படைகளை அனுப்பி அவர்களைத் தாக்கி விடுகிறார்கள். பாலஸ்தீனியர்களின் இத்தகைய கொரில்லா படைகளில் மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய கவனத்திற்குரிய கொரில்லாப் படை பாலஸ்தீனிய விடுதலைக் கழகம் ஆகும். பி.எல்.ஓ. என அழைக்கப்படும் அந்த கொரில்லா அமைப்பு 1964 ஆம் ஆண்டு அகமது சுகேயர் என்பவரால் தொடங்கப்பட்டது. இதில் 13 ஆயிரம் பேர் தான் உள்ளனர்”.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் பத்திரிகையிலிருந்து கருத்துக்களை எடுத்துப் படிக்கிறார்கள். மாண்புமிகு தலைவரிடம் அது காட்டப்பட்டதா? அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது தான் மரபு. அவர் புதிதாகையால் அவருக்குத் தெரியவில்லை. அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் பத்திரிகையிலிருந்து ஏதாவது சொல்வதாக இருந்தால், என்னிடம் முன்னமேயே காட்ட வேண்டும் என்பது தான் மரபு. உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினருக்கு இது கன்னிப் பேச்சு.

திரு. ஜி. சுவாமிநாதன் : கன்னிப் பேச்சு என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 7 ஆண்டுகள் மேலவையில் பேசியிருக்கிறார்கள். ஆகவே இதை நான் குறிப்பிடுவதிலே தவறு ஒன்றும் இல்லையென்று கருதுகின்றேன்.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சு 'கன்னித் தமிழ்'. (சிரிப்பு).

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சில உண்மைகளைச் சொல்வதற்காக மேற்கோளாகத்தான் அவற்றை நான் சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதில் தவறு ஒன்றுமில்லை. உறுப்பினர் பேசலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதை ஒரு பெரிய தவறு என்று நான் கருதவில்லை. தவறாக தலைவர் அவர்கள் எடுத்துக் கொள்வதாக இருந்தால், நான் பேசவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இல்லை இல்லை, தவறே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு அவசரப்பட வேண்டாம். விதியிலே அப்படி காட்ட வேண்டுமென்றிருக்கிறது. காட்டாவிட்டாலும் கூட தவறு இல்லையென்று சொல்லி, நான் பேசுவதற்கு அனுமதித்து விட்டேன். அப்புறம் அதில் என்ன பிரச்சினை ?

திரு. ம. சங்கரலிங்கம் : கருத்து மாறுபாடான ஒரு விவாதத்திற்குரிய பத்திரிகையைப் படிக்கிறபோது தான், தலைவரிடம் அனுமதி கேட்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதில்கூட தீர்ப்பு அளிக்க வேண்டியது தலைவர்தான். அப்படிக் காட்டியிருந்தால் கூட, அதில் மாறுபாடு ஒன்றும் இல்லை. ஒருவேளை அதில் ஆட்சேபணை இருக்கிறது என்று நான் நினைத்தால், தடுத்திருப்பேன். உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டு மூன்று மேற்கோள்களை நான் வைத்திருக்கிறேன். தலைவரவர்களின் அனுமதியோடு நான் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னைக்கு நான் கெடுபிடி பண்ணப் போவதில்லை. (சிரிப்பு).





திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எப்போதும் தலைவரவர்கள் கெடுபிடி செய்யக்கூடாது என்பது தான் என்னுடைய விருப்பம் (பலத்த சிரிப்பு). நாளைக்கும் கெடுபிடி பண்ணக் கூடாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இருக்கின்ற விதிகளை நான் கடைப்பிடிக்க வேண்டும் அல்லவா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: நான் குறுக்கிடக் கூடாது என்பதால் தான் பேசாமல் இருந்தேன். ஆனால் குறுக்கிட வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியாவினுடைய குழுவிலே அங்கம் வகிக்கிற நம்முடைய மாநிலத்தின் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சுக்களையொட்டி கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர் வெளியிடுகிறபோது, முன்னாலே எப்போதோ நடத்தப்பட்டு வந்த பத்திரிகையில் அவர்கள் எழுதிய கருத்துக்களைச் சான்றாக வைக்கிறார்கள். இது ஒரு முக்கியமான சான்றாக அவையிலே வைக்கப்பட வேண்டும். அவர்கள் கருத்துக்களைச் சொல்லி முடித்ததற்குப் பிறகாவது, மாண்புமிகு தலைவர் அவர்கள் அதை வாங்கி, அது எப்போது வந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய கடமை இருக்கிறது. அவர்கள் படிப்பது மாத்திரமே அவைக் குறிப்பிலே வரும். நாளை பத்திரிகையிலே அது வரும். நாளைக்கு அதிலே ரொம்பவும் அக்கறையுள்ள பத்திரிகைகள் இந்தப் பகுதியை மாத்திரம் எடுத்துப் போடுவார்கள். அப்படியே சபையின் நடவடிக்கையை மாற்றியும், திருத்தியும் பத்திரிகையில் வெளியிட அது வாய்ப்பாக அமைந்து விடும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஐ. நா. மன்றத்தில் பேசியிருப்பது இந்தியாவின் பிரதிநிதியாக, தமிழக அமைச்சராக. அது முன்னாள் அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் தனிப்பட்ட முறையில் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களுடன் இருந்தபோது, பிரிவினை கேட்டதாகச் சொன்னார்கள். அப்போது அவர்கள் பிரிவினை கேட்டதை இப்போது யாரும் எடுத்துக்காட்டி, பேசி வாதிக்க முடியாது. அதேபோல இப்போது அமைச்சர் திரு. இராமச்சந்திரன் இந்தியாவினுடைய பிரதிநிதியாகப் போயிருக்கிறார் இந்திய அரசாங்கத்தினுடைய கொள்கை எதுவோ அதை அப்படியே அங்கே அவர் பிரதிபலிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். ஆகவே தான் அந்தப் பத்திரிகையில் முன்பு வந்த செய்தியை இப்போது இங்கே குறிப்பிட்டது பொருத்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 அக்டோபர் 27

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச் சந்திரன் அவர்கள் இந்திய அரசாங்கத்தினுடைய கருத்தைத் தான் பிரதி பலித்தார் என்பதை நானும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனது கேள்வி எல்லாம் முக்கியமான கருத்தை அவர் பிரதிபலிக்கிறாரா என்பதுதான். அவர் தெரிவித்த கருத்து சரியான கருத்து அல்ல. இது போன்ற ஒரு கருத்தை அவர்கள் ஏற்கெனவே எழுதியிருக்கிறார்கள். சொந்தக் கருத்து என்று எடுத்துக் கொண்டாலும் சரி, இதுபோன்ற ஒரு கருத்து இருந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்காக, தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன்.

(பிற்பகல் 12-10)

அவையின் முனனவர் சொன்னதுபோல், நான் 21—12—1974 நாளிட்ட 'உரிமை வேட்கை' என்ற பத்திரிகையில் வந்த செய்தியைக் காட்ட வந்தேன். 21—12—1974 மற்றும் 30—12—1974 என்ற 2 நாள் செய்திகள் முன் இருக்கின்றன. அந்தச் செய்திகள், இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவை என்று . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது திரு. இராமச்சந்திரன் சம்பந்தப் பட்டதுதானே தவிர, ஐ.நா. மன்றத்தில் பேசிய பாரதப் பிரதிநிதியோடு சம்பந்தப்பட்டதல்ல. ஆகவே அதையே திரும்பத் திரும்ப படிக்கப் போகிறேன் என்று சொன்னால், அதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? ஏற்கெனவே படித்ததைப் பற்றிப் பிரச்சினை இல்லை. திரும்பவும் அதைப் படிப்பது முறையாகாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் இந்திய நாட்டுப் பிரதிநிதியாகப் பேசியதை அவர் சொன்னார். இதற்கு முன்பு பேசியதை இந்த அவையில் இந்த நேரத்தில் சொல்லக்கூடாது என்று சொல்வது மிக வருந்தத்திற்குரிய செய்தி. ஏனென்றால் இந்த ஸ்ரீலங்கா பிரச்சினையில் இதற்கு முன் ஒவ்வொருவரும் ஒரு கட்டத்திலே சொல்லியிருக்கிறோம். அப்படிச் சொல்வது அதற்கு வலுவூட்டுவதற்குப் பேசப்பட்டதே தவிர, அவரைக் குறை சொல்வதற்காக அல்ல. அது அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறதா இல்லையா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானும் அதைத்தான் சொல்கிறேன். "ஏற்கெனவே தாங்கள் பிரிவினை கேட்டோம். இப்போது அதை விட்டு விட்டோம்" என்று அவர்களே ஒத்துக்கொண்டார்கள். இப்போது அந்தப்



1983 அக்டோபர் 27] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

பிரிவினைப் பேச்சையே இப்போது யாராவது கேட்டால், மாண்புமிகு உறுப் பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் என்ன சொல்வார்? திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் இந்த அவைக்கு வரும்போது, அவரோடு பேசிக் கொள்ளலாம். ஐ. நா. மன்றத்தில் பேசியது, தமிழ் நாட்டுப் பிரதிநிதியாகக் கூட அல்ல, பாரதப் பிரதிநிதியாக. ஆகவே தயவுசெய்து இதற்குப் போய் நேரத்தைச் செலவாக்க வேண்டாம் என்பது என்னுடைய கருத்து.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது உள்நாட்டுப் பிரச்சினை. இதில் தலையிடக் கூடாது என்ற கருத்து பரவலாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரச்சினை இதுவரையில் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல என்பதை பல மேற் கோள்களோடு தெளிவாக்க முடியும். புகழ்பெற்ற நீதிபதி திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இறையாண்மை பெற்ற நாடு ஸ்ரீலங்கா. அதைப் போலவே ஒரு இறையாண்மை பெற்ற நாடு இன் னொரு நாட்டின் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பது கொள்கையாக இருந்தாலும்கூட, உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாது என்ற கொள்கை இருந்தாலும், ஒரு இன மக்கள் அங்கே படுகொலைக்கு ஆளாக்கப்படும்போது, இது பயன்படாது. தாக்குகிற நாடுகள், இறையாண்மை பெற்ற நாடு என்று காரணம் கூறி தப்பித்துக் கொள்ள முடியாது. எனவே ஒரு நாட்டுப் பகுதி மக்கள் இனப் படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறபோது, சர்வதேசச் சட்டத்திற்கு முரணாகக் காரணம் சொல்லும்போது, நாம் உள்நாட்டு விவகாரம் என்று சொல்லி அதைத் தள்ளிவிட முடியாது. எங்களுக்குள்ள குறையெல்லாம் ஐ. நா. சபையில் பேசிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே என்பதுதான். அதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐ. நா. சபையில் பேசிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தென்னாப்பிரிக்கா பற்றிப் பேசியிருக்கிறார்கள். கம்பூச்சியா பற்றிப் பேசி யிருக்கிறார்கள். பாலஸ்தீன நாடு பற்றிப் பேசியிருக்கிறார்கள். நமீபியா என்ற சிறு நாட்டைப் பற்றிக்கூட பேசியிருக்கிறார்கள். உலக நாடுகள் பற்றி யெல்லாம் பேசிய பிரதமர், மூவாயிரம் பேர்களுக்கு மேல் உயிர் இழந்திருக்கிற தமிழர்கள் பற்றி, பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள் இழப்புக் க்ளான தமிழர்களைப் பற்றி, சிறைச்சாலைகளில் குட்டிமணி, ஜெகன் போன்ற விடுதலை வீரர்களை, 53 பேர்களை பட்டப்பகலில் சுட்டுக்கொன்ற நிலைமை களைச் சுட்டிக்காட்டி ஒரு கண்டனத்தைத் தெரிவித்திருக்க மாட்டார்களா என்றுதான் நான் எதிர்பார்த்தேன். ஐ. நா. சபைக்குப் போகிற வழியில் கூட, சைப்ரஸ் நாட்டில் பத்திரிகையாளர்களிடையே பேசும்போது. இங்குப்

பிரச்சினை பற்றிப் பேசினார்கள். ஆனால் ஐ. நா. சபையில் அது பற்றிப் பேசவில்லை என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். நாம் எதிர்பார்த்தது ஒரு முடிவாக ஏற்படவில்லை என்பதை நான் பார்க்கிறேன். நம்மைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையில் நாங்கள் ஏதோ 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதப் பிரச்சினைக்குப் பிறகுதான் தலையிடுகிறோம் என்று அர்த்தம் அல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் 1983-84 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை மாண்புமிகு அவை முன்னவர் அளித்தபின் தொடரும்.

## 6. 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் சார்பில், 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை அவ்வையின் முன் அளிக்கிறேன் :—

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1983-84 ஆம் ஆண்டுக்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்தத் துணை மதிப்பீடுகள் ரூ. 158.75 கோடி நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 136.49 கோடி வருவாய்க் கணக்கின்கீழ் வருகிறது; ரூபாய் 22.26 கோடி மூலதனச் செலவு, கடன் கணக்குகளின்கீழ் வருகின்றது. இந்த மதிப்பீடுகளுடன் வைக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கை, இச்செலவினங்களுக்கான காரணங்களை விளக்குகிறது. நான் இதில் முக்கியமான சில செலவினங்களை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

2. கடந்த வருடத்தில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததாலும், நடப்பு ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை காலந்தாழ்த்திப் பெய்ததாலும் ஏற்பட்ட மிகக் கடும் வறட்சி நிலையால் இம்மாநிலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க இம்மாநில



அரசு பெருமளவில் நிவாரண நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டி வந்தது. வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மைய அரசு ரூபாய் 65.36 கோடி வரை செலவினங்களை அனுமதித்திருக்க, மாநில அரசு ரூ. 88.76 கோடி வரையிலான செலவினங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மைய அரசு ஈடுசெய்யாத சில செலவினங்களும் இந்த அனுமதியில் அடங்கும்.

3. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், சிறு பாசன, பெரும்பாசன ஏரிப் பகுதிகளில் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 3.00 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் பணிகள் வகையில், கசிவு நீர்க் குட்டைகள் வெட்டுதல், பாசன ஏரிகளை ஆழப்படுத்துதல், செப்பனிடுதல் பணிகளுக்காக ரூ. 10.69 கோடியும், 50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்துதல், செப்பனிடுதல் பணிகளுக்காக ரூபாய் 6.27 கோடியும் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகளில் இச்செலவினத் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும் வேளாண்மைப் பொறியியல் துறை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகளை வெட்டுவதற்காக ரூ. 144 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் இத்தொகைக்காகவும் வகை செய்யப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப் பகுதிகளில், குடிநீர் வழங்குவதற்காக, துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு நடப்பாண்டில் ரூ. 10.16 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்ட தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. குடிநீர், தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் வகையில் 21,538 துளைக்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், மிக இடர்ப்பாடான ஒரு கால கட்டத்தைக் கடக்க வேண்டியிருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வறட்சிக் கால அளவில் சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்ட ரூபாய் 4.80 கோடி நிதியொதுக்கமும் இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகிறது. சென்னை மாநகரில் செயற்கை மழை பெய்விப்பதற்காக ரூபாய் 27 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இச்செலவினத்தையும் இத்துணை மதிப்பீடுகள் உள்ளடக்கியுள்ளன.

4. தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் கிணறுகள் இறக்குவதற்காக அனுமதி வழங்கப்பட்ட ரூ. 1.50 கோடி செலவினமும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக

கட்டமாக அளிக்கப்பட்ட ரூ. 3.00 கோடி [illegible] இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகின்றன. இந்த இரண்டு [illegible] செலவை மத்திய அரசு ஈடு செய்யாது.

5. கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. நீரைப் பெறுவதன் மூலம் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் [illegible] வைக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த வகையில் இரண்டு மாநிலங்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இத்திட்டத்திற்காக முதல் தவணைத் தொகையாக ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 30 கோடி அளிக்கப்பட்டது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து நமது மாநிலத்திற்குள் நிறைவேற்றப்படவிருக்கும் பணிகளின் நிமித்தம் அனுமதி வழங்கப்பட்டுள்ள ரூ. 2.10 கோடியும் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனை வணிகத்தை 1983 ஆம் ஆண்டு ஜூன் [illegible] முதல் நாளிலிருந்து மாநில அரசே மேற்கொண்டது. அரசு [illegible] கழகம், இந்த மொத்த விற்பனை வணிகத்தை மேற்கொள்கிறவரையில், இதனை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையே நடத்தி வந்தது. சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவற்றை இந்த இடைக் காலத்தில் வாங்குவதற்காக ரூ. 24 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகைக்கும் இந்தத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

7. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதியொதுக்கம் செய்யப்பட இயலாத சில முக்கியமான செலவினங்களை மட்டும் தான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்குமாறும் அவற்றிற்குத் தேவையான நிதியொதுக்கத்தை வழங்குமாறும் இம்மேலவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

## 7. 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்த அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் சார்பாக, 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.



மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவான சில இனங்களுக்கு மானிய அறிக்கைகளை இம்மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதியொதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து சில மானியக் கோரிக்கைகள் மீது அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகி இருப்பதை பொதுக் கணக்கு ஆய்வுக் குழு (1980-81, 1981-82, 1982-83) சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவிற்கான காரணங்களைப் பரிசீலித்தப் பின்னர் ஒவ்வொரு மானியத்திலும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையான செலவிற்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு பொதுக் கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வண்ணமே, 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்குரிய மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கைகள் இப்பொழுது இம்மன்றத்தில் வைக்கப்படுகின்றன. மொத்தத்தில் மிகைச் செலவு முறையே 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 6.16 கோடியும், 1976-77 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.54 கோடியும், 1977-78 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.40 கோடியுமாகும். இம் மூன்றாண்டுகளில் பெரும்பாலும் "மருத்துவம்", "பாசனம்", "ஓய்வூதியங்களும், ஓய்வுக்கால பயன்களும்" என்ற தலைப்புகளின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. ஒவ்வோர் இனத்திலும் மிகைச் செலவு ஏற்பட்டதற்கான காரணங்கள் அந்தந்த மானியக் கோரிக்கைகளின் இணைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

3. மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து வாங்கிய மருந்துகளின் விலை உயர்வாலும், கண்ணாடிப் பொருள்கள், எக்ஸ்-கதிர் பிலிம்கள், பிலிம் பொருத்திகள், [illegible] போன்ற பொருட்களின் விலை உயர்வாலும், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததனாலும் "மருத்துவம்" மானியத்தில் இன்றியமையாத வகையில் மிகைச் செலவு ஏற்பட்டது.

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 27

4. 1972 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக ஏற்பட்ட செலவைப் பாசனத் துறையின் அந்தந்தப் பணித் தளவாடங்களின் விலை வகையிலும், வட்டி வகையிலும், கருவிகள், செலவினங்களை பாசனத் தலைப்புகளின் கீழ் சரிக்கட்டியதாலும் "பாசன" மானியத்தின் கீழ் முக்கியமாக மிகைச் செலவு ஏற்பட்டது.

5. ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகை அதிகரித்ததாலும், அதிக ஓய் ஊதியம் செலுத்தப்பட்டதாலும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உரிய விகிதத்தில் அகவிலைப்படி வழங்கப்பட்டதாலும் "ஓய்வூதியம், ஓய்வுக்கால பயன்கள்" என்ற மானியத்தில் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை அறிக்கைகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டு கிறேன்.

**ஸ்ரீலங்காவாழ் தமிழர்களின் பிரச்சினைபற்றிய தீர்மானம்—தொடர்ச்சி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தற்போது ஸ்ரீலங்கா தமிழர்கள் இன்னல் குறித்த அரசின் தீர்மானத்தின் மீது தொடர்ந்து மாண்புமிகு உறுப் பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசுவார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் இங்கே தெரிவித்து என்னு டைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். முன்பு பேசியபோது, ஐ.நா. சபையில் பேசிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினையைப்பற்றி ஒரு கருத்தையும் அங்கே தெரிவிக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஐ.நா. சபையில் பேசிய அம்மையார் அவர்கள் தென்னாப்பிரிக்கா, நமீபியா, பாலஸ்தீன், சென்ட்ரல் அமெரிக்கா, ஆப்கானிஸ் தான், ஈரான்—ஈராக், கம்பூச்சியா பற்றியெல்லாம் பேசினார்கள். ஆனால் ஸ்ரீலங்காவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்பதைச் சொல்ல விரும்பு கிறேன்.



1983 அக்டோபர் 27] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இந்தப் பிரச்சினையைப்பற்றி நாம் விவாதிக்கும்போது, பங்களா தேஷ்-ஐ மேற்கோளாகக் காட்டிப் பேசுவதாக இங்கே பேசப்பட்டது. பங்களா தேஷில் ஏற்பட்ட நிலையைக் கண்டித்து நமது நாடாளுமன்றத்தில் 31—3—1971 அன்று ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். பங்களா தேஷில் ஒரு கொடுமையான சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக் கான மக்கள் அங்கே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி அதற்கெல்லாம் கண்டனம் தெரிவிக்கும் வகையில் கண்டனத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஸ்ரீலங்கா பிரச்சினையில் என்ன நிலைமை?

இன்றையதினம் ஸ்ரீலங்காவைச் சார்ந்த விடுதலை உணர்ச்சி பெற்றவர்கள் தனி நாடு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் தனி நாடு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து நாம் சரித்திரபூர்வ மாக ஆராய்ந்து பார்ப்போமானால், அவர்கள் முதலிலேயே தனி நாடு கோரிக் கையை எழுப்பவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன தைப்போல், 35 ஆண்டுகளாக நடைபெற்ற கொடுமைகளையெல்லாம் தாங்கித் தாங்கி, இனி தாங்க முடியாது, தனித்து வாழ்ந்தால்தான் தன்மானத்தோடு வாழ முடியும் என்ற எண்ணத்தோடுதான் அவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப் பட்டு, இன்றையதினம் தனி நாடு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இல்லஸ்டிரேட்டட் வீக்லியில் டேவிட் செல்போர்ன் என்ற ஆசிரியர் ஒருவர் எழுதியிருக்கிறார். "இன்று ஸ்ரீலங்காவில் வாழ்கிற தமிழர்கள் தனி நாடு கோரிக்கைக்குத்தான் ஆதரவு கோருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய ஆதரவும் அதிகமாகியிருக்கிறது. மிதவாதிகளுடைய செல்வாக்கு குறைந்தி ருக்கிறது" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே தனி நாடு என்பதுதான் இப்போதைக்கு அவர்களுக்கு இருக்கிற பரிகாரம். வேறு வழிகளிலே அவர் களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நான் நம்பவில்லை. ஆனால் ஐ.நா. படையை அங்கே அனுப்ப வேண்டும் என்று சொன்னபோது, அவர் இங்கேயும் வெளியேயும் ஒரு தவறான கண்ணோட்டத்தோடு பேசிய தைப் பார்த்தோம். ஆனால் சர்வ கட்சிகளின் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்குக் கொடுத்த மனுவில்கூட ஐ.நா. படையை அனுப்பி இதில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் வற்புறுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம்கூட நாம் ஐ.நா. சபையின் மூலமாக உலகத்தினுடைய கவனத்தைக் கவர்ந்து

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1983 அக்டோபர் 27

இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல பரிகாரம் காண வேண்டும் என்றுதான்
விரும்புகிறோம். எனவே உலக நாடுகள் சபை என்று சொன்னாலே யாரும்
அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கிரனடா என்ற சிறிய நாட்டில் நடைபெற்ற சம்பவத்திற்குக்கூட கண்டனம்
தெரிவிப்பதற்காக உலக நாடுகளின் அவையினை அவசரமாகக் கூட்டியிருக்கி
றார்கள். ஆனால் ஸ்ரீலங்காவைப் பற்றியவரை அப்படி எதுவும் செய்யப்பட
வில்லையே என்றுதான் வேதனையோடு இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.
பத்திரிகைகளைப் படித்தபோது, நான் துருவித் துருவிப் பார்த்தேன்.
ஸ்ரீலங்காவில் உயிரிழந்தவர்கள், உடமைகளை இழந்தவர்கள் தமிழர்களைத்
தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தால், வேறு யாருமில்லை.
தமிழர்களுக்குத்தான் அப்படிப்பட்ட பாதிப்பு அங்கே ஏற்பட்டிருக்கிறது.
அது ஸ்ரீலங்கா தமிழர்களானாலும் சரி, இந்திய வம்சாவளித் தமிழர்களா
னாலும் சரி, இங்கேயிருந்து வியாபாரம் செய்யச் சென்ற தமிழர்களானாலும்
சரி, தமிழர்கள்தான் சிங்கள வெறியர்களாலே தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
இதுதான் இனப் படுகொலை என்பது. ஒரு வழியாக தமிழ் இனத்தை
முற்றிலுமாக அழித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு, அதிகாரத்தின் துணை
யோடு, இராணுவத்தின் துணையோடு, இந்தக் காரியங்களைச் செய்திருக்கி
றார்கள். இந்தத் தீர்மானத்திலே சொல்லியிருக்கிறார்கள். இதற்கு எப்படி
யாவது ஒரு முடிவு கண்டாக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்தப்
பிரச்சினை எப்போதெல்லாம் தலை தூக்கியதோ அப்போதெல்லாம் கண்டனத்
தைத் தெரிவித்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்
குழுவில்கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தனி ஈழம்தான்
இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கி
றோம். எனவே, எங்களைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினைக்கு
முடிவு ஏற்பட வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். கண்டனத்தைத் தெரி
விக்க வேண்டிய நேரத்தில், தெரிவிக்க வேண்டியவர்கள், தெரிவிக்க வேண்டிய
இடத்தில் தெரிவித்திருந்தால், இவ்வளவு உயிர்களை தமிழ்ப் பெருமக்கள்
இழந்திருக்க வேண்டியிருந்திருக்காது என்று நம்புகிறோம். எனவே
தற்போது இது காலம் கடந்த ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது. எனவே
இந்தத் தீர்மானத்தில் பாராட்டுக்களைப் பெறுவதற்காக ஏதும் இருப்பதாக்
நான் கருதவில்லை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தனி நாடு
—தனி ஈழ நாடுதான்—பரிகாரம் என்று தெரிவித்துக்கொண்டு



1983 அக்டோபர் 27] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

"The DMK is prepared to pay any price, bear any burden, meet any hardship, support any friend, oppose any foe to assure the survival and success of Tamil Eelam."

என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது என்று தெரிவித்துக்
கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் நேரம் அவையின் அனுமதி
யோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, "இலங்கைத் தமிழர்களுக்கு
எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு,
சூறையாடுதல் போன்ற கொடுஞ் செயல்களை அறிந்து இம்மேலவை மிக்க
அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறது" என்ற அரசின் தீர்மானம் மிகவும்
சிறந்த முறையில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைவிட சிறந்த
முறையில் ஒரு தீர்மானத்தை யாரும் கொண்டுவர முடியுமா என்பது ஐயத்
திற்குரியது. இதை வரவேற்க இயலாது என்று கூறி மதிப்பிற்குரிய எதிர்க்
கட்சி உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள்
தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர் கிட்டத்தட்ட 9 ஆண்டுக்
காலம் ஆளும் கட்சியின் அமைச்சராக இருந்தபோது, நானும் எதிர்க் கட்சியில்
இருந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன். திராவிட முன்னேற்றக்
கழக அமைச்சரவையிலேயே எதற்கும் பதட்டப்படாமல், உணர்ச்சிவயப்
படாமல் இருக்கக்கூடியவராக திரு. சாதிக் பாட்சா அவர்கள் திகழ்ந்தார்கள்
என்பதை என்னைப் போன்ற நீண்ட நாட்களாக உறுப்பினராக இருக்கின்ற
அங்கே சென்று, இரண்டு மாதங்கள் ஆகின்றன. இந்த இரண்டு மாதத்திலே
என்னென்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால், முதலிலேயே 6 வது சட்டத்
திருத்தம் நடந்து முடிந்தது. மீண்டும் 7-வது, 8-வது சட்டத் திருத்தம்
நடக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அங்கே தமிழர்கள்
இழந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை [illegible] வரையில், இந்தப் பேச்சு
வார்த்தைகள் [illegible] வரையிலும் [illegible] க்கலாம் என்றுகூட
திரு. ஜெயவர்த்தனே பார்க்கவில்லை. நாற்பது ஆயிரம் பேர்கள் கூட ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள். திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் இரண்டு





கழித்துப் போவதற்குள் அங்கே தமிழர்கள் எவ்வளவு இன்னலுக்கு ஆளாகி
யிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இன்னமும அப்படியே பேச்சு
வார்த்தை நீடித்தால் தமிழனின் நிலைமை என்ன ஆகும்? "Journal of
Bar Council of India" என்ற புத்தகம் இரண்டு கட்டுரைகளை
வெளியிட்டிருக்கிறது. அதிலேகூட இன்னொரு நாடு இதுபோன்ற பிரச்சினை
களில் தலையிடுவதற்கு உரிமை இருக்கிறது என்று கூறியிருக்கிறது. நியாயம்
இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அமெரிக்க
நாடு, கிரெனெடாவில் நுழைந்திருக்கிறது, என்ன சொல்கிறது,

. . .in sending armed forces to Grenada with three objectives: "Protect innocent lives including 1,000 Americans, frustrate efforts at further chaos and assist in the restoration of the conditions of law and order and Governmental and democratic institutions"

அதாவது மூன்று காரணங்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது
படைகளை அனுப்பி வைத்திருக்கிறது. இந்தக் காரணங்கள் நியாயமானதாக
இருந்தால், இதைவிட 1,000 காரணங்கள் நமது பிரச்சினைக்கும் இருக்கிறது
என்பதை இந்தியா எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஆனால் எப்பேர்ப்பட்ட நிலையில் இந்தியா போயிருக்கிறது. என்று
சொன்னால், ஸ்ரீலங்காவில் நடந்த படுகொலைகளைப்பற்றி நாம் நடந்து
கொண்டதைப்பற்றியும் நமது பிரதமர் அவர்களைப்பற்றியும் 'கார்டியன்' ஏடு
இவ்வாறு குறிப்பிடுகிறது:

"Her (Mrs. Gandhi's) relationship with the Jayawardane Government has been lukewarm mainly because of her friendship with the President's rival Mrs. Badaranaike."

இப்பேர்ப்பட்ட கலவரத்திற்குக் காரணமாக, 13 ஸ்ரீலங்கா தேச காவலர்களைக்
கொன்றுவிட்டார்கள், அதனால்தான் இந்த வெறிச்செயல்கள் நடந்தன என்று
சொல்கிறார்களே, அவர்களுக்குச் சொல்கிறேன். அதற்கு முன்னால் என்
13 காவலர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்ற காரணத்தை பத்திரிகை
வெளியிட்டிருந்தால், இந்த வெறிச் செயல்களே நடைபெற்றிருக்காது என்பது
தான் எனது கருத்தாகும். ஆனால் அதே நேரத்தில் 51 பேர்களை அவர்கள்
கொலை செய்தார்கள் என்ற உண்மை நிலையை, ஆக இரண்டு செய்திகளையும்
பத்திரிகை வெளியிட்டிருந்தால், சிங்களவர்களுக்குப் பழி வாங்கும் எண்ணம்
வந்திருக்கவே காரணம் இல்லை. ஆனால் அந்தச் செய்தியை ஸ்ரீலங்காவில்

(முற்பகல் 9-50)

உள்ள ஜெயவர்த்தனே அரசாங்கம் வெளியிடவில்லை. அதை மதிப்பிற்குரிய
அமிர்தலிங்கம் அவர்களே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 அக்டோபர் 28

"The opposition leader Mr. Amirthalingam told the Guardian on Friday that people had been killed in Jaffa Penin sula by troops in previously unreported incidents before the star; of the communal violence"

இந்தப் பெரிய குழப்பம் ஆரம்பமாவதற்கு முன்னாலே நடந்திருக்கிறது என்பதற்கு, திரு. ஜெயவர்த்தனே சொல்வது :

"Asked yesterday why no inquests had been held in the Jaffna instance, President Jayewardene said; "I did not know until a cuple of days ago. It is too late how".

இப்படி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதைப்போல் அவர் சொன்னார். ஆக இப்படிப்பட்ட சம்பவம் ஒன்று நடந்ததே தனக்குத் தெரியாது என்று சொன்னவரிடத்திலேதான் இன்றைக்கு பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது. அவர் இன்னும் சொல்கிறார் :

"Speaking on the effectiveness of Government measures he said I have tried to be effective for some time but cannot. I am not worried about the opinion of the Jaffna people now." He said at one time his party had been anxious to apply policies in the northern regions in such a way as to attract popular support there.

"Now we can't think of them. Not about their lives or of their opinion about us. Nothing will happen in our favour until the terrorists are wiped out. Just that".

இப்படி, ஸ்ரீலங்கா தமிழர்களின் உயிரைப்பற்றிக் கவலையில்லை என்று சொல்லுபவரிடம்தான் நாம் பேச வேண்டியிருக்கிறது. அதைவிட இன்னொருவர் சொல்கிறார் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தப் பத்திரிகைகள் எல்லாம் இப்படிச் சொல்லியிருக்கின்றன என்று சொல்வது மாண்புமிகு உறுப்பினருக்கே பயனுடையதாக இருக்கும். அவ்வளவையும் படித்துக் கொண்டிருந்தால் எப்போது பேச்சு முடிவடையும் என்றே தெரியாதே.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** "தமிழர்களுக்கு எதிராக, சிங்களவரிடம் எழுந்த கோபம்தான் இதற்குக் காரணம்," என்கிறார். ஒரு சிறிய கோபம் ஐந்து ஆயிரம் தமிழர்களுடைய உயிரை விழுங்கியிருக்கிறது என்கிற வேதனையோடு, இராணுவமே அதில் சேர்ந்து கொண்டு உடந்தையாக இருந்தது என்று அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவரோடுதான் நாம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. மேலும், அவருடைய நிலையைப்பற்றிச் சொல்லுகிறபோது . . .



1983 அக்டோபர் 28] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

"The President himself required the protection of his small armed garrison which put a ring of armed trucks and half trucks around his residence. The rebellious troops remain adjacent to Jayewardene. He must get rid of them quickly if he is not to risk another mutiny. But this will be a difficult task."

இப்படித் தன்னையே பாதுகாத்துக்கொள்ள அவராலே முடியுமா என்கிற நிலையில் இருக்கிறவரிடத்தில்தான் ஒரு பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது. அது வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை நமக்கிருந்தாலும், அது வெற்றி பெறவில்லை என்றால், திரு. பார்த்தசாரதி அவர்களின் பயணம் பயன் அளிக்காமல் போனால், அடுத்த கட்டம் என்ன என்பதை இந்த அவை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கட்டம் வருகிறபோது, இங்கே உள்ள 4½ கோடி தமிழர்களைக் கொண்ட தமிழகம் 35 லட்சம் தமிழர்களைக் கொண்ட ஈழ மக்களுக்கு ஒரு அறிவுரையையும் ஆலோசனையையும் சொல்லும் உரிமை பெற்றிருக்கிறது. அதைக் கேட்க அவர்களும் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலையில் விடுதலை கேட்கிறவர்களைப் பார்த்து 'விடுதலை கேட்காதே' என்று சொல்லுவதற்கு உலகத்தில் எவருக்கும் உரிமை இல்லை. நமக்கு அங்கே உள்ள தமிழர்களிடம், இந்தியத் தமிழர்களிடம் உரிமை இருக்குமென்று சொன்னால், அவர்களுக்கு நாம் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். தற்போது அவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள் என்றால், முதலில் அவர்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்கியாக வேண்டும், பாதுகாப்புக்கு வழி சொல்லியாக வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே 20 நிமிடங்களுக்கு மேலாகப் பேசியாகிவிட்டது. தொடக்கத்திலேயே உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்கள்தான் என்று சொல்லியிருக்கிறேன். ஆரம்பத்திலேயே தாங்கள் தவறாக வழிகாட்டினால், மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** என்னைப் பொறுத்தவரையில் மலையகத்தில் பரவியிருக்கிற தமிழர்கள் முதலில் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இருக்கிற நுவரேலியா, கண்டி மற்றும் பாதுளை மாவட்டங்களில் சுமார் ஐந்து லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தியர்களாக இருப்பவர்கள் முதலில் இந்த மூன்று மாவட்டங்களுக்கு வந்து சேருங்கள் என்று சொல்வது முதல் அறிவுரையாக இருக்கும்.

அடுத்தது, நீங்கள் தமிழ் ஈழப் பகுதிகளுக்குப் போங்கள் என்பதுதான் நியாயமான ஒரு அறிவுரையாக இருக்கும். "மீண்டும் இங்கே இந்தியாவிற்கு வாருங்கள்" என்று சொன்னால், நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது

என்பதைச் சொல்லி, இங்கே வந்தவர்களை நாம் எப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கும் ஒரு சின்ன விவரத்தை மட்டும் தாக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்தேகால் லட்சம் பேரை நாம் ஏற்றுக்கொள்கிறோம். மூன்று லட்சம் பேருக்குக் குடி உரிமை அவர்கள் தர வேண்டும். இதுவரை நம் நாட்டிற்கு வந்தவர்களுக்கு நாம் செய்திருப்பது என்னவென்றால், ரூ. 40 கோடி அளவுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம். இதுவரை அதிலிருந்து நமக்குத் திரும்ப வந்திருப்பது ரூ. 5 லட்சம். 1964 முதல் 1983 வரை 19 ஆண்டுக் காலமாக ஸ்ரீலங்கா இந்தியர்களுடைய குடியேற்றப் பிரச்சினை நீடித்து வருகிறது. மூன்று லட்சத்து 15 ஆயிரம் பேரைத்தான் நாம் ஏற்றிருக்க வேண்டும். நாம் காலம் தாழ்த்தியதன் காரணமாகவும், அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து கொண்டிருந்த காரணத்தாலும், அவர்களும் பெருகி, இறுதியில் 4,20,000 பேர் குழந்தை குட்டிகளோடு வந்த குடும்பங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆக அந்த வகையில் 1,05,000 பேரை அதிகமாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இன்னும் 5 லட்சம் பேர் வர வேண்டும். அறுபது ஆயிரம் பேர் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நாம் கப்பலையும் நிறுத்திவிட்டோம், அவர்களிடத்தில் கையில் காசும் இல்லை. அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பர்மா அகதிகளைப் பொறுத்தவரையில், 1975-78 வரை ஏறத்தாழ 1,44,000 பேர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு இதுவரை ரூ. 12 கோடி கடன் கொடுத்திருக்கிறோம். ரூபாய் 35 லட்சம் திரும்ப வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து கட்டாயமாக அந்தப் பணத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்ற அவசியமில்லை. அதுவல்ல பிரச்சினை. அவர்கள் வாழ்வு பெற்றிருக்கிறார்களா என்பதுதான் இப்போதைய பிரச்சினை. எனவே இப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீலங்காவில் உள்ளவர்களைப் பார்த்து வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குப் போங்கள் என்று சொல்வதுதான் நியாயமான ஒரு அறிவுரையாக இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் விரைவில் முடிவுக்கு வர வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களால் இவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்களா என்றால், இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுவரை இரண்டு லட்சம் பேரை





ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1958 ஆம் ஆண்டு கலவரத்திலிருந்து இவ்வாறு குடியேறியவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று 'ஈழ நாடு' என்கிற பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் எப்போது முடிப்பார் என்று சொல்லிவிட்டால் நான் அதுவரையாவது பொறுமையாக இருக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இன்னும் 15 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது முடியாது. 12 பேர் பேச வேண்டும். உறுப்பினர் அவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை, மற்றவர்கள் நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே உடனே முடிக்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இன்னும் 12 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

அதிலே சொல்லப்பட்டிருக்கிறது : "கொழும்புக்கும், அங்கும் இங்கும் போக வேண்டாம். துறுவா போங்க கிளிநொச்சிக்கு. அங்கிட்டு போங்க எங்கள் தமிழ் ஆட்கள் இருக்கிறாங்க, அவங்க பாதுகாப்பாங்க என்றார்".

பிச்சை எடுத்தாவது பிள்ளைகளைக் காப்பாற்றலாம் என்று சொல்லுகிறார்கள். வடக்கில் வாழப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதிலே சந்தேகம் இருந்தால், பிரதமர் நாடாளுமன்றக் குழு ஒன்றை அனுப்புகிறேன் என்றார்கள். நாம் இங்கிருந்து ஒரு குழுவை அனுப்பிவைக்கலாம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், நான் இங்கேயிருந்து நீங்கி, அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்ததாக அவையை விட்டே போகத் தயாராக இருக்கிறேன். இவ்வாறு இரண்டு லட்சம் மலைவாழ் தமிழர்களுக்கு வாழ்வு தந்த அந்தத் தமிழர்களின் நெஞ்சத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

'இல்லஸ்டிரேட்டட் வீக்லி'-யில் செல்போர்ன் என்பவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் மிகுந்த அனுபவம் உடையவர். படித்துக் கொண்டே போவதைக் [illegible] கருத்துக்களைச் சொல்லுவது பயன் உள்ளதாக இருக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** திரு. ராஜசுந்தரம் என்பவர் காந்தி இயக்கத்தை உருவாக்கி மலையகத்திலிருந்து வந்தவர்கள் குடியேற வழிவகை செய்திருக்கிறார்கள். அந்த வகையில் மலையகத்திலிருந்து வந்த இந்தியத் தமிழர்களுக்கு நல்வாழ்வு அளித்தவர் என்ற முறையில் அவருக்கு நோபல் பரிசே தந்திருக்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே இரண்டாவது கட்டத்தையும் தாண்டி ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு நாம் மனப் பூர்வமாகச் சொல்லக் கூடியது—என்னால் எண்ணக் கூடியது—என்னவென்றால் தமிழ் ஈழம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. வேறொன்றும் இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய உறுதியான எண்ணமாகும்.

அப்படி ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதற்கும், ஒரு மனிதன் சுதந்திர மனிதனாக வாழ்வதற்கும், அதனால் ஏற்படக்கூடிய லாப நட்டக் கணக்கு அல்ல நாம் எண்ணிப் பார்க்க வேண்டியது. எல்லா வசதிகளையும் கொடுத்து உன் வாழ்நாள் முழுவதும் சிறையிலேயே கைதியாக இருக்கிறாயா என்றால், கூலிக்காரனாக வாழ்ந்தாலும், நான் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புகிறேன்—இது மறுக்க முடியாத உண்மை—என்றுதான் யாரும் சொல்லுவார்கள். இதை ஒருவேளை மதிப்பிற்குரிய திரு. எம்.பி.எஸ். அவர்கள் இப்போது தெரிவிப்பார்களோ என்னவோ, முன்னே தெரிவித்திருக்கிறார்கள்.

வெள்ளையரை நேரு போன்றோர் எதிர்த்தபோது, அவர்களிடமிருந்து வந்த ஆயுதங்கள் என்ன? திடமான நம்பிக்கை, அசைக்க முடியாத ஆர்வம், எதையும் தாங்கும் உள்ளம். இதை நமது மக்கள் கண்டிப்பாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

கொழும்பு நகரில் நடைபெற்ற சம்பவங்களைத் தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். காரில் கணவனும் மனைவியும் போகிறபோது, காரை நிறுத்தி காரைக் கொளுத்தி, மனைவியைக் கண்ட துண்டமாக வெட்டி அந்தக் கணவன் முன்னாலேயே மனைவியைச் சாகடித்த காட்சிக்கு அந்த மக்களுக்கு நாம் என்ன சொல்லப் போகிறோம்?

தாயும் தந்தையும், மகனும் மகளும் போய்க் கொண்டிருக்கும்போது, 16 வயது பெண்ணை மட்டும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றபோது "அக்காளை அனுப்பிடாதீர்கள்" என்று தம்பி அழுகிறபோது, பெற்றோர்கள் "எங்களைக் கொன்றுவிடுங்கள், அவளை விட்டுவிடுங்கள்" என்று கதற, "நான் மாண்டால் பரவாயில்லை, தம்பி இருக்கிறான், அவன் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வான்" என்று சொன்ன அந்தக் குடும்பத்திற்கு என்ன சொல்லப் போகிறோம்?





ஒரு வியாபாரி வெட்டப்படுகிறான். அவன் வயிற்றைக் கிழிக்கிறார்கள். தலையை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு அவன் மனைவியின் முன்னாலே போய் அதைக் காட்டி, "இவன்தான் உன்னுடைய கணவனா?" என்று கேட்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் என்ன சொல்லப் போகிறோம்? அந்தக் கொடுமைக்காரர்களோடு இன்னும் சேர்ந்து வாழுங்கள் என்ற அறிவுரையையா சொல்லப் போகிறோம்?

ஸ்ரீலங்காவிலே இருப்பவர்கள் தொழிலாளர்கள். எனவே, சிங்களவர்களோடு தமிழர்கள் இணைந்து போனால் சரியாகிவிடும் என்று சொன்ன கம்யூனிஸ்ட்கள் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற முடியவில்லையே. இப்போது அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன். தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் அமர்ந்திருக்கிற சங்கடத்தில் ஏற்பதற்குமில்லை, எதிர்ப்பதற்குமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மனிதர்கள் அழிந்து போகலாம், ஆனால் இனம் அழிந்து போகாது. இன்று அல்லது நாளை ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவார்கள். அதற்கு ஒரே வழி தமிழ் இனம். இதை இன்றைக்கு நான் சொல்லவில்லை. 1958 ஆம் ஆண்டு கலவரத்தைப் பார்த்துவிட்டு, கப்பல் வடகிழக்குப் பகுதிக்கு வந்த நேரத்தில் சிங்களம் இரண்டாகப் பிரிந்து போய்விட்டது என்று இறுதியாக தந்தை செல்வா சொல்லிய கருத்தைத் தெரிவிப்பது நியாயம் என்று கருதுகிறேன். அவர் பிரிவினைக்காக சொன்ன விவரம் வெளிநாட்டாராலே தீட்டப்பட்ட காவியமாக இன்று வந்திருக்கிறது.

"Throughout the ages, the Sinhalese and the Tamils in this country lived as distinct sovereign people till they were brought under foreign domination. It should be remembered that the Tamils were in the vanguard of the struggle for independence in the full confidence that they also will remain in their freedom."

தமிழர்களுடைய உரிமைக்காக தந்தை செல்வா அவர்கள் வடித்துக் கொடுத்த காவியம். தலைவர் அவர்களே ஒரு காலம் சமஷ்டி கேட்டார்கள். உறவோடு வாழ வழி கேட்டார்கள். 1958 ஆம் ஆண்டிலேயிருந்து இரண்டாண்டுக்கு ஒரு முறை கேட்டார்கள். மதிப்பிற்குரிய அவை முன்னவர் அவர்கள் "அது என்ன ஜூலை மாதம்?" என்று கேட்டார்கள். ஆம், அது ஒன்று இருக்கிறது. ஆகஸ்ட் மாதம் அடுத்து வரும். இந்தியா விடுதலை பெற்ற மாதம் அல்லவா

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 அக்டோபர் 28

அது. ஈழத் தமிழர்கள் அதைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. 1981-ல் கலவரம் நடந்தது. அப்போது மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லோகசேனாவின் வீடு கொளுத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்டபோது கணவனும், மனைவியும் தப்பித்து கள்ளத் தோணியில் இங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள். வன்னிய மன்னனை நான் பார்த்ததில்லை ஆனால் வாவுணியா சிதம்பரம் அவர்கள், கலவரம் நடந்தபோது, கையில் துப்பாக்கியை ஏந்தி "என் தமிழர்களை என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதாலே "குறி வைத்த விரலை நசுக்குகிறேன்" என்று சொல்லி நசுக்கிய அந்த மாமுனிவர் வந்திருக்கிறார். திரிகோணமலையை தாரை வார்க்காதே, அது தமிழர்களுக்குச் சொந்தம் என்று சொன்ன காரணத்தாலே "உன் தலைக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய்" என்று அவருடைய தலைக்கு ஐம்பதாயிரம் பேசிய சம்பந்தம் அவர்கள் மனைவியோடு இந்த நாட்டை நோக்கி வந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நல்லூரில் நல்லவர், வாதாடுவதில் வல்லவர் வீட்டை எரித்தார்கள், அவர் வாங்கிய புதிய காரை எரித்தார்கள். கணவனும் மனைவியும் தாவிக் குதித்து வந்ததோடு தங்கள் பெண்ணுக்கு தமிழ் நாட்டு மணமகனைத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள். இப்படி ஈழ நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் உறவு வந்திருக்கிற நேரத்தில் தாழ்வோடு, பணிவோடு வேண்டுகிறேன். கடல் கடந்து கண்ணீரோடு வந்திருக்கிற அவர்களுக்குக் கரம் கொடுப்போம், குரல் கொடுப்போம். ஈழத்தில் வானத்தை நோக்கி வருகிறதா உதவி என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கப்பலைப் பார்த்து "என்று வரும் இந்தியா?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் "ஏதாவது செய்யுங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். இங்கே பொறுப்பிலே இருக்கிறவர்கள் என்ன செய்வது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு நல்ல முடிவைக் கண்டாக வேண்டும். ஈழத் தமிழர்களில் 35 இலட்சம் தமிழர்களின் நியாயமான வாழ்விற்கு நாம் கரம் கொடுப்போம், குரல் கொடுப்போம். அதைவிட தமிழன் வாழ்வுக்கு ஒன்றும் தேவையில்லை.

"நாமமது தமிழர் என கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்" என்கிற வாசகம் உண்மையானால், நாம் படித்த இலக்கியம் உண்மையானால், புறநானூறு தந்த வீரம் உண்மையானால், தமிழ் மூவேந்தர் களுடைய வீரம் உண்மைனாயால், நிச்சயம் ஒரு நாள் இந்தத் தமிழ்ச் சமுதாயம் பதில் கண்டே தீரும். வெட்டிச் சாய்ந்த வீரத் தமிழர்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது உலகம். உலகம் எல்லாம் தமிழர்கள் பரவியிருக் கிறார்கள். செல்லி சொன்னான் என்று அண்ணா அவர்கள் முதன்முதலில் பச்சையப்பன் கல்லூரியில் எழுதினார்கள். "They are a few, we are many" என்று எழுதினார். நாம் ஆறு கோடி பேர் பாத்திருக்கிறோம்,



33 அக்டோபர் 28] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

ர்கள் 65 இலட்சம் பேர்கள். 65 இலட்சம் பேர்களால் வெட்டிச் சாய்க்க யுமானால், ஆறு கோடி தமிழர்கள் எழுந்துவிடுவார்களேயானால், கத்திலே ஒரு சிங்களனும் நடமாட முடியாது என்பதை உணர்த்தியாக ண்டும் என்பதைத் தெரிவித்து அரிய வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி றுகிறேன். வணக்கம்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, Sir, it is th deep regret and grief that I, as a mother and as one who has t grandchildren, rise to express the views of the population of dia and that of half the population of Tamil Nadu—cause women form about half the population of the tate—on the recent happenings in Sri Lanka. I canpletely ndorse the Resolution moved by the Hon. the Leader of the ouse.

Sir, on the 2nd of August, there was a 'bandh'. It was onducted most successfully by the Hon. the Chief Minister. lmost all the Parties jointed that 'bandh' and even small ildren took part in it. That 'bandh' showed our anxiety d our love towards those people in Sri Lanka who are exposed danger. Sir, I think I may not be able to express my views sequence and I request the hon. Members not to misconstrue nything that I say. Sir, the people who are suffering are nder the Government of another country. Therefore, the bandh' was successful in making a foreign rule understand ur feelings. But, I feel that the time has come when there hould be a second look on the policy of organising 'bandh's or such things. On such occasions, a large number of Police ersonnel have to be deployed to look after the 'morcha's. The bandh' on the 2nd August was not the only 'bandh'. Various olitical parties took out a number of 'morcha's on account of which there were traffic jams and many people were put to nconvenience. We have to consider whether bringing political issues to the streets is good. I hope I will not be misunderstood when I say this.

Sir, very often, we feel that certain things need not be brought before the Legislature. But, in this case, we know for certain that there has been a genocide in Sri Lanka. There has been a mass massacre and lynching of children, rape, etc., have all taken place. I have had the opportunity of meeting many of the people who have come from Sri Lanka, fleeing from the

[Thirumathi Tara Cherian] [1983 அக்டோபர் 28

plantations there. They have come to the refugee camps here with nothing in their hands. A student of Pachaiyappa's College or Theagaraya College came to me crying. He was not able to know the whereabouts of his parents living in Sri Lanka. He said that he was not able to pay his examination fee. Of course, the Government came to his help. But it was only after some of the voluntory organisations intervened in his behalf. What I am trying to say is this. The Government could have found it possible at the beginning itself to convene a meeting of the Legislature for at least half a day to discuss this problem. In the beginning we did not have a clear picture and we were going on getting more and more information. The sinhalese extremists went to the extreme. It would have been helpful if a meeting of the Legislature had been convened at the time the trouble started in Sri Lanka. I am not making any complaint and this is only my way of thinking.

I congratulate the Hon. the Minister for Electricity on the way in which he has been able to project in the United Nations what he wanted to say. Sir, I am not talking about the Government of another country and I am not trying to find out who was responsible for the failure of law and order in Sri Lanka. But I have heard from people who have come from Sri Lanka about the incidents which happened there. In Jaffna, a girl committed suicide because she was raped by more than one person. Though we could not do much in this matter, our Government and the Central Government are doing whatever

(முற்பகல் 10-10)

they can. Sir, while our Hon. Minister for Electricity, for whom I have got great respect, has been able to put forth certain views on the question, he has not done so in the General Assembly so that all the other countries may take note of that. The problem will not be known to many countries in the world. Though I have done social service as a social worker for about 50 years, many may not know even my age and the length of my social service. There are many humanitarian views and I, as a woman who had begotten children, only know the problems of women and children who have suffered in that country. I know there are certain ways and means of bringing this matter before the U.N. General Assembly and also before other world organisations like the Human Rights Association.



1983 அக்டோபர் 28] (Thirumathi Taracherian)

If I want to put forth the case, I would not engage a Tamilian to do that but only a neutral person. Even Thiru Venkataraman or any other person in the Cabinet, even though they belong to our country, will not be as good as a neutral person. From a purely humanitarian angle, we should know what has actually happened. Our Minister has spoken in the Political Committee and this subject was not specified in the Agenda. There was a general agenda and during the discussion on the refugee problem, this subject had also been talked about and Sri Lanka representative would have objected to this. Therefore, my congratulations to him on having utilised the golden opportunity to place before them what had happened. Sometimes people go to the General Assembly without making any contribution. There is no other person to tell the other countries of the world that Tamils are killed in Sri Lanka so that many of the foreign countries may take note of the happenings in Sri Lanka. Without going into the details, I say that our sympathies are with them.

We hear that about 25,000 people are still in the camps in Sri Lanka and in some of the private refugee camps. There is no security for them and they are not able to return to their homes. Unless they are assured of security, they will not be able to leave the camps. Of course, they want to live in their own homes.

'எலி வளை சின்னதாக இருந்தாலும், அந்தச் சின்ன வளைகூட அதற்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும்' என்று என் அம்மா என்னிடம் சொல்வார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழமொழியைத்தான் தமிழில் பேசுகிறார்கள்.

திருமதி தாரா செரியன்: தமிழிலே பேச வேண்டும் என்று நினைக்கிறேன். தமிழிலே கொஞ்சம் பேசினால், கொஞ்சம் நேரம் தருவார்கள் என்றுதான் தமிழிலும் பேசுகிறேன். I have met the people in Mandapam. I had an opportunity to go and stop with them for a whole day. I have met the people who are working there. I must say that the work is done well and I am having a small report prepared in Tamil on the work turned out there by the Social Welfare Board.

I shall send it to all my brother members here. Instead of duplicating the work and frittering away our energy, we can go on with our programme. In connection with the ensuring Diwali, the children in those camps will get new clothes and they will have fire crackers. After evening, when darkness comes in, they become gloomy because there are some with their children but they do not know the whereabouts of their husbands. This is the condition in which they have come to this country. They have got visa only for three months. I am talking about the refugees and also about the repatriates who have come in thousands. Of course, our Government are doing their best. Education for their children is very important. Some vocational training is necessary for the girls among them. For those people, a feeling of security is now very much necessary. Some of them are illiterate and they have to be assured that they will not be driven out. If today the economy of Sri Lanka is what it is, or what it was some time ago, it is only through the enterprise of the entrepreneurs of our country. The plantation workers who went from India have, by their toil and by shedding the sweat of their brows, contributed to the development of Sri Lanka. Now, they have no security in that country.

Sir, I am glad that the Prime Minister's emissary is going to Sri Lanka. We are now expressing several views in the Council. Many views have been expressed in the Assembly also where the Hon. the Finance Minister has made a detailed statement about the various steps that our Government have taken in the matter. But, I have a feeling that all these things could have been done a little earlier. Now, we see people wearing black badges and expressing, in various ways, their sorrow over what has happened in Sri Lanka. Yet, I feel that we have wasted some time and I request to be forgiven for saying this. If all these things had been done three months ago, it would have instilled some confidence in those people.

Sir, now that the Prime Minister's emissary is going to Sri Lanka, let us wait for the outcome of the talks that he is going to have. I have got a small Tamil brochure which explains the work that is being done at Mandapam and Tiruchirappalli. I am sending copies of it to everyone. If anyone wants to bring some happiness to the children of those who have come from





Sri Lanka, they may extend their kind help. Till such time a long-term solution is found to this problem, let us give these people some immediate relief. Let us immediately extend human sympathy to them and let us give them some comfort till they get fully rehabilitated.

Thank you.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், அவருடைய திருத்தங்களை முன்மொழிந்துவிட்டுப் பேசலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தின் மீது என் கட்சியின் சார்பிலே, கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன் :—

பாரா (உ)-இல் முடிவடைகிற இடத்தில் கீழ்க்காணும் வாசகத்தை சேர்க்க வேண்டும் :—

"அத்துடன் உலக மக்களின் ஆதரவையும், இந்திய மக்கள் அனைவரின் பேராதரவையும் இலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் திரட்டுவதற்கு இந்திய அரசு முன் முயற்சி எடுத்திட வேண்டுமென இம்மேலவை கோருகிறது."

பாரா (ஊ)-வில்—

"இந்திய அரசு இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு" என்றிருக்கும் வரிகளை நீக்கி அதற்கு பதிலாக பின்வரும் வரியை சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொறுப்பை கொண்டுள்ள இந்திய அரசு."

பாரா (எ)—

"பாரா முழுவதையும் நீக்கிவிட வேண்டும்".

பாரா (ஏ)-வில் 9-வது வரியில்—

"இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கை வாழ் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ் வளிக்க முன்வராமல், தமிழினத்தின் அழிவுக்கு காரணமாக அமையும் ஆயுதங் களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆயுதம் வழங்குவது—கடற்படைத்தளம். அமைப்பது போன்ற அநியாயச்

செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது" என்று வரும் வாசகங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக கீழ்க்காணும் வரிகளை சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைகிறது. அமெரிக்கா இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாக கண்டிக்கிறது. ஆயுதங்களை வழங்குவது, கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அமெரிக்காவின் செயல்கள் இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கும், இந்தியாவின் சுதந்திரத் திற்கும் ஆபத்தை உண்டாக்குகிறதென்று இம்மேலவை கருதுகிறது. இத்தகைய அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது."

பாரா (ஐ)-யில் 5-வது வரியில்—

"ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ, அல்லது" என்று வரும் வாசகங்களை நீக்கி விடவேண்டும்.

பாரா (ஓ)-வில் 5-வது வரியில்—

"இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையிலும்" என்று இருக்கும் வரிகளுக்குப் பதிலாக கீழ்க்காணும் வரிகளை சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும் நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையிலும், அத்துடன் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பரஸ்பர நட்பும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும்."

பாரா (க)—

பாரா முழுவதையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பாராவை சேர்த்துக் கொள்ளவும் :—

"ஐ.நா.-வின் பொதுசபைக்கு இந்திய அரசின் குழுவில் ஒருவராக சென்ற தமிழக அரசின் மின்துறை அமைச்சர் ஐ.நா.-வின் விசேஷ அரசியல் குழுவில் இப்பிரச்சினைபற்றி பேசியிருக்கிறார்.

பயங்கரவாத செயல்களை ஒடுக்கும் பெயரால் இலங்கையில் சிறுபான்மை தமிழ் மக்கள் வன்முறைக்கு இலக்காகக்கூடாதென்றும், இந்தியா இந்தக் கமிட்டியில் இந்தப் பிரச்சனையை எழுப்புவதற்கு இதுவே காரண மென்றும், இலங்கை தமிழர் பிரச்சனையை சர்வதேச பிரச்சனையாக்க



இந்தியா முயற்சிப்பதாக கூறப்பட்ட புகாரை மறுத்தும், பேச்சு வார்த்தைகள் மற்றும் இந்தியப் பிரதமரின் விசேடத்தூதர் ஜி. பார்த்தசாரதியின் சமரச முயற்சிகள் மூலம் இப்பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு ஒன்று காணவே இந்தியா உண்மையில் விரும்புகிறதென்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவுபட சரியான கருத்துக்களை முன்வைத்து பேசியதை இம்மேலவை பாராட்டுகிறது."

**திரு. பா. ரா. தாமஸ் :** நான் வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவாழ் தமிழர் குறித்த அரசின் தீமானத்தின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த மட்டில், அரசு அணுகுமுறையை எங்கள் கட்சி ஆதரிக்கிறது. அதை மேலும் செம்மைப்படுத்தக்கூடிய முறையிலே சில திருத்தங்களை எங்கள் கட்சியின் சார்பிலே பிரேரேபித்திருக்கின்றேன். இந்தப் பிரச்சினை யிலே முதலிலே நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஜூலை மாதத்தில் நடந்த இனப் படுகொலை. இதைப்பற்றி ஏராளமான விவரங்கள் தமிழ் நாடும் இந்தியாவும் கேட்டிருக்கின்றன. கொலை, கொள்ளை, தீ வைத்தல், கற்பழிப்பு மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளையும் சூறையாடியிருக்கிறார்கள். 300 தொழிற்சாலைகளுக்கு மேல் தரைமட்டமாக்கியிருக்கிறார்கள். இதனால் ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை இல்லை. அதிலே பெருவாரியான சிங்களவர் களுக்கும் வேலை இல்லையென்று ஆகியிருக்கிறது. தனக்கு இரண்டு கண்கள் போனாலும், அவர்களுக்கு ஒரு கண் போயிற்றே என்று சொல்கின்ற ஒரு முட்டாள்தனமான ஆர்குமெண்டில் இருக்கிறார்கள். சிங்களவர்கள்-தமிழர்கள் ஆலைகளிலே ஒரு லட்சம் சிங்களவர்களுக்கும் வேலை போகின்ற அளவுக்கு அங்கு சிங்களவர்கள் வெறித்தனம் போயிருக்கிறது என்பதைப் பத்திரிகை யிலேகூட பார்த்தோம். அது மட்டுமல்ல. நாம் எல்லோருமே மிகவும் வேதனைப் படக்கூடிய முறையிலே, அங்கு கொல்லப்பட்டவர்களை, அவர்களுடைய பிரேதங்களைத் தெருவிலேயே போட்டு எரித்தார்கள். அந்தப் பிரேதங்களின் மீது பழைய டையர்களைப் போட்டு எரித்தார்கள். அதாவது முதலிலே டையர்மீது பெட்ரோல் ஊற்றி, தீ வைத்து விடுவார்கள். இது சாதாரணமாக ஒரு நாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய எண்ணமல்ல. அந்த அரசே இப்படி ஒரு ஏற்பாட்டைப் பண்ணிற்று. அந்த அரசே அவ்வாறு சொல்லிற்று. இது குறித்து சொல்லிற்று. எமெர்ஜென்சியை, அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தி, ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் பண்ணிற்று. "இராணுவத் தாலோ போலீசாராலோ கொல்லப்படுபவர்களைப்பற்றி விசாரணை பண்ண வேண்டாம். போஸ்ட்மார்ட்டம் தேவையில்லை. இராணுவமும் போலீசும் அப்படியே கொண்டு சென்று எரித்துவிடலாம்" என்று சொன்னதை இந்த

மக்கள் எப்படி பின்பற்றினார்கள்? இராணுவமும் போலீசும் பிணங்களை
சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதுகூட அவசியம் இல்லை என்று
ரோடிலேயே போட்டு எரித்துவிடலாம் என்று அந்த கொல்லப்பட்ட தமிழர்
களின் பிரேதங்கள் மீது பெட்ரோல் ஊற்றி எரித்தார்கள். பெட்ரோல்கூட
அதிகமாகச் செலவாகிவிடும் என்று பெட்ரோலை டையரிலே விட்டு தீ வைத்து
அதைத் தூக்கி பிரேதங்கள் மேலேயே போட்டார்கள். அப்படிப் போட்ட
பிறகு, டையரும் எரியும், பிரேதங்களும் எரியும். ஒரு நாட்டில், கொழும்பு
போன்ற தலைநகரத்திலே பயங்கரமான அளவுக்கு அந்தக் கொடுமைகள் நடை
பெற்றிருக்கின்றன. ஸ்ரீலங்கா அரசு, இறந்துபோனதற்கு எந்தவிதமான
போஸ்ட்மார்ட்டமும் தேவையில்லை என்று அறிவித்ததுதான் அந்த நாட்டு
மக்கள் தமிழர்களைப்பற்றிக் கேவலமாக நினைக்க உதவிற்று. இதில் இராணு
வத்தின் பங்கு, போலீசாரின் பங்கு பற்றி யெல்லாம் எல்லோரும் பேசியிருக்கி
றார்கள். நான் இங்கே ஒரு விஷயம் கூற விரும்புகிறேன், இப்படி பெரிய
கொடூரமான தீமைகள் நடக்கின்றபோது, அது தமிழர்களுக்கு எதிரான
நிலையில், இரண்டு இனங்களுக்கு இடையிலே காட்டுத் தீ போல பரவிக்
கொண்டிருக்கின்ற நேரத்தில், ஸ்ரீலங்கா பார்லிமெண்டிலே ஒரு கம்யூனிஸ்ட்
மெம்பர் பேசினார். அவர் இந்த அட்டூழியங்களுக்குக் காரணம் யார் என்று
சொல்லும்போது, அவருடைய மார்க்சிய ஞானம்தான் அவர்களுக்கு அந்தத்
தெம்பைக் கொடுத்தது என்பதிலே நான் பெருமைப்படுகிறேன். அந்த
அட்டூழியங்களுக்கு யார் காரணம் என்று சொல்லும்போது, அவர் சொல்லியிருக்
கிறார். நான் தலைவர் அவர்களுக்கு 'ஜன சக்தி' பத்திரிகையைக் காட்டி
யிருக்கிறேன். "ஸ்ரீலங்கா தமிழர் படுகொலைக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தின்
வழிமுறைகள்தான் காரணம்" என்று திரு. ஜெயவர்த்தனே அவர்களை
எதிர்த்து பார்லிமெண்டிலே அவரை நேராகவே வைத்துக்கொண்டு சிங்கள
வீரன் திரு. சர்த்முடேல் வகிமான் என்ற கம்யூனிஸ்ட் பார்லிமெண்ட் மெம்பர்
அங்கே கூறியிருக்கிறார். அங்கே அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பஸ்

(முற்பகல் 10-20)

களில் குண்டர்கள் வந்ததை அனைவரும் அறிவார்கள். மின்சார வாரிய
வாகனங்களில் குண்டர்கள் ஏற்றப்பட்டு, அவரவர்கள் இடத்திற்கு அனுப்பப்
பட்டனர் என்று பகிரங்கமாக பார்லிமெண்டில். திரு. ஜெயவர்த்தனேவுக்கு
முன்னால் கம்யூனிஸ்ட் எம்.பி. பேசினார். அதுமட்டுமல்ல, இன்னொன்று
கேட்டார். "நகரத்தின் இரண்டு இடங்களில் 25 ஆம் தேதி காலை தாக்குதல்
நடந்தவுடன் ஊரடங்கு உத்தரவை உங்களால் பிறப்பிக்க முடியாதா?
நாங்களா தடுத்தோம்? அன்று இரவோ அல்லது மதியமோ மக்களை அமைதி
யாக இருக்கச் சொல்லி அரசாங்கத்தவர் எவரேனும் வானொலியிலும் பத்திரி
கைகளிலும் வேண்டுகோள் விடுத்திருக்க முடியாதா, அதை நாங்களா தடுத்
தோம்?" என்று பார்லிமெண்டிலே கேட்டார். "அரசாங்க பஸ் உபயோகப்





படுத்தப்பட்டது. இராணுவத்தினர், போலீசார் மாத்திரமல்ல. அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தால், இதைத் தடுத்திருக்க முடியும்" என்று சொல்லி, "இதில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார். ஸ்ரீலங்காவில் உள்ள ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் சம்பவம் நடந்தபோது வெளியிட்ட அறிக்கையிலிருந்து அவர் மேற்கோள் காட்டிப் பேசுகிறார். "இந்த அழிவுக்கும் படுகொலைக்கும் காரணமான குண்டர்களும் சமூக விரோதிகளும் தண்டனை ஏதுமில்லாமல் முழு சுதந்திரத்துடன் உலாவுவதற்கும், தங்களுடைய வன்முறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றனர்; இது மிக மிக துரதிருஷ்டவசமானது" என்று நண்பர் தொண்டைமான் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

எந்த அளவிற்கு இதில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று கம்யூனிஸ்ட் எம்.பி. பார்லிமெண்டிலே பேசியிருக்கிறார். அவர் சிங்களவராக இருந்தாலும், அந்த சிங்கள அரசின் அயோக்கியத்தனத்தைப்பற்றி பார்லிமெண்டிலே பேசுவதற்கு அவருக்கு தைரியமூட்டியது மார்க்சிய ஞானம் தான் என்று நான் பெருமைப்பட்டுக்கொள்வேன்.

அதுமட்டுமல்ல. சிறையிலே கைதிகளைக் கொலை செய்தார்கள். 35 பேர்களை முதலில் கொலை செய்தார்கள். பிறகு அவர்கள் போய் விட்டார்கள். மீண்டும் 18 ஆட்கள் விடுபட்டுப் போய்விட்டார்கள் என்று மூன்றாம் நாள் வந்து, அவர்களைக் கொலை செய்தார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே இதில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதிலே முக்கியமாக 'ஐராணிகல் சிச்சுவேஷன்' என்று சொல்லுவார்கள். என்னவென்றால் இந்தப் படுகொலைகளால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய வம்சாவழித் தமிழர்கள்தான் ஜெயவர்த்தனேக்கு 1977 ஆம் ஆண்டு ஓட்டுப் போட்டு, வெற்றி பெறக் காரணமாக இருந்தார்கள் என்பது திரு. ஜெயவர்த்தனேக்கும், அந்தக் கட்சிக்கும் மிகக் கேவலமான விவரம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொடுமையைக் கண்டிக்க வார்த்தைகள் போதாது. ஏராளமாக நாம் கண்டித்திருக்கிறோம். இதிலே தமிழ் மக்களின் கோபம் நியாயமானதாகும். தமிழக அரசும், சகல அரசியல் கட்சிகளும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி 'பந்த்' நடத்தின. அதற்குப் பிறகு நடத்தியுள்ள ஆர்ப்பாட்டங்கள், மற்றவைகள் எல்லாம் தமிழ் மக்களின் நியாயமான கோபத்தை வெளிப்படுத்தியுள்ளன. நாடாளுமன்றத்திலும்கூட சகல அரசியல் கட்சிகளும் இதைக் கண்டித்தன. இது முதன்முறையாக தேசியப் பிரச்சினையாக எடுத்துக்

கொள்ளப்பட்டது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், முன்பே இந்தப்
பிரச்சினை தேசியப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. லால்
பகதூர் சாஸ்திரி-ஸ்ரீமாவோ ஒப்பந்தத்தின்படி கூட, இது தேசியப் பிரச்சினை
யாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது பார்லிமெண்ட் உறுப்பினர்களே
டெல்லியில் ஊர்வலம் வந்ததைப் பார்த்தோம். மகாராஷ்டிரம், தெற்கு
மாநிலங்கள், நம்முடைய நாடாளுமன்றம் ஆகிய இடங்களில் கண்டிக்கப்
பட்டதால், இது தேசியப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.
அதன்மூலம் ஏற்பட்டிருக்கிற பலனைப் பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம்
என்ற கேள்வியை நான் எழுப்பி என்னுடைய விடையை அளிக்க முயல்கிறேன்.
சிங்களவன் ஒரு பிரிவு வெறியனா? இன வெறியனா? அப்படி நான் நினைக்க
வில்லை. அப்படிப் போர்ஸ் பண்ணுவது நல்லதல்ல. இது ஒரு 'கிராஸ்
இஷ்யூ.' வர்க்கப் பிரச்சினை. எப்படி இது வர்க்கப் பிரச்சினை. எப்படி
இது வர்க்கப் பிரச்சினை என்றால், சென்ற 35 ஆண்டுகளாக ஸ்ரீலங்கா
விடுதலை அடைந்த பிறகு, முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் போயிற்று.
அது சோஷலிச வளர்ச்சிப் பாதையில் போகவில்லை. தமிழர்கள் பிரச்சினை,
சிங்களவர் பிரச்சினை, எதையும் அந்த அரசால் தீர்க்க முடியவில்லை.
இன்றைக்கு அங்கே விலைவாசி உயர்வு மிகவும் அதிகமாக உள்ளது நாமெல்லாம்
எள்ளி நகையாடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஸ்ரீலங்காவில்தான்
1970 ஆம் ஆண்டில் 40,000 வேலையில்லாத வாலிபர்கள் அந்த அரசாங்கத்
திற்கு எதிராக ஆயுதம் தாங்கி கலவரம் நடத்தினார்கள் என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள
நாடு அது. விலைவாசி உயர்ந்திருக்கிற நாடு. 1977 ஆம் ஆண்டு ஒரு அமெரிக்கன்
டாலர் வாங்க 8 சிலோன் ருப்பீ தேவைப்பட்டது. ஆனால் 1980-ல்
ஒரு அமெரிக்கன் டாலர் வாங்க 20 சிலோன் ருப்பீ தேவைப்பட்டது. இப்
போது 1983. எந்த அளவுக்கு இன்ப்ளேஷன் ஏற்பட்டிருக்கிறது என்பது
தெரிய வேண்டிய விஷயம். மேலும் அந்த நாடு ஐ.எம்.எஃப். கடனில் மாட்டிய
நாடு. இப்போதுதான் நாம் மாட்ட ஆரம்பித்திருக்கிறோம். அது, வசமாக
மாட்டிக்கொண்ட நாடு. நான் சொல்லவில்லை இதை. திரு. ஜெயவர்த்தனே
அவர்கள் மார்ச் மாதம் டெல்லியில் நான்-அலைன்ட் கமிட்டியில் பேசும்போது
சொன்னார். "எந்த ஒரு தன்மானம் உள்ள நாட்டுக்காரனும் ஐ.எம்.எஃப்.
வாசலுக்குப் போனால், போகும்போது உள்ள தன்மானம் திரும்பும்போது
இராது" என்று சொன்னார். அந்த அளவுக்கு மாட்டிக்கொண்ட நாடு அது.
இந்த அளவுக்கு விலைவாசி உயர்வுக்கு மத்தியிலே, கடந்த ஜூலை மாதம்
நடந்த தாக்குதலுக்கு முன்புவரை, சிங்கள அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம்
நடத்தினார்கள். ஆகவே கடந்த 35 வருட காலமாக முதலாளித்துவப் பாதை
யில் போன அரசின்மீது சிங்கள மக்கள், தமிழ் மக்கள் எல்லாருக்கும் அதிருப்தி
இருந்தது. எனவே அந்த அரசு தங்கள் மீதுள்ள அதிருப்தியை தமிழர்கள்
பால் திருப்பியது. நீங்கள் எல்லாம் வேலையில்லாமல் இருக்க





காரணம் என்று தமிழர்கள்மீது திருப்பியது. எல்லா முதலாளித்துவ நாடு களிலும் அப்படித்தான் செய்வார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதபோது, தன்மீது வரும் கோபத்தை சகோதர மக்கள் மீது திருப்பிவிட்டு, இனப் பகையை மூட்டிவிட்டு, அவர்களை மோதவிடும் பழக்கம் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உண்டு. அப்படித்தான் ஸ்ரீலங்கா விலும் நடந்திருக்கிறது. அப்படித்தான் அங்கே தமிழர்கள்மீது திருப்பி விட் டார்கள். இந்த நிலையில் ஒன்றைச் சொல்ல விரும்புவேன். பிரச்சாரம் செய் கிறேன் என்று சொன்னாலும் பரவாயில்லை. இந்த நேரத்திலே இனப் பிரச் சினை சம்பந்தமாக இந்த நாட்டோடு வேறொரு நாட்டை ஒப்பிட்டுப் பார்க் கிறேன். இந்த ஆண்டு ஜூலை மாதம் நான் கியூபா நாட்டுக்குப் போயிருந் தேன். கியூபா அரசின் அழைப்பை ஏற்று 8 நாட்கள் சுற்றுப்பயணம் சென் றிருந்தேன். அங்கு ஸ்பேனிஷ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் மிக மெஜாரிட்டி. அடுத்து, நீக்ரோக்கள் இருக்கிறார்கள். அவர்கள் கியூபாவில் அடிமை வேலை செய்ய ஆப்ரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள். அங்கே இரண்டு இனம்தான். ஸ்பானிஷ், நீக்ரோக்கள். அவர்கள் அந்த நாட்டின் விடுதலைக்காக ஒன்று சேர்ந்து போராடி, 1959 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதி அங்கே சோஷலிசப் புரட்சி ஏற்பட்டது. அங்கே ஸ்பானிஷ், நீக்ரோக்கள் ஒன்றுபட்டுப் போராடினார்கள். 25 வருட சோஷலிச ஆட்சிக் காலத்தில் அங்கே அந்த இரண்டு இனங்களும் கலந்திருக்கின்றன. கலக்கிறது. யார் ஒரிஜினல் நீக்ரோ, யார் ஒரிஜினல் ஸ்பானிஷ் என்று கண்டுபிடிக்க முடிய வில்லை. அந்த அளவுக்கு இனம் கலந்துவிட்டது. கியூபாவில் சோஷலிசப் புரட்சியின் காரணமாக, சோஷலிசப் பொருளாதாரத்தின் காரணமாக இனப் பகை உண்டாக அவசியமில்லை. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கிறது என்ற உத்தரவாதத்தின் காரணமாக இனப் பகை இல்லை. ஸ்ரீலங்காவிற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திரம் அடைந்த கியூபாவிலே சோஷலிசப் பாதை அல்லது கொள்கையைப் பின்பற்றியதால், எல்லோருக்கும் எல்லாம் உண்டு என்பதால், அங்கே நீக்ரோக்களும், ஸ்பானிஷ்காரர்களும் கலந்துவிட்டார்கள். 25 ஆண்டுகளிலே வேகமாகக் கலந்திருக்கிறார்கள். ஒரிஜினல் நீக்ரோ, ஒரிஜினல் ஸ்பானிஷ் என்று பார்க்க முடியாத அளவுக்குக் கலந்திருக்கிறார்கள். எனவே ஒரு சோஷலிச நாடு இன வெறிக்கு முடிவு கட்டுகிறது. ஆனால் முதலாளித்துவ நாடு, ஸ்ரீலங்கா. அங்கே இன வெறி தூண்டி விடப்படுகிறது. அரசாங்கத்தாலே தூண்டிவிடப்படுகிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சோஷலிச நாடாக இருந்தால் தான், இனப் படுகொலை நிற்குமா? அதுவரையில் ஸ்ரீலங்கா தமிழ் மக்கள் கொலைதான் பட வேண்டுமா என்றால் இல்லை. சோஷலிச நாடு இல்லாத நிலையிலும் இந்த இனப் படுகொலையைத் தடுக்க யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. ஸ்ரீலங்கா சோஷலிச நாடு அல்ல. அங்கே உள்ள மக்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். எப்படி ஒற்றுமைப்படுத்துவது சாத்தியம் என்று நினைப்பார்கள். அதற்கு முன்னால்

பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். நேற்று, அவை
அவர்கள் சொன்னார்கள். ஸ்ரீலங்கா தமிழர் என்றால், எல்லோரும் ஒன்று
என்று நினைத்திருந்தோம். அவர் கூறியதற்குப் பிறகுதான் ஸ்ரீலங்கா
தமிழர் எத்தனை விதம் என்று தெரிகிறது.

(முற்பகல் 10-30)

நேற்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கூறியதுபோல், ஸ்ரீலங்கா
வில் 18 லட்சத்து 71 தமிழர்கள் வசிப்பதுடன் 8¼ லட்சம் தமிழ் பேசும்
முஸ்லீம் மக்களும் வாழ்கிறார்கள். சரித்திரபூர்வமாக நாம் பார்த்தோமே
யானால், சுதந்திரம் கிடைத்ததற்கு முன்னால், அரசாங்கப் பணியைப் பொறுத்
தவரையில், சிங்களவர்களோடு சம வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு
ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால், 18 பெர்சென்ட் தமிழர்களுக்கு
அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ஸ்ரீலங்காவில்
அரசாங்க உத்தியோகங்களில் தமிழர்கள் 5 சதவிகிதத்திற்கு மேல் இல்லை.
போலீசில் 1 சதவிகிதம் கூட இல்லை. இராணுவத்தில் 5 சதவிகிதத்திற்கும்
குறைவு. அதுபோல் பார்லிமென்டில் சட்டப்படி 33 சீட் இருந்திருக்க
வேண்டும். ஆனால் அதைக் கூட 19 ஆகக் குறைத்து விட்டார்கள். அது
போல் தமிழ் மாணவர்கள் காலேஜில் சேர வேண்டுமென்றால், சிங்கள
மாணவர்களைவிட 20 சதவிகிதம் அதிகமாக மதிப்பெண்கள் வாங்கியிருக்க
வேண்டும். இப்படி எந்த வகையில் பார்த்தாலும், அங்கேயுள்ள
அரசாங்கத்தில் தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படவில்லை.
35 ஆண்டுகளாக அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமிழர்களுக்குச் செய்த
கொடுமைகள் காரணமாக தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான
உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

**திரு. ஆ. நல்லசிவன் :** இப்பொழுதே மணி அடிக்கிறீர்களே.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் பேச ஆரம்பித்து
15 நிமிடம் ஆயிற்று.

**திரு. ஆ. நல்லசிவன் :** இங்கே இன்னொரு பிரச்சினை அங்கே வாழ்கின்ற
இலட்சக்கணக்கான இந்திய வம்ச வழியினரான தோட்டத் தொழிலாளர்
களுக்கு குடியுரிமை வழங்குவதாகும். நான் என்ன சொல்கிறேன் என்றால்,
சிங்கள அரசால் தமிழ் மக்களையும் தமிழ் மக்களையும் திருப்திப்
படுத்த முடியாத நிலையில், இரண்டு இன மக்களையும் மோத
விட்டு வேடிக்கை பார்க்கிறது. மெஜாரிட்டி சமூகத்தைச் சார்ந்த





தலைவர்களையும், அதிகாரிகளையும், வன்முறையாளர்களையும் கையில் வைத்துக்கொண்டு தமிழர்களை வெட்டி, கொலை செய்கிறார்கள். அதேசமயத்தில் இந்தியாவிலுள்ள பார்லிமென்டிலும், தமிழகத்திலும் தமிழர்களுக்குக் காட்டப்படுகின்ற அனுதாபத்தைப் பார்த்த உடனே, ஒரு ‘ எக்ஸ்பிரஸ் கன்சர்ன் ’ என்கிற அடிப்படையில் அமெரிக்கா, மற்றும் பிரிட்டனுடைய இராணுவ உதவி வேண்டுமென்று சிங்கள அரசு கேட்கிறது. ஸ்ரீலங்காவில் இருக்கக் கூடிய முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினர் மீது மக்களுக்குக் கோபம் வராமலிருக்க அங்குள்ள அரசு “ மக்கள் இன வெறி ”யை வளர்க்கிறது. பிறகு அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலை அங்கு ஏற்படுகிறபோது, அரசாங்க இயந்திரமே வேலை செய்ய முடியாதபோது, இங்கே நாம் பார்லிமென்டில் கண்டனம் தெரிவித்தபோது, உடனடியாக பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் இராணுவ உதவியை நாடுகிறது. அமெரிக்காவோ கழுகுக் கண்களுடன் காத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே டிகோகார்சியா தீவில் அமெரிக்கா ராணுவ தளம் அமைத்திருக்கிறது. இன்னும் எங்கெல்லாம் அமைக்க முடியும் என்று காத்துக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் இரண்டு இன மக்களும் மோதிக் கொண்டிருப்பது அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. சரித்திரத்தைத் திரும்பிப் பார்ப்போமேயானால், அமெரிக்கா எப்போதுமே இரண்டு பக்கத்திற்கும் துணை போகும். அந்தப் பக்கம் இராணுவ தளவாடத்தை அனுப்பிவிட்டு இந்தப் பக்கம் உளவாளிகளை அனுப்புவார்கள். அது போல் இங்கே ஜெயவர்த்தனேக்கும் ஆயுதம் கொடுப்பார்கள். அதே சமயத்தில் ஸ்ரீலங்காவில் தமிழர்களையும் சிங்களவர்களையும் ஆட்டிப் படைக்க அமெரிக்கா காத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஈரானுக்கும் ஈராக்குக்கும் யுத்தம் நடைபெறுகிறதே அந்த இரண்டு நாடுகளுக்கும் ஆயுதம் சப்ளை பண்ணும் நாடும் அமெரிக்கா தான். இவர்கள் இரண்டு பேரும் அடித்துக் கொண்டு சாகும் அதேவேளையில் அமெரிக்காவுக்குப் போதிய வருமானம் வருகிறது. அதே விஷயம் தான் ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், நடக்கப் போகிறது. இங்கே ஒன்றைச் சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ‘ஐக்கிய நாடுகள் அவைக்குப் போகாதீர்கள்’ என்று சொன்னதாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் நாங்கள் சொன்னதன் கருத்து உண்மை தான் என்பதை உணர்ந்து அமெரிக்கா அரசின் பாதுகாப்புத் துறைச் செயலாளர் திரு. வென்பெர்ஜெர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியது தொடர்ந்து, அப்படிப் பேசியவர்கள் வாயடைத்து நிற்கிறார்கள். ஏன் அவர் ஸ்ரீலங்காவிற்குப் போனார், ஏன் இந்த இரகசிய சந்திப்பு நடந்தது என்று நாம் யோசித்துப் பார்ப்போமேயானால், நான் சொல்கிறேன் உண்மையிலேயே இந்தப் பிரச்சினையில் அமெரிக்கா ஸ்ரீலங்காவில் விளையாடுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்களே அதுபோல் சிங்களர் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா ஏகாதிபத்தியம் விளையாடுகிறது. இரண்டு இன

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 அக்டோபர் 28

மக்களை மோத விட்டு "வெஸ்டர்ட் இன்டரஸ்ட்" என்று சொல்லுவார்களே, அதுபோல் அழிவுக்குத் துணை போகின்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போக்கை நாம் தீவிரமாக எதிர்த்து முறியடிக்க வேண்டும். சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் சுமுகமான முறையில் பேசி ஒன்றுபடுத்த வேண்டும். ஆனால் இரு இன மக்களையும் ஒன்றுபடுத்த முடியாது என்று பேசுவது யதார்த்த உண்மை அல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் "Sri Lanka is a Soverign State" என்று குறிப்பிட்டார். அங்குள்ள பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினைதான், மறுக்கவில்லை. ஆனால் அதுவே திட்டமிட்டு செய்யப்படுகிற ஒரு இனப் படுகொலை என்று ஆகும்போது, அந்தப் பிரச்சினை ஸ்ரீலங்காவைத் தாண்டிப் போகிறது. உலக நாடுகள் தலையிட வேண்டிய மனிதாபிமான உணர்வு உண்டாகும். உலகம் பூராவும் அபிப்பிராயம் உண்டாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில், விசேஷமாக தமிழகத்தில் அவர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக கவனம் செலுத்தப்படுகிறது, அக்கறை காட்டப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த. இரண்டு இனத்தவர்களுமே இந்தியாவிலிருந்து போனவர்கள் தான். இந்நிலையில் ஸ்ரீலங்காவில் இருந்துகொண்டு இரண்டு இனத்தவர்களும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டிருப்பது சரியல்ல. அவர்களை ஒற்றுமைப் படுத்தி சுமுகமாக வாழ வைக்கின்ற பொறுப்பு இந்திய அரசுக்கு இருக்கிறது, தமிழகத்துக்கும் இருக்கிறது. இரண்டு சாராரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து போனவர்கள் தான். தமிழர்களுக்குச் சற்று முன்பு சிங்களவர்கள் அங்கு போனார்கள். அதுபோல் சமீபத்தில் இந்தியாவிலிருந்து போன இந்தியர்கள், அதாவது இந்திய வம்சா வழி தமிழர்கள் வேறு இருக்கிறார்கள். அவர்களும் சிங்களவர்களோடு ஒற்றுமையாக வாழ வேண்டியிருக்கிறது. ஆகவே தான் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மிகவும் சுமுகமாகத் தீர்வு காண வேண்டியிருக்கிறது. இனப் படுகொலையைச் செய்யும் ஜெயவர்த்தனேயை நாம் தனிமைப்படுத்த முடியும். பிரச்சினைகளுக்கு முடிவு காணும்போது, அங்கே வாழ்கிற மக்கள் தான் அது குறித்து ஒருமித்து முடிவு செய்ய முடியும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அவர்கள் ஏற்க வேண்டும். கம்யூனிஸ்ட் பார்ட்டி அங்கேயுள்ள தமிழ் மக்களுக்கு 'அட்டானமி' தர வேண்டுமென்று பேசிய காரணத்தால் தான் அது ஜெயவர்த்தனே அரசால் தடை செய்யப்பட்டது. சமீபத்தில் கூட அங்கே 'சிலோன் மக்கள் கமிட்டி' என்ற ஒரு அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. அது "ஏதாவது பிரச்சினை என்றால், மக்களே அதற்குத் தீர்வு கண்டுவிடக் கூடாது, அரசே பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறது. ஸ்ரீமாவோ பண்டாரநாயகா கூட இனப்படுகொலையை அன்றைக்குச் செய்தார்கள். ஆனாலும் கூட அவர்கள் அன்றைக்கு காலத்தின் போக்கை அறிந்து நல்ல முறையில் அவ்வளவு தூரம் பாதிக்க விடாமல், பிரச்சினையைச் சமாளித்தார்கள். ஆனால் இன்றைக்கு அங்குள்ள அரசின் சக்தி



1983 அக்டோபர் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

பலவீனமாக இருக்கிறது. ஆகவே தான் பலவீனமாக இருக்கிற கையைப் பலப்படுத்த வேண்டியது இந்தியாவின் கடமை என்று, நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பார்த்தசாரதியை ஸ்ரீலங்காவிற்கு அனுப்பியிருந்தார்கள். திரு. பார்த்தசாரதி ஸ்ரீலங்காவிற்குப் போகிறார் என்றால், தனிப்பட்ட முறையில் நாம் பார்க்கக் கூடாது. இந்தியாவிலுள்ள 70 கோடி மக்களின் பிரதிநிதியாக, குறிப்பாக தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவோடு திரு. பார்த்தசாரதி ஸ்ரீலங்காவிற்குப் போகிறார் என்று பொருள். இந்திய அரசு திரு. பார்த்தசாரதியை ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி இந்தப் பிரச்சினையில் தலையிடுவதன் மூலமாகவும், வெளியே உலக நாடுகளிடையே இதைப்பற்றி அபிப்பிராயங்கள் வெளியிடுவதன் மூலமாகவும், நான்-அலைன்மென்ட் மூலமாக நிர்ப்பந்தம் கொடுப்பதன் மூலமாகவும் திரு. ஜெயவர்த்தனேயை இணங்கவைத்து, நாம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏற்பாடு செய்ய முடியும். அவர்கள் ஏற்பாடு செய்கிற நல்ல முயற்சிக்கு நாமும் நிச்சயமாக ஒத்துழைக்க வேண்டும். அமிர்தலிங்கம் மற்றும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் எல்லாம் உலகம் பூராவும் சென்று திரு. ஜெயவர்த்தனேயின் செயல்களை அம்பலப்படுத்துகிறார்கள். சமீபத்தில் கூட பிரதிநிதிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சந்தித்து இது பற்றிக் கூறினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த வகையில் அவர்களுடன் அனுதாபத்துடன் பேசியதை நாம் பார்த்

(முற்பகல் 10-40)

தோம். இந்த விதமாக வெளியுலக ஆபத்தைச் சமாளிப்பதற்கு நாம் முயற்சி பண்ணவேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு அதை தேவையான வட்டமேஜை மாநாட்டிற்குக் கொண்டு வரும் முயற்சிகளை திரு. பார்த்தசாரதி செய்கிறார். அப்படிக் கொண்டு வந்தால், இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிடலாமா என்று வரும். அப்படி வரும்போது, இது உள்நாட்டுப் பிரச்சினையா, வேறு ஏதாவதா என்று பார்க்கிறபோது, ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் வந்தபோது, அண்ணா அவர்கள் பார்லிமெண்ட்டில் பேசினதை நேற்று திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், போன நூற்றாண்டு போன வம்சா வழிப் பிரச்சினைக்கே அண்ணா பார்லிமெண்ட்டில் பேசினாரே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போன ஈழத் தமிழர்கள் பிரச்சினை பற்றி, எப்படி அது உள்நாட்டு பிரச்சினை அல்ல, வெளிநாட்டு பிரச்சினை என்று சொல்ல முடியும்? ஆனால் அந்த இன மக்களை அழிக்கக் கூடாது என்ற முறையில் நாம் தயங்குகிறோம். ஆகவே இது உள்நாட்டுப் பிரச்சினை தான். ஒரு பக்கத்து நாட்டில் நம் இன மக்கள் கொல்லப்படுகிறபோது, நாம்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 அக்டோபர் 28

பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியது உள்நாட்டுச் சூழ்நிலை மூலம்தான். அதனால்தான் நாங்கள் சொல்கிறோம்.

பிறகு ஒரு பிரச்சினை வருகிறது. இதற்குப் பரிகாரம் சிங்கள இன மக்களும், தமிழ் இன மக்களும் ஒன்று சேர இருக்கவேண்டியதுதான் என்று அங்குள்ள இடதுசாரிக் கட்சிகள் சொல்கிறார்கள். அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள். அவற்றை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அநுபவத்தின் அடிப்படையில் நாங்கள் சொல்கிறோம், தமிழ் மக்களுக்கு, பிரதேச அடிப்படையில், பிரதேச அந்தஸ்தில், சமஷ்டி அரசின் அடிப்படையை தமிழ் மக்கள் பரிசீலிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக இராணுவத்தை அனுப்பு என்றால், ஸ்ரீலங்கா மிரளாது, அமெரிக்காவை நோக்கி ஓடும். அந்த அடிப்படையில் அமெரிக்கா திரு. ஜெயவர்த்தனேயைப் பிடித்துக் கொள்ளத்தான் விரும்பும். அப்படியே நாம் இராணுவத்தை அனுப்பி ஈழத்தைப் பிரித்துக் கொடுத்தாலும், இராணுவம் அங்கேயே இருந்துவிட முடியாது. திரும்பி வரத்தான் வேண்டும். பிறகு அங்கு ஒரு கோடிக்கு மேல் உள்ள சிங்களவர்களின் மத்தியில் மைனாரிட்டியாக உள்ள தமிழர்களும் வாழத்தான் நேரும்.

இந்த நேரத்தில் பங்களா தேஷ் விவகாரத்தைச் சொல்லி பயனில்லை. அங்கு ஏழரை கோடி மக்கள் தனியாக இருந்தார்கள். அவர்கள் தனி இராணுவம் அமைத்துக்கொண்டு பாகிஸ்தானுடன் போராடினார்கள். ஆகவே பங்களா தேஷைக் காட்டிப் பேசுவதில் பிரயோசனம் இல்லை.

இந்தத் தீர்மானத்தின் மையக் கருத்து, (உ), (ஊ), (ஒ) பாராக்களில் உள்ளது. பேச்சுவார்த்தைக்கு ஸ்ரீலங்கா அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுக்கொள்கிறது. ஆனால் பாரா 'எ' இதற்கு நேர் மாறாக இருக்கிறது. இதில் ஐ. நா. சபை தலையிட வேண்டும் என்று சொல்கிறது. ஏன் இப்படி? முதலில் அவர்கள் சொன்னதை மாற்றிக் கொள்ளக் கூடாது என்று சேர்த்தார்களா? அங்கே போனால் செக்யூரிட்டி கவுன்சிலைக் கேட்க வேண்டும். இப்போது அங்கே நமது அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் பேசியது கூட இதற்கு வித்தியாசமாக இருக்கிறதே? ஐ. நா. சபை தலையிட வேண்டுமானால், 5 நாடுகள் அங்கே ஒப்புக் கொள்ள வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகள் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தாது என்பதில் சந்தேகமில்லை. அதற்கு நிறைய உதாரணம் வேண்டுமா? காஷ்மீர் பிரச்சினை 35 ஆண்டுகளாக அங்கே என்ன பாடுபடுகிறது? ஆகவேதான் ஐ.நா. சபைக்கே போகக் கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் அண்ணா தி.மு.க.-வுக்கு அமெரிக்கா மீது பரிதாப



1983 அக்டோபர் 28] [திரு. ஆ. நல்லசிவன்]

மான நம்பிக்கை இருக்கிறது. ஏன் என்று தெரியவில்லை. அதாவது ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா என்று போட்டிருக்கிறது. அப்படி என்ன பரிதாபமான நம்பிக்கை? நேற்று கூட இரெனேடா என்ற ஒரு லட்சத்து 18 ஆயிரம் மக்கள் சுயேச்சையாக வாழ்கிற சின்னத் தீவின் மீது அமெரிக்கா படையெடுத்து, அதை செக்யூரிட்டி கவுன்சிலே கண்டித்திருக்கிறது. பிரான்ஸ் கண்டித்திருக்கிறது. பிரிட்டன் 'சப்போர்ட்' பண்ண முடியாமல் இருக்கிறது. அப்படிப்பட்டது அமெரிக்கா.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அமெரிக்காவின் மீது நமக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. மனிதர்களிடத்தில் நம்பிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் முயற்சிகளை மேற்கொள்கிறோம். அமெரிக்கர்களும் மனிதர்கள்தான் என்று நம்புகிறோம். அமெரிக்கர்களும் மனம் திருந்துவார்கள் என்ற நம்பிக்கையை நமக்கே சீனாதான் ஏற்படுத்துகிறது. ஆகவே சீனாவுக்கு இருக்கிற நம்பிக்கை நமக்கும் இருக்கக்கூடாதா என்ற அடிப்படையில்தான் பல முறைகளில் எடுக்கிற முயற்சிகளில் அதுவும் ஒரு முயற்சியாக தீர்மானத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் அனுமதிக்கப்பட்ட நேரத்தைப் போல 2 மடங்கு பேசியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் உறுப்பினர் 2 மணி நேரம் பேச வேண்டும் என்பது எனது ஆசைதான். ஆனால் என்னுடைய ஆசையை சபையில் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இந்த அரசே அமெரிக்க தூதருக்குக் கொடுத்த கடிதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று படித்துப் பார்க்க வேண்டும். அதற்கும் இங்குள்ள தீர்மானத்திற்கும் சம்பந்தம் இல்லை. அதில் 'அமெரிக்க அரசு தங்களுடைய ஆதிக்க அரசியலுக்கு ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பகடைக் காயாகப் பயன்படுத்தக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் அப்படிப் போட்டார்கள்? இன்னும் அமெரிக்காவிடம் ஏன் போகிறார்கள்? அவர் இப்படிச் சொன்ன காரணமே அமெரிக்கா ஏற்கெனவே அப்படி பகடைக் காயாக பயன்படுத்தியதால் தான் என்று தெரிகிறது.

கடைசியாக, ஒரு விஷயம். தீர்மானத்தில் அமைச்சரவை இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு நிற்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக இந்தத் தீர்மானத்துக்குப் பின்னால் அமைச்சரவை நிற்க வேண்டும், இந்தியா நிற்க வேண்டும், தமிழ் மக்கள் நிற்க வேண்டும், அதன் மூலம் திரு. ஜெயவர்த்தனேக்கு பயம் வரவேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் அமைச்சர் திரு. காளிமுத்து பேசிய பேச்சுக்கும் இதற்கும் [illegible] வேண்டும். "ஒரு சின்ன நாடு,

அங்கே ஒரு கோடி மக்கள், சிங்களவர்கள், 9 கோடி தமிழர்களுக்கு சவால் விடுகிறார்கள்" என்று பேசியிருக்கிறார். இது நன்மை ஏற்படுத்துமா? தமிழர்களை சிங்கள இன வெறியர்கள் தாக்கும்போது, பக்கத்தில் ஒரு சிங்களக் குடும்பம் தமிழ்க் குடும்பத்து 4 வயது குழந்தையை எங்கள் வீட்டுக் குழந்தை என்று தூக்கிப் போய் வைத்திருந்து 14 நாட்கள் கழித்து பத்திரமாக ஒப்படைத்த சம்பவங்கள் நடக்கவில்லையா, சிங்கள வெறியர்கள் தமிழ் மக்களின் பணம், மற்றும் பொருட்களைக் கொள்ளையடித்தபோது அடுத்தாற் போல் வாழ்ந்த சிங்களக் குடும்பங்கள் அவர்கள் பொருட்களைக் கொள்ளை யடிப்பது போல் தூக்கிச் சென்று, கலவரம் அடங்கிய பின் கொண்டு வந்து கொடுக்கவில்லையா? இதுபோன்ற செய்திகள் வரவில்லையா? இதுபோன்ற சம்பவங்களை நமது முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார் கள். நேர்மையான சிங்களவர்கள், ஜனநாயக சக்திகளாக இல்லையா? 1 கோடி சிங்களவர்க்கு எதிராக 9 ரகோடி தமிழர்கள் என்று அமைச்சர் சொல்லுகிறாரே, அதை முதலமைச்சர் ஒத்துக்கொள்கிறாரா?

இராணுவத்தை மத்திய அரசு அனுப்பலாமா, கூடாதா, அனுப்புவது சரியா, முறையா, எப்படி இருக்கிறது என்று பார்த்து, அனுப்ப வேண்டாமா என்று பிரச்சினையைக் கிளப்ப விரும்பவில்லை இராணுவத்தை அனுப்ப முடியாமல் போனதுபற்றி வருத்தம் தெரிவித்திருக்கிறார். மார்ச் மாதத் திற்குள் இராணுவத்தை அனுப்பாவிட்டால், உள்நாட்டுப் போர் ஏற்படும் என்று பேசியிருக்கிறாரே? யாரை எதிர்த்து யார் உள்நாட்டுப் போர் செய் வது? நேற்று கூட முதலமைச்சர் பேரவையில் பேசியிருக்கிறார். என்னைக் கேட்டுத்தான் அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பேச்சு முதலமைச்சர் அனுமதி கொடுத்த பேச்சா? எனக்கு ஒரு சந்தேகம். இந்தப் பிரச்சினையை தமிழ் நாட்டில் ஒரே ஒரு கட்சி தனது உடைமையாக்கப் பார்க்கிறது. அதை ஏன் விட்டோம்? ஏன் அப்படித் தீர்மானம் போட்டார்கள் என்று தெரியவில்லை.

(முற்பகல் 10-50)

அவர் கடைசியில் இன்னொரு கருத்தையும் தெரிவிதிருக்கிறார். நாங்கள் ஒரு இளைஞர் பட்டாளத்தை தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். அது தயாராக இருக்கிறது. காலத்தின் கட்டளைக்காக அது காத்துக் கொண் டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இது ஏதோ விவரம் தெரியாத ஒருவர் சொல்லுகிற கருத்தல்ல. ஆளும் கட்சியில் இருக்கிற ஒரு சாதாரண உள்கட்சி உறுப்பினர் தெரிவிக்கிற கருத்தல்ல, ஏதோ புரிந்து கொள்ளாமல் அவர் பேசுகிறார் என்று தள்ளிவிடுவதற்கு. ஆனால் அமைச்சர் பொறுப்பில் இருக்கிற ஒருவர் பேசுகிற பேச்சு இது. எனவேதான் "உங்களுடைய கொள்கைக்கும் இந்தப் பேச்சுக்களுக்கும் என்ன [illegible]





விரும்புகிறேன். தமிழ் நாட்டில் மற்ற அரசியல் கட்சிகள் அரசியல் ஆதாயம் தேடுகிறார்களே, தாமும் ஆதாயம் தேடலாம் என்று பார்க்கிறார்களா? "ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துப் பேசுவதில் ஒரு கட்சி மட்டுமே அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளுவதா? அந்த ஆதாயம் ஒரு கட்சிக்கு மட்டுமே போவதா? நாமும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இப்படிப் பேசப்படு கிறதா?" என்று கேட்க விரும்புகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் கொடுத்துள்ள திருத்தங்கள் அனைத்தையும் நான் வற்புறுத்துகிறேன் என்று சொல்லி, அவைகளை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களின் பிரச்சினையில் இந்த அவையின் உணர்வில் நானும் பங்கேற்பதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையைக் குறித்து நான் பேசுவதற்கு முன்னதாக நான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப் படுத்தி இந்த அவையிலே அவர் மட்டும் அழுதார் என்று நினைக்கவில்லை. இந்த அவையே அவரோடு அழக்கூடிய அளவுக்கு உணர்வுகளை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அந்த உணர்வுதான் தமிழ் மக்களுடைய உணர்வு. ஆனால் அப்படி அந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குக் கூட, இழவு வீட்டில் அழுவதற்குக்கூட நாம் இத்தனை நாள் காத்துக்கொண்டிருக்க நேரிட்டது. ஜூலைத் திங்களில் அழ வேண்டிய அழுகையை இப்போதுதான் நாம் அழுது கொண்டிருக்கிறோம். "இது கூட தமிழ் நாட்டின் தலைவிதியோ? இது தமிழ் நாட்டு அவைதானா? இந்த அவையில் அழுவதற்குக்கூட ஆறு மாத கால அவகாசம் தேவையா?" என்று எண்ணிப் பார்க்கிறபோது மெத்தவும் நான் வருத்தப்படுகிறேன். என்ன சொல்வது என்றே புரியவில்லை.

ஆந்திரத்திலே பேசி, கருநாடகத்திலே பேசி, கேரளத்திலே பேசி, அதற்குப் பின்னாலே அமெரிக்காவில் இருக்கிற ஒரு மாகாணத்தில்கூட தீர்மானம் போட்டதற்குப் பிறகு, அதைப் போலவே பிரிட்டிஷ் பார்லிமெண்ட்டில், நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்களின் வருத்தத்தை திரு. ஜெய வர்த்தனேவுக்கு எதிராகக் கொடி பிடித்து கருத்து தெரிவித்த பிறகு, அவற்றையெல்லாம் தமிழகத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டு, இருந்து விட்டு, இந்தத் தமிழகத்தின் அவை தூங்கிக் கொண்டிருந்ததே, அதை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். "நம்முடைய உணர்வுகளையெல்லாம் நாம் வெளிப்படுத்துவதற்குக்கூட வாய்ப்பு இல்லாத

அவர் தெரிவித்திருப்பது தமிழ் உணர்வல்ல, இந்த நிலைமையில் அவர் அங்கே தமிழ் உணர்வை வெளிப்படுத்தியதற்காகப் பாராட்டு என்று தீர்மானத்தில் போட்டிருப்பதை நீக்கிவிட வேண்டும். காரணம் அது தமிழ் உணர்வு இல்லை; இல்லவே இல்லை என்று கூறை மீது ஏறிக்கூட நின்றுகொண்டு கூறுவேன் அது தமிழர்களின் உணர்வே அல்ல. தமிழர்கள் உணர்வு என்பது இங்கே நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோமே அது. இத்தகைய உணர்வுகளே இல்லாதவர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள் அவர்கள்தான் ஐ.நா..வுக்கும் செல்கிறார்கள் என்றால், அது தமிழ் நாட்டின் தலை எழுத்து என்று சொல்வதைத் தவிர, எனக்கு வேறு ஒன்றும் சொல்லப் புரியவில்லை.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் இருக்கிற ஆசிரியர், அரசு ஊழியர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் இங்கே இருக்கிற அரசியல் கட்சிகள் மற்ற மற்ற அனைவருமே மேற்கொண்டிருக்கிற அனைத்து முயற்சிகளையுமே நாம் பாராட்டினால் என்ன கெட்டுப் போய்விடும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். முதல்வர் எடுத்துக் கொண்ட முயற்சியை முதல்வரே பாராட்டுகிற வகையில் தீர்மானத்தைப் போடுகிற நீங்கள், அதைக் கொண்டு வருகிற நீங்கள், இதற்காக பல்வேறு தரப்பினரும், பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளையும் குறிப்பிட்டுப் பாராட்டினால் என்ன? எல்லோரும் ஈழத் தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடித் தர வேண்டும் என்ற நோக்கத்தோடுதானே செயல்பட்டிருக்கிறார்கள். வேண்டுமானால் தனித் தனியாக அவர்கள் செயல்பட்டிருக்கலாம். பேரணியை முதன் முதலாக நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். அக்கழகம் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியபோது, மத்திய அரசே கூட ஒத்துக்கொண்டு அதற்கு ஒத்துழைப்புத் தந்ததே அதை ஏன் பாராட்டக்கூடாது! அதைப் போல் ஒரு கோடி கையெழுத்து இதற்கு முன்னால் எப்போதாவது ஐ-நா-வுக்கு அனுப்பப்பட்ட வரலாறு உண்டா? நம் நாட்டிலிருந்து இதற்கு முன்பு அப்படி அனுப்பப்பட்டதா? அதை தி.மு.க. செய்ததே! அதை ஏன் பாராட்டக் கூடாது? இப்போது ஸ்ரீலங்காவில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தையே நீக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் கடைசி பாராவில், கடைசி பகுதியில் சொல்கிறார்களே —அந்தச் சட்டத்தையே முதலில் எதிர்த்து எரித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அல்லவா? ஏன் அதைப் பாராட்டியிருக்கக் கூடாது? பாராளுமன்றத்தில் எதிரே உண்ணாவிரதம் இருந்து உலக மக்களின் கவனத்தை ஈர்த்தார்களே தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள்! அதை ஏன் பாராட்டக் கூடாது? 25 ஆண்டுக் காலம் தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் தொடர்ந்து அங்கம் வகித்து வந்த டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சினையின் காரணமாக ராஜிநாமா செய்தபின்னே—அவர்



இல்லாமல் ஒரு அவையா என்று வெளியே உள்ளவர்கள் கேட்கிற அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அவர் ராஜிநாமா செய்ததும், அவரோடு பேராசிரியர் அவர்கள் ராஜிநாமா செய்ததும் பாராட்டப்படக் கூடாதா? இவைகளெல்லாம் தமிழ் உணர்வுகளை வெளிப்படுத்தத்தானே? இவர்களை எதிர்த்தா அவர்கள் ராஜிநாமா செய்தார்கள்? ஏன் அந்தப் பெருந்தன்மை இவர்களுக்கு வரவில்லை? தியாகப் பயணம் மேற்கொண்டாரே திரு. நெடுமாறன் அவர்கள், ஏன் அதைப் பாராட்டியிருக்கா கூடாது? திரு. குமரி அனந்தன் அவர்கள் போராட்டத்தை நடத்திக் காட்டினாரே, ஏன் அதைப் பாராட்டியிருக்கக் கூடாது? அரசு ஊழியர்கள் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் இணைந்து அவரவர்கள் சக்திக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தார்களே, அதனையெல்லாம் சுட்டிக்காட்டினால் அவர்கள் நல்ல பெயர் எடுத்து விடுவார்களோ, விளம்பரப்படுத்தப்பட்டு விடுவார்களோ என்ற குறுகிய நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைத் தயாரித்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு இடமில்லை, நாம் மட்டும் செய்தோம் என்று இருக்கவேண்டும் என்றுதானே செய்திருக்கிறார்கள். இது நியாயம்தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். எனவே அதிலே அவர்களையும் சேர்க்கிற வகையில் இந்தத் தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று அவையின் முன்னவர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். பாராட்டுவதற்கு அவர் என்ன செய்துவிட்டார்? அரசியல்வாதியாக அல்ல; நான் மக்களுடைய சாதாரண பிரதிநிதியாக நின்று இந்த அவையில் கேட்கிறேன். அவர் அப்படி என்ன செய்துவிட்டார்? ஐ.நா. சபைக்குச் சென்று உலக நாடுகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளைப் பற்றியும் பேசிய நேரத்தில் ஒரு வார்த்தையாவது இதைப் பற்றிச் சுட்டிக்காட்டினாரா, தொட்டுக்காட்டினாரா? அப்போது பக்கத்திலே சென்று மின்துறை அமைச்சர் அவருடைய காதோடு காதாக சொல்லியாவது அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தச் செய்தாரா? என்ன செய்ய முடிந்தது? படையெடுப்பது ஸ்ரீலங்கா அரசை எதிர்த்து அல்ல. நம்முடைய மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய படையை அனுப்பி வைப்பேன் என்று காலத்திலே எச்சரிக்கையாவது தந்தாரா? வங்க தேசத்திலே ஏதாவது நடக்கிறது என்றால், நம்முடைய பிரதமர் மறுநாளே கொந்தளிக்கிறார், உடனே தீர்மானம் போடுகிறார், உடனே எச்சரிக்கை செய்கிறார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்றபோது, "அங்கே இருக்கின்ற நாடு தனியாகப் பிரிந்துவிட்டால், மறுபடியும் அவர்களை யார் காப்பாற்றுவது?" என்று கேட்டார்கள். தனியாகப் பிரிந்த நாடுகள் எல்லாம்

நசிந்து போய்விட்டனவா ? அதற்குப் பாதுகாப்புத் தருவதற்குப் பக்கத்திலே நின்று கொண்டிருக்க வேண்டுமா ? அப்படி எண்ணக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லும் போது அங்குள்ள தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களே போராடிப் பெற வேண்டும் என்று சொன்னேன். இந்திய நாட்டினரை அனுப்பி பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்கும்போது, அதற்குப் பாதுகாப்பாக நிரந்தரமாக இந்திய இராணுவம் நிற்க முடியாது. ஆகவே நான் சொன்னதை தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எந்த ஒரு நாட்டையும் விடுதலை பெற்ற தற்குப் பிறகு மற்ற நாடுதான் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது யில்லையே. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் யாருக்கும் தேவையில்லை.

கிரேனடா பற்றிப் பேசினார்கள். அங்கே ஒரு இலட்சம் பேர்கள் இருக் கிறார்கள். அது 135 சதுர மைல்களைக் கொண்ட சின்னஞ்சிறு நாடு. அந்த நாட்டிலே இராணுவப் புரட்சி நடந்ததாக அமெரிக்கா படையெடுத்திருக் கிறது. அந்த உணர்வு அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வு கூட இருக்கக் கூடாது என்று இங்கே இருக்கிறவர்கள் செயல்படுகிறார்கள். ஸ்ரீலங்காவிற்குப் படையை அனுப்பினால் அமெரிக்கா வந்துவிடாதா என்று கேட்டார்கள். நாம் நமது படையை அனுப்பினால், அமெரிக்கா வந்தால், அதை எதிர்ப்பதற்கு ருஷ்யா வராதா ? அமெரிக்கா, ருஷ்யா ஆகிய நாடு களின் படை வருகிறதென்றால், அவர்களிடம் நிறைய ஆயுதங்கள் இருக் கின்றன, ஆகவே உலக யுத்தம் வரும் என்கிறார்கள். அப்படியொரு நிலைமை வந்துவிட்டால், போராட்டம் வராது, போர் ஏற்படாது. உலகத்தை அழித்துவிட்டு யாரும் வல்லரசாக இருக்க முடியாது. அவர்களும் வாழ்ந்து விடமுடியாது. போராட்டம், போராட்டம் என்று பூச்சாண்டி காட்டுவார்கள். ஆனால் உலகப் போராக வர முடியாது. அது உண்மையிலேயே சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரதமர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக அமைந்திருக் கிறது. உள்நாட்டு விவகாரம் என்று சொல்கிறார்கள். ஆனால் 'முக்தி வாகினி' என்ற பெயரால் வங்கத்தில் தலையிட்டபோது, என்ன சொன்னார் கள் ? முக்தி வாகினியை அனுப்பியதே இந்தியாதான் என்பது உலகம் அறிந்த இரகசியம். அப்படி அனுப்பியபோது என்ன காரணம் சொன்னார் கள் ? "அடுத்த வீட்டுக்காரர்கள் விஷயத்தில் தலையிடக்கூடாது, எனவே



அவர்கள் சண்டையில் தலையிடமாட்டேன், ஆனால் அங்கே கொலையே நடந்தால் அங்கே நுழைவது நியாயம்" என்று தானே வாதிட்டார்கள். ஸ்ரீலங்காவில் நடந்த கொடுமைகளைப் பற்றி டாக்டர் சனார்த்தனம் அவர்கள் விளக்கினார்கள். குட்டிமணியினுடைய கண்ணைப் பிடுங்கி, இந்தக் கண்தானே தனி ஈழத்தைப் பார்க்க விரும்புகிறது, ஆகவே அதை நசுக்குகிறேன் என்று சொல்லி பிடுங்கி காலிலே போட்டு நசுக்கினார்களே, அவருடைய நாக்கை அறுத்து இரத்தத்தைக் குடித்து தமிழ் இரத்தத்தைக் குடிக்கிறேன் என்று சொன்னார்களே. இதற்கெல்லாம் ஆதாரம் கிடைக்க வில்லை என்று முதல்வர் அவர்கள் நேற்றுப் பேசியதாக நான் கேள்விப் பட்டேன். உண்மையிலேயே இல்லையென்று சொல்வதற்கு முடியாது. இதை அத்தனை ஏடுகளும் எழுதியிருக்கின்றன. அப்படியே சந்தேகம் இருந்தாலும், தமிழ் மக்களுடைய உணர்வைப் பாழ்படுத்தும் வகையிலே அந்தக் கருத்தை மறைக்க வேண்டுமா ? முதல்வர் மறுக்கவேண்டுமா ? யாருக்காக அந்த மறுப்பு ? ஆகவே அந்த அளவிற்கு, யாரும் கற்பனையில் கூட காண முடியாத அளவிற்குத் தமிழர்களை கொலை செய்த நிகழ்ச்சியை உள்நாட்டு விவகாரம் என்று பிரதமர் சொன்னால், நம்மை நம் இனத்தை அவர் காட்டிக்கொடுக்கி றார் என்றுதானே அர்த்தம். அதைத்தானே அவருடைய பிரதிநிதியாக மின்துறை அமைச்சர் அவர்கள் சென்று செய்திருக்கிறார்கள். ஆகவே நான் ஒன்றை இந்த அவையின் முன்னவர் அவர்கள் மூலமாக முதல்வர் அவர்களுக் குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன உணர்வுக்கு மதிப்புக் காட்ட வேண்டு மென்றால், "மின்துறை அமைச்சருக்குப் பதிலாக விவசாயத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களை அனுப்புங்கள், வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்களை அனுப்புங்கள் அல்லது மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்களை அனுப்புங் கள் அல்லது மதுரை அண்ணன் முத்து அவர்களை அனுப்புங்கள்" என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பிரதமருக்கு ஷேடோவாக இருந்து செயல் படமாட்டார்கள் ; தமிழ் உணர்வை வெளிப்படுத்தத் தவறமாட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையில் தலைமையேற்று இருக்கிறவரை அடிக்கடி இழுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் சொல்வதெல்லாம், இந்த அவையைக் காலத்திலே கூட்டவில்லை, கருத்துக்களைச் சொல்லுவதற்கு எங்களுக்கு வாய்ப்புகளைத் தரவில்லை. எங்களையெல்லாம் பொம்மைகளாக, போண்டாக் களாக மாற்றிவிட்டார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** போண்டா என்றால் என்ன போண்டா என

... வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1983 அக்டோபர் 28

ஊர்வலமும், பொதுக்கூட்டமும் என்று அன்று அறிவித்தவுடன், எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் "இந்த ஊர்வலமும் வேண்டாம், பொதுக் கூட்டமும் வேண்டாம், வெறும் கதவடைப்பு மட்டும் போதும்" என்று அவர் கைப்பட எழுதிய தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் "அதை இவர் என்ன சொல்வது, நான் என்ன கேட்டுக்கொள்வது" என்று கருதாமல் பெருந்தன்மையோடு, பெருநோக்கோடு அதை ஏற்றுக் கொண்டார். "இதிலே மாநில அரசு செய்வதற்கு ஒன்றுமில்லை மத்திய அரசு தான் கேட்க வேண்டும். மத்திய அரசும் இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும். நான் கூட ஏழு ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவன்" என்றும் கலைஞர் சொன்னார்கள். இது நாடு அறிந்த விஷயம் என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில் அதற்குப் பின்னாலே ஒருவர் 'உண்ணாவிரதம் இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். எப்படி உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் கேட்டார்கள். ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் என்று சொன்னார் ஒருவர். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அதற்கு அடுத்து, இவர் 'சாகும்வரை உண்ணாவிரதம் என்றால், தமிழ் நாட்டில் முதல் ஆளாக இந்த இராமச்சந்திரன் இருப்பான்" என்று சொன்னார். "ஸ்ரீலங்கா வாழ் தமிழர் பிரச்சினை தீர வேண்டுமென்றால் அதற்காக உண்ணாவிரதம் இருக்கவேண்டும் என்றால், அதிலே முதல் ஆளாக, களப்பலியாக ஆவதற்கு நான் தயார்" என்று அன்றையதினம் அறிவித்தார்கள். அது மட்டுமல்ல, இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்றும், அப்படி கலைக்கப்பட்டால் அதற்குப் பரிகாரம் காண முடியும் என்றுகூட ஒரு கட்சியினுடைய தலைவர் சொன்னார். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, அவர்கள் மிகவும் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தாலும், "இந்தப் பிரச்சினை தீரும் என்றால், இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆட்சியைக் கலைப்பதன் மூலமாக, ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை தீருமானால், இந்த ஆட்சியை, எங்களுடைய அரசை, கலைத்துக் கொள்ளத் தயார்" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன முதல் அமைச்சர் யார் என்று கேட்டால், நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை நான் குறிப்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் இதைச் சொல்லிவிட்ட பிறகும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, நம் காரியத்தை விட்டுவிட்டு, திரு. ஜெயவர்த்தனேவை நாம் விட்டுவிடுகிறோம். நான் இதை முன்னுரையாகக் கூறுவதற்குக் காரணம், நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்ட பிறகும் கூட, இன்னும் "இந்த அரசு பின்னோக்கியிருக்கிறது. தமிழர்களைக் காட்டிக்கொடுக்கிறது" என்று ஒரு நிலைமையை உருவாக்கிக்கொண்டிருப்பது



1983 அக்டோபர் 28] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

அன்றையதினம் அர்த்தால் என்று அறிவித்தவுடனே நாம் எல்லாக் கட்சி
களுக்கும் நன்றி தெரிவித்திருக்கிறோம். நாங்கள் எல்லா அரசியல் கட்சி
களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில், நம்முடைய இந்திய நாட்டினுடைய
பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்திருக்
கிறோம். காரணம் இதுவரையில் தமிழ் நாட்டு வரலாற்றில், ஏன் இந்திய
வரலாற்றில்கூட, ஒரு தமிழ் நாடு அரசு அர்த்தால் என்று அறிவித்துவிட்ட
பிறகு, "அதற்கு மத்திய சர்க்காரும் ஒத்துழைக்கும். மத்திய சர்க்காருடைய
ரெயில்வேயும், விமான தளங்களும் மூடப்படும். அத்தியாவசியமாக இருக்கின்ற
போஸ்ட் ஆபீஸ், தந்தி போன்ற காரியங்கள் மட்டும் நடைபெறவேண்டும்"
என்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நடத்தினோம். நான்
...ளாபடியே இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை எங்கள்
...ட்சியின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல,
அடுத்து இரண்டு நாட்கள் கழித்து ரெயில் நிறுத்தப் போராட்டம் என்றார்கள்
அதுவும் உறுப்பினர்களுக்குத் தெரியும். நான் விரிவாகச் சொல்ல விரும்ப
வில்லை. அதற்கு எனக்கு நேரம் இருக்காது. தங்கள் கட்சி வளர வேண்டு
மென்பதற்காக 5 ஆம் தேதி ரெயில் நிறுத்தப் போராட்டம் என்று அறிவித்
தார்கள். அதற்கு உடனே புரட்சி தலைவர் அவர்கள் அறிஞர் அண்ணா
அவர்கள் வழியில், பாணி...ல் நடந்தார். "அது சாதாரண கட்சிதான், மிகப்
பெரிய கட்சியல்ல, அதை... சந்திக்கின்ற வலிமை இந்த அரசுக்கும், மத்திய
சர்க்காருக்கும் உண்டு" என்று சொல்லி ரெயிலை ஓட்டியிருக்க முடியும்.
பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்க முடியும். அந்தப் போராட்
டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிசுபிசுக்கச் செய்வதற்குக்
கூட முற்பட்டிருக்கலாம். அப்படி ஈடுபட்டிருக்க முடியும். பொது மக்களுக்
குப் பாதுகாப்பு தந்திருக்க முடியும். அப்படிச் செய்யாமல் மிகப் பெருந்
தன்மையாக அறிஞர் அண்ணா அவர்கள் பாணியில் நடந்து கொண்டார்கள்.
அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டிருந்
தார்கள். அப்போது ஒரு முறை மாணவர்கள் மத்தியிலே சில பிரச்சினைகள்
உருவாயின. இரண்டு பஸ்களைக் கொளுத்திவிட்டார்கள். அண்ணா அவர்
கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டாம் என்று சொல்லி
விட்டார்கள். மாணவர்கள் மத்தியிலே நம்முடைய நிலைமையை விளக்க
வேண்டுமென்று அண்ணா அவர்கள் கூறினார்கள். குறிப்பிட்ட சில
கருத்தைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? இரண்டு பேருந்துகளை
என்னாலே உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால் இரண்டு பேர்கள் இறந்து
விட்டால், இந்த அண்ணாதுரையால் இறந்துவிட்டவர்கள் உயிரை மீட்டுத்
தர முடியாது என்று சொன்னார்கள். "பல பேருந்துகளை என்னாலே
கட்டிக்கொடுக்க முடியும். பஸ்களைப் புதிதாகக் கட்டிக்கொள்ள முடியும்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வகையிலே தான் 5 ஆம் தேதி நடந்த போராட்டமும். அந்தப் போராட்டத்தை நடத்தி அதில் ஒருவர் இருவர் யாராவது அசம்பாவிதத்தினால் இறந்துவிட்டால், அந்தப் பிணத்தை வைத்துக்கொண்டு அரசியல் லாபம் தேடலாம் என்று சிலர் கருதிக்கொண்டிருந்த நேரத்திலேதான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அண்ணா பாணியில் ராஜதந்திரமாக ஒருவரும் பலியிடப்படக் கூடாது என்ற அளவில் அன்றையதினம் இந்தியப் பிரதமர் அவர்களை அணுகி, அன்றையதினமும் ரெயில்களை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் தமிழகத்தில் இரண்டாவது முறையாக ரெயில்களை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்கள். இந்தியப் பேரரசும் ஒப்புக்கொண்டது. அதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இந்தியப் பிரதமர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பாராட்டுகிறேன் என்று சொன்னால், திருமதி இந்திரா அம்மையாரின் காரணமாக நான் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவன். திருமதி இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டியதற்காக 44 நாட்கள் சிறைச்சாலையில் இருந்தவன். இருந்தாலும் திருமதி இந்திரா காந்தியை இதற்கு நான் பாராட்டுகிறேன் என்று சொன்னால், இந்த நாட்டிற்காகப் பாராட்டுகிறேன். அவர்களைத் துதி பாட வேண்டும் என்பதற்காக அல்ல. அவர்களிடம் சபாஷ் பெறவேண்டும் என்பதற்காக அல்ல. உரிமைக்காகக் குரல் கொடுக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயங்கியது இல்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்றையதினம் திரு. ஜெயவர்த்தனே

(முற்பகல் 11-20)

அவர்களுக்கு இந்த அவை மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, "ஸ்ரீலங்கா உங்கள் நாடு என்றால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை." காரணம், ஸ்ரீலங்கா என்பது இந்தியாவோடு இருந்த ஒரு பகுதி. காலப்போக்கில் குமரிக் கண்டத்தின் முனையில் கடல் அரிப்பால் பல்வேறு கண்டங்களாகப் பிரிந்த சூழ்நிலையில் ஸ்ரீலங்காவும் ஒன்றாகப் பிரிந்தது. இந்த நேரத்தில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பண்டித நேரு அவர்கள் 'உலக சரித்திரம்' என்ற புத்தகத்தில் ஒன்றை எழுதியிருக்கிறார்கள். பக்கம் 172-ல் சொல்லியிருக்கிறார்கள். "கௌதம புத்தர் வாழ்ந்த காலத்தில் விஜயன் என்பான் இந்தியாவிலிருந்து சென்று ஸ்ரீலங்காவை வென்றதாகச் சொல்லப்படுகின்றது. அஜந்தா குகைகளில் விஜயன் யானைகளையும், குதிரைகளையும் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு ஸ்ரீலங்காவிற்குச் செல்வதைக் காட்டும் சித்திரம் ஒன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். விஜயன் ஸ்ரீலங்காவிற்கு 'சிங்களத் தீவு' என்னும் பெயரை





அளித்தான். சிங்களம் என்னும் சொல் 'சிங்கம்' என்னும் சொல்லிலிருந்து பிறந்ததாகும். சிங்கத்தைப் பற்றிய பழைய கதை ஒன்று ஸ்ரீலங்காவில் இன்றும் வழங்கி வருகிறது. எனக்கு அது ஞாபகமில்லை. 'சிலோன்' என்னும் ஆங்கிலப் பெயரும் 'சிங்களம்' என்பதிலிருந்தே பிறந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்வது, 'சிங்களம்' என்ற பெயரே விஜயன் வைத்த பெயர் என்பதுதான். நான் சொல்லவில்லை. அன்றையதினம் பண்டித நேரு அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதற்கு முன்னாலேயே ஈழம் என்ற பெயர் வந்துவிட்டது.

**திரு. ஆர். டி. சித்தாபதி:** துணைத் தலைவரவர்களே, அதற்கு நான் வருகிறேன். 17 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சங்கிலி என்னும் அரசன் காலத்தில் போர்ச்சுகீசியர் யாழ்ப்பாணத்தை தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தினர் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஒல்லாந்தருடைய ஆட்சி தோன்றியது. 18 ஆம் நூற்றாண்டு தமிழ் கண்டி இராச்சியத்தின் அரசாங்க மொழியாகியது. 1815-ல் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்திட்டார்கள். சரித்திரம் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவை மூலமாக திரு. ஜெயவர்த்தனேக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, 13 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் தனி அரசாக . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஆர். டி. சித்தாபதி:** . . . இருந்தது. கி.பி. 1215 முதல் 1620 வரை 400 ஆண்டுகளாக தனித் தன்மையோடு விளங்கியது. கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தது. 400 ஆண்டுக்காலம் யாழ்ப்பாணமும், கொழும்பும் தனித் தன்மையோடு இருந்திருக்கிறது என்று வரலாறு கூறிக்கொண்டிருக்கிறது. துணைத் தலைவர் அவர்களே, *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** *

**திரு. ஆர். டி. சித்தாபதி:** *

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** *

**திரு. க. இராமமூர்த்தி:** *

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1983 அக்டோபர் 28

**திரு. ஆர். டி. சித்தாபதி :** *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** *

**திரு. ஆர். டி. சித்தாபதி :** *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** *

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** *

**திரு. ஆர். டி. சித்தாபதி :** *

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சபையினுடைய நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அந்தப் பகுதி நீக்கப்பட்டு விட்டது. ஆகவே அப்படிப் பட்ட ஒரு விவாதம் இந்த அவையில் நடைபெற்றதாக குறிப்பில் இருக்காது. ஆகவே மீண்டும் உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பி அதற்கு இங்கே விளக்கம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது பேசியதையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்களும் அந்தப் பிரச்சினையை முடிந்த பிரச்சினையாகக் கருதி இனிமேல் நடக்க வேண்டிய ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி மட்டுமே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரும்பவும் உறுப்பினர் பேசிய குறிப்பிட்ட வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** ஏலேல சிங்கன் என்ற தமிழ் அரசன் 215-245-ல் சிங்களரைத் துரத்தி விட்டு ஆண்டான். முப்பது ஆண்டுக் காலம் அவன் அரசு புரிந்தான் என்பதை நான் இந்த நேரத்தில் திரு. ஜெயவர்த்தனேக்கு நினைவூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். கி.பி. 110-ல் கரிகால் சோழன் ஸ்ரீலங்கா மீது படையெடுத்து 12,000 பேரைச் சிறை பிடித்து காவேரிக்கு கல்லணை கட்ட வைத்தான் என்பது வரலாறு என்பதையும் நான் ஸ்ரீலங்காவை மமதையோடு ஆண்டுகொண்டிருக்கிற திரு. ஜெயவர்த்தனேக்கு இந்த அவையின் மூலம் தெரிவிப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். 412 முதல் 468 வரை அரசாண்ட மகா நாமன் என்னும் அரசன் காலத்தில் தமிழ் நாட்டு குளக்கோட்டன் திருக்கோண மலையில் முருகன் கோயிலைக் கட்டினான் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்வது சாலப்

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கி.பி. 1014-ல் இலங்கை முழுவதையும் முதலாம் இராசராசன் பிடித்து இலங்கையை ஆண்டான், இலங்கைக்கு மாற்றுப் பெயராக சோழமண்டலம் என்று விளங்கியிருக்கிறது என்பதையும் இந்த அவையின் மூலமாக திரு. ஜெயவர்த்தனேக்கு தெரிவித்துக்கொள்கிறேன். 17 ஆம் நூற்றாண்டில் சங்கிலி என்கின்ற மன்னனை தலையை வெட்டிக் கொன்றுவிட்டு போர்ச்சுகீசியர்கள் நாட்டைத் தன் வசப்படுத்திக் கொண்டார்கள் என்று வரலாறு சொல்கிறது. இறுதியாக 1658-ல் போர்ச்சுகீசியர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் அரசைப் பிடித்தனர் என்பதையும் நான் திரு. ஜெயவர்த்தனேயின் ஞாபகத்திற்கு எச்சரிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் டச்சுக் காரர்களிடமிருந்து கைப்பற்றினார்கள் என்கின்ற வரலாறும் திரு. ஜெயவர்த்தனேக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இறுதியாக ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு 1947-லும், பர்மாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் 1948-லும் சுதந்திரம் வழங்கிவிட்டுச் சென்றார்கள்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு வாதத்தை எடுத்து வைத்தார்கள். பங்களா தேஷ் பிரச்சினை வந்தபோது கூட, இந்திய நாட்டுக்கு வருகிற மக்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, இந்தியா தாங்காது என்றுதான் முதன் முதலாகக் காட்டமாக வாதத்தை எடுத்து வைத்தார்கள். அப்படி அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் உலக அரங்கில் உண்மையிலேயே பிரச்சினை என்ன, அங்கு நடந்தது என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அதற்குப் பிறகு எப்படிப்பட்ட நிலையில் பாகிஸ்தானிலிருந்து பங்களா தேஷ் பிறந்தது, அந்நாடு என்ன ஆனது என்பதை உலகம் மறந்துவிட்டிருக்காது. அதேபோல சமீபத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து அகதிகளாக வந்துகொண்டிருக்கின்ற தமிழர்களை என்னால் அனுமதிக்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு கூறியதன் பொருள் புரியாமல் சில பேர் பேசிக் கொண்டிருந்தால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? அந்த வாதத்தை உள்ளடக்கி நிரம்பப் பொருளிருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் இந்த அவையின் மூலமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், "நீங்கள் எந்த முடிவை எடுத்தாலும், எப்படிப்பட்ட ராஜதந்திர முடிவை எடுத்தாலும், அது உள்ளபடியே ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களைக் காப்பாற்றக்கூடியதாக, நன்மை அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்" என்பதுதான். அதற்காக வேண்டி, செய்து தான் ஆக வேண்டும் என்கிற காலக் கட்டம் வந்தால், "பங்களா தேஷ்

[திரு. ஆர். டி. சித்தாபதி] [1983 அக்டோபர் 28

பிரச்சினை யாதிரி முடிவை நீங்கள் எடுத்தால், அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்திலுள்ள 32 இலட்சம் உறுப்பினர்களும் உயிர்த் தியாகம்
செய்யக் கூடத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த மேலவை
மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்". (கரவொலி) ரத்த தானம்,
பொன், பொருள், ஆவி அத்தனையையும் எங்கள் பொன்மனச் செம்மல்,
தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சார்பில் தமிழர்
களுக்குத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதேசமயத்தில் அரசியல்
சதுராட்டத்தின் மூலம் எதையாவது பேசி, இந்த அரசுக்கு நெருக்கடியை
உண்டாக்கலாம் என்று நினைத்தால், அப்படி நினைப்பவர்கள் அதிலேயே
சிக்கித் தத்தளிப்பார்கள் என்று நான் எச்சரிக்கையோடு சொல்லி, அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசும் ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக ஒன்றாகக் கூடி, ஒன்றாக இருந்து
"திரு. ஜெயவர்த்தனேயைக் கண்டிப்போம், அங்கு இருக்கின்ற மக்களுக்கு
நல்வாழ்வு தருவோம்" என்று கூறி இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என் உரையை
முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

THIRU A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I shall try to finish in the fifteen minutes that you will be allotting to me and I am sure I will not cause any exercise of temper by any Member of the House.

This Resolution which has been moved by the Government seeks to cover all aspects of the problem of Sri Lanka Tamils. Before I refer to the operative part of the Resolution, may I first express, as many other Parties have done, our deep sense of agony, distress and grief at the terrible distress that has been caused to thousands of Sri Lanka Tamils in that island?

Before I go to the several aspects which have been dealt with in this Resolution, may I first make an appeal to the Government because nothing has been mentioned here? What are we going to do about the refugees who are already in Tamil Nadu? I must confess with sorrow that, when refugees arrived in Madras Airport, the arrangements that were made to receive them and to send them to their home-towns were so scanty that many of them felt with acute grief that they were not being looked after by their own brethren in Tamil Nadu. Thousands have arrived in Mandapam. It is not enough to feed them in distress camps and to give them food, however well prepared



1983 அக்டோபர் 28] [திரு. ஏ. ஆர். தாமோதரன்]

it may be. We have to tackle the problems of the refugees. I believe there are over 10,000 such refugees who have landed in Tamil Nadu. I am not able to have the exact figure. But, may I plead, on behalf of all the people of our State, that, if we mean business in so far as Sri Lanka refugees are concerned, we must take very active steps, not only to ameliorate the distress which they are feeling, but also to publicize to the world that these are the people who have lost, not only their belongings, their property, their businesses, but also the lives of their close relatives? Whatever may be said, whether it is an internal problem or an external problem or an international problem, I would like to remind Members of all Parties that President Jayewardene is not going to be frightened by Resolutions moved in the Tamil Nadu Assembly nor by expressions of horror expressed by us at millions of meetings in Tamil Nadu. It is only the exercise of international opinion which will bring President Jayewardene to realise that the ethnic minority in Sri Lanka cannot be destroyed either by executive fiat or by legislation passed in Sri Lanka Parliament. Different views have been expressed as to whether this is an internal question or whether it can be internationalised. I do not wish to enter the arena of political controversy which seems to have entered rather unnecessarily, Sir, when we are dealing with a Resolution about Sri Lanka Tamils. But, I would like to point out that a question that becomes international on the 27th of July may become a purely internal matter on the 10th August; and a purely internal matter on the 11th August can become an inter-

(முற்பகல் 11-40)

national matter on the 12th August. We must view the events as they have occurred in the island of Sri Lanka. Four different types of action were envisaged, of course, by different parties and suggested, even before the delegation from Tamil Nadu met the Hon'ble Prime Minister and pleaded with her to intervene actively to save the cause of the Tamils in Sri Lanka. One of the extreme steps that was suggested was military intervention. May I in all humility beg to be excused when I say that whatever may be the political overtones in this request, military intervention at that stage, or even at this stage, would be disastrous for a country like India? Even a country like the United States, a super Power which has occupied the island of

Grenada is facing international opposition today because it has breached certain canons of international law. The same behaviour-my hon. Friend Thiru Nallasivan is not here-has been displayed by other super Powers in Hungary, Afhanistan and other countries. Let us not differentiate between the super Powers. They are all ultimately selfish and will protect their own national and international interests. I would, however, like to say that considering the present position of our country, military intervention at that stage or at this stage is not possible.

But, Sir, as this Resolution itself has pointed out, we must actively pursue the matter in other international forums to bring home to the people of the world that it is genocide that has been committed in Sri Lanka. It is not a riot between two linguistic groups. If it were, it would be excusable and we could say that it is a law and order problem and an entirely internal matter. As the hon. Member Thiru M. P. Subramaniam pointed out, we have troubles in our own country. But there is one essential difference between Sri Lanka Government's attitude and the attitude of the Government of India. We do not use the Government forces or the Army to kill or destroy an ethnic, linguistic or religious minority. If we do that, we are guilty of genocide and this is exactly what has happened in Sri Lanka. Over 2,800 people—and even that figure is not known because of censorship that has been clamped throughout the island—I believe that almost 2,800 or 3,000 people were killed in the island during the violence that took place during the last week of July. Whatever may be the views of the various parties in trying to solve the problem only through bilateral negotiations, we must also Mobilise public opinion at the international level amongst Governments and non-Governmental agencies, as the Minister for Electricity who is now a member of a Delegation is trying to do in New York in seeking the help of the Amnesty International and other non-Governmental associations. I still insist that if the Government of India do not raise this matter before the Human Rights Commission at least, we would lose our case because it is not correct for us to depend too much on the good offices of Thiru G. Parthasarathy, the personal envoy of our Prime Minister to President Jayewardene. Suppose the efforts of Thiru G. Parthasarathy fail–I should not now raise this matter because



I may be asked why we should assume that the talks will fail, but still we have to think what would happen if the said talks failed because we are actively involved in this dispute. Therefore we have to be prepared and we must create international public opinion which will give strength to our Prime Minister's envoy in his negotiations with President Jayewardene for a political solution to the problem of Sri Lanka Tamils. I will not go into the question of the different problems faced by the Tamils living in the Jaffna area, the Tamils in the Colombo area and the Tamils who are plantation workers. Their problems are all different. The creation of a separate State may produce complications for the Tamils living outside that State. This is where, as the Hon. the Leader of the House mentioned, 'Raajathanthiram', diplomacy of the highest order, is required to solve this problem. We do not seek to go to war with Sri Lanka. As my hon. Friends have pointed out, it is not a simple matter for our country to involve itself in a conflict with any other country, however small it may be, because super powers have a tendency to drift into these areas and create an international war which may continue for 25 or 30 years with disastrous consequences to our own nation. I would only request that we must try to impress upon the Government of India the magnitude of the problems. The Prime Minister has also accepted that the problems are there. In fact, when we met her in the delegation, she did realise the problems in a very astute manner and she did mention that all options were still left open with the Government of India. She has not closed any avenue, she has not refused anything and she has not said that she will not take it to the United Nations at an appropriate stage. Therefore, I think we would do well to leave it to the Prime Minister to decide how and when these issues are to be raised in international forums. But, I would plead that, in the negotiations which Thiru Parthasarathy will have with President Jayewardene, all the Members of Parliament of Sri Lanka, who are no longer Members of Parliament, should be associated, in a round table conference representing different Tamil interests so that a workable political solution can be found to the problems of Sri Lanka Tamils. I would here like to mention how great a divisive factor language has become in this world. India today is being torn apart and almost threatened with balkanisation because of the vigorous linguistic forces which we have unleashed

in our country. Happenings in Sri Lanka should be an eye-opener to all muti-lingual nations, which still wish to remain as one nation, to realise that unless they learn to co-exist with linguistic groups within the same State and within the same nation, the entire nation is in peril of being destroyed. When we talk of the problems of Sri Lanka Tamils, we must also realise that there are minorities in our country—the religious minorities, the linguistic minorities, etc. What has happened in Assam and other parts of India is a reminder to us in India that unless we learn to join together in a real sense of promotion of integration, our nation is also in the same danger that is facing Sri Lanka and, possibly, other nations with multi-lingual groups. The presence of problems for the Tamils in Sri Lanka has caused other nations in South-East Asia also to be concerned about this problem. In tackling this situation, I would request the Government of India to bear in mind that the interests of Tamils in other parts of South-East Asia should not be endangered by any possible step that we may take in Sri Lanka. It is diplomacy of a world order that is required. We have viewed the happenings in Sri Lanka with agony and the gravest amount of anxiety. The hon. Member Dr. Janarthanam mentioned about the execution of prisoners in the jail in Sri Lanka. No amount of Resolutions can ever bring back to life the people who have lost their lives in such a situation. I would only plead that, simultaneously with our application to the Human Rights Commission, we should also seek to find an international solution to the Rs. 600 crores worth of property that has been damaged in Sri Lanka. Thiru Manickam now points out to me that the value may be Rs. 800 crores. According to an article in the 'Economist', the book value of the assets that have been destroyed is 150 million pounds or Rs. 300 crores. The replacement value may be ten times the book value. It may be nearly Rs. 3,000 crores. What has been given is only the book value. What are we going to do about all these people who have lost their properties? Can we feed them in Mandapam, give them bus fare, send them to their home-towns and expect them to be happy? Can India afford to give Rs. 500 crores, Rs. 600 crores or even Rs. 1,000 crores to these refugees?

(முற்பகல் 11-50)

If so, why should we give compensation to people whose property has been destroyed by the Army, by the Police, by dacoits and



by scoundrels who have taken part in the anti-social activities in Sri Lanka in the last week of July? This is where international opinion has to be created and there can be a reference to the International Court of Justice. It may take 10 years but the problem has to be high-lighted because it is of such immense proportion that no single country will be able to compensate these people who have lost their houses and their businesses, not to speak of the loss of life of their kith and kin.

My only appeal to the political parties in Tamil Nadu is to seek a measure of unity on the measures that should be taken to bring relief to the refugees who have already come to Tamil Nadu and also to seek measures which will give the impression that we in this country are united in expressing our concern and agony about the plight of Tamils because disunity is likely to weaken the hands of the Government. I would make an appeal to all the Members that in this task we should forget whatever political differences we may have at State level and try to form a united front in serving the cause of Sri Lanka Tamils so that their agonies may be mitigated and their sufferings resolved to the extent possible.

* **திரு. வலம்புரி ஜான்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கண்ணீர்த் துளி வடிவில்
கடல் நடுவே நிலம் மிதக்கும்;
என்ன இதன் பேரென்றால்
இலங்கையெனச் சொல்லுகின்றார்;
பார் அழுத கண்ணீர் பனிக்கடலாய்க் கிடக்க
யார் அழுத கண்ணீர் அலை நடுவே மிதக்கிறது?"

என்று கவிஞர் இளந்தேவன் அவர்கள் கேட்டார்கள்.

மனித நாகரிகம் கண்டிராத படுகொலைகள் ஈழத் தீவில் நடைபெற்ற போது, ஒரு அரசாங்கம் அதிர்ச்சிக்குள்ளானது. அரசியலாளர்கள் எல்லாம் கிளர்ந்தார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், எழுதப் பேசத் தெரிந்தவர்கள், எண்ணத் தெரிந்தவர்கள் என்று ஒரு சமுதாயத்தில் இருக்கிற எல்லா அங்கங்களுமே கிளர்ந்து எழுந்து, வன்மையாக இந்தப் படுகொலைகளைக் கண்டித்தன. வரலாற்றில் இல்லாத அளவுக்குத் தமிழன் தன்னுடைய இன, மான உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறான்.

பொதுவாக, உலகத்தில் சொல்லுகிறபோது, தமிழர்கள் என்பவர்கள்— சைவம் சாப்பிடுகிறவர்கள், சட்டை போட்டுக் கொள்கிறவர்கள், சங்கீதம் கேட்கிறவர்கள், சாயங்காலம் ஆகிறபோதே தூங்கிப் போகிறவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கிற ஒரு உலகத்தில் தமிழன் தன்னுடைய உரிமைகளுக்காகத் துப்பாக்கியையும் ஏந்திப் போராடுவான் என்று உருவான ஒரு சூழ்நிலையேகூட சோகமயமான இந்த நேரத்தில் ஒரு ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருக்கிறது என்று சொல்வதுதான் வரலாற்றிற்கே நியாயம் செய்வதாக இருக்கும்.

இந்த மாமன்றத்தில் உரையாற்றிய மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நீண்ட காலமாக ஸ்ரீலங்கா தமிழர்களுடைய பிரச்சினையில் அவருக்கிருக்கிற ஈடுபாட்டை எவரும் குறைத்துச் சொல்வதற்கில்லை. இருந்தாலும் அவர் நா தழுதழுக்க, நல்ல தமிழில் நாவாடுகிறபோது நான் ஒன்றைக் கவனித்தேன். அவர் பேசுகிறபோது அவரது பேச்சில் நெருப்பு இருந்தது—நெருப்பு என்றால் அதில் சூடும் இருக்க வேண்டும், சுடரும் இருக்க வேண்டும்—அவரது பேச்சில் இயல்பாகவே, இயற்கையாகவே அதிகமாகச் சூடு இருந்ததாக நான் உணருகிறேன். அந்தக் காரணத்தால்தான் அவர் பேசிக் கொண்டே போகிறபோது, ஸ்ரீலங்கா தமிழர்கள் என்றும் இந்தியத் தமிழர்கள் என்றும் சிலர் பிரித்துப் பேசுகிறார்கள், பேதம் விளைவிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

வரலாற்று உண்மையில் சூடு இல்லாமல் சுடர் வெளிப்பட வேண்டும். மின்சாரத்தில் வெப்பமும் இருக்கிறது, வெளிச்சமும் இருக்கிறது. ஆனால் அதில் வெப்பத்தைவிட சில நேரங்களில் நமக்கு வெளிச்சம்தான் அதிகமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகிறது. எனவே நாம் வரலாற்றை இன்றைக்கு நினைத்துப் பார்த்தால், ஸ்ரீலங்கா தமிழர்கள் என்பதும், இந்தியத் தமிழர்கள் என்பதும் ஏதோ எதிரிகளைப் போல் நம்மை நாமே பிளந்துகொண்டு இனம் பிரித்துப் பேசுவதல்ல. வரலாற்றுக் காலம் தொடங்கி அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகள் வேறு, அதைப்போலவே இவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகள் வேறு என்பதை நாம் கொஞ்சம் அமைதியாகச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். காரணம் இது ஒரு சிக்கலான பிரச்சினை. சிக்கல் என்கிறபோது, அந்தச் சிக்கை எடுக்கிற சூழ்நிலை வருகிறபோது, சிக்கல் என்பதையே நாம் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள இயலாவிட்டால், நம்முடைய பேச்சுகளே கூட [illegible] பரிகாரங்களே [illegible] புதிய சிக்கல்களாகிவிடும் [illegible] என்பதை நாம் தெளிவாக



நாம் வரலாற்றைப் பார்க்கிறபோது, ஏறத்தாழ "காலிபிரீஸ்" என்கிற வரலாற்று ஆசிரியன்தான் ஸ்ரீலங்காவைப்பற்றி ஏறத்தாழ முழுமையாகவும், அழுத்தமாகவும், ஆழமாகவும் எழுதியிருக்கிறான். அவன் சொல்லுகிறான்: "3,000 ஆண்டுகளுக்கு முன்பேகூட தமிழர்களுடைய ஆட்சி அங்கே இருந்தது என்பதற்கான அடையாளங்கள் உண்டு". நான்கு ஈஸ்வர மூர்த்தங்கள் என்று அவன்தான் குறித்து, நகுலேஸ்வரம், கோனேஸ்வரம், தொண்டீஸ்வரம் என்று குறிப்பிட்டு, 3,000 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழர்கள் ஆட்சி அங்கே இருந்தது என்று தெரிவிக்கின்றான். அதைப்போலவே அருமை நண்பர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் பேசும்போது, கி.மு. 2-ம் நூற்றாண்டிலேயே, அதாவது கிருஸ்து பிறப்பதற்கு முன்னாலேயே கூட, ஏலேலசிங்கன் என்ற தமிழ் மன்னனின் ஆட்சி அங்கே நடைபெற்றது என்றும் அவன் பெயர் ஏலாளன் என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். அவனைப்பற்றி எந்தெந்த ஆண்டில் என்னென்ன செய்தான் என்பதையெல்லாம் தமிழர்களின் இலக்கியம் கூட அல்ல, சிங்களவர்களின் இலக்கியமான மகாவம்சம் சொல்லுகிறது. அந்த மன்னனைப்பற்றிச் சொல்லுகிறபோது சிங்கள அடிமைகளையெல்லாம் அந்த மன்னனிடமிருந்து துட்டகைமனு என்கிற சிங்கள வீரன் மீட்டான் என்றும் சொல்லப்படுகிறது. அந்தத் தமிழ் மன்னனைத்தான் கொடுங்கோலன் என்று பேசுகிறார்கள். அவன் கொடுங்கோலனா அல்லவா என்பதல்ல இப்போதைய பிரச்சினை, இப்போதைய வாதம் எல்லாம் கிருஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே ஏலேலன் என்கிற தமிழ் மன்னன் அங்கே இருந்திருக்கிறான் என்பதைப் பார்க்கிறோம். நான் இந்த வரலாற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம் இவைகளெல்லாம் எனக்குத் தெரிந்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதற்காக அல்ல.

அருமை நண்பர் சகோதரர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இதை ஒரு வர்க்கப் பிரச்சினை என்று குறிப்பிட்டார்கள். இது ஒரு வர்க்கப் பிரச்சினை என்ற வரலாற்றுப் பார்வையில் நான் நிச்சயமாகப் பழி சொல்லவில்லை. பழுதுகூடச் சொல்லவில்லை. ஆனால் வர்க்கப் பிரச்சினை மாத்திரம்தானா இது? இல்லை. இது ஒரு இனப் பிரச்சினையும் கூட என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காலம் காலமாக தமிழன் அங்கேயிருந்து வந்திருக்கிறான் என்று சொல்லுகிறோம்.

சீனம் சில ஆண்டுகளுக்கு முன்னால், நாங்கள் இழந்த நாடுகளையும் பிரதேசங்களையும் மீட்போம் என்று வந்ததைப்போல், சில நேரங்களில் எல்லா இனத்தவர்களுக்கும் இந்த உணர்வு ஏற்படுகிறது. நான் உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். 16-வது நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்கள் ஈழத்தீவில் கால் வைத்த நேரத்தில் கண்டியில் இருந்த நிலைமையை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். கண்டியில் அவர்கள் கை வைக்கிறார்கள் என்று

[திரு. வலம்புரி ஜான்] [1983 அக்டோபர் 28

சொன்ன உடனே, தமிழ் மன்னன் ஆட்சி அங்கே நடக்கிறது என்ற
காரணத்தால், தஞ்சை மன்னனுடைய உதவியைக் கோரி படையைப்
பெற்றான் என்ற காரணத்திற்காக, அவனை 16-வது நூற்றாண்டில்
கோவாவுக்குக் கொண்டுசென்று 1619 ஆம் ஆண்டில் கோவாவில் தூக்கிலிடப்
பட்டிருக்கிறார்கள். அந்த மன்னனின் பெயர் சங்கியன் என்பதாகும் என்று
வரலாறு சொல்கிறது. இதைச் சொல்வதற்குக் காரணம் இது வெறும் வர்க்கப்
போராட்டம் என்றும் அந்த வர்க்கப் போராட்டத்தின் காரணமாகத்தான்
ஒரு முதலாளித்துவ அரசு தன்னுடைய பொல்லாத் தனத்தின் காரணமாக
அந்த மோதலை உருவாக்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே
இதில் உள்ளது வெறும் வர்க்கப் போராட்டத்தை மட்டும் கவனிக்காமல், இதில்
உள்ள இனப் பிரச்சினையையும் கண்டாக வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். காரணம் இன்றைக்கு இன மோதல்கள்கூட வர்க்க மோதல்
களுக்கு அடிப்படையாக இருக்கின்றன. இன மோதல் என்பதே ஒருவகையான
விரிவுபடுத்தப்பட்ட வர்க்க மோதல் என்பதைக் கண்டாக வேண்டும்.

ஸ்ரீலங்காவின்—ஈழத் தீவின் பொருளாதார மேம்பாட்டிற்காக மட்டும்
அங்கே உள்ள தமிழர்கள் தங்களுடைய செந்நீரைச் சிந்தியிருக்கிறார்கள்
கண்ணீரை காணிக்கையாக்கியிருக்கிறார்கள் என்று மட்டுமே கொள்ளக்
கூடாது. அந்த நாட்டின் விடுதலைக்காகவும், அரசியல் விடுதலைக்காகவும்கூட
தமிழர்கள் தங்களைச் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அவர்
களுக்கும் பங்கு இருந்தது என்பதற்குப் பல்வேறு சான்றுகளைச் சொல்லலாம்.
1919 ஆம் ஆண்டில் இலங்கை காங்கிரஸ் என்று வந்தபோது, பொன்னம்பலம்
அருணாசலம் என்பவர் தலைவராக இருந்து, "அந்த நாட்டு மக்களெல்லாம்
விடுதலை பெற வேண்டும், அந்த நாட்டிற்கும் விடுதலை வெளிச்சம் பரவ
வேண்டும்" என்று கருதி போராடியிருக்கிறார். அந்த நாட்டில் இருக்கிற
சிங்களவர்களுக்கும் மற்றவர்களுக்குமாகச் சேர்ந்து உரிமை முழக்கம் கொடுத்த
ஒரு இயக்கத்திற்குத் தமிழன்தான் தலைமை தாங்கியிருக்கிறான். அதைப்
போலவே 1916 ஆம் ஆண்டில் சிங்கள பௌத்த குருக்கள்களுக்கும் இஸ்லாமியர்
களுக்கும் இடையே ஈழம் முழுவதும் கலவரம் உருவான அந்த நேரத்தில்கூட
தமிழன்தான் அவர்களுக்கு உதவியாக இருந்தான் என்று வரலாறு நமக்குப்
புலப்படுத்துகிறது. பௌத்த குருக்கள்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே
ஒரு பெரும் கலவரம் நடந்தபோது, சிங்களவர்கள் பலர் கொலைக்கு
ஆளானார்கள். பலர் தூக்கிலிடப்பட்டார்கள். பலர் சிறை பிடிக்கப்பட்டார்கள்.
அப்போது அங்கே ஆண்டு கொண்டிருந்த பிரிட்டானிய அரசு கடுமையான
இராணுவச் சட்டங்களைப் போட்டு சிங்களவர்களை அடக்கினார்கள் என்று
கொதித்தெழுந்து அவர்களுக்குப் பதில் சொல்லுகிற வகையில் சிங்கத்தை
அதன் குகையிலேயே சந்திக்க வேண்டும் என்று கிளம்பிப் போனவன



1983 அக்டோபர் 28] [திரு. வலம்புரி ஜான்]

சிங்களவன் அல்ல, ஒரு தமிழன்தான். பொன்னம்பலம் இராமநாதன் என்கிற
தமிழன்தான். அவன் இலண்டன் வரை சென்று போராடித் திரும்புகிறபோது,
அவனை ஏற்றி வந்த குதிரை வண்டியின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு
அந்த குதிரைகளுக்குப் பதிலாக அவன் ஏறி இருந்த அந்த வண்டியை அங்கே
இருந்த சிங்களவர்களே இழுத்தார்கள் என்பது ஸ்ரீலங்கா நாட்டின் வரலாறு
ஆகும். அந்த அளவுக்கு அவர்கள் ஒற்றுமையாக அங்கே இருந்தார்கள் என்று
குறிப்பிடுவதற்காக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படித்
தமிழர்கள் ஸ்ரீலங்கா நாட்டின் பொருளாதார மேம்பாட்டிலே மட்டுமல்லாமல்,
விடுதலை இயக்கத்தில்கூட பெரும் பங்கேற்றிருந்தார்கள். இத்தகைய வரலாறு
அங்குள்ள தமிழர்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் தமிழர்களின்
ஆதிபத்திய உணர்ச்சிக்காக நான் இங்கே குறிப்பிடவில்லை. அந்த நாட்டு
வரலாற்றில், அதன் மேம்பாட்டில் தமிழர்களுக்கு இருந்த பங்கு என்று
எண்ணிப் பார்க்கிறபோது, நாம் இழந்த பகுதிகளை மீட்க வேண்டும் என்று
எண்ணுகிற எண்ணம்—சில இனங்களுக்கு வருவதற்குக்கூட காரணம்
காலாகாலமாக எப்படி இப்படிப்பட்ட உரிமைக்குச் சொந்தக்காரர்கள்
கருவறுக்கப்படுகிறார்கள், எப்படி சிதைக்கப்படுகிறார்கள் என்று அதை
எண்ணுகிறபோது—பொதுவாக அவர்களுக்கும் இயற்கையாக வருகிறது.

பெரியவர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, ஒன்றைச்
சொன்னார்கள். அங்கே நடக்கிற கலவரங்களெல்லாம் மோசமான
முதலாளித்துவ அமைப்பு இரண்டு இனங்களை மோதவிட்டுப் பார்ப்பதால்
ஏற்பட்டவை என்று குறிப்பிட்டார்கள். ஒரு முதலாளித்துவ அமைப்பில்
அப்படித்தான் நடக்கும் என்றார்கள். ஒரு சமதர்ம அமைப்பு வருகிற காலம்
வரை அவர்கள் சாகலாமா? அவர்கள் ரத்தம் வடிக்கலாமா என்று கேட்டு
அதுவரை ரத்தம் வடிக்கத் தேவையில்லை என்றுகூட ஒரு யோசனையைச்
சொல்லியிருக்கிறார்கள். அவர் அறிந்து கொண்டிருக்கிற உலக அமைதிக் குழு,
World Peace Council ஒரு கோஷத்தை வைத்தது. அது அவர்
அறியாததல்ல. w have to sell the world
என்றார்கள். பின்னாலே we have to save the world என்றவர்கள்,
In order to save the world, we have to change the world
இன்றைக்கு இந்த ஆண்டில் அவர்கள் சொல்வது
In order to change the world, we have to save the world
என்கிறார்கள். நாம் உலகத்தை மாற்ற வேண்டும் என்பது உண்மைதான்.
ஆனால் உலகத்தை மாற்ற வேண்டுமென்றால், முதலில் உலகம் இருக்க
வேண்டுமல்லவா? என்று சொல்லுகிறார்கள்.

ஈழத் தீவில், தமிழர் இனம் இருந்தால்தானே அவர்களைக் காப்பாற்றவே
முடியும்? அப்போதுதான் அவர் சொல்லுகிற மாற்றம்கூட வர முடியும்

என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, வீடுபற்றிக் கொண்டு எரிகிற போது, நாம் தத்துவங்களைச் சொல்லி உலகத்திற்கே போதனை செய்பவர்களாக நம்மை மாற்றிக் கொண்டு செயல்படுவது என்பது எந்த வகையிலும் சரியல்ல. கட்டிடம் பற்றி எரிகிறபோது, கண்ணில் படுகிற தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து வீசுவதுதான் இயற்கையாக இருக்க முடியும், உண்மையான உதவியாக இருக்க முடியும். அதை விடுத்து, "கட்டிடம் பற்றிக்கொண்டு எரிகிறது என்பது வாஸ்தவம்தான். ஆனால் கங்கையிலிருந்து புனித தீர்த்தம் வர வேண்டும். அதுவரை எரிந்து கொண்டிருக்கட்டும்" என்று சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய அருமைச் சகோதரர் உறுப்பினர் . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ "சும்மா இருங்கள்" என்று சொன்ன மாதிரி உறுப்பினர் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். நான் அப்படிச் சொல்லவில்லை. என்னுடைய பெயரைச் சொல்லி அந்தக் கருத்தைச் சொன்னதால், நான் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

(நண்பகல் 12-00)

**திரு. வலம்புரி ஜான் :** நான் அந்தப் பொருளில் சொல்லவில்லை. அந்தக் கட்டிடம் எரிய தேவையில்லை. அதற்குள்ளாகவே அணைக்க வேண்டும் என்பதை அவர்களே, சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம அவர்கள் ஆசிரியர் இல்லை என்று எப்போதுமே நான் சொன்னதில்லை. அவர் இந்த மாமன்றத்தை வகுப்பறையாக எடுத்துக்கொண்டு பேசினார். அப்படி அவர் பேசியதை நான் தவறு என்று சொல்லவில்லை. இன உணர்வு என்பது என்ன, தமிழ் உணர்ச்சி எப்படிப்பட்டது என்பதற்கெல்லாம் விளக்கம் தந்தார்கள். தமிழ் உணர்ச்சி என்ன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரலிங்கம் அவர்களும், தமிழ் தெரிந்த திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் சொன்னால், நான் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் மான உணர்ச்சி, தமிழ் உணர்ச்சி என்று அவர் அடிக்கடி சொல்லுகிற போது, அது எங்களைக் கொஞ்சம் தூண்டி விடுவதாக இருக்கிறது. துலக்கம் பெறுவதற்காக இருந்தால் பரவாயில்லை. எங்கள் உணர்ச்சிகளுக்கு எல்லாம் வேறு மாதிரி வேலை இருப்பதாகத் தெரிகிறது. எது எது உணர்ச்சி என்பதற்கு விளக்கம் சொல்லி, தான் ஆசிரியர் என்பதை மீண்டும் அர்த்தப் படுத்திக் கொண்டார். அதற்கு நான் ஒன்றும் சொல்லவில்லை. இன்னின்னவர்கள்தான் உணர்ச்சி படைத்தவர்கள் என்று சொல்லுவதிலே





கொஞ்சலான குறும்பு இருக்கிறதே தவிர, கூர்மை அல்லது அறிவார்ந்த ஆற்றல் இருப்பதாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை ஆசிரியர் களாக இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. சபையில் பேசியதை பெருமையாகச் சொல்லலாமா என்று கேட்டிருக்கிறார். இது மான உணர்ச்சியா என்று கேட்டிருக்கிறார். அமைச்சர் எதிலே பேசுகிறார் என்பதல்ல, அவர் என்ன பேசினார் என்பதையல்லவா பார்த்திருக்க வேண்டும் தமிழ் உணர்ச்சி என்று தாவிக்குதிக்கிறவர்கள்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது அவர் ஐ.நா. பொதுச் சபையில் பேசினாரா அல்லது பாதுகாப்புச் சபையில் பேசினாரா என்பது. அதற்குள் உள்ள ஒரு சிறு குழுவில், வெளியே அஃபீஷியலாகத் தெரிய வாய்ப்பில்லாத குழுவில் பேசியதை பிரமாதமாக விளம்பரப்படுத்துகிறார்களே என்று கேட்டேன். அப்படியே பேசினாலும்கூட, அவர் பேசிய கருத்துக்கள் தமிழ் உணர்வு உள்ள கருத்துக்களாக இல்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் பேசுகின்றபோது, அப்போதே குறுக்கிட்டுச் சொல்ல வேண்டுமென்று கருதினாலும், அவர் மிகுந்த உணர்ச்சி வயப்பட்டு சொல்லிய காரணத்தாலே, அவருடைய உணர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிடக் கூடாது என்று அமைதியாக இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தொட்டதற்குப் பிறகு மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அந்தக் கருத்தை வலியுறுத்துகிறார்கள். அருள்கூர்ந்து அவை யினுடைய அமைப்புகளையெல்லாம் பார்க்க வேண்டும். ஐக்கிய நாடுகள் அவையினுடைய பொதுச் சபைக் கூட்டம் என்பது ஒன்று. அதிலே இருக்கின்ற பல்வேறு குழுவினர் என்பது நாம் இங்கே கூடி குழு நடத்திக் கொண்டிருக் கிறோமே அப்படியல்ல என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகின்றபோது கூட, இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் அவையினுடைய மனித உரிமைகள் குழுவிற்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களை விவரம் தெரியாதவர் அல்லது உணர்ச்சியற்றவர் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிடமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஐக்கிய நாடுகள் அவையினுடைய பொதுச் சபைக் கூட்டம் என்பது ஒன்று. அதற்குள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கிற குழுக்களில் எல்லாம் தனித்தனியான நாடுகளுடைய பிரதிநிதிகள் எல்லாம் இருக்கிறார்கள்

என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் குழுக் கூட்டத்திலே அகதிகள் பிரச்சினை என்ற தலைப்பிலே எடுத்துக்கொண்டு எவ்வளவு சாமர்த்தியமாக நம்முடைய பிரச்சினையை அங்கே வைக்க முடியுமோ அப்படி வைத்திருக்கிறார்கள். வைப்பதற்கு இந்திய அரசு இடம் கொடுத்திருக்கிறது. அதற்கு இந்தியப் பிரதமர் அனுமதி அளித்திருக்கிறார்கள். அது மிகச் சிறந்த முறையிலே ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் தலைவர்கள் எல்லாம் பாராட்டுகிற வகையிலே இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயிருந்து சென்றிருக்கிற அமைச்சர், தமிழர் செய்திருக்கிறார் என்பதற்காகவாவது கொஞ்சம் உள்ளுக்குள் மாண்புமிகு உறுப்பினர் பாராட்டினாலும், தமிழ் உணர்ச்சி அவரை மறைப்பதற்கு ஒருவேளை தூண்டினாலும் அந்த உண்மை மறைந்து விடாது என்பதை மாத்திரம் நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதை நான் ஒத்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட இடங்களிலே வரவேண்டுமே தவிர, இப்படிப்பட்ட அரசியல் குழுக்களில் அல்ல. அந்தக் குழுவிலேகூட நம்முடைய உணர்வை, தமிழ் மக்களுடைய உணர்வைப் பிரதிபலிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அப்படிக்கூட அவர் சொல்லவில்லையே என்பதுதான் என்னுடைய குறை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்த அவையிலே பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லா விவரங் களையும் சேகரித்துக் கொண்டு வந்து பேசினால், இந்த அவைக்கு உதவியாக இருக்கும், இந்த அவையின் மூலமாக நாட்டிற்கும் உதவியாக இருக்கும். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இந்தியக் குழுவின் பிரதிநிதி என்ற முறையில், அந்த அகதிகளைப்பற்றி விவாதிக்கிற பிரச்சினைக்குள்ளே நுழைந்தார்கள். நுழைந்தவுடனே நாம் என்ன எதிர்பார்த்தோமோ அது நடந்தது. ஸ்ரீலங்காவினுடைய பிரதிநிதி கண்டிக்க ஆரம்பித்தார். அவருடைய கண்டனத்திற்குப் பதில் அளிக்கும் வகையில், அவர்கள் எவ்வளவு கொடுமைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகத் தெளிவாக அந்தக் குழுவிலே, உலக நாடுகளின் முன்னிலையில் நம்முடைய பிரதிநிதி எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன்.

**திரு. வலம்புரி ஜான் :** அவை முன்னவர் அவர்கள் ஆழமாக அழுத்தமாகச் சொன்னபடி, ஐ.நா. சபையில் அமைச்சர் அவர்கள் . . .





***திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவையிலே பேசுகின்றபோது போதிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டு பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது அனைவருக்கும் பொருந்தும். அந்த அளவிலே எங்களால் எந்த அளவிற்குச் சேகரிக்க முடியுமோ அந்த அளவிற்குச் சேகரித்து தான், பின்பு பேசுகிறோம். எதையாவது கண்டதைப் பேச வேண்டுமென்று பேசுவது மரபல்ல. அப்படிப் பேசுவதுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் ஆசிரியர் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே நான் வகுப்பு நடத்தினேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களே ஆசிரியர் பதவியை எடுத்துக் கொண்டு இங்கே வகுப்பு நடத்தட்டும் ஆனால் விவரம் தெரியாமல் பேசி விட்டேன் என்று சொல்லுவது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆசிரியாக இருந்து வகுப்பு நடத்துவது என்பதை அவமானமாகக் கருத வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் பெருமையாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் என்னுடைய கருத்துக்களை, நான் இப்போது பேசியதைக்கூட முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லையா அல்லது புரிந்து கொண்டும் புரியாததுமாதிரி சொல்லுகிறார்களா என்பது தெரியவில்லை. விவரங்களைச் சேகரித்துக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுவதற்குக் காரணம், அவர் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை, முதல் பகுதியை மட்டும் குறிப்பிட்டதுதான். விவாதத்திற்குள் நுழைந்ததைப்பற்றி மட்டும் குறிப்பிட்டார்கள். அதற்கு மேல் உள்ள உரையை விட்டுவிட்டார்கள். அப்படி விட்டுவிட்ட காரணத்தாலே, சொல்லாத காரணத்தாலே சேகரித்துக் கொண்டு வரவில்லையோ என்ற ஐயப்பாட்டின் மீது சொன்னேன். ஆனால் "சேகரித்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். ஆனால் அந்தப் பகுதியைச் சொல்ல வேண்டாமென்று விட்டுவிட்டேன்" என்று தெரிவிப்பார்களேயானால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. வலம்புரி ஜான் :** துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் ஆழமாக, அழுத்தமாக இங்கே எடுத்துச் சொன்னபடி, ஸ்ரீலங்கா தமிழ் தலைவர்கள் எல்லாம் அந்த அமைச்சரைப் பாராட்டியிருக்கும்போது மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் ஒரு சிறிய குழுவில்—முக்கியமில்லாத கூட என்றுகூட வைத்துக்கொள்ளுங்கள்—அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதன்மூலம் உலக நாடுகள் எல்லாம் அதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்போது—

[திரு. வலம்புரி ஜான்] [1983 அக்டோபர் 28

மாண்புமிகு உறுப்பினர் பாராட்ட வேண்டாம்—பழிக்கிற மனப்பான்மையோடு பேசுகிறார் என்றால் வருந்துகிறேன். எரிகிற வீட்டில் பாதிக்கப்படுகிறவர் தனது பதைப்பை நீக்கியவர்களைப் பாராட்டுகிறபோது வீட்டிற்குரியவர் எப்படி நெருப்பு வந்தது, அது எவ்வளவு அழகாக எரிந்தது என்ற ஆராய்ச்சியில் இறங்குவதைப் போலதான் கருத வேண்டுமே தவிர, வேறு ஒன்றுமல்ல. அவர் அங்கே பேசுகிறார் என்பதல்ல முக்கியம், பேசுகின்ற விவரம் என்ன, அது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்ததா இல்லையா என்பதுதான். பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட வில்லை என்று சொல்கிறார்கள். அவர் குறிப்பிடவில்லை என்றாலும்கூட, அந்தக் குழுவிலே அங்கம் வகிக்கும் தமிழகத்தின் அமைச்சர் தமிழர்களுடைய உணர்வுகளைக் கொண்டு சென்றிருக்கிறார். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டாரா இல்லையா என்பதுதான் கேள்வி. வில்லை எடுத்து எறிகிறவன் வீரன் என்பதல்ல, புல்லையே வில்லாக்கிக் கொண்டு புகழ்படச் செயல்படுபவன்தான் வீரன் என்பது வெளிப்படுகிறது. ஆசிரியராக அவர் செயல்படுகிறார் என்று சொல்லுவதே மாண்புமிகு உறுப்பினருக்கு அவமானமாகத் தெரிகிறது. அவருக்கு அந்த அளவிற்கு உணர்ச்சி அதிகமாக இருக்கிறது. நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அடிக்கடி ஒரு வார்த்தையைச் சொன்னார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, குறும்போடு கலந்த வார்த்தை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசிரியராகச் செயல்படுவதை நான் அவமானமாகக் கருதவில்லை. வேண்டுமானால் ஆசிரியர் பதவியை அமைச்சர் அவர்களே எடுத்துக்கொள்ளட்டும் என்று சொன்னேன்.

**திரு. வலம்புரி ஜான்:** ஐ.நா. சபையில் பேசியதை அவர் பாராட்டவில்லை. பழிப்புரை கூறினார். "காட்டிக் கொடுக்கிறார்கள்" "தமிழர்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள்" என்று அடிக்கடி சொன்னார். நான் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். யார் காட்டிக் கொடுக்கிறார்கள் என்று என்னைப் பேச வைத்திருக்கிறார்கள். நான் இந்தப் புத்தகத்தை அவைத் தலைவரிடம் காட்டி அதிலிருந்து வாசிக்க அனுமதி வாங்கியிருக்கிறேன். 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையில் நான் பேசிய பேச்சைக் குறிப்பிடுகிறேன்.

"I would again remind this House that the problem of the Stateless still remains unsettled. We have been given to understand, within the precincts of Colombo, the capital city of Sri Lanka, that the Government of Sri Lanka has established



1983 அக்டோபர் 28] [திரு. வலம்புரி ஜான்]

a kind of concentration camp where they are assigning my people for reasons strange and sordid. My people have been taken in these concentration camps in large numbers. I am reminded of Russia prior to 1917 when they too had concentration camps. So, I would appeal to the sense of the Government of India to look into the sordid state of affairs where Tamils, just because they had travelled to Sri Lanka with Passports years ago and even decades before, have now been taken to concentration camps where they are treated like slaves. I would again remind this House, when there was in last January a conference of Tamils in Jaffna, there was an infernal massacre and total conflagration where more than 12 Tamils had been mercilessly killed."

நான் ஒன்றை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஒத்துக்கொள்ளலாம். ஓங்கிக் குரல் கொடுத்து ஒத்துக்கொள்ளாமலும் போகலாம். சத்தியத்திற்குச் சாட்சி சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி நான் மேலே சொன்னவற்றைச் சொன்னேன் என்பதற்காக அன்றைக்கிருந்த முதலமைச்சரால் கண்டிக்கப்பட்டேன். நான் பேசியதிலே உண்மைதான் இருக்கிறது, உணர்ச்சி இல்லை. அது மாத்திரமல்லாமல் வேறு ஒரு உறுப்பினரும்—சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இன்றைக்கும் இருக்கிறார்—நானும் சென்று, "நான் இப்படிப் பேசியதை வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள், யாழ்ப்பாணத்தில் மிருகத்தனமாக, வெறித்தனமாகக் கொன்றிருக்கிறார்கள், நீங்கள் ஏன் அதைக் கண்டிக்கவில்லை?" என்று கேட்டபோது—நான் மறைக்கவில்லை, உண்மை இருக்கப் போகிறது, வரலாறு பேசப் போகிறது என்பதற்காகச் சொல்லு

(பிற்பகல் 12-10)

கிறேன்—அன்றைக்கிருந்த முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதில் எல்லாம், "எனக்கு அவர்கள் அழைப்பு அனுப்பவில்லை" என்பதுதான். இன்றைக்கும் சட்டமன்றப் பேரவையிலே என்னுடன் வந்தவர் இருக்கிறார். நான் சொல்லுவதற்கு வருந்துகிறேன். அப்படித் தப்பித்துக்கொள்கின்ற சூழ்நிலை அவர்களுக்கெல்லாம் இருந்தது அன்றைக்கு. "எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. என்னை அவன் மதிக்கவில்லை" என்கின்ற தன்மதிப்புத் தான் தெரிந்ததே தவிர, அன்றைக்கு அந்தத் தமிழ் உணர்ச்சி இருக்கவில்லை. ஆனால் இன்றைக்குச் சொல்கின்றார்கள். திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஐ.நா. சபைக்குச் சென்று காட்டிக்கொடுக்கிறார்களாம். காட்டிக் கொடுக்க ஐ.நா. சபைக்குச் செல்லவேண்டுமா? அவர்கள் சொல்கின்ற

உணர்ச்சி என்ன? எந்த உணர்ச்சியோடு, திமு.க.-வினர் ஐ.நா. சபையிலே கொடுக்கும் மனுவிலே கையெழுத்து போடுகிறார்களோ? மனுக்களை கொண்டு போய் கொடுக்கிறார்களோ? நான் சொல்வதற்கு வெட்கப்படுகிறேன், அந்த மனுக்களைக் கொண்டு போகின்ற நேரத்திலே, அந்த மனுக்களைக் கொண்டு போகின்ற ஒரு மனிதர் தன்னுடைய மகளை ஒவ்வொரு நாட்டிலும் தாம் செல்ல இயலும் ஒவ்வொரு இடத்திலும் நடனம் ஆடச்செய்து கொண்டு போகிறார். இது நடனம் நடத்துவதற்காகச் சென்ற குழுவா? இல்லை ஈழத் தமிழ்நாடு எரிகிறது என்று கையெழுத்து வாங்கி அந்த மனுக்களை ஐ.நா. மன்றத்திற்குத் தருவதற்காகச் சென்ற குழுவா என்று தி.மு.க. உறுப்பினர்களே என்னிடத்திலே கேட்கிறார்கள். நான் அதைக்கூட மலிவாகச் சொல்லவில்லை, குறைவாகச் சொல்லவில்லை. நடனம் ஆடட்டும். நடனம் ஆடினாலும், நாடகம் நடத்தினாலும், கட்டுரை எழுதினாலும், கவிதை எழுதினாலும் தமிழர்களுடைய உணர்ச்சிக்கு முன்மாதிரியாக வடிகாலாக இருந்தால், நான் அதைக்கூட வரவேற்கிறேன். ஆனால் அவர்களைப் போல நாங்கள் அதைக் கொச்சைப்படுத்திப் பேசவில்லை. நான் ஒன்றை மாத்திரம் சொல்கின்றேன். அவை முன்னவர் அவர்கள்கூட நேற்றைக்கு மிக அழகாக, அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினைதான் என்ற அளவில் பெரியவர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். ஆனால் ஈழப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. உள்நாட்டுப் பிரச்சினை என்று இருந்த ஒன்றை, இரு நாடுகளுக்கும் இடையிலே உள்ள பிரச்சினை, ஒரு தேசத்தின் பிரச்சினை, இரண்டு நாடுகளுடைய பிரச்சினை, நாடு தழுவிய பிரச்சினை என்று ஒரு முதலமைச்சர், அவர்களுடைய அரசாங்கம், இன்றைக்கு மாற்றிக் காட்டியிருக்கிறது என்று சொன்னால், அது இந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெரு முயற்சியால்தான் அது அப்படி அமைந்திருக்கிறது என்று நான் சொல்ல விழைகிறேன். அதற்கு ஒரு காரணத்தைச் சொல்கிறேன். ஆகஸ்ட் 1974, 1 ஆம் தேதியிலே வெளி விவகார அமைச்சராக இருந்த சர்தார் சுவரன் சிங் அவர்கள் சொல்கின்றார். நான் பேசிய பேச்சுக்கு மறுமொழி சொல்லும்போது சொல்கின்றார்.

"Now, Sir, for Mr. Valampuri John to talk of massacres in Sri Lanka and his raising his voice for the Tamilian population is not a proper thing. By doing that, he is not serving the cause of the Tamil population in Sri Lanka. The Tamil population of Sri Lanka are Sri Lanka citizens. Any outside agency, any talk of a chauvinistic character would create wrong ideas in their minds which will not be in their long-term interests. So, let them try to work out a mutually acceptable and fair agreement."



(பிற்பகல் 12-10)

று அன்றைக்குச் சொல்கின்றார். இப்படிப் பேசுவதேகூட தவறு என்று ன்ன ஒரு அரசாங்கம், 1974-லிலே உறுப்பினர் அவர்கள் சத்தத்தை ர்த்திப் பேசுகிறார் என்றும், சாமர்த்தியமாக, சமஸ்காரமாகப் பேசிய ஒரு சாங்கம், இன்றைக்கு ஒன்பது ஆண்டுகள் கழித்து "நாங்கள் இதைப் த்துக் கொண்டிருக்க இயலாது" என்று சொல்கின்ற அளவுக்கு வருகிறது, களை அனுப்பியாவது பேசுகிறதே என்பதைப் பார்க்கும்போது, அந்த சாங்கம் அப்படிப் பேசுகிற அளவிற்கு இந்த அரசு அந்த மத்திய அரசை ற்றியிருக்கிறது. அன்றைக்கு 12 பேர்கள், இன்றைக்கு இரண்டு ஆயிரம் ர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற எண்ணிக்கை காரணமாக அல்ல, இந்தப் ரச்சினை வளர்ந்திருக்கிறது என்ற காரணத்திற்காக அல்ல, அந்த அளவுக்கு ந்திய அரசாங்கம் சிந்திக்கின்ற அளவுக்கு, தன்னைச் சீர்தூக்கிப் பார்க்கும் ளவுக்கு இங்கே இருக்கின்ற கட்சி, இங்கே இருக்கின்ற அரசாங்கம், இங்கே ருக்கின்ற முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வண்டும். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாடு தழுவிய ரச்சினையாக இது இருக்கிறது. அதே சமயத்திலே இங்கே பேசுகின்ற றுப்பினர்கள் எல்லோரும், நேற்றுகூட காங்கிரஸ் கட்சி சார்பாக பேசிக் காண்டிருந்த பெரியவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் சொல்லி ருக்கிறார்கள்: "ஐ.நா. சபைக்கு இதைக் கொண்டு செல்லக்கூடாது. ாஷ்மீர் பிரச்சினைகூட ஐ.நா. சபைக்குச் சென்ற காரணத்தினாலேயே அது துவரைக்கும் முடிவாகாமல் இருக்கிறது. இன்றைக்கும்கூட அதைப்பற்றி மையான சொற்கள் எல்லாம் சொல்லப்பட்டன. ஆனால் எங்களுக்குக்கூட ஐ.நா. சபை பற்றித் தெரியும்." திரு. ஹாமர்ஷோல்ட் அவர்கள் அதைப்பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐ.நா. சபை பற்றிச் சொன்னார்கள். பொதுக் காரியதரிசியாக அந்த சபையில் அதிக நாட்கள் இருந்தவர் அவர்கள். அவர்கள் சொல்கின்றபோது "united nation is a ventilating chamber of grievances". என்று சொன்னார்கள். அதற்கு அப்பாலே, அது என்ன செய்யும் என்று சொன்னார்கள் "அதுவும் எங்களுக்கு நன்றாகத் தெரியும்".
"only to avoid a third world war it is a forum"
என்று சொன்னார்கள். எங்களுக்கும் தெரியும்.
"United Nations is like air necessary to breathe but not enough to live on" என்று இதையும் அவரே சொன்னார்கள்.
ஆகவே அதை எண்ணிப்பார்க்கின்றபோது, அது எந்த அளவுக்கு உதவும் என்று புரிந்துகொள்கிறோம். அந்த சபையிலே சொல்வதன் மூலமாக வல்லரசு களுக்கு எல்லாம் இதைப் பங்கு கொடுக்கிறோம் என்பது காரணம் அல்ல. இதைச் சொன்னால், இதை உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு

[திரு. வலம்புரி ஜான்] [1983 அக்டோபர் 28

வருகிறோம் என்ற மட்டோடு நிற்காது. திரு. பன்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், தானாகப் பேசவில்லை, இங்கேயிருந்து கொண்டு, இந்த முதல்வர் இராமச்சந்திரன் அவர்கள், தம்முடைய தம்பியை அந்த அளவுக்கு அந்த உணர்வோடு பேச வைக்கிறார்கள். மத்திய அரசு பேசவில்லை என்ற பழிப்பு இருக்கின்ற நேரத்திலே, அதைப்பற்றி ஒரு மாநில அரசாங்கம் பேசிவிட முடிகிறது என்று சொன்னால், நாம் அதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் இது இருக்கிறது. இங்கே இருக்கின்ற முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறார். சக்தி சிதறி விடக்கூடாது என்பதிலே அவருக்கிருக்கின்ற துடிப்பு, நம்பிக்கை நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் "நாளைக்கு சக்கரங்கள் நிற்கும்" என்று சொல்கின்றார். ஆனால் இங்கே இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், "சக்கரங்கள் நாளைக்கு நிற்கும் என்று சொல்லவேண்டாம், நான் இன்றைக்கே நிறுத்துகிறேன்" என்றார்கள். இது ஒருவருக்கொருவர் இடையே இருக்கின்ற போட்டி காரணமாக அரசியல் காரணமாக அல்ல. உண்மையாகவே அந்த ஈழத் தமிழர்கள் பிரச்சினையில்தான் தன் இதயம் இருக்கிறது—அவர்கள் மீது தான் கொண்டிருக்கின்ற பற்றும் பாசமும் வெளிப்பட வேண்டுமென்பதற்காக அல்ல—மனிதாபிமான எண்ணம் தனக்கு இருக்கிறது என்பதற்காக, அதை எடுத்துக் காட்டவேண்டுமென்பதற்காகத்தான், "நாளைக்கு சக்கரங்கள் நிற்பதை இன்றைக்கே நிறுத்துகிறோம்" என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். திரு. நெடுமாறன் அவர்கள் நடந்துபோகிறார். அவர் ஒரு கட்சிக்காரர். அவரோடு எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. அவர் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிக்கு, அந்த உணர்ச்சிக்கு, தலை வணங்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அதிலேகூட பிழை காணுகின்றார்கள், குற்றம் காணுகின்றார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர் நடந்து போகிறார், ஸ்ரீலங்கா சென்று அங்கு இருக்கின்றவர்களை மீட்க வேண்டும், உதவவேண்டுமென்பதற்காக கடலைக் கடக்கச் சென்றால், "அவரை இந்த அரசாங்கம் ஏன் கைது பண்ணவில்லை?" என்று பேசுகிறார்கள். அவர் கடல் கடந்து சென்று மக்களைக் காப்பாற்றப் போகிறார்கள் என்று சொல்கின்றவர்களேகூட "அவரை ஏன் கைது பண்ணவில்லை, அவருக்கேன் விலங்கு இடவில்லை?" என்று சொன்னால், அவருடைய நோக்கத்தைப் பழிக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். ஒன்று அவரைக் கைது பண்ணினால், "இந்த அரசாங்கம் இன மான உணர்ச்சி இல்லாத அரசு" என்று சொல்லலாம். அவரைக் கைது பண்ணாது விட்டால், "இந்த அரசாங்கம் அவருடைய முயற்சிக்கு ஒரு முத்திரை குத்தாமல், அவரை



1983 அக்டோபர் 28] [திரு. வலம்புரி ஜான்].

அவமானப்படுத்துகிறது" என்றும் சொல்லலாம். ஒரு அரசாங்கம் குறைந்த பட்சத் திமையாக எது எது இருக்குமோ அதைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்தார்கள்.

இன்றைக்கும் மத்திய அரசு செய்திருக்கின்றதை நாங்கள் பாராட்டி, நன்றி தெரிவிக்கிற அதே சமயத்தில் "மத்திய அரசாங்கம் செய்யவேண்டியது பாக்கியிருக்கிறது, அதைச் செய்ய வேண்டும், அதற்கு வற்புறுத்த வேண்டும்" என்பதற்காகத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புச் சட்டை அணிந்துகொண்டிருக்கிறோம். சிங்களப் பாம்பு தமிழ் மகனைத் தீண்டியிருக்கிறது. அந்தக் கடிவாயிலே கட்டுப்போட்டிருக்கிறார்கள் பாரதப் பிரதமர் அவர்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள் அந்தக் கடிவாயில் கட்டுப்போட்டது மாத்திரம் போதாது, அதைக் கீறி அந்த விஷத்தை வெளியாக்கவேண்டும் என்று கேட்பதற்காகத்தான் இன்றைக்கும் கறுப்புச் சட்டைகளை அணிந்துகொண்டிருக்கிறோம். அமெரிக்க தூதுவரகத்திற்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் அணி வகுப்பை நடத்துகிறது என்றால், அது அரசியல் காரணங்களுக்காக அல்ல. நாம் நன்றாகப் படிக்கிறோம். அனுதினமும் படிக்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியம் என்பது எந்த ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கும் கை கொடுத்தது இல்லை என்பது தெரியும். உதாரணத்திற்கு இந்தியாவிலே விடுதலைப் போராட்டம் நடந்தபோது,

'கொல்லும் கருமத்தில் வெல்வோம். இன்றேல்
குத்தி மடிவோம், அடிகணையும் கொடும்புயலும்
தடை செய்யினும் காப்போம்"

என்று இந்தியாவினுடைய விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் நாடு கடத்தப்பட்டபோதும், மற்றவர்கள் இந்த நாட்டிற்கு உதவியாக இருந்தார்களே தவிர, அமெரிக்க ஆதிபத்தியம் ஒரு துரும்பைக்கூட அசைத்தது இல்லை. இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திற்கும் அமெரிக்க ஆதிபத்தியத்திற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் 1964-வது ஆண்டிலே காந்தி படத்தைப் போட்டு 'அப்பாசில் ஆஃப் லிபரேஷன்' என்று அமெரிக்கா எழுதிக் காண்பித்தது. தபால்தலை வெளியிட்டது. 'அப்பாசில் ஆஃப் லிபரேஷன்' (Apostle of liberation அமெரிக்கா எழுதி வந்தது. எந்த ஒரு நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திலும் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாத ஒரு நாடு, விடுதலை பெற்ற பிறகு அவர்களை வாழ்த்த வரும். அதுதான் அமெரிக்க ஆதிபத்தியம். அவர்களுக்கு தபால் தலை வெளியிடும். அப்படி அமெரிக்கா விடுதலைக்கு உதவாமல் அந்த நாடு விடுதலை பெற்றபிறகு தபால் தலை

வெளியிடும். ஜப்பானிடமிருந்து ஜப்பானுடைய ஆதிக்கத்திலிருந்து பிலிப்பைன்ஸ்-ஐ விடுவித்தாக வேண்டும் என்று போராடியபோது, 'ராம்சே' என்கின்ற மாபெரும் புரட்சிக்காரர் 10 ஆயிரம் கொரில்லாவினரைத் திரட்டி போராட்டம் செய்தபோது, அப்படிப் போராடிய மகத்தான வீரனைப்பற்றி அமெரிக்கா கிண்டல் செய்தது. ஆனால் பிலிப்பைன்ஸ் விடுதலை அடைந்த பிறகு, 6'வது ஆண்டு 'ராம்சே' என்ற அந்த மகத்தான வீரனுக்கு ஒரு தபால் தலை வெளியிட்டு, "அவனுக்கு அஞ்சலி செய்கிறோம்" என்று சொன்னது. ஆக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் ஊர்வலத்தை, வரலாற்றுச் சிறப்புள்ள ஊர்வலத்தை, பூமியையே குலுக்குகின்ற ஒரு பூகம்பப் புரட்சியை நடத்துகிறது என்றால், அது அரசியலுக்காக அல்ல. இன மான உணர்ச்சியை வெளிப்படுத்தி, ஈழத்திலே சாகின்ற தமிழர்களுக்கு இங்கே இருப்பவன் குரல் கொடுக்கிறான் என்பதை இந்த உலகம் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக, பூதலத்தின் நோக்காட்டைப்போல அதை எடுத்துக்கொண்டு நடக்கிறோம் என்றால், அமெரிக்காவினுடைய காவு மனப்பான்மை, கள்ள மனப்பான்மை அவர்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது என்று அர்த்தம்.

இராணுவத்தை அனுப்புவதுபற்றி பல பெரியவர்கள், பெருமக்கள் இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்குப் பேசியிருக்கின்ற திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று கூறுகிற கோரிக்கைபற்றிச் சொல்கிறபோது, ஒன்றைத் தெரிவித்தார்கள். இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று கோருவதுகூட இந்த நேரத்தில் நாகரீகமாக இருக்காது என்றார்கள். அது சிந்திக்கவேண்டிய பிரச்சினைதான். நாம் ஒரு வல்ல நாட்டைப்போல ஆதிபத்திய மனப்பான்மை கொண்டு, அந்த நாட்டினுடைய இறையாண்மைக்கு எதிராக இருக்கிறோம் என்றால், அது நாகரிகம் இல்லை. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றால், இன்னமும் காட்டுச்சட்டம் தானே அமுலில் இருப்பதாக அர்த்தம் என்றெல்லாம் கேட்கிறார்கள். அது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றுதான். இன்றைக்கு நம்முடைய பெரியவர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே உரையாற்றியபோது, ஒன்றைக் கேட்டார்கள். "நாம் இராணுவத்தை அனுப்புகிறோம். ஒரு நாட்டைப் பிடிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு ஒரு இராணுவம் வந்துவிடுமே. அப்போது அந்த நாட்டை அந்த மக்களை எப்படி எவர் காப்பார்கள்?" என்று கேட்டார்கள். அதைத்தான் பெரியவர் அவர்கள் எல்லாம் இங்கே சுற்றி சுற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அதற்காகக் கூடச் சொல்லவில்லை. நாம் ஒன்றை நினைத்துப்பார்க்க வேண்டும். உலகத்திலே விடுதலைப் போராட்டத்திற்காக வெளிநாடுகளிலே எப்போதெல்லாம் இராணுவம் வரவழைக்கப்பட்டிருக்கிறதோ





அந்த வெளிநாட்டு இராணுவங்கள் எல்லாம் அந்த நாடு விடுதலை அடைந்த உடனே அந்த நாடுகளை விட்டுச் சென்றதா என்றால் இல்லை என்பதுதான் வரலாறு. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன்: பங்களா தேஷிலே ஒரு மாபெரும் போராட்டம் நடைபெற்றது. முக்தி வாகினி போராடி பங்களா தேஷும் விடுதலை பெற்றது. முதன்முதலாக முஜிபூர் ரஹ்மானிடமிருந்து வந்த ஆர்டினன்ஸ், முதலாவதாக வந்த அவசரச் சட்டம் என்ன? "surrender your arms" இதுதான் முதல் சட்டம். 'சரண்டர் யுவர் ஆர்ம்ஸ்' என்று ஆரம்பத்திலேயே முக்தி வாகினியைக் கேட்டார்கள். வாளை எடுப்பவன் வாளாலேயே மடிவான் என்று சொல்வார்கள். அப்படி முக்தி வாகினி பங்களா தேஷ் விடுதலைக்காகப் போராடியது. அந்த முக்தி வாகினி அரசியல் சட்டத்தின் மூலமாக அமைந்த அரசாங்கத்திற்கு எதிராக இருக்குமோ என்கிற சந்தேகம் வந்தது. பல இடங்களில் உள்ளே

(பிற்பகல் 12-20)

போராடியவர்களுக்கும் வெளியிலே இருந்து வந்தவர்களுக்கும் பலப் போட்டி போராட்டம் வந்துவிட்டது. "ஆட்சி உனக்கா, எனக்கா? நாற்காலி யாருக்கு?" என்ற போராட்டம் வந்துவிட்டது ஆகவே இராணுவம் என்பது ஓர் இடத்திற்குச் சென்று திரும்புவதல்ல. உலகத்திலே பல நாடுகளிலே பார்க்கிறோம். அந்த இராணுவம் தானே ஆள வேண்டுமென்று ஆசைப்பட்டு, அந்த இராணுவத்திற்கும், விடுதலைக்குப் பிறகு நாட்டைப் பிடித்துக் கொண்டவர்களுக்கும் இடையே போராட்டம் ஏற்பட்டிருப்பதை உலகம் முழுவதும் பார்க்கிறோம். நேற்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு அழகான கருத்து, அழுத்தமான கருத்து. அதை நான் சொல்லியாக வேண்டும். சத்தியத்திற்கு சாட்சி சொல்கிற ஒருவன், மனச்சாட்சி படைத்த ஒருவன் நிச்சயமாக அதைச் சொல்லுவான். அவர் சொல்கிறார், "விடுதலைப் புலிகளேகூட கேட்கிற போது, ஆயுதங்கள் வேண்டுமென்று கேட்பார்களே தவிர, எங்களுக்கு இராணுவம் அனுப்புங்கள்" என்று கேட்கவில்லை என்று சொன்னார்கள். எந்தக் கருத்தில் அவர்கள் எதை உரைத்தார்களோ தெரியவில்லை. ஆழமாகப் பார்க்கும்போது, அவர்கள் ஆயுதங்கள் கேட்பார்களே தவிர, 'ஆர்மி' கேட்க மாட்டார்கள் என்று சொன்னதில் உள்ள ராஜதந்திரத்தை நான் ஓரளவு உணர்ந்து கொள்கிறேன். அருமையான ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், அந்த நாட்டில் விடுதலை உணர்வு பொங்கி பிரவகிக்கும்போது, அந்த நாடு எந்தத் திக்கிலே செல்ல வேண்டும், அங்கே எந்த வகையான அரசாங்கம் அமைய வேண்டுமென்பதை அந்த நாடுதான் முடிவு பண்ணிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் அத்தனை

[திரு. வலம்புரி ஜான்] [1983 அக்டோபர் 28

ஆண்டுகள் நடந்த விடுதலைப் போராட்டத்திற்குப் பிறகு, நாம் தான் அந்த முடிவைச் செய்தோமே தவிர, எந்த வல்லரசும், எந்த நாடும் அந்தத் தலைவிதியை எழுதவில்லை. we made a tryst with destiny பண்டித என்று நேரு பேசுகிறார். விதியோடு பன்னெடுங் காலத்திற்கு முன்பே நாம் உடன்படிக்கை செய்து கொண்டோம் என்று கூறுகிறாரே தவிர, பக்கத்திலுள்ள ஒரு நாடு, வல்லாண்மை படைத்துள்ள ஒரு வல்லரசு செய்ததாகக் குறிப்பிடவில்லை. அண்மையிலேகூட க்வெச்நெவெச் என்ற ஒரு நாடு, கியூபாவிற்கு அருகாமையில் இருக்கிற நாடு, 60 ஆண்டுகளாக ஆங்கிலேயரின் வல்லாண்மைக்குக் கீழேயுள்ள நாடு, 44,000 மக்களை மாத்திரம் கொண்டுள்ள நாடு—அந்த நாடு விடுதலை அடைந்து, ஐ.நா. சபையில் 158-வது உறுப்பினராகச் சேர்ந்து உள்ளது. 44,000 பேர்கள் இருக்கிற சின்ன நாடுகூட மற்றவர்கள் உதவியால், பாதுகாப்பால் தன்னுடைய தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ளவில்லை. தன்னுடைய தலைவிதியைத் தானே நிர்ணயித்துக்கொண்டிருக்கிறது. அங்கே 44,000 பேர்; இங்கே 44 லட்சம் பேர். அப்படி தலைவிதியை நிர்ணயிக்கிற ஒரு சூழ்நிலை வந்தால், அந்த மக்களே முடிவு பண்ணுவார்கள். அந்த மக்களிடம்தான் அது இருக்கும். புரட்சித் தலைவர் அவர்கள் அழகாகச் சொல்லும்போது, "அந்த மக்கள் ஒன்று சேரட்டும். நான் மீண்டும் சொல்கிறேன். ஸ்ரீலங்கா தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று நான் பிரிக்கவில்லை. வரலாற்றைப் பார்க்கும் எல்லோரும் உணர்ச்சிவசப்படாமல் ஒப்புக்கொள்வார்கள். அப்படித்தான் வரலாற்றில் இருக்கிறது. அவர்கள் ஒன்று கூடி தீர்மானமாகச் சொல்லட்டும். அப்படிச் சொல்லும்போது இந்த அரசு, தமிழகத்து மக்கள் ஒன்றாக நிற்பார்கள்" என்று அவர்கள் சொன்னபடி, இந்தத் தீர்மானத்தை வசந்தமான வார்த்தைகளால் வரவேற்கிறேன்.

ஒரு நாட்டுக்குள்ள பிரச்சினை என்பதை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சி அதை நாடு தழுவிய பிரச்சினையாக மாற்றியிருக்கிறது. நாடு தழுவிய பிரச்சினையை, அதற்கு அப்பாலே உலகம் தழுவிய பிரச்சினையாக மாற்றி—உலகில் சிக்கல் வர வேண்டுமென்று அல்ல; வல்லரசுகளை வரவழைக்க வேண்டுமென்று அல்ல—உலகம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்திய அரசாங்கம், திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லவில்லை என்றாலும்—மாநில அரசு சொல்கிறது. நான் ஒன்றை மாத்திரம் படித்தவர்களை, பண்பு உள்ளவர்களை, பேராசிரியர்களை, பெருமக்களைக் கேட்கிறேன். திரு. பி. சி. ராய் அவர்களின் பேச்சு முறையையும் படித்திருக்கிறேன். எனக்கு ஷேக் அப்துல்லாவின் பேச்சுக்கள் மனப்பாடம். வெளி நாட்டு அரசாங்கத்தைப் பார்த்து—உணர்ச்சிகரமான



[1983 அக்டோபர் 28] [திரு. வலம்புரி ஜான்]

வார்த்தை என்றுகூடச் சொல்ல இயலாது, அறிவார்ந்த வார்த்தை என்றுதான் சொல்ல வேண்டும்—"இந்திய அரசாங்கம் சொல்வதை ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்கவில்லை என்றால், ஸ்ரீலங்கா தன்னுடைய சுதந்திரத்தை இழக்க நேரிடும்" என்று சொல்ல தமிழ் நாட்டு முதலமைச்சரவர்கள்தான் துணிச்சலோடும், தமிழர்களின் நலனுக்காக நிற்கும் தெம்போடும், திறமையோடும் இருக்கிறார் என்று சொன்னால் அதற்குமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இங்கே வருகிற அகதிகளுக்குப் பாதுகாப்புத் தருவேன் என்று அந்த வல்லாண்மைக்காக, அரசியல் நேர்மைக்காக நான் அவரை வாழ்த்துகிறேன், வணங்குகிறேன் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை பலபட பாராட்டியவர்களுக்கு நன்றி தெரிவித்து வணங்குகிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஒரு செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்தால் மேற்கொண்டு விவாதத்திலே பங்குகொள்கிறவர்களுக்கு பலன் உடையதாக அமையும். அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு—மன நிறைவு தருகிறதோ இல்லையோ; இன்னும் மனக்குறை இருந்தாலும் இருக்கலாம்—மன நிறைவு தரலாமென்று நினைக்கிறேன். நேற்று பேசிய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா அவர்கள் இன்று அவையிலே இல்லை. அவையிலே அந்தக் கட்சியின் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலிருந்து சென்றுள்ள மின் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் இந்தியாவின் சார்பிலே ஐ.நா. சபைக்குச் சென்றுள்ள குழுவில் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நடவடிக்கைகளை, பேச்சுக்களைக் கொஞ்சம் குறைவுபடுத்தி இந்த அவையிலே பேசினார்கள். அதற்கு அவ்வப்போது விளக்கங்கள் அளித்துக்கொண்டிருக்கிறோம். என்றாலும் அவர்களுக்கு மன நிறைவு தரும் அளவுக்கு அடுத்த முயற்சியை நம்முடைய இந்தியக் குழு தொடர்ந்து இருக்கிறது. அதற்குக் காரணமாக நம்முடைய அமைச்சர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். வருகிற அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் ஐ.நா. சபை பிரதிநிதிகள் கூட்டத்தில் நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் இந்தியக் குழுவின் சார்பில் பேச இருக்கிறார் என்கிற செய்தியை அங்கேயிருந்து நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் உலக நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, உங்கள் மூலமாக, இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இனிமேல் பேசுகிறவர்கள் இதையும் சேர்த்துக்கொண்டு பேசினால் நல்லது.

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 28

அந்தக் கூட்டத்திற்கு பிரதிநிதிகள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அந்த ஒப்புதல் அளித்த பிறகுதான் அந்த நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்தை ஏன் இங்கே கூட்டவில்லை என்பதற்கு நாளைக்கு முதல்வரவர்கள் பதில் அளிப்பார்கள். உலக நாடுகள் மன்றத்தில் பேசும்போது, இங்கே தமிழகச் சட்ட மன்றமும் பேசிக் கொண்டிருக்கிறது என்ற அந்த வரலாற்றுச் சிறப்பையும் நம்முடைய முதல்வர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே உருவாக்கியிருக்கிறார்கள்; புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் வரிசையாக, குறிப்பாக அடையாளங்கள் இவை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, அமைகிறேன்.

* திரு. எஸ். முத்து : மாண்புமிகு தலைவரவர்களே, ஸ்ரீலங்காவில் நடைபெற்ற கொலை, கொள்ளை, கற்பழிப்பு சம்பவங்களைக் கண்டித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலே கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து நானும் ஒருசில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீலங்கா சம்பவம்பற்றி இங்கே பேசிய பல உறுப்பினர்களும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஒரு கருத்தை அனைவரும் ஒத்துக்கொண்டு பேசினார்கள். அங்கே நடைபெற்ற இனக் கொலையைக் கண்டிக்காத அரசியல் கட்சிக்காரர்கள் யாருமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த இனக் கொலையைக் கண்டிப்பதில், அதற்குத் தீர்வு காண்பதில், வேண்டுமென்றால், சில சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம் ஆனால் மொத்தத்தில் தமிழ் நாட்டு மக்களுடைய எண்ணம் பிரதிபலித்தது என்பதை நாம் பார்த்தோம். ஸ்ரீலங்காவிலே சிங்கள வெறியர்களாலும், சிங்கள அரசாலும் ஏற்படுத்தப்பட்ட அந்தக் கொலை வெறி அக்கிரமங்களைக் கண்டித்து தமிழக அரசு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஒரு முடிவு எடுத்து, இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிவிட்டு, தமிழகம் முழுமையும் அனைத்துக் கட்சிகள் சார்பில் எல்லாத் தரப்பு மக்களும் ஒத்துக் கொண்டு ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடத்தியதை நாம் பார்த்தோம். என்னுடைய 50 ஆண்டுக்கால அரசியல் வாழ்வில் எத்தனையோ போராட்டங்களை நான் பார்த்திருக்கிறேன். சில போராட்டங்களிலும் ஈடுபட்டிருக்கிறேன் என்றாலும், இந்தப் பிரச்சினையில் தமிழ் மக்கள் ஒன்று பட்டதுபோல வேறு எந்தப் பிரச்சினையிலும் ஒன்று பட்டார்கள் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு தமிழ் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நின்று, ஸ்ரீலங்காவிலே ஏற்பட்ட அக்கிரமங்களைக் கண்டித்தார்கள். அதைத் தொடர்ந்து இரண்டு மாத காலம் தினசரி உண்ணாவிரதங்களும், ஊர்வலங்களும் நடத்தி. ஸ்ரீலங்காவில் நடைபெறும் அக்கிரமங்களைக் கண்டித்து வந்தார்கள். இப்படி. தமிழ் மக்களுடைய உணர்வைத் தூண்டி. எழுப்பியது



1983 அக்டோபர் 28] [திரு. எஸ். முத்து]

(பிற்பகல் 12 30).

இந்தப் போராட்டம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அதற்கு எப்படித் தீர்வு காண்பது என்பதிலேதான் கருத்து மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிலருடைய கருத்து மத்திய சர்க்கார் இதிலே தலையிட்டு உடனடியாக இந்தக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும் என்பது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். முத்து :** மத்திய சர்க்கார் இதைக் கூர்மையாகக் கவனித்துக் ...ரண்டிருக்கிறது. ராஜ தந்திரத்தோடு நடக்கிறது என்பது மற்றொரு ...ாருடைய கருத்து. ஆக, இந்த இரண்டு விதமான கருத்துக்களுக்கு ...டையிலேதான் மோதல். ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையில், ...லங்காவைக் கண்டிப்பதிலே யாருக்கும் இடையே மோதல் இல்லை. அதிலே ...ர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியிருக்கலாம். சிலர் சாதாரணமாகப் பேசி ...ருக்கலாம். உணர்வுகள் என்பதும், சாதாரணமாகப் பேசுவது என்பதும், ...ணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது என்பதும் அவரவர்களுடைய சுபாவத்திற்கு ...ப, சூழ்நிலைக்கு ஏற்ப ஏற்படுகிறவை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த ...ரையில், சிலர் உணர்ச்சி வசப்பட்டோம். நான்கூட உணர்ச்சி வசப்பட்டேன். ...ப்போது மட்டுமல்ல. ஸ்ரீலங்காவில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற ...ாதெல்லாம் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறேன். ஸ்ரீலங்காவில் மட்டுமல்ல, ...மிழர்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கேயெல்லாம் அவர்களுக்கு ...பத்து வருகிற நேரத்தில் எல்லாம் நான் முதல் குரல் கொடுத்திருக்கிறேன். ...துபற்றி நண்பர்கள் பலருக்கு மிக நன்றாகத் தெரியும். குறிப்பாகச் சொல்ல ...வண்டுமென்றால், 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ...ாநாட்டின்போது, ஸ்ரீலங்காவிலே பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் அன்றைக்கு தமிழக மக்கள் அதை எதிர்த்து ஒன்றுதிரண்டு போராட ...நினைக்கவில்லை. ஆனால் எனதருமை சகோதரர் டாக்டர் சனார்த்தனம் அவர்களும் மறைந்த கவிஞர் கண்ணதாசன் அவர்களும், "சென்னையிலே ஒரு கண்டன ஊர்வலம் நடத்த இருக்கிறோம், நீங்கள் கலந்துகொள்ள வேண்டும்" என்று எனக்குக் கடிதம் எழுதினார்கள். நான் ஊர்வலத்திலே கலந்து கொள்வதற்காகவே சென்னைக்கு ஓடோடி வந்தேன். "அடுத்த வாரம் மதுரையிலே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறேன், மதுரைக்கு நீங்கள் வாருங்கள்" என்று நான் கவிஞர் கண்ணதாசன் அவர்களையும் டாக்டர் சனார்த்தனம் அவர்களையும் அழைத்தேன். டாக்டர் சனார்த்தனம் கலந்து கொண்டார். ஆனால் கவிஞர் கண்ணதாசன் காரைக்குடி வரை வந்துவிட்டு,

[திரு. எஸ். முத்து] [1983 அக்டோபர் 28

என்ன சூழ்ச்சி யார் செய்தார்களோ மதுரைக்கு வராமல் சென்னைக்குத் திரும்பி விட்டார்கள். இருந்தாலும் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதால் மதுரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி ஸ்ரீலங்காவில் நடந்ததை, ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்தார்கள். அன்று முதல் தொடர்ந்து நான் ஸ்ரீலங்கா பிரச்சினையில் ஈடுபட்டு வருகிறேன்.

இங்கே ராஜதந்திரம் என்றுகூட பேசினார்கள். நேற்றுகூட அருமை சகோதரர், சட்டமன்றத்தில் நிரம்ப அனுபவம் பெற்ற எனதருமை நண்பர் திரு. எம். பி. சுப்பிரமணியம் ஒன்றைச் சொன்னார்கள். இந்தியாவின் பிரதமர் இதில் ராஜதந்திரத்தோடு செயல்படுகிறார் என்று சொன்னார்கள். என்னதான் ராஜதந்திரம் என்று சொன்னாலும்கூட, நமக்குச் சொந்தமாக இருந்த கச்சத் தீவை ஸ்ரீலங்காவிற்குத் தாரைவார்த்துக் கொடுத்தது மிகப் பெரிய தவறு. அந்தக் காரியத்தை யார் செய்திருந்தாலும், அதற்கு யார் உடன்பட்டிருந்தாலும், அந்தச் செயல் கண்டிக்கத் தக்கதாகும். இந்தியாவிலிருந்து 10 மைலில் இருக்கிற கச்சத் தீவு பரம்பரை பரம்பரையாக சேதுபதிக்குச் சொந்தமானது. அந்தத் தீவை ஸ்ரீலங்காவிற்குக் கொடுத்தது மிகப் பெரிய தவறு.

இன்றைக்கு திரிகோணமலையில் அமெரிக்கா கப்பல் தளம் அமைக்கப் போவது குறித்து சொல்லுகிறார்கள். அது இந்தியாவிலிருந்து 16-வது மைலில் இருக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நாம் இந்தியாவிலிருந்து 10-வது மைலில், நமக்குச் சொந்தமாக இருந்த கச்சத் தீவை ஸ்ரீலங்காவிற்குக் கொடுத்து விட்டோம். அதைக் கண்டிக்க அன்றைக்கு இந்திய மக்கள் முன்வரவில்லை. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற திரு. ஜெயவர்த்தனே அமெரிக்காவோடு தொடர்பு கொண்டிருக்கிறார். அதேசமயத்தில் அன்றைக்கு நாம் ஸ்ரீலங்காவிற்குக் கச்சத் தீவைத் தாரைவார்த்துக் கொடுத்தபோது, ஸ்ரீலங்காவில் ஸ்ரீமாவோ அரசு சீனாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அதேநேரத்தில் அன்றைக்கு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நேசம் இல்லை. மாறுபாடான கருத்து இருந்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட நேரத்தில்தான் ஸ்ரீலங்காவிற்குக் கச்சத் தீவை தானமாகக் கொடுத்தார்கள். அதை நான் தமிழ் நாட்டிலுள்ள மேடைகளில் கண்டிக்காமல் இருந்ததில்லை. அது மிகப் பெரிய தவறு என்று கண்டித்திருக்கிறேன். இன்றைக்கு ஸ்ரீலங்காவிலுள்ள திரிகோணமலையில் பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவிலுள்ள அமெரிக்கா கப்பல் தளம் அமைக்க முயன்று வருகிறது. அதைத் தடுக்க இந்திய அரசு முயற்சிக்கவில்லை. பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து, சில மைல் தூரத்தில், இந்தியாவுக்கு அருகிலுள்ள ஸ்ரீலங்கா ... திரிகோணமலையில் அமெரிக்கா கப்பல் தளம் அமைக்க ...



1983 அக்டோபர் 28] [திரு. எஸ். முத்து]

என்பதை மத்திய அரசு புரிந்துகொள்ள மறுக்கிறதா அல்லது அதுபற்றி மறந்துவிட்டார்களா, இதில் எது சரி என்று எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு அமெரிக்கா அங்கு கப்பல் தளம் அமைக்கப்போவதை எதிர்த்து பலரும் இங்கே பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போராட்டத்திலேயே வளர்ந்தவர். பல போராட்டங்களைச் சந்தித்தவர். அவர்கள் இங்கே பேசும்போது ஸ்ரீலங்காவில் நடைபெற்ற இன வெறி படுகொலையைக் கண்டித்தார்கள். ஆனால் அவருடைய பேச்சின் முழுப் பகுதியிலும் "அமெரிக்க ஏகாதிபத்தியம்" என்கிற சொல்தான் அதிகமாக வந்தது. இன்றைக்கு நாங்கள்கூட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வரவேற்கவில்லை. எல்லோரும் அமெரிக்காவின் செயலைக் கண்டிக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் எந்த நாடானாலும் சரி, உலகத்திலே உள்ள பலம்வாய்ந்த ஒவ்வொரு நாடும் பலம் குறைந்த சிறிய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குப் பின்பலமாக, பக்க பலமாக இருந்து ஊக்குவிப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு சிறிய நாட்டின்மீது படையெடுத்திருக்கிறது. அதை உலக நாடுகள் எல்லாம் இன்னொரு நாட்டின்மீது தலையீடு என்று கண்டிக்கின்றன. அதேபோல சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் தலையிட்டபோது, உலக நாடுகள் எல்லாம் கண்டித்தன. ஆனால் இன்றைக்கு ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், நமது ராஜதந்திரி இந்தியப் பிரதமர் அவர்கள் நெடுங் காலம் காத்திருந்து இவ்வளவும் நடைபெற்ற பிறகும், ஒன்றும் சொல்லாமல் இருந்தால், உலக நாடுகள் எல்லாம் என்ன சொல்வார்களோ என்கிற நிலைமை ஏற்பட்ட பிறகு, ஏதோ கண்டித்தோம் என்கிற நிலையில் கண்டித்திருக்கிறார்கள். தமிழர்களாகிய நாமெல்லாம் ஸ்ரீலங்கா சம்பவத்தைப் பார்த்து ரத்தக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆப்கானிஸ்தானில் ஏற்கெனவே இருந்த தாவுத் கான் ஆட்சியை எதிர்த்த மக்களுடைய ஆதரவோடு, அந்த நாட்டின் அழைப்பை ஏற்று சோவியத் யூனியன் அங்கு சென்றது. அதேசமயம் அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் ஆயுதங்களைப் பெற்று ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் உள்ளே நுழைய இருந்தது. ஆகவேதான் நான் கேட்கிறேன் "ஆப்கானிஸ்தான் வேண்டுகோளுக்கு இணங்க சோவியத் யூனியன் அங்கே போனது தவறா?" அப்படியானால் 1970-ஆம் ஆண்டு வங்காள தேசப் பிரச்சினை ஏற்பட்டபோது, பாகிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது ஏழாவது கப்பற்படையைக் கொண்டு வந்துகொண்டிருந்தபோது அதை சோவியத் யூனியன் தடுத்துக் கொண்டு வந்ததே அது தவறா? அமெரிக்கா தலையிடுவதையும், சோவியத் யூனியன் தலையிடுவதையும் ஒரே கோணத்தில் பார்த்து, இரண்டும் ஒன்றுதான்

என்று சொல்கிறார்களா? ஆப்கானிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் மட்டுமே, அங்கு சோவியத் யூனியன் தலையிட்டது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். முத்து :** ஒரு சிறிய நாட்டில் நடக்கிற உள்நாட்டுப் பிரச்சினை என்றுதான் மத்திய அரசு எண்ணிக்கொண்டிருந்தது. ஸ்ரீலங்காவில் நடக்கிற உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது என்று எனதருமை சகோதரர், என்னோடு சிறையில் இருந்தவர், திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். "அதுவும் அழைப்பு இல்லாமல் ஆஜராகி இந்தியா தலையிட்டால், அமெரிக்காக்காரன் குண்டு போட்டால் என்ன செய்வது?" என்று சொன்னார். ஸ்ரீலங்காவில் இந்தியா தலையிடுவது எப்படி அடுத்த நாட்டுக் காரியம் என்று அவர்கள் சொல்கிறார்களோ, அதுபோல தான் ஆப்கானிஸ்தான் பிரச்சினையிலும், யார் தலையிட்டிருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி அல்லது பிரிட்டனாக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் சரி, அது உள்நாட்டுப் பிரச்சினை தான். அதுபோலத் தான் வங்காள தேசப் பிரச்சினையும். ஆனால் அதற்கு அருமையான காரணம் இங்கே சொல்லப்பட்டது. எனதருமை நண்பர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது. கோடிக்கணக்கான மக்கள் அகதிகளாக வந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். "அவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளிக்க வேண்டும். அவர்களை எல்லாம் பாதுகாக்க, அவர்களுக்கு உதவி செய்ய இந்தியா படை யெடுத்தது" என்று சொன்னார்கள். இன்றைக்கு ஸ்ரீலங்காவிலிருந்து அதுமாதிரி அகதிகள் ஓடி வர தரை மார்க்கம் இல்லை. இருந்திருந்தால் நிச்சயமாக அத்தனை தமிழர்களும் ஓடி வந்திருப்பார்கள். அதுதான் உண்மை நிலைமை. தரை மார்க்கம் இல்லாததால், அவர்களால் ஓடி வர முடியவில்லை. அங்கே ஓடி வந்த மக்களைக் காப்பாற்ற நாம் தலையிட்டோம் என்றால், இங்கேயும் அதுதான் பிரச்சினை.

**திரு. ஆ. நல்லசிவன் :** வங்காள தேசத்திற்குள் இந்திய இராணுவம் போனது போல், இங்கேயும் இந்திய இராணுவம் தலையிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரா? இந்திய அரசு இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட வேண்டுமென்று வாதாடுகிறார்களா? இங்கே டேபிளில் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அரசின் தீர்மானத்தை ஆதரித்துத்தான் நான் இங்கே பேசினேன். அதேசமயத்தில் மாண்புமிகு உறுப்பினரோ வங்காள தேசத்திற்குள் இந்திய இராணுவம் போனது போல் ஸ்ரீலங்காவிற்குள்ளும் இந்திய இராணுவம் போக வேண்டு மென்று பேசுகிறாரா? அப்படி என்றால், இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கி றாரா இல்லையா?





(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தீர்மானம் ஸ்ரீலங்காவைப்பற்றியது. உவமானத்திற்காக பங்களா தேசத்தை எடுத்து, அதுவே உவமேயமாக நீண்டு நெடுந்தூரம் போகிறதே, ஆகவே சீக்கிரம் முடித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. எஸ். முத்து :** ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு சோவியத் படையை அனுப்பியது நியாயம் என்றால், இந்தியா பாகிஸ்தானுக்காகப் படையை அனுப்பியது நியாயம் என்றால், அதைப்போலவே இனப் படுகொலை நடக்கும் போது, ஸ்ரீலங்காவுக்குப் படையை அனுப்புவது தவறல்ல என்று பலர் எண்ணுவதும் தவறல்ல என்பது என்னுடைய கருத்து. அது சரியென்றால் இதுவும் சரிதான். அது வேறு விஷயம். ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். என்னவென்றால் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** பாகிஸ்தான்மீது இந்தியா படையெடுத்தபோது, அங்கே அமைந்த போட்டி சர்க்கார், அங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி ஆகிய இரண்டுமே அங்கே இந்தியா தலையிட வேண்டுமென்று கோரியது. அதைப்போலவே பங்களா தேசத்தில் அங்கே அமைந்த போட்டி அரசு இந்தியா தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டது. அந்த வேண்டுகோளை இந்திய அரசு பரிசீலித்து அதன்படி படையை அனுப்பியது.

**திரு. எஸ். முத்து :** அதைத்தான் ஸ்ரீலங்கா தமிழர்கள் கேட்கிறார்கள். சிங்கள வெறியர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்றுதான் கேட்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** முஜிபுர் ரஹ்மான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அதை பாகிஸ்தான் அரசு கலைத்தது. முஜிபுர் ரஹ்மான் அந்த வேண்டுகோளை விடுத்தார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சபையில் தவறான தகவல்கள் இடம் பெற்றுவிடக் கூடாது என்ற அடிப்படையில் சொல்கிறேன். முஜிபுர் ரஹ்மான் கட்சி 100-க்கு 98 இடங்களைக் கைப்பற்றி ஆட்சிக்கு வரவிருந்த நிலைமை என்றுதான் நான் நினைக்கிறேன். ஆட்சிக்கு வரவில்லை.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வந்த பிறகு முஜிபுர் ரஹ்மான் அவர்கள் குடியரசு என்று அறிவித்தார். அப்படி அறிவித்ததை ஒன்பது மாதங்களுக்குப் பிறகு இந்தியப் பேரரசு ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகு, என் நினைவு

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 அக்டோபர் 28

சரியாக இருந்தால், 3—5—1971 அல்லது 3—9—1971ல் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் அவசர நிலைக் கால சட்டம் பிரகடனம் வந்தது. 4 ஆம் தேதி பாகிஸ்தான் படையெடுத்தது. ஐந்தாம் தேதி இந்தியா பங்களா தேஷ் மீது படையெடுத்தது. காரணம் சர்வாதிகார ஆட்சியிடம் இருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நிலை வந்து, அப்படி காப்பாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வந்து, அதன் பிறகு செய்தது.

திரு. எஸ். முத்து: நான் படையை அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் நடைபெற்ற சம்பவங்களை நான் ஞாபகப் படுத்தினேன்.

அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன். ஸ்ரீலங்காவில் இருப்பவர்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகிறார்கள். ஒன்று யாழ்ப்பாணத் தமிழர்கள். மற்றொன்று மலைவாழ் தோட்டத் தமிழர்கள். மற்றொன்று வியாபாரம் செய்யும் வர்த்தக சமூகத்தினர், தமிழர்களும் முஸ்லிம்களும். இவர்களில் தொடர்ச்சியாகவும் அடிக்கடியும் பாதிக்கப்படுபவர்கள் இந்திய வம்சாவழியினர். இந்திய வம்சா வழியினர் என்பவர்கள் இந்தியாவிற்குச் சொந்தமானவர்கள். தமிழ் நாட்டுக்குச் சொந்தமானவர்கள். ஆகவேதான் "இந்திய வம்சாவழியினர் அங்கே தாக்கப்படுகிறார்கள்", என்று சொல்கிற நேரத்தில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, அவர்களைத் திரும்பவும் அழைத்துக் கொள்வது என்பது சரியல்ல. என்னுடைய கருத்து, திருமதி பண்டாரநாயகாவுக்கும், லால் பகதூர் சாஸ்திரிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமே தவறு. அதன்படி அவர்களை இங்கே அனுப்பியிருக்கக் கூடாது. இது மிகப் பெரிய தவறு. முதலிலேயே அதை ஒத்துக் கொண்டாக வேண்டும். இன்றைக்கு நாம் பார்க்கிறோம், 30 ஆண்டு களுக்குள்ளாக அசாம் மாநிலத்தில் புகுந்த வெளிமாநிலத்தவரை வெளியேற்ற முடியவில்லை. ஆனால் 150 ஆண்டுகளுக்கு முன்பு, 200 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையர்களால் இங்கேயிருந்து அங்கேயிருக்கிற தோட்டங்களைச் சீர்படுத்த, மலைப் பிரதேசங்களை, காடுகளை, பாம்புகளும் மிருகங்களும் வாழ்கிற காடுகளைத் திருத்த, அதைத் தேயிலை விளையும் நாடாக, ரப்பர் விளையும் நாடாக அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் நாடாக ஆக்கி, ஸ்ரீலங்காவில் உள்ள சிங்கள வெறியர்களை வாழ வைத்த தமிழர்களை, 150 ஆண்டுகளாக வாழ்ந்தவர்களை வெளியேற்ற ஒப்பந்தம் செய்துகொண்டது இந்திய ராஜதந்திரம் என்று ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. முப்பது ஆண்டு களுக்கு முன்பு நுழைந்தவர்களையே வெளியேற்ற முடியவில்லை. அங்கே போராட்டம், கொலை, கொள்ளை இன்னும் தீர்ந்தபாடில்லை என்றால், 150 ஆண்டுகளுக்கு முன்பு, அகதிகளாகக்கூட அல்ல, காடாக, மேடாக இருந்த இடங்களைப் பண்படுத்தி, பக்குவப்படுத்தி, இன்றைக்கு உலக மார்க்கெட்டில் உயர்ந்த தேயிலை உற்பத்தி செய்யும் இடமாக மாற்றிய தமிழர்களை அந்தச்



1983 அக்டோபர் 28] [திரு. எஸ். முத்து]

சிங்கள வெறியர்கள் வெளியேற்ற வேண்டுமென்று நினைத்தால், அதை எப்படி இந்திய அரசாங்கம் ஒத்துக் கொள்ளலாம் என்பதுதான் என்னுடைய கேள்வி யாகும்.

அதை ஒத்துக்கொண்ட காரணத்தால்தான், இன்றைக்கு அது தொடருகிறது. என்ன நிலைமை இன்றைக்கு? அகதிகளாக வருவோர்களைக் காப்பாற்ற ஒரு மாநில அரசாங்கம்தான் பொறுப்பு ஏற்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் பழி வருகிறது. இந்திய அரசுக்கு அந்தப் பொறுப்பு இல்லையா? பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக வெளியேறியவர்கள், இன்றைக்கு பம்பாய், டில்லி போன்ற இடங்களில் இந்தியாவின் வர்த்தகத்தையே ஆட்டிப் படைக்கவில்லையா? அந்த அளவுக்கு அகதிகள் கையில் அதிகாரம் இருக்கிறது. ஆனால் ஸ்ரீலங்காவிலிருந்து துரத்தப்பட்ட தமிழர்கள் இன்று பிச்சை எடுக்கிறார்கள். பர்மாவிலிருந்து துரத்தப்பட்ட தமிழர்கள் பிச்சை எடுக்கிறார்கள். மாநில சர்க்காரிடத்தில் மனு போட்டு கெஞ்சிக் கொண்டிருக் கிறார்கள். அதைத்தான் காண்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சிக்காரருக்கு நானே சில விளக்கங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது இந்த அரசு ஸ்ரீலங்காவிலிருந்து வருகிற அகதிகளுக்கு, அவர்கள் இராமேஸ்வரத்தில் வந்து இறங்கினாலும் சரி, எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்று தெரியும். இதுவரையில் ரூ. 70 லட்சம் இந்த முதல்வர் உதவி நிதிக்காக சேர்ந்திருக்கிறது. இது இவர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. நேற்றையதினம், என்னுடைய அலுவலகத்திற்கு ஒருவர் அவர் மனைவியை அழைத்துக்கொண்டு வந்தார். "நாங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து வந்தவர்கள். எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். நாங்கள் பிச்சை எடுக்கிற நிலை இருக்கிறது" என்றார். அதிகாரிகளை விட்டு நான் விசாரிக்கச் சொன்னேன். தனித்தனியாக கணவனையும், மனைவியையும் விசாரித்தார்கள். மனைவி "நான் விமானத்தில் வந்தேன்" என்று சொன்னார். கணவன் "நான் கப்பலில் வந்தேன்" என்று சொன்னார். பிறகு விசாரித்ததில் இருவரும் ஈரோட்டுக்குப் பக்கத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. இப்படியும் சில 'அகதிகள்' வந்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் அகதிகள் என்று நம்பிக் கொள்வதைவிட, இன்னும் கொஞ்சம் விளக்கமாக விசாரித்தாலும் பரவாயில்லை. அகதிகள் கணக்குகளை வைத்திருக்கிறேன். ஆகாய விமானம் மூலம் வந்தவர்கள், கப்பல் மூலம் வந்தவர்கள் என்று விவரங்கள் வைத்திருக்கிறேன். அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது.

[1983 அக்டோபர் 28

திரு. எஸ். முத்து : எப்போதும்போல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பரந்த உள்ளத்தை அது காட்டுகிறது. மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும், அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அது தான் உண்மை. ஆனால் மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில், அந்த மக்களுக்காக என்ன செய்தார்கள்? பர்மாவிலிருந்து ஓடி வந்தவர்கள் இன்னும் சென்னையில் பிச்சை எடுக்கிறார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து ஓடிவந்தவர்கள் இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. அதுதான் எனக்கிருக்கிற கவலை. மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய சர்க்கார் நடந்து கொள்கிறது. நமக்கு இந்த விஷயத்தில் எவ்வளவு ஆத்திரம் வந்ததோ, அந்த அளவுக்கு டில்லியில் உள்ளவர்களுக்கு வரவில்லை. உண்மையிலேயே சொல்கிறேன், ஆரம்பத்திலேயே பிரதமர் கண்டனம் தெரிவித்திருந்தால், பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். பயந்திருப்பார்கள். எழுபது கோடி மக்கள் வாழ்கிற இந்த நாட்டை, விஞ்ஞான ரீதியாக வளர்ந்திருக்கிற இந்த நாட்டை, மற்ற ஆதிபத்திய நாடுகளோடு போட்டி போடுகிற அளவுக்கு இருக்கிற ஒரு நாட்டைப் பகைத்துக்கொண்டு, சுண்டைக்காய் நாடு எதிர்த்துவிட முடியாது. நம் ஆதரவை உடனடியாகத் தெரிவித்தோம் அதற்காகப் பாராட்டினோம். ஆனால் தெரிவிக்க வேண்டியவர்கள், எச்சரிக்க வேண்டியவர்கள். ஜூலையில் நடந்ததற்கு ஆகஸ்ட் 15-ல் வருந்தத்தக்கது என்று சொல்கிறார்கள். ஆகவே பாராளுமன்றம் இதைக் கண்டிக்கவில்லை . . .

(பிற்பகல் 12-50)

திரு. ஜே. எம். மியாகான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மூத்து அவர்கள் முதல்வர் அவர்களின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறாரா அல்லது எதிர்த்துப் பேசுகிறாரா என்று தெரியவில்லை.

திரு. எஸ். முத்து : நான் ஆதரித்துத்தான் பேசுகிறேன். முதல்வருடைய உதவியால்தான் இவ்வளவும் நடக்கிறது என்று சொன்னேன். மத்திய அரசு சரியாகச் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குறைபாடு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் வேறுபடுவதெல்லாம் உலகத்தில் எத்தனை அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்பதை விளக்கிச் சொல்லிவிட்டு, அரசாங்கத்தோடுதான் நான் இருக்கிறேன் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பேசிய பேச்சின் நகல் என்னிடம் இருக்கிறது. அதில் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.



1983 அக்டோபர் 28] [திரு. க. இராமமூர்த்தி]

"I pointed out to the President that the developments in Sri Lanka affected us also. In this matter India cannot be regarded just as any other country. Sri Lanka and India are the two countries which are directly concerned. Any extraneous involvement will complicate matters for both our countries." என்று சாதாரணமாக அல்ல, மிகவும் கடுமையான வார்த்தையை, இன்னொரு அரசுக்கு எச்சரிக்கையாக, நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் மாதத்திலேயே அதுவும் 5—8—1983 அன்று பேசியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எங்களுடைய குறையெல்லாம் பாரதப் பிரதமர் அவ்வாறு பேசியதோடு 'கண்டிக்கிறேன்' என்று வார்த்தையைக்கூட தெரிவிக்கவில்லை என்பதுதான். அதாவது :

Our grievance is that she has not categorically condemned the violence perpetrated in Sri Lanka.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்—முன்னாள் அமைச்சர் அவர்கள்—தெளிவாகச் சொன்னார்கள். சொல்ல வந்த தன்னுடைய கருத்தை அழுத்தந் திருத்தமாகச் சொல்ல முனைந்தபோது ஆங்கிலத்தைக்கூட பயன்படுத்தினார்கள். அதுதான் பிரச்சினை. That is the problem of language. வார்த்தையை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். எது வலுவான வார்த்தை என்பதை ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கோணத்திலிருந்து பார்க்கிறோம். தமிழ் மொழியில் ஒரு வார்த்தைக்கு பல அர்த்தங்கள் உண்டு என்பதைப்போல் "கண்டனம்" தெரிவிப்பது என்று வருகிறபோது, எப்படி எந்த முறையில் என்பதில்தான் மாறுபடுகிறோம். நான் சொன்ன இந்த வார்த்தையைத்தான் பிரதமர் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னால், அப்போது மாண்புமிகு உறுப்பினர்தான் பிரதமராக இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், பிரதமர் கண்டித்திருக்கிறார். கடுமையாகக் கண்டித்திருக்கிறார். இன்னொரு நாட்டு ஆட்சித் தலைவரான ஜனாதிபதியைக் கண்டித்து இந்த நாட்டு பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார். "I spoke to him over the phone" என்று கடுமையாகச் சொல்லியிருக்கிறார் என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னும் பல பேர் பேச வேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். முத்து: எனக்கிருக்கிற கவலையெல்லாம் இன்றைக்கு தமிழக அரசு ஸ்ரீலங்காவின் அக்கிரமத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்று கிறது. ஆனால் நம்மைவிட அதிகமாக அதிகாரம் பெற்றுள்ள, நம்மைவிட அதிகமான அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்கிற, நம்மிடம் இல்லாத இராணுவத்தை வைத்திருக்கிற, அதோடு அண்டை நாடுகளில் வாழ்கிற நம் நாட்டு மக்களைக் காப்பாற்றுகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற பாராளுமன்றம் இதைப் பற்றிப் பேசியதே தவிர, ஒரு கண்டனத் தீர்மானம் ஏன் நிறைவேற்றவில்லை? இனப் படுகொலையை கண்டித்து ஏன் தீர்மானம் போடவில்லை? நான் நாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் போடச் சொல்லவில்லை. நான் கேட்பது ஈழம் பிரிய வேண்டுமா வேண்டாமா என்பதல்ல. மூன்று அமெரிக்கர்களைத் தூக்கில் போட்டார்கள் என்ற உடனே கண்டனம் தெரிவித்த நமது நாட்டு பாராளுமன்றம் இதற்கு ஏன் கண்டனத் தீர்மானம் போடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. பேசினார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் பேசினால் மட்டும் போதுமா? இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயராலே ஒரு கண்டனத் தீர்மானம் வருகிறது. இன்னின்ன விஷயங்களில் மத்திய அரசு கால தாமதம் செய்யாமல் துரிதப்படுத்தியிருக்க வேண்டும் என்று சொல்வதன் நோக்கம், என்னென்ன காரியங்களில் நீங்கள் தவறி இருக்கிறீர்கள் என்று இந்த அரசு எடுத்துக் காட்டுகிறது. "என்னென்ன விஷயங்களில் நீங்கள் தாமதப்படுத்தியிருக்கிறீர்கள். நீங்கள் துரிதப்படுத்த வேண்டும். துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றால் அதன் பொருள் என்ன? இதிலெல் லாம் நீங்கள் தவறியதால்தான் அங்கே இவ்வளவு பெரிய இழப்புகளும் படு கொலைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்று கண்டிக்கிறோம். அதைப்போல பாராளுமன்றம் ஏன் கண்டிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. பாராளுமன்றம் கண்டித்திருந்தால் கண்டிப்பாக, நிச்சயமாக அந்த ஜெய வர்த்தனே கூட்டம் பயந்திருக்கும்.

2500 விடுதலைப் புலிகளைப் பார்த்தே பயந்து கொண்டிருக்கிற அந்த ஜெயவர்த்தனே கூட்டம், 4 பேர் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் அங்கே இருப்பவர்கள் துப்பாக்கிகளைக்கூட போட்டுவிட்டு போலீஸ் ஸ்டேஷனை விட்டே ஓடுகிற கூட்டம், 70 கோடி மக்களுடைய ராணுவத்தை தனுஷ்கோடியிலும், தூத்துக்குடியிலும் கொண்டு போய் சும்மா நிறுத்தியிருந்தாலே "ஹார்ட் அட்டாக் வந்து" செத்திருக்குமே. (சிரிப்பு) அந்த அளவுக்கு அவர்களுக்குப் பயம் வந்திருக்க முடியும். அதைச் செய்யவில்லை. செய்யாத காரணத்தால்தான் நம் தமிழர்கள் அங்கே பாதிக் கப்பட்டார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் கொஞ்சம் தள்ளி இருக்கிறார்.



நாங்கள் அந்த பார்ட்டியில் இருக்கிறோம். திருநெல்வேலியிலிருந்து வேதாரண் யம், பட்டுக்கோட்டை வரை ஸ்ரீலங்காவிலும் சரி, பர்மாவிலும் சரி, மற்ற நாடு களிலும் சரி, தமிழர்கள் சென்று பரவியிருக்கிறார்கள். அதனாலேதான் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களிடத் தில் வேகமான எழுச்சியைக் கண்டேன். எல்லாத் தரப்பினரும், எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், ஒரு சமுதாயத்தில் வாழும் அத்தனை பிரிவினரும் அதாவது வக்கீல்கள், டாக்டர்கள், சர்க்கார் சிப்பந்திகள், வியா பாரிகள், சலவைத் தொழிலாளர்கள், சமுதாயத்தில் இருக்கிற அத்தனை பிரிவினரும் கண்டித்து ஊர்வலமும் உண்ணாவிரதமும் இருந்தார்கள். கண்ட னக் கூட்டங்களுக்காக என்னைக் கூப்பிட வருகிறபோது, அல்லது நூற்றுக் கணக்கான உண்ணாவிரதங்களை முடித்து வைக்கக் கூப்பிடுகிற போது, பலர் கதர்ச் சட்டையோடு வருவார்கள். யார் நடத்துகிறார்கள் என்று கேட்பேன். 'சர்வகட்சி சார்பில்' என்று சொல்வார்கள். "அங்கே வந்தால் நான் என் மனதில் பட்டதையெல்லாம் பேசுவேன்" என்பேன். "எதை வேண்டுமானா லும் பேசுங்கள்" என்பார்கள். அங்கே நான் பேசியதையெல்லாம் அனை வரும் கேட்டார்கள். அந்த அளவுக்கு மக்கள் உணர்ச்சி வசப்பட்டிருந் தார்கள்.

அது மட்டுமல்ல. நான் என் குடும்பத்திலேயே நடந்த ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டால், அதைத் தற்பெருமைக்காகக் குறிப்பிடுகிறேன் என்று யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. என்னுடைய மகன் அந்தப் பயணத் தில் செல்ல வேண்டும் என்று விரும்பி நான் "போகிறேன்" என்றான். நானும் "போ" என்று சொல்லியிருந்தேன். அவன் நடந்து பழக்கமில்லாத காரணத்தால், அவனுடைய கால்களில் புண் வந்து விட்டது. நடந்து போக முடியாவிட்டால் ஊர் திரும்பவேண்டியிருந்தால், மண்டபத்திலிருந்து மதுரை வர மதுரைக்கு வந்த ஒரு நபரிடம் சொல்லி "மண்டபத்திற்கு எனக்கு கார் அனுப்பிவைக்கச் சொல்லி என்னுடைய தகப்பனாரிடம் தகவல் கொடுங்கள்" என்று சொல்லியனுப்பினான். நானும் அவன் மண்டபத்திலிருந்து திரும்பி வருவதற்காகக் கார் கேட்டிருக்கிறான் என்று கருதி காரை அனுப்பிவைக்கச் சொன்னேன். ஆனால் என்னுடைய மனைவிக்கோ ஆத்திரம் வந்துவிட்டது. "எதற்காகக் கார் கேட்கிறான்? நான் போகிறேன். செத்தால் எல்லோருடனும் அங்கேயே சாகவேண்டும். திரும்பி வந்தால் அந்த அவமானத்தை நாம் தாங்க முடியாது" என்று சொல்லி என்னிடம் என்னுடைய மனைவி போராட்டமே நடத்தினாள். அந்த அளவுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பு அனைவரிடத்திலும் இருந்தது. காரணம் நாங்கள் அந்த அளவுக்குப் பாதிக் கப்பட்டிருந்தோம். சொத்தை இழந்தோம். உயிர்களை இழந்தோம். மாமன் மச்சான்கள், அண்ணன் தம்பிகள் என்கிற முறையில் நாங்கள் பாதிக்கப்

பட்டோம். ஆனால் நாங்கள் கொடுக்கிற வரிப் பணத்தில் நடக்கிற இந்திய சர்க்கார் காலா காலத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக, எத்தனை எத்தனையோ தமிழர்களின் உயிர்களை நாம் இழந்தோம். இந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் நான் பேசுகிறேனே தவிர வேறு ஒன்று மில்லை. (திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்) மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய கட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், நான் பேசி முடிந்த பிறகு எதை வேண்டுமானாலும் பேசட்டும். என்னைத் தடுக்கிற உரிமை தலைவருக்குத்தான் உண்டு. என்னுடைய கட்சித் தலைவருக்கு உண்டு. இன்னொரு உறுப்பினர் குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் வயதானவர். அதோடு நோயாளி. அப்படிப்பட்டவர் உணர்ச்சி வசப்படுகிறாரே என்று தான் இந்தக் குறுக்கிடுகள். . .

**திரு. எஸ். முத்து:** பிரச்சினை என்று வந்துவிட்டால், நான் நோயைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகவேதான் சொல்கிறேன். தமிழக அரசைப் பொறுத்த வரையில், அண்ணா தி.மு. க. வைப் பொறுத்த வரையில், எந்த அளவுக்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் மத்திய சர்க்காரும் பிரதமர் இந்திரா அவர்களும் மற்ற நாடுகளைப் பொறுத்து அவசரப்பட்ட அளவுக்கு இந்த பிரச்சினையில் அவசரப்பட வில்லை என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டு. அப்படி அவசரப்படாத காரணத்தால்தான், எங்களுடைய வருத் தத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையில் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மூலமாகவாவது டெல்லி சர்க்கார் கண் திறந்து பார்க்கும் என்று கருதுகிறேன். இன்னும் ஸ்ரீலங்காவில் கொலைகள், கொள்ளைகள் நின்றபாடில்லை. எப்படிப்பட்ட கொடுமைகள் அங்கே நிகழ்த்தப்பட்டன என்றெல்லாம் சொன்னார்கள். கணவன் முன்னால் மனைவி கற்பழிக்கப்பட்டாள். தகப்பன் முன்னால் மகள் கற்பழிக்கப் பட்டாள். உலகத்தில் எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்றிருக்கின்றன. அங்கெல்லாம் மக்கள் போராடியிருக்கிறார்கள். பல இடங்களில் குண்டுகள் போடப்பட்டிருக்கின்றன. சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருக் கிறது. ஆனால் பெண்களைக் கற்பழித்தார்கள் என்ற சரித்திரம் உலக வரலாற்றிலேயே சிங்கள வெறியர்களால்தான் ஏற்பட்டிருக்கிறது.





மகாத்மா காந்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி துப்பாக்கியும் பீரங்கியையும் வைத்துக் கொண்டிருக்கிற வெள்ளைக்காரன் அரசாங்கத்தை எதிர்க்க முடியுமா என்று கேட்டிருந்தால், இந்த நாடு விடுதலை பெற்றிருக்க முடியுமா? அமெரிக்காகாரர்கள் பலம் வாய்ந்தவர்கள் என்று சிலர் பேசிக் கொண்டிருக்கி றார்கள். அதற்காக நாம் விடுதலை உணர்வை விட்டுவிட முடியுமா? பக்கத்திலே இருப்பவனைப் பார்த்து "ஏண்டா இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்றால், "எனக்குத் திருமணம் செய்து கொள்ள ஆசைதான். இருந்தாலும் என் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு பயில்வான் இருக் கிறான். அவனுக்குப் பயந்து கொண்டுதான் நான் திருமணம் செய்து கொள்ளவில்லை" என்று சொன்னால், அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அதைப்போல அங்கே இருப்பவர்களில் சிலர் அமெரிக்காக்காரன் இருக்கிறான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது என்று சொல்லி, இந்த அளவுக்கு எனக்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை வரவேற் கிறேன், பாராட்டுகிறேன் என்று சொல்லி, இந்தப் பாராட்டுகளும் உணர்வு களும் தமிழர்களுக்கு பயன்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து, முடிக்கிறேன்.. வணக்கம்.

(பிற்பகல் 1-00)

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிட வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அவராகவே நான் தொலைவிலே இருக்கிறேன் என்றும், தான் மட்டும் நெருக்கத்திலே இருக்கிறேன் என்றும், ஆகவே உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்ற தொனியில் சொன்னதால், ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீலங்காவிலே மிகவும் அதிகமான படுகொலைக்கு ஆளாகியிருப்பது எங்களுடைய பக்கத்திலேயிருந்து சென்றவர் கள்தான். சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலேயிருந்து சென்றவர்கள்தான். மலைப் பகுதியில் இன்னும் இருப்பதற்குக் கூட இடம் இல்லாமல் குளிரில் வாடிக்கொண்டு சில பேர் குடியுரிமை இல்லாமல் இருக் கிறார்கள். அவர்களுக்கான குடியுரிமைப் போராட்டம் வரவில்லை. அதைக் காட்டிக் கொடுக்க நான் தயாராக இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தான் பேசும் போது அதைப்பற்றி விரிவாக எடுத்துச் சொல்லலாம். ஏற்கெனவே ரொம்ப நாழி ஆகிவிட்டதால், இப்போது இது தேவையில்லை.

திரு. க. இராமமூர்த்தி: இதை நினைவுகூரவேண்டும் என்று அவர் பேசும் போது குறுக்கிட நினைத்தேன். ஆனால் குறுக்கிடக் கூடாது, பேசி முடித்ததும் சொல்லலாம் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

திரு. த. சந்தோஷம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கடிகாரத்திலே கண்ணை வைத்துக்கொண்டு பேசுகின்றேன். நான் பேச வேண்டிய பல கருத்துக்களை எனக்கு முன் பேசிய நீண்ட நாள் நண்பர் திரு. முத்து அவர்கள் மிகச் சிறப்பாகப் பேசிவிட்ட காரணத்தால் மிகச் சுருக்கமாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இரண்டு பேரும் மதுரைக்காரர்கள். அப்போதே கிட்டே இருக்கிறீர்கள் என்று சொன்னார்.

திரு. த. சந்தோஷம்: தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச் சந்திரன் சார்பாக நமது மேலவையின் புதிய முன்னவர் அவர்கள் சிறந்த முறையில் முதல் தடவையாக முன்மொழிந்த இந்த விரிவான, விஸ்தாரமான தீர்மானத்தை நான் முழுமையாக ஆதரிக்காவிட்டாலும் கூட, பொதுவாக ஆதரிக்க விரும்புகிறேன்.

ஸ்ரீலங்காவில் நடந்த கொடுமைகள், கொடூரங்கள், அட்டூழியங்கள்பற்றி பல உறுப்பினர்கள் ஏற்கெனவே பேசிவிட்டார்கள், பத்திரிகை வாயிலாகவும் படித்து விட்டார்கள். அதையே நானும் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. நான் ஒரு வரலாற்று மாணவன். சில உறுப்பினர்கள் கூறியபடி, வரலாற்றிலே கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்த அரசாங்கம் என்று சொல்வதற்கு எடுத்துக் காட்டாக வைப்பது செங்கிஸ்கான் அரசாங்கம். ஆனால் செங்கிஸ்கான் அரசாங்கத்தில் நடந்த அட்டூழியங்களைக் காட்டிலும் மிகப் பயங்கரமான கண்டிக்கத்தக்க கொடூரங்கள் ஸ்ரீலங்காவில் நடந்திருக்கின்றன. ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இராணுவத்தினர் பெண்கள் கல்லூரியில் நுழைந்து சில மாணவிகளையும் ஆசிரியர்களையும் கற்பழித்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. தமிழர் குழந்தை என்ற காரணத்தால், ஒரு வயது குழந்தையைக் கூட கொன்றார்கள் என்ற செய்தி வந்தது. இதைப் போன்ற கொடூரமான நிகழ்ச்சிகள் உலக வரலாற்றிலே எங்கும் நடந்ததில்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அங்கே நடந்திருக்கின்றன. ஆகவே இந்தப் பிரச்சினை எந்தக் கட்சிக்கும் சொந்தமான பிரச்சினை அல்ல. எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், எந்தக் கட்சியைச் சாராதவர்களும்கூட கொதித் தெழுந்துள்ள ஒரு பிரச்சினை இது. எங்களுடைய மதுரை வக்கீல் சங்கம்





கூட்டத்தையும் கூட்டினோம். உடனே தீர்மானங்களை நிறைவேற்றினோம். சிங்கள அரசாங்கத்தைக் கண்டிப்பதோடு மாத்திரமல்லாமல், இந்திய அரசு ஒரு குழுவையும் அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றினோம். மறுநாள் காலையில் நீதிமன்றங்களைப் புறக்கணித்துவிட்டு, நாங்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அணிந்திருப்பதைப் போல், கறுப்புச் சட்டையை அணியாமல், கறுப்புக் கோட்டுகளை அணிந்துகொண்டு ஊர்வலமாகச் சென்றோம். அதைப் பார்த்து மக்கள் எல்லாம் கைகொட்டி ஆதரவு தெரிவித்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு எதிரிலே இருப்பதால் எதிர்க் கட்சி என்று சொன்னார்களோ!

திரு. த. சந்தோஷம்: எதிர்க் கட்சி அல்ல, ஆளும் கட்சியினர். எதிர்ப் பக்கத்திலே இருக்கிறது என்று ஞாபகத்திலே சொல்லிவிட்டேன். ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தபோது, எங்களுக்கு முன்னதாகவே கல்லூரி மாணவர்கள் அலை அலையாக வந்திருந்ததைக் கண்டோம். அவர்களும் ஆரவாரம் செய்தார்கள். அது தூண்டப்பட்ட உணர்ச்சியல்ல. மக்களுக்குத் தானாகவே (ஸ்பான்டேனியஸ்லி) ஏற்பட்ட உணர்ச்சிதான் அங்கே வெளிப்பட்டது. கட்சியினருக்கு உடன்பட்டு அவர்களுடைய தூண்டுதலால் மக்கள் அப்படி கொதிப்படைந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி, ஆகஸ்ட் இரண்டாம் தேதி அன்று கடையடைப்பு என்று அறிவித்தார்கள். அது பாராட்டுக்குரியது. அதைப்பற்றி ஒரு சிறு குறைபாடு இருக்கிறது. முன்னவர் அவர்கள் இங்கே இருக்கும்போது, அதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சர்வ கட்சிக் கூட்டத்திற்கு எங்களுக்கு அழைப்பு வரவில்லை. தனி நபர்கள் இருக்கிற கட்சிக்குக்கூட அழைப்பு அனுப்பப்பட்டது. நாங்கள் மூன்று பேர் இருக்கிற கட்சிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. வேண்டுமென் செய்திருக்கமாட்டார்கள், அதிலே சிறு தவறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இனிமேலாவது அப்படியொரு நிகழ்ச்சி நடக்க வேண்டாமென்று முன்னவர் அவர்களை தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆகஸ்ட் இரண்டாம் தேதியன்று நடந்த நிகழ்ச்சி முதலமைச்சர் அவர்களுடைய நல்ல அரசிய ஞானத்தின் அடிப்படையில் நடந்த நிகழ்ச்சியாகும். மதுரையில் ஒரு சி வாகனம்கூட நகரவில்லை, கடைகள் திறக்கப்படவில்லை, எல்லாத் தெருக்களு நிசப்தமாக இருந்தன. ஒருவரும் வெளியே வரவில்லை. ஆனால் திடீரென் சில வாலிபர்கள் வெளியே வந்து சிங்கள வங்கியின் கொடும்பாவியை எரித்

இந்த அரசாங்கம் செயல்பட்டிருக்கிறது என்பதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் அதற்கடுத்தபடியாக இடைவெளி வந்தது. ஆண்டி-கிளைமாக்ஸ் என்ற வகையிலே அரசாங்கம் தொடர்ந்து எந்தச் செயல் திட்டத்தையும் மக்கள் முன்பு வைக்கவில்லை. மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய இரத்தம் கொதித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையில் அரசாங்கம் எந்தச் செயல் திட்டத்தையும் மக்கள் முன் வைக்காமல் இருந்து விட்டது.

அது மாத்திரமல்லாமல், நம்முடைய பிரதமர் அவர்கள் அந்தச் சமயத்தில் ஐ.நா.-வில் பேசினார்கள். அவர்கள் பேசும்போது, பாலஸ்தீனம், சவுதி அரேபியா, கம்பூச்சா ஆகிய நாடுகளைப்பற்றிப் பேசினார்கள். ஸ்ரீலங்காபற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இதையெல்லாம் நினைத்தபோது, பொது மக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்தார்கள், ஏமாற்றம் அடைந்தார்கள். அப்போது நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பகிரங்கமாக வந்து மிகவும் ஆவேசத்துடன் பேச்சுக்களைப் பேசினார்கள். அதைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், "என்னுடைய அனுமதியின் பேரில்தான் அவ்வாறு பேசினார்" என்று அறிக்கை வெளியிட்டார். பிறகு கட்சிக்காரர்கள் அனைவரையும் கறுப்புச் சட்டை அணியச் சொல்லி இந்தத் தீர்மானத்தை இங்கு கொண்டு வந்திருக்கிறார். அவர் செய்த நற்காரியம் பாராட்டுக்குரியது. மக்களுடைய உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு முழு ஆதரவையும் கொடுக்கிறோம்.

அதேசமயத்தில் மத்திய அரசைப் பொறுத்தவரையில், பின்னாலே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். திரு. பார்த்தசாரதி அவர்களை ஸ்ரீலங்காவுக்கு அனுப்பினார்கள். பிரதமர் அவரே சில சமயத்தில் நாடாளு மன்றத்திலே பேசினார். அவர் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை தமிழ் மக்கள் என்றென்றும் சுமத்திக் கொண்டிருப்பார்கள். நான் மேடையில் பேசும்போது, அவரைத் தமிழ் தலைவர் என்று பேசினேன். அவரை நான் அன்னை இந்திரா என்று குறிப்பிட்டபோது, 'அவர் நமக்கு அன்னை அல்ல' என்று கூறினார்கள். அந்த அளவிற்கு தமிழ் மக்கள்

(பிற்பகல் 1-10)

மனவேதனைப்படக் கூடிய அளவுக்கு அவர்கள் உரிய நேரத்தில் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிவிட்டார்கள். ஸ்ரீலங்காவிலே அராஜக ரீதியான நிகழ்ச்சிகள், கொடுமையான நிகழ்ச்சிகள், இன ஒழிப்பே நடந்துகொண்டிருந்தபோது, அவர்கள் கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்தால், நிச்சயமாக பல பெண்கள் கற்பை இழந்திருக்கமாட்டார்கள்



பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைச் சூறையாடியிருக்க மாட்டார்கள். ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டிருக்காது. ஆக தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையிலே செய்யவேண்டியவற்றைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்ற கருத்தை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. இப்படி அவர்கள் செய்யாததற்கு ஈடுகட்டுமளவுக்கு இனிமேலாவது தகுந்த தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு பிரச்சினை. இந்திய இராணுவத்தை அங்கே அனுப்புவது சரியா? எங்களுடைய வக்கீல்கள் சங்கத்திலேகூட இந்தக் கருத்தை நான் கூறியபோதும், இந்தத் தீர்மானத்தைப்பற்றி ஒரு விவாதம் நடந்தது. நிச்சயமாக நம்முடைய அண்டை நாட்டிலே ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், அதைப் பார்த்துத் தடுத்து நிறுத்தத்தான் வேண்டும் என்ற முறையிலே, மனிதாபிமான அடிப்படையிலே தடுத்து நிறுத்தத்தான் வேண்டும் என்ற நிலையிலே இராணுவத்தை அனுப்புவதில் தவறு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். பக்கத்து வீட்டிற்குள் நுழைவது தப்புத்தான். ஆனால் பக்கத்து வீட்டிலே கொள்ளை அடிக்கிறார்கள், அங்கு வந்து அக்கிரமங்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லும்போது, நிச்சயமாக நுழைந்து தடுக்க வேண்டும். அது பக்கத்து வீடு, நுழையக்கூடாது என்று வாளா இருப்பது பெரும் தவறு. நிச்சயமாக அந்த நேரத்திலே நாம் தலையிடத்தான் வேண்டும். உள்ளே நுழையத்தான் வேண்டும். அந்தக் குடும்பத்தினருக்கு உதவி செய்யத்தான் வேண்டும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இராணுவத்தை அனுப்புவது சரி என்றுதான் உச்சநீதி மன்ற நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரே ஒரு நிபந்தனை. நாம் அங்கே நுழைவது ஆக்கிரமிப்பு செய்ய அல்ல. அல்லது அந்த நாட்டைப் பிடிப்பதற்காக அல்ல. அதிலே ஒரு லாபம் அடைய அல்ல. அங்கே சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக வீழ்ந்துவிட்ட நேரத்திலே, அதை நிலை நாட்டுவதற்காக நம்முடைய தமிழ் மக்கள், நம்முடைய தமிழ் பிரஜைகள் அங்கே வாழ்கின்றவர்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையிலே ஐ.நா. சபைக்கு அதுபற்றித் தகவல் தெரிவித்துவிட்டு, "நாங்கள் பாதுகாப்புக்காக மாத்திரம்தான் சென்றிருக்கிறோம். ஆக்கிரமிப்பு அடிப்படையிலே நாங்கள் செல்லவில்லை. எந்த நிமிடத்திலே அமைதி நிலவுகிறதோ, அங்கே எந்த நேரத்திலே சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தப்படுகிறதோ அந்த நேரத்திலே நாங்கள் அங்கேயிருந்து வந்து விடுவோம்" என்று கூறி இந்திய இராணுவத்தை அங்கே பிரவேசிக்கச் செய்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அப்படிப் பிரவேசித்திருந்தால், அதிலே எந்தவிதமான சட்ட விரோதமான செயலும்

[திரு. த. சந்தோஷம்] [1983 அக்டோபர் 28

இருக்கிறது என்று சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஓரளவுக்குச் சட்டம் தெரிந்தவன். ஆனால் ‘இன்டர்நேஷனல் லா’ அதிகமாகப் படிக்கவில்லை. இருந்தாலும் அண்டை நாட்டிலே நடக்கின்ற மனிதாபிமானத்திற்கு விரோதமான செயலைப் பார்த்துக்கொண்டு பக்கத்து நாட்டிலே இருப்பவர்கள் சும்மா இருக்க வேண்டும் என்று சொல்வது நிச்சயமாகச் சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே பேசும்போது, “ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக நாம் இராணுவத்தை அனுப்புவதற்கு அவர்கள் உதவி கோரவில்லை” என்று பேசியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகைகள் எல்லாம் மிகப் பெரிய கொட்டை எழுத்துக்களிலே வெளியிட்டிருக்கின்றன. அதிலே ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கேயுள்ள நம்முடைய இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்கள், தமிழர்கள் கூக்குரலிட்டார்கள். எத்தனையோ பேர்கள் தந்தி அடித்தார்கள். எத்தனையோ விதமாக கோரிக்கைகள் அனுப்பினார்கள். ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் அழைப்பு அனுப்பவில்லை என்றால், அது சரியல்ல, அவர்கள் தனித்தனியாக அனுப்பினார்கள். அவர்களுக்கு என்று ஒரு அதிகாரபூர்வமான அமைப்பு இல்லாத காரணத்தால், அவர்கள் தனித்தனியாகக் கேட்டார்கள். அதைத் தவிர, அவர்கள் கேட்கவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் திரு. ஜெயவர்த்தனே கேட்கவில்லை. திரு. ஜெயவர்த்தனே கேட்டால்தான், நாம் அங்கே இராணுவத்தை அனுப்புவோம் என்றால், அது ஒரு அறிவுடைய செயலாக இருக்காது. அவர்களுடைய ஆதரவுடன்தான் “அவர்களுடைய இராணுவத்தாலே, அவர்களுடைய காவல் துறையினாலே செய்யப்படுகின்ற அந்த அட்டூழியங்களைத் தடுப்பதற்காக நம்முடைய இராணுவத்தை அங்கே அனுப்பவேண்டும்” என்று கூறக்கூடாது. அவர்கள் அதற்கு அழைப்பு அனுப்ப வில்லையே என்பதை ஒரு காரணமாகக் காட்டக்கூடாது. நிச்சயமாக பல தமிழர்களிடமிருந்து, குறிப்பாக இந்தியப் பிரஜைகளான தமிழர்களிடமிருந்து நம்முடைய பிரதமர் அவர்களுக்கு பலவிதமான கோரிக்கைகள் அனுப்பப் பட்டன. அவைகளை ஏற்று நிச்சயமாக இந்தியப் பிரதமர் அவர்கள் இராணுவத்தை அனுப்பித்தான் இருக்க வேண்டும். அப்படி அனுப்பாமல் இருந்தது பெரும் தவறு என்று கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒரே ஒரு விஷயத்தை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். எனக்குக் கொடுக்கப்பட்ட 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நமது அவையின் முன்னவர் அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அதாவது “ஸ்ரீலங்கா பிரஜைகள் சம்பந்தமாக முதல் முறையாக



1983 அக்டோபர் 28] [திரு. த. சந்தோஷம்]

வருடத்திலே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் சட்ட மன்றத்தின் சார்பாக. அதன் பிறகு 1977-வது ஆண்டிலே தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறோம். அதற்குப் பிறகு 1981-வது வருடத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்” என்று அவர்கள் தன்னுடைய உரையிலே கூறினார்கள். “மூன்று முறைகள் நாம் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருந்தும்கூட அதை யாரும் அந்த அளவுக்கு மதிக்கவில்லை. அதனால் எந்தப் பயனும் நமக்குக் கிடைக்கவில்லை” என்று சொன்னார்கள். நான்காவது முறை மீண்டும் இந்தத் தீர்மானத்தை மாத்திரம் போட்டுவிட்டு இருந்துவிடப் போகிறோமா? அதைத் தொடர்ந்து அரசாங்கம் நிச்சயமாக ஒரு தீவிரமான செயல் திட்டத்தை உருவாக்கி மக்கள் மத்தியில் வைக்க வேண்டும். அப்படி செயல் திட்டத்தில் இறங்க வேண்டும். ஒரு திட்டத்தை மக்கள் முன் வைக்க வேண்டும். இன்னின்ன மாதிரி நடவடிக்கைகளை நாங்கள் படிப்படியாக எடுக்கப்போகிறோம் என்று சொன்னால்தான், மக்களுக்கு உறுதி அளித்தால்தான், மக்களுக்குத் திருப்தி இருக்கும். இல்லையென்றால் மக்களுக்குத் திருப்தி இருக்காது. அதற்காக தனி ஈழம் கோரிக்கையை நாம் ஆதரிக்க வேண்டும் என்பதல்ல. அது மாத்திரம் உள்நாட்டுப் பிரச்சினையாக இருக்கலாம். அது அவர்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். அது அவர்களுடைய விஷயம். ஆனால் அங்கேயிருக்கின்ற தமிழ் மக்கள் உயிரையும், உடைமையையும், பெண்கள் கற்பையும் காப்பது என்பது நம்முடைய அரசாங்கத்தினுடைய கடமை. அது மத்திய அரசினுடைய கடமை. மத்திய அரசின் கரத்தை நிர்பந்தப்படுத்தும் அளவுக்கு மாநில அரசு செயல்பட வேண்டும். இதற்காக சர்வ கட்சிக் குழு அமைக்க வேண்டும். ஒரு ‘ஆக்ஷன் கமிட்டி’ அதாவது செயற்குழுவை அமைத்து, இனிமேல் என்ன என்ன செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும். மத்திய அரசை நிர்பந்தித்து, கட்டாயப் படுத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்ல வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும். ஏற்கெனவே சொன்னபடி, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் ஒரு பொருளாதார ‘பாய்காட்’ செய்யலாம் அல்லது சமூக ‘பாய்காட்’ செய்யலாம். இப்படி நடைமுறைகளை எல்லாம் நம் மக்கள் முன்னால் வைக்க வேண்டும். அரசாங்கம் அதற்காக இரண்டு அவைகளிலும், பேரவையிலும், மேலவையிலும் இருந்து பொறுக்கி எடுத்த உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமித்து, அவர்கள் சரியான திட்டங்களைத் தீட்டி, அதன் அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தோடு நின்றுவிடக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்ததற்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்

கொள்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் இந்தத் தீர்மானம் மட்டும் போதாது. இந்தத் தீர்மானத்தோடு நின்றுவிட்டால், தமிழ் மக்கள் அதிருப்தி அடைவார்கள். தொடர்ந்து ஏதாவது செயல்திட்டத்தை, அதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, Sir, I stand here to support the Resolution that has been brought forward by the Government. I am not going to say anything in over tone or in an emotional fervour. But, as a citizen of this country, I feel very much for those people who have suffered in the ethnic violence in Sri Lanka.

Sir, we have seen that the League of Nations which came into existence in 1924 had to meet its own death because it did not have the will or the executive authority to pull up the erring nations. Then, we saw the birth of the United Nations. At that time, we felt that the United Nations had much more authority than the League of Nations. But, when ethnic violence was repeated somewhere, we found that the United Nations had no authority to pull up the erring countries which resorted to ethnir violence. As the hon. Member Thiru Damodaran said, international awareness is very necessary to bring sense to these erring nations. Some time ago, we saw the eruption of ethnic violence in Britain. But, because of public opinion and because of the democratic traditions, the Government of that country were able to tell those people, 'Thus far and no further'. I feel that there is a necessity to have an Anti-Ethnic Group in the United Nations. That Group should have the executive authority to rush to a country which has had ethnic violence and the Government of which is unable to put down acts of ethnic violence.

Sir, while I say all these, I feel that the time has come when all of us, with one voice, should make a request to the Prime Minister to follow another course of action it this issue could not be brought up at the level of the United Nations. Of course, our Hon. Minister, Thiru S. Ramachandran has done his duty very well at the United Nations. However, as an alternative measure, the Prime Minister may raise this issue at the Commonwealth Conference that is going to be held in Delhi very

(பிற்பகல் 1-20)



problem of immigrants in all parts of the world. If it is today in Sri Lanka, it will arise tomorrow in Britain, in Australia and later in America and so many other countries. We have our own problem of immigrants and this is a pointer to us that unless we stop this kind of violence, there will be no end to it. So, instead of condemning somebody or other, let us plead with our Prime Minister to bring this problem at the Commonwealth Conference which is going to be held in Delhi.

Now, coming to the home front, I feel that we have to do something for these refugees. We are talking a lot. When I visited other countries, many people used to ask me: "Why do you, Indians, get so excited and talk so much?" Let us not give them the impression that we are able only to talk and not to act. There are our refugees at Mandapam and they have to be provided with all the facilities. If we waste our energy in mere talking, we would not come to any useful conclusion. These women and children are at Mandapam. Many have approached me and I have got 54 applications from those girls who are studying from X Standard to 11 Standard seeking admission. I said to them that I would admit them and that our Education Department and the Hon. Chief Minister had provided all the concessions for their admission. But it is left to the voluntary bodies to see that they are brought from Mandapam. Who is going to bring them? Are they having any rail fare concession? There should be facilities to bring them to these institutions. I will plead with all the hon. Members to have a meeting and do something concrete. We have talked a lot and this is no time for any further talk. Let us act and provide all the necessary facilities to those who have come to our country and help them to go back to the country of their adoption.

With these words, I support this Resolution with sadness in heart and with the resolve that whatever we could do, we will do for our people of Tamil origin or of Indian origin who have suffered a great deal. Thank you.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் நாளை தொடர்ந்து நடைபெறும். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை 29—10—1983 சனிக்கிழமை அன்று காலை 9 30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-23)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

164. Notification issued with G.O. Ms. No. 301, Home, dated the 16th February 1983 regarding the amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

165. Notification issued with G.O. Ms. No. 1073, Housing and Urban Development, dated the 7th December 1982 regarding the variations in the use of land specified in the Master Plan under the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

166. Notification issued with G.O. Ms. No. 1304, Agriculture, dated the 14th July 1983 regarding the formation of market committee for Periyar District under the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

167. Annual Report of the Tamil Nadu Zari Limited for the year 1980–1981. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

168. Seventh Annual Report of the Pallavan Engineering Corporation Limited for the year 1981. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

169. Fifth Annual Report and Accounts of the Tamil Nadu Fisheries Development Corporation Limited for the year 1978–79. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

170. Report of the Comptroller and Auditor-General of India (Civil) for the year 1981–82. [Laid on the table of the House under Article 151(2) of the Constitution of India).]



171. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1981–82. [Laid on the table of the House under Article 151(2) of the Constitution of India).]

172. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1981–82. [Laid on the table of the House under Article 151(2) of the Constitution of India).]

*B. Reports, Notifications and Other Papers.*

**Nil**

சென்னை-600 009.
143190
D
Y211,32'N83
N83·211·1-3